**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

## e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# சங்ககாலத் தமிழர் சமயமே

# கம்பனின் சமயம்

('கம்பனின் சமயம்' இரண்டாம் பாகம்)

["கம்பரின் சமயக்கொள்கை" என்னும் தலைப்பில் திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதிய நூலுக்கு ஸுதர்சனரின் மறுப்புரை]


ஆசிரியர்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L.,
(ஸுதர்சனர்)

'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.



ஸுதர்சனர் மணிவிழா வெளியீடாக பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ சபையின் 11-வது மகாநாட்டில் வெளியிடப்பெற்றது.

**18—11—1984**

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.

டிரஸ்டிகள்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.
S. ராம அய்யங்கார், B.Sc.B.L., அட்வகேட்.

**விலை ரூ. 8-00]** **[தபால் 1-00.**

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 8, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.17.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்களுக்கு
எளிய தமிழ் விரிவுரைகளுடன் வெளிவரும்
சிறந்த மாதப்பத்திரிகை

## "ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்"

ஆழ்வார்களுடைய திவ்யப் பிரபந்தங்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளை முதலான ஆசாரியர்கள் அருளிச்செய்த மணிப்ரவாளநடை வியாக்கியானங்களை எளிய தமிழ்நடை விவரணங்களோடு வெளியிடுவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகை கடந்த முப்பத்தேழு வருடங்களாக நடைபெற்று வருகின்றது. தற்போது நாச்சியார் திருமொழி வியாக்கியானம் விவரணத்தோடு தொடர்ந்து அச்சிடப்படுகின்றது. இது தவிர, விரிவான கீதா வ்யாக்யானமும், ஆசார்யர்களின் சரித்திரத்தை விரிவாக விளக்கும் ஆசார்ய வைபவ மஞ்ஜரியும், ஸ்ரீபாஷ்யஸாரமான (தமிழ்விவரணத்தோடு கூடிய) சாரீரக காரிகாவளியும், அன்பர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஸுதர்சனர் பதிலும், மற்றும் பல கட்டுரைகளும், கிரந்தங்களும் புத்தகமாக்கிக் கொள்ளலாம்படி தனித்தனி பாரங்களாகத் தொடர்ந்து வருகின்றன. விவரணத்தோடு கூடிய வார்த்தாமாலையும் ஸுதர்சனத்தில் வெளிவந்ததேயாகும். விளம்பரமேயில்லாமல் நல்ல காகிதத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் அறுபது பக்கங்கள் தரமான விஷயங்களைக்கொண்டு வெளிவருவது இப்பத்திரிகையின் தனிச் சிறப்பாகும். இப்பத்திரிகையில் வெளிவந்த நூல்களில் தற்போது கிடைப்பவை ராப்பர் 3.4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்:-

ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வகேட்.
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

வருடச் சந்தா ரூ. 15. — ஆயுள் சந்தா ரூ. 125.
தனிப்பிரதி ரூ. 1-50.

ஸர்வஜித் மார்கழி 28-உ (12—1—1948) முதல்
தொடர்ந்து நடைபெறுகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# சங்ககாலத் தமிழர் சமயமே

# கம்பனின் சமயம்

('கம்பனின் சமயம்' இரண்டாம் பாகம்)
["கம்பரின் சமயக்கொள்கை" என்னும் தலைப்பில்
திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதிய நூலுக்கு
ஸுதர்சனரின் மறுப்புரை]

ஆசிரியர்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L.,
(ஸுதர்சனர்)
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

ஸுதர்சனர் மணிவிழா வெளியீடாக
பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ சபையின்
11-வது மகாநாட்டில் வெளியிடப்பெற்றது.

18—11—1984

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.

டிரஸ்டிகள்:-
S. கிருஷ்ணஸ்வாமிஅய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.
S. ராம அய்யங்கார், B.Sc.B.L., அட்வகேட்.

விலை ரூ. 8.00] [தபால் 1.00.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 8, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

ஸ்ரீ:

# அணிந்துரை

[வித்வான் திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார்,
வி.பூதூர், S.A. Dt.]

மதிப்பிற்குரிய உயர்திரு (சைவத்திரு) ம. பொ. சி. அவர்கள் தமது 'செங்கோல்' இதழில் (மலர்.33 இதழ்-10 முதல்) 17 தொடரில் 'கம்பநாடர் சைவரா, வைணவரா?' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். (பிறகு 'கம்பரின் சமயக்கொள்கை' எனும் நூலாகவும் இதனை வெளியிட்டுள்ளார்.) அதனுள், முதல் தொடரில் 'ஆகவே கம்பர் சைவ சமயத்தைச் சார்ந்தவராகவே இருப்பினும், வைணவர்களின் தனித்தெய்வமாகக் கருதப்படும் திருமாலின் அவதாரமான இராமனை நாயகனாகக் கொண்ட காப்பியத்தைப் படைப்பதற்கு அவருக்குத் தடை ஏதுவும் இருக்கவில்லை' என்று சொல்லி, 17-வது தொடர் முடிவில் 'அதுவே சைவரான கம்பரின் குறிக்கோள்' என முடிக்கின்றார். இதனால் ஐயா அவர்கள், முன்னமேயே கம்பர் சைவர்தான் என்று உறுதிகொண்டுவிட்டார் என விளங்குகிறது. இதன் காரணம் யாதோ உரைத்திலர். சைவர்கள் சமரசவாதிகள் என்ற முடிவுக்கும் வந்திருக்கின்றார். இதைப்பற்றி விளக்குவதற்குமுன் இன்றியமையாத இரு நிகழ்ச்சிகளை ஈண்டுக் குறித்தல் தகும்.

(1) திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். 'நம்மாழ்வாரும் தமிழ்நாடும்' என்ற ஒரு சிறு நூலும், 'மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற ஒரு பெருநூலும், வேறு பல நூல்களும் வெளியிட்டவர். அந்நூல்கள் என்னைக் கவர்ந்தன. சுமார் 50யாண்டுகட்குமுன் யான் எழுதிய /'காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது' என்னும் நூற்கு அணிந்துரைபெற அவரை அண்டினேன். அவ்வமயம் உடன் இருந்தவர்கள், மாவட்டக் கல்வி அதிகாரியாகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளராகவும் இருந்த திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும், சைவசமாஜச் செயலாளர் திரு. ம. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களும் ஆவர். /'காந்தியடிகள் நெஞ்சுவிடுதூது' என்றதுமே, திரு. வி. க. அவர்கள் சினந்துரையாடினர். "அவர் மகாத்மா அல்லர்; தெரியாமையால் அவரைப் பற்றி நூல் ஒன்று எழுதிவிட்டேன்; அதற்கு இப்போது வருந்துகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கட்கு 'ஹரிஜன்' என்ற பெயரைப் புதிதாகச் சூட்டினரே! அதற்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று தானே பொருள். திருடர்கள் என்றும் பொருள்படுமே!" என மேலும்

---

/ காந்தியடிகள் நெஞ்சுவிடுதூது. 2-ம் பதிப்பு. கிடைக்குமிடம்:— கி. வேங்கடசாமி ரெட்டியார், வி பூதூர், வழி வளவனூர்-605 108. விலை ரூ. 4.00.

ஒருமை வசனத்தில் பேசினர். பின்னர், பத்திமைவடிவாய நண்பர் ஆரியூர் வ. பதுமநாபபிள்ளையவர்கள்பால் அணிந்துரைபெற்று அப்போது அந்நூலை வெளியிட்டேன். அண்மையில் அருங்கலைக் கோன் திரு ந. சுப்புரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சி முன்னுரையுடன் வெளியிட்டுள்ளார். 'ஹரிஜன்' என்ற சொல் வைணவமக்களையே குறிக்குமெனக் கருதித் திரு. வி. க. அவர்கள் அடிகளாரை வெறுத்தார் எனத் தெரிகிறது. இது சமரச உணர்வு போலும்!

(2) சிவம் பெருக்கும் சீலர், சிவக்கவிமணி, தமிழ்க்கடல் இராய. சொ. அவர்களையும் தமிழுலகம் நன்கறியும். நல்ல பேச்சாளர், கவிஞர். காந்தியத்தில் திளைத்தவர். கம்பரிடத்து மிக்க ஈடுபாடு உடையவர். இவர்பால் எனக்கு மதிப்புண்டு. அவர்க்கும் என்பால் அன்புண்டு. இரு சமயநூல்களிலும் பயிற்சி உள்ளவர்; எனினும் கம்பர் சைவரே என்றே கருத்துடையவர். இதனால்—'கம்பனும் சிவனும்' என்ற தலைப்பில் சிவனைப் பற்றிக் கம்பர் காட்டிய பாடல்களைத் தொகுத்துப் பொழிப்புரையும் எழுதியுள்ளார். 395 இடங்களில் சிவனைப்பற்றி உள்ளது. கவிமொழியாக உள்ளன 168 இடங்கள் என்று காட்டியுள்ளார். அதனுள் 'மழுவாளி' என்ற சொல் இரண்டிடத்துள்ளது என்றெழுதியுள்ளார். அந்நூலை ஊன்றிப் படித்தேன். 'மழுவாளி' என்ற சொல் உள்ள ஒருபாடல் விடுபட்டிருந்தது. அப்பாடல் ஆரணியகாண்டம் - விராதன் வதைப் படலத்துள்ளதாகும்.

"மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறைவுண்டோ?
வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
ஐயத்தாற் சிறிதையம் தவிர்ந்தாரும் உளர்ஐயா!" என்பதாகும்.

தமிழ்க்கடல் ஐயா அவர்களை நேரில் சந்தித்தபோது இதைச் சொன்னேன். 'எப்படியோ விடுபட்டது' என்றார். இப்பாடல் சிவனுக்கு ஏற்றம் தரவில்லையாதலால் விடுத்தனரோ அல்லது உண்மையிலே விடுபட்டதோ அவனே அறிவான். இவ்விரு நிகழ்ச்சிகளும் சமரசத்தின் தன்மையை ஓரளவு காட்டுவன அல்லவா?

நம் செங்கோல் 'பிற்காலத்து சமய ஸ்தாபனங்கள் வரையறுத்த நியதிப்படி திருமாலானவர் வைணவ சமயத்தவரின் தெய்வமாகிறார். அதனால் இராமகாதை வைணவர்களின் சொத்தாகப் பாவிக்கப்பட்டு வந்தது. ஆனால் இதற்குத் தமிழ்நாடுமட்டும் விலக்கு என்று சொல்லலாம்' என்கிறது.

இவர் கருத்துப்படி திருமாலானவர் சைவர்கட்கும் சொத்தாகப் பாவிக்கப்பட்டுவந்தார் போலும்! "நெய்தல் நிலத்தில் வாழும் மக்கட்கு

மட்டும் உரிய தனித்தெய்வமான திருமாலானவர் தமிழகத்தில் நால் வகை நிலங்களிலேயும் வாழும் பொதுமக்களால் வழிபடும் பொதுத் தெய்வமாக இருந்தது புலப்படுகின்றது. ஆழ்வாராதியர்கள் தோன்றித் திருமால் வழிபாட்டை ஒருசமயத்தாருக்குரிய கட்டுக் கோப்புக்குள் கொண்டுவருவதற்கு முன்பிருந்த நிலையிது" என்கிறது செங்கோல். 'முல்லை' என்பது 'நெய்தல்' என்றிருப்பது அச்சுப் பிழை போலும். நால்வகை நிலத்து வாழும் மக்கள் திருமாலை ஒரு சமயத்தவர்க்கே விட்டுக்கொடுத்தனர்போலும்!

"இதிலிருந்து கம்பர் காலத்திற்கு முன்பு தமிழினத்தவரிடையே சைவ-வைணவ சமயங்களைப் பொறுத்தவரையில் சமரச உணர்வு கடைப்பிடிக்கப்பட்டதென்ற உண்மையை அறியமுடிகிறது. ஆகவே, கவிச்சக்ரவர்த்தி கம்பர் சைவ சமயத்தைச் சார்ந்தவராகவே இருப் பினும்......" எனத் தொடர்கின்றது.

"தமிழினத்தவரிடையே........கடைப்பிடிக்கப்பட்டது" என்பதில் சைவத்தையோ வைணவத்தையோ சாராது தமிழினத்தவர்கள், தமிழினத்தவர்களாக இருந்தார்கள் என்று கொள்ளாது, 'ஆகவே கவிச்சக்ரவர்த்தி கம்பர் சைவராகவே இருப்பினும்' என்று கொண்டது எதுபற்றியோ? தமிழினத்தவர் சமரச உணர்வோடு இருந்திருக்கலாம்; ஆயின் சைவராகத்தான் இருந்தனர் என்பதற்கு மூலம் யாதோ? அறியோம்.

## 'செங்கோல்' தொடர் 2

'செங்கோல்' தன் கொள்கைக்கு எடுத்துக்காட்டாகத் தொடர் 2ல் ஆதிசங்கரர், இராமலிங்கர், தியாகையர் இவர்களைக் காட்டுகின்றது. இவற்றைப் பார்ப்போம்:—

(1) ஆதிசங்கரர்—"சைவ வைணவ ஒருமைப்பாட்டுக்கு அரும் பாடுபட்ட ஆதிசங்கரர் சைவர் என்பது மறுக்கமுடியாத பேருண்மை யாகும்" என்கிறது.

ஆதிசங்கரர் சைவப்பெருமக்களால் கொலைநூல் என்று ஒதுக்கப் பட்ட ஸ்ரீபகவத்கீதைக்கு முதல்முதல் உரை எழுதியுள்ளார்; அவ்வுரை யில் 'வாசுதேவனே உயர்ந்த தெய்வம்' என்று பலவிடங்களில் உறுதிப் படுத்துகின்றார்; மேலும் ஸ்ரீவிஷ்ணுசகஸ்ரநாமத்திற்கும் உரை எழுதி யுள்ளார்; சிவ சகஸ்ரநாமத்திற்கு உரை எழுதவில்லை; சங்கர நாராயண ஸ்ம்ருதி என்று சேர்த்துக் கையெழுத்திடாமல் தனியாக நாராயண ஸ்ம்ருதி என்றே கையெழுத்திடுகின்றார். ஆதலால் ஆதிசங்கரர் வைணவர் என்னலாமே தவிர சைவர் என்பது பொருந்தாது. பின்னால் வந்த சிலர் பலவகை நூல்களை எழுதி சங்கரர் பெயரால் பரப்பிவிட்டனர் என்பது உலகறிந்த செய்தி. இவற்றைக்கொண்டு ஆதிசங்கரர் சைவர் என்பது அடாது.

(2) இராமலிங்க சுவாமிகள்:—

"19ம் நூற்றுண்டில் தோன்றி 'எம்மதமும் சம்மதம்' என்னும் ஒருமைப்பாட்டுக் குரலை எழுப்பி இந்து சமயத்தில் புரட்சிகரமான சீர்திருத்தங்களைக் காண முயன்ற இராமலிங்க சுவாமிகளும் வைண வர்களின் தனித்தெய்வமான இராமபிரான்மீது பல செய்யுள்களைப் படைத்துள்ளார்" என்கிறது செங்கோல். எம்மதமும் சம்மதம் என்னும் ஒருமைப்பாட்டுக்குரலை இராமலிங்க சுவாமிகள் எப்பொழுது எழுப் பினுர் என்று குறிப்பிடவில்லை.

திருவருட்பா அண்மைப்பதிப்பு. 907 '......வைண (வ) நத்தைச் சுணங்க நாவரைக் கண்டால் நடுங்கு நடுங்குவ மனமே' என்று வைண(வ)ரைக் கண்டால் மனம் நடுங்குகிறது என்பதனுலும், 1960 திருவடிப்புகழ்ச்சியில் :-

"மால்விடை இவர்ந்திடு மலர்ப்பதம் தெய்வநெடு மாலருச் சிக்கும்பதம்
மால்பரவி நாடொறும் வணங்குபதம் மிக்கதிரு மால்விழி இலங்கும்பதம்
மால்தேட நின்றபதம் ஓரனந்தம்கோடி மால்தலை யலங்கற்பதம்
மால்முடிப் பதம்நெடிய மாலுளப்பதம் அந்த மாலும் அறிவரிதாம்பதம்
மால்கொள் அவதாரங்கள் பதினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற நடிமையின் வதிந்திட [பதம்
அளிக்கும்பதம்" என

எத்தனை மாலை அடுக்கலாமோ அத்தனையும் அடுக்கிய அருமைப் பாட்டாலும், 824 ல் திருமாலைக் 'கடல்தூங்கும் ஒரு மாடு' என வழங்கலானும் அடிக்கடி ஆங்காங்கே திருமாலைத் தாழ்த்திப் பேசுவ தானும் சுவாமிகளின் 'எம்மதமும் சம்மதம்' என்னும் ஒருமைப் பாட்டைப் புரிந்துகொள்ளலாம்! 'மேலும் வைணவர்களின் தனித் தெய்வமான இராமபிரான்மீது பல செய்யுள்களைப் படைத்துள்ளார்' என்பதும் அப்படித்தான். சுவாமிகள் பாடிய பல்லாயிரம் செய்யுள் களில் இராமபிரான்மீது பத்து செய்யுள்கள் (1939 - 1948) பாடி யுள்ளார். அதுவும் அண்மைப்பதிப்பில் 'இது கொந்தமூர் ஸ்ரீநிவாச வரதாசாரிய சுவாமிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அருளிச் செய்தது' என்றுள்ளதால் — இச்செய்யுள்களும் பத்தியினுல் பாடப் பட்டதல்ல என்று தெரிகிறது. இவற்றுக்குச் சமாதானம் உளதேல் பிறவற்றுக்கும் சமாதானம் உண்டு எனக்கொள்க.

(3) தியாகையர் :—

"தூய சைவரான அவர் கம்பநாடரையே பின்பற்றி ராமபக்த ராக வாழமுடிந்திருக்கிறது" எனச் செங்கோல் செப்புகின்றது. இதையும் பார்ப்போம் :— ஸ்ரீதியாகராஜஸ்வாமி கீர்த்தனலு. (தெலுங்குப்பதிப்பு) இது வித்வான் கே. வி. ஸ்ரீநிவாச ஐயங்காரால்



பரிசோதிக்கப்பட்டு எம். ஆதி அண்ட் கம்பெனியரால் சந்த்ரா முத்ராக்ஷர சாலையில் 1930ல் பதிப்பிக்கப்பட்டது. பதிப்பாளரின் முன்னுரை (மொழிபெயர்ப்பு) "......ஐயர் அவர்களின் முத்திரையோடு இப்போது வெளியிடப்பட்டுள்ள சுமார் 700 கீர்த்தனங்களுள் ஒரு நூறு கீர்த்தனைகள் அய்யர் அவர்கள் எழுதியதல்ல என்று தெரிகிறது. "......தாரகமந்த்ரோபதேசம் பெற்று 96 கோடி ராமநாமம் ஜபித்து ஸ்ரீராமனுடைய கருணைக்கிலக்காயிருந்து அனேக கீர்த்தனங்கள் பாடி இராமனுக்கு அர்ப்பணம்செய்த ஐயரவர்கள் சிவபக்தரா ? அல்லது விஷ்ணு பக்தரா?......" 'ஏல நீ தயராது' எனும் கீர்த்தனை யிலும் மேலும் அனேக கீர்த்தனங்களிலும் 'ராஜதரநுத' 'சசிகாதர நுத' என்று பலமுறை சொல்லியிருப்பதனுல் இவர் விசிஷ்டாத்வைத மதப்ரகாரமே சிவனைப் பரமபாகவத கோஷ்டியில் சேர்த்திருக்கிறுர் அன்றிச் சிவனுக்குப் பரத்வம் சொன்னுரில்லை. இப்படி அனேக காரணங்களாலே இப்போது பழக்கத்தில் இருக்கின்ற சிவகீர்த்த னங்கள் ஐயர் அவர்கள் எழுதியதல்ல; சிலர் சில கீர்த்தனங்களை ஐயர் அவர்கள் பேரால் செய்து பாடிப் பிழைக்கிறுர்கள் என்று தெரியவருகிறது."

இதனுல் தியாகையர் பற்றியும் ஓரளவேனும்புரிகிறதல்லவா ?

## 'செங்கோல்' தொடர் 3

"பிணக்கு இல்லாத சங்கால நிலையை ஒட்டி இறைவனைப் பெயர் குறிப்பிடாது 'உலகம் யாவையும்' என்ற பாட்டில் கம்பர் 'தலைவர்' என்ற சொல்லால் கூறினுர்" என்கிறுர். சிவபெருமான் ஐந்தொழில் செய்பவன் என்பது சைவர் கொள்கை; அதற்குமாறுக 'முத்தொழில் செய்யும் அலகிலாவிளையாட்டுடையான் திருமால்' என்பது வைணவர் கொள்கை. இத்திருமாலைத் 'தலைவர்' என்பது பொருத்தம்தானே. முதற்பாட்டில் 'தலைவர்' என்றும், அடுத்தபாட்டில் 'எண்ணிய மூன்றனுள் முற் குணத்தவரே முதலோர்' எனச் சத்துவகுணமாகிய முற்குணத்தை யுடைய திருமாலே முதல் என்றும், அதற்கும் அடுத்தபாட்டில் அத் திருமாலாகிய அரியையே 'ஆதியந்தம் அரி எனயாவையும் - ஓதினுர் அலகில்லன உள்ளன வேதம் என்பன' என்று வேதத்தின் முத லிலும் முடிவிலும் 'அரி ஓம்' என ஓதினர் என்றும், அடுத்துவரும் அயோத்தியாகாண்டம் முதலில் கடவுள் வாழ்த்தில் வெளிப்படையாக அந்த முதலே இராமன் என்பதனை,

"வான்நின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளனென்ப;
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை யிழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் கடந்திமையோர் இடுக்கண்காத்த கழல்வேந்தே"

என்றும் காட்டுகின்றார். இந்தமுறை—திருவாய்மொழியில் முதற்பத்து முதல் திருவாய்மொழியில் திருமால் பெயரைக் குறிப்பிடாது. 2-ம் திருவாய்மொழி 10-ம் பாசுரத்தில் 'வண்புகழ் நாரணன்' என்று காட்டுவதை அடியொற்றியுள்ளது.

## 'செங்கோல்' தொடர் 4

'அவர் சமய வைதிகர் அல்லர் என்பது தேற்றம்' என்கிறது. ஆனால் சைவர் என்றுமட்டும் சொல்வது பொருந்துமா ?

## 'செங்கோல்' தொடர் 5

'கம்பரும், இராமன் திருமாலின் அவதாரம் என்பதனை வலியுறுத்துமிடங்களிலே தூய வைணவராகவே மாறிவிடுகிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை' என்கிறது. (சிறிது பெருமூச்சுவிடலாம்). ஆனால் மற்ற இடங்களிலே இயல்பான சைவராகவே இருக்கிறார்போலும்!

## 'செங்கோல்' தொடர் 6

'இந்த இரு வேறு தெய்வங்களையும் மனவேறுபாடின்றித் தங்கள் தெய்வங்களாகவே தமிழர் ஏற்றுக்கொண்டிருந்தனர் என்று தெரிகிறது' என்கிறார். 'ஆயின், தமிழர் ஏற்றுக்கொண்டிருந்தனர் என்றால் கம்பரைத் தமிழர் என்று சொல்லாது சைவர் என்பது பொருந்ாதல்லவா ? 'அங்கும் இங்கும் குறிப்புகளாகத் திருமாலின் அவதாரக் கதைகளை முழு அளவில் கூறும் தமிழ்நூல் எதுவும் சங்க காலத்தில் இல்லை' என்கிறார். சிவபெருமான் வரலாறுகளை முழுதும் கூறும் தமிழ்நூல்களேனும் சங்ககாலத்தில் உளதோ? என்பதனை ஐயா அவர்களே சொல்லுதல் வேண்டும்.

'தமிழர் எல்லோருமே வழிபட்டுவந்த சிவன், திருமால், கொற்றவை, முருகன் ஆகிய தெய்வங்களோடு பல்லவர் காலத்திலே ஆறுவது தெய்வமாகிய கணபதியும் தமிழகத்துக்கு வந்தார்'என்பதில்ஐந்தாவது தெய்வம் யாதோ ? அறியோம். 'இந்திரனை வழிபடுவோர் ஐந்திரேயர் என்றும் உறுதியாகிவிட்ட ஷண்மதம் தோன்றுகிறது. ஆதிசங்கரர் தோற்றுவித்த சூழ்நிலை இது' என்கிறது. ஆதிசங்கரர் தோற்றுவித்த ஷண்மதம் இதுதானா? என்பதனை ஐயாவே தான் விளக்கவேண்டும்.

## 'செங்கோல்' தொடர் 7

'சடகோபரந்தாதி படைக்குமளவுக்கு அந்த ஆசார்யரிடம் பக்தி இருந்திருக்குமானால் தமது காப்பியத்திலே அவரைப் புகுத்தியிருக்கக் கம்பரால் முடிந்திருக்கும்; தமக்கு உணவளித்துக் காத்த சடையப்ப வள்ளலைப் புகுத்தவில்லையா ?' என்கிறது செங்கோல். சேக்கிழார்-தமது தொண்டர்புராணத்தில் மணிவாசகரைக் குறிப்பிடாமையால், மணிவாசகர்க்கு முன்பு சேக்கிழார் இருந்தாரா ? மணிவாசகரிடத்தில்

சேக்கிழார்க்குப் பத்திமை இல்லையா? என்பதற்குச் சமாதானம் கண்டால் இதற்கும் சமாதானம் காணலாம். 'திருத்தொண்டத் தொகையிற்கூறிய அடியார்களை மட்டும் பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறினார்; அதனால் அதில் இல்லாத மணிவாசகப் பெருமானை அவர் கூறவில்லை' என்னலாம். ஆயின் கீழேயுள்ளதனை நோக்கத் தகும்:—அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலராக வெளிவந்த கம்பராமாயணம் சுந்தரகாண்டத்து முன்னுரையில் 'பழம் பெருங்காப்பியங்களுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றிற்காணப்படும் பதிகம் (நுவல்பொருட் சுருக்கம்) இராமாவதார நூலிற்காணப்படவில்லை; எனினும் இராமாவதார நூலாசிரியராகிய கம்பர், ஆழ்வார்களுள் இராமபிரான்பால் பெரிதும் ஈடுபாடுடையவரான குலசேகரர் அருளிய பெருமாள்திருமொழியுள் 'அங்கண் நெடு மதிள்புடைசூழ்' என்று தொடங்கும் பத்தாந் திருமொழியைக்கொண்டு அதன் விரியாகத் தம் இராமாவதார நூலை இயற்றியருளினார் என்று கருதலாகும். சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைச் சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத் தொகையின் விரியாய் இயற்றியருளியதும் இங்கு நோக்கத்தகும். இம்முறையில் இராமபக்தராகவே மாறிய கம்பர் எந்த ஆழ்வாரையும் சொல்வதற்கில்லை; இ ரா ம ா வ தா ர ம் அரங்கேற்றும்போதுதான் 'நஞ்சடகோபனைப் பாடினையோ என்று நம் பெருமாள் — விஞ்சிய ஆதரத்தாற்கேட்பக் கம்பன் விரித்துரைத்த—செஞ்சொல் அந்தாதி' என்றதனால் இராமாவதார நூலிற்சொல்லாத குறைதீரச் சடகோபரை நூறுபாடல்களால் போற்றியுள்ளார் என்பது எல்லோரும் அறிந்தது தானே! இராமாவதாரத்தில் சடகோபரைப் பற்றியோ பிற ஆழ்வார்களைப் பற்றியோ சொல்லாமை குறையாகாது. பாயிரத்துள் 'தருகை நீண்ட தயரதன்' என்று தொடங்கும் பாடலைச் சேர்த்துள்ளமை உணர்க. இஃது இடைச்செருகல் எனின் சிவனைப்பற்றிக் கூறுபவையும் இடைச்செருகலாக இருக்கலாமே!

மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலரில் ஷெ சுந்தரகாண்ட முன்னுரையில், இவர் இயற்றிய பிறநூல்களுள் சடகோபரந்தாதியும் ஏரெழுபதும் சிறப்புடையவை என்பதும் காண்க.

## 'செங்கோல்' தொடர் 8

செங்கோலார் "இரணியன் நாத்திகன்; இராவணன் சிவபக்தன்: மைந்தனுடைய வெட்டுண்ட கையை எடுத்துத் தன் கழுத்தில் வைத்துக்கொண்டு பிள்ளைப்பருவத்தில் அவன் தன்னைத் தழுவியதை நினைத்து, ஆற்றுமை கொள்கிறான்; அப்படிப்பட்டவனையா தன் பிள்ளையையே கொலைபுரிய முயன்ற இரணியனோடு ஒப்பிடுவது" என்கிறார்.

இரணியன் நாத்திகன் என்பது எப்படிப் பொருந்தும்? தவம் செய்து இறைவனிடத்தில் வரம்பெற்றவனை நாத்திகன் என்னலாமா? வரம்பெற்றபின் இறைவனைக் காட்டிலும் யானே பெரியவன் என்று ஆணவம்கொள்கிறன்; அக்கருத்துக்கு மாறுபட்டவன் பிள்ளையாயினும் விரோதிதானே? சீதையை விட்டுவிடு என்ற இந்திரசித்தை இராவணன் வெறுக்கவில்லையா? பக்தியில் மிக்கவர்களாயிருந்தும் ஆணவத்தில் இரணியனும் இராவணனும் ஒரு தன்மையரே. தாயுமானரும், ஆணவத்தினுமிக்க ஆங்காரத்தை வருணிக்கும்போது, 'ஆங்காரமான குலவேட' என்ற பாட்டில் 'ஈங்கார் எனக்குநிகர் என்ன ப்ரதாபித்திராவணகாரமாகி' என்று குறித்தல் நோக்கத்தகும். முருகன் அவதாரத்தை வான்மீகி குறிப்பிட்டிருக்கவும் கம்பர் அதை நீக்கியது சமரசத்துக்குப்போலும்!

## 'செங்கோல்' தொடர் 9

''இரணியன் வதைப் படலத்திலே பல செய்யுள்கள் கம்பநாடரின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன; சொல்லுக்குச் சொல் சுவையூட்டுவனவாக இருக்கின்றன; தூணைப் பிளந்துகொண்டு திருமால் நரசிம்மாவதாரம் எடுக்கும் இடத்திலே அண்டமே கிடுகிடுப்பது போன்ற ஒரு அச்சம் நமக்கு ஏற்படத்தான் செய்கிறது'' என்கிறர் செங்கோலார். பல செய்யுள்கள் கம்பநாடரின் கைவண்ணத்தைக் காட்டுகின்றனஎன்றல் சில செய்யுள்கள் தானே இடைச்செருகல் என்று தோன்றுகிறது? எனவே ஐயா அவர்கள் கருத்துப்படி 'இரணியன் வதைப்படலம்' கம்பர் செய்ததுதான் எனத் தோன்றுகிறது. அங்ஙனம் இருக்க 'இரணியன் வதைப்படலம் முழுவதும் கம்பர் இயற்றியது தான் என்று ஏற்றுக்கொள்வோமானல் 'உலகமகாகவிஞர்கள் மண்டலத்திலிருந்து கம்பரைக் கொஞ்சம் தாழ்த்திவிடுவதாகவே எனக்குத் தோன்றுகிறது' என்று கூறுவது பொருந்துமா? ஆய்ந்து பார்க்க.

## 'செங்கோல்' தொடர் 10

''நாடவிட்ட படலத்தில் திருவேங்கடத்தைப் பற்றியுள்ள 4 செய்யுள்களில் ஒன்றில்கூடத் திருமாலின் வடிவத்தைக் காட்டவில்லை; ''......வேங்கடம் வேலவன் குன்றமாக இருப்பினும் நான்மறைகளுக்கு அது உறைவிடம் ஆகலாம் தானே! வேங்கடத்தை அடைவோர் முத்திபெறுவதற்கு வைணவத்தலமாக இருக்கவேண்டுமென்பதில்லையே! வேங்கடமலையை 4 செய்யுள்களால் வருணிக்கப் புகுந்தவர் அந்த மலையில் நின்ற வண்ணம் காட்சியளிக்கும் திருமாலைக் காட்டத் தவறிவிட்டார்; இதெல்லாம் எதைக் காட்டுகின்றன? கம்பநாடார் மறந்தும் புறந்தொழாக் கொள்கையை வலியுறுத்தும் வைதிக வைணவர் அல்லர் என்பதைத் தானே!'' இது செங்கோல்.



'வேங்கடம் வேலவன் குன்றமாக இருப்பினும்' என்ற வரியால் வேலவன் குன்றம் எனச் சுட்டிப் பின் 'அந்த மலையில் நின்றவண்ணம் காட்சியளிக்கும் திருமாலைக் காட்டத் தவறிவிட்டார்' என்பதனுல் அது திருமால் திருமலைதான் என்பதைக் குறிப்பது காண்க.

'முத்தி பெறுவதற்கு அது வைணவத் தலமாக இருக்கவேண்டுமென்பதில்லையே' என்கிறது செங்கோல். பரிபாடலில் 'நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை — ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்' என்று முத்தியளித்தற்குப் பிறதெய்வங்கட்கு உரிமையில்லை என்பதால் முத்தி பெறுதற்கு அது வைணவத் தலமாக இருக்கவேண்டும் என்பதை உணர்க. ''பரகதி உணர்ந்தவர்க்கு உதவு பண்ணவன்'' என்று கம்பனும் திருவவதாரப்படலத்தில் இதை ஏற்றுக்கொண்டிருப்பது காண்க.

''நாடவிட்ட படலத்திலே வேங்கடமலையை வருணிக்குமிடத்திலே அந்த மாமலையில் நின்றவண்ணம் காட்சி அளிக்கும் நெடுமாலின் உருவம் காட்டப்படாததற்கு வைதிகப் புலவர்கள் என்ன சமாதானம் சொல்லமுடியும்?'' இது செங்கோல். ஆறு செல்படலத்தில் (36) 'வலங்கொள்நேமி மழைநிற வானவன்—அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை—விலங்கும் வீடுறுகின்றன மெய்ந்நெறி புலங்கொள்வார்கட்கனையது பொய்க்குமோ?' என்று திருமாலையும் அங்குள்ள விலங்கும் வீடுறுதலையும் பாடிய கம்பநாடர் திருவுள்ளம் நன்கு விளங்குகின்றதே! இதற்குச் செங்கோல் என்ன செப்பும்?

'''கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரேல் உம் நெடிய கொடுமைநீங்கி வீடுறுதிர் ஆதலினல் விலங்குறுதிர்' என்னும் வரிகளிலே வேங்கடமலையை நெருங்காதீர் என்று சுக்கிரீவன் ஆணையிடுவதாகக் கம்பர் சொல்கிறர். இராமகதைக்கு இது பொருந்துமென்றலும் விஷ்ணு கோயிலுள்ள வேங்கடமலையை நெருங்காதீர் என்று கதையின் தேவைக்காகக்கூட பரமவைணவர் ஒருவர் சொல்லுவார் என்று எதிர்பார்க்கமுடியுமா?'' என்கிறது செங்கோல். 'இராமகாதைக்கு இது பொருந்துமென்றலும்' என்பதன் கருத்துயாதோ? 'விலங்கும் வீடுறுகின்றன' என்று ஆறு செல்படலத்துள் கூறுவதை நோக்க, விலங்குகளாகிய நீங்கள் சென்றல் எடுத்த காரியத்துக்கு இடையூறும் என்று உண்மையாகவே நம்பித்தான் சொல்கின்றனர். திருவிருத்தத்தில் (6) 'உயிர்காமின்கள் ஞாலத்துள்ளே' எனவும் திருவாய்மொழி 10-7-1 'செஞ்சொற்கவிகாள்! உயிர்காத் தாட்செய்ம்மின்' எனவும் வருவனவற்றை நோக்குக.

தொடர் 10ல் 'வேங்கடம் வேலவன் குன்றமாக இருப்பினும்' எனக் காட்டிய செங்கோல் 'இனி, வேங்கடமலையில் அறுமுகன்

கோயில் கொண்டிருந்தார் எனச் சைவ புலவர்களிலே சிலர் கூறுகின்றார்களே! அதையும் பார்ப்போம்' என்கிறது. இக்கருத்து இதற்கு உடன்பாடில்லை போலும். ஆயின் அதனை ஏன் இங்குக் கூறுதல் வேண்டும்? நாமும் அதைப் பார்ப்போம்.

''தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர்கள் பலர் ஆவர்; அவர்களிலே எவரும் வடவேங்கடத்திற் கோயில்கொண்டுள்ள தெய்வத்தைப் பற்றிய ஆராய்ச்சியிற் புகவே இல்லை; ஆனால் பிற்காலத்தில் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதிய திரு. மாதவச்சிவஞானயோகிகள், பனம்பாரனர் கூறிய 'வடவேங்கடம்' என்னும் சொல்லுக்குக் கீழ்வருமாறு விருத்தியுரை கூறுகிறர்—'தமிழ் நாட்டிற்கு வடக்கண் பிற எல்லையும் உளவாக வேங்கடத்தை எல்லையாகக் கூறினர் — அகத்தியனர்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனகிய அறுமுகக்கடவுள் வரைப்பு என்னும் இயைபு பற்றி' என்பது'' எனக் காட்டுகிறது செங்கோல்.

'தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர்கள் பலர் ஆவர், அவர்களிலே எவரும் வடவேங்கடத்திலே கோயில் கொண்டுள்ள தெய்வத்தைப் பற்றிய ஆராய்ச்சியிற் புகவே இல்லை' என்பது முழுப்பூசுணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கொப்பாகும். என்னை? எனின்: 'தூயஞானம் நிறைந்த சிவச்சுடர் தானேயாகிய தன்மையாளன்' என்று பாராட்டப்பெற்ற பேராசியர் நச்சினர்க்கினியர்—திரு. மாதவச்சிவஞானயோகிகட்கு முந்தியவர் என்பதில் யார்க்கும் ஐயம் இல்லை. அப்பெரியவர், பனம்பாரனர் கூறிய 'வடவேங்கடம்' என்ற சொற்கு 'நிலங்கடந்த நெடுமுடியண்ணலை உலகம் தவம்செய்து வீடுபெற்ற மலையாதலானும் எல்லாரினும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினர்' என்று உரையிட்டுள்ளதை இல்லை என்று செங்கோல் செப்புமா?

'சமன்கொள் விடுதரும் தடம்குன்றம்' என்று (திருவாய்மொழி 3-3-7) நம்மாழ்வார் அருள்வர், வேங்கடத்தை விடுதரும் மலை என்று நம்மாழ்வாரும் கம்பரும் உரையாசிரியர் நச்சினர்க்கினியரும் வற்புறுத்தலைக் காணும்போது பண்டைநாளிலிருந்தே இக்கருத்து பரவி வருகின்றதை உணரலாம். இங்கு ஹரிசமயதிவாகரம் தொகுதி 3 பகுதி 3ல் ஆராய்ச்சிவல்லுநர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள் கூறுவது நோக்கத்தகும்:—

'அகிலபுவனங்களையும் தன் மூவடிகளின் கீழ் ஒடுக்கியவன் எவனே அப்பெருமான் கிரியில் நிலைபெற்றருள்கின்றன் என்ற கருத்தில் 'ம்ருகோ ந பீமः குசரோ கிரிஷ்டாः—யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு அதிக்ஷயந்தி புவநாநி விஸ்வா' என்று வேதமும் திரி



விக்ரமனகிய திருவேங்கடமுடையான் திருமலையில் நித்யவாசம் செய்தருளுகிற சிறப்பை எடுத்துக்கூறுமென்பர். இவ்வேதப் பொருளையே 'இழைத்தார் ஒருவரை இல்லா மறைகளை இன்தமிழால்—குழைத்தார் ஆகிய குருகைப்பிரானும்' 'குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன் - அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்-சென்று சேர் திருவேங்கட மாமலை' என்றருளிச்செய்தார். 'வேதவெற்பு' என்று திருமலையை ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் சிறப்பித்தருளியதும் இக்கருத்தை உட்கொண்டு போலும் என்க.

''ஒருகால் ஷெ பண்டிதர் 'சென்னை ராஜதானிக் கலாசாலைப் புரொபஸராய் இருந்த சேஷகிரி சாஸ்திரியார் எழுதியவாறு இராமாநுஜர்க்கும் பின்பிருந்தவர்களே ஆழ்வார்கள் என்று கருதியிருத்தலும் கூடும். அவ்வாறயின் பொதுநோக்கினரும் சங்கத்துச் சான்ரேரும் ஆகிய ஐயனரிதனர்:—

''வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
கிருளீயும் ஞாலத் திடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்''

எனல் காண்க. இதுவும் இடைச்செருகல் ஆயின் சிலப்பதிகாரத்துள் வரும் 'பகையணங்காழியும்' என்பதும் இடைச்செருகலாயிருக்கலாம்.'' இவை நினைவிற்கொள்ளத்தகும்.

மேலும், திரு. மாதவச்சிவஞான யோகிகள் கூற்றை மறுத்துப் பேராசான் அரசஞ்சண்முகனர் தம் சண்முகவிருத்தியில் கூறுவதும் இங்கு நோக்கத்தகும்:—

''இனி, அவர் 'தமிழ்நாட்டிற்கு வடக்கட்பிற எல்லையும் உளவாக, வேங்கடத்தை எல்லையாகக் கூறினர்—அகத்தியனர்க்குச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனகிய அறுமுகக்கடவுள் வரைப்பு என்னும் இயைபுபற்றி' என்றர். அது கருத்தாயின் அவர்தாமே 'இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்' எனக் காஞ்சிப் புராணத்துட் கூறலான், அறுமுகக் கடவுளுக்குத் தந்தையாகலானும் அகத்தியனர்க்குக் குரவனகலானும் அக்கண்ணுதல் வரைப்பினுள் ஒன்றைக்கூறல் வேண்டும்; அற்றன்று; இருவரும் அபேதமாதல் கருதி அங்ஙனம் கூறினர் எனின்: தெற்கின் கண்ணும் அறுமுகக் கடவுள் வரைப்பினுள் ஒன்றே கூறல்வேண்டும் அங்ஙனமின்மையானும், எல்லை கூறுதல் யாவர்க்கும் ஒப்பமுடிந்ததாதல் வேண்டுமாகலின், 'வீங்கு நீரருவி......நின்றவண்ணமும்' (சிலப்-காடுகாண் 41.57) என இளங்கோ அடிகள் கூறினமையும், திருமுருகாற்றுப்

படையுள் முருகோன்மலை எனப் பரங்குன்ற முதலாய பிறகூறலன்றி வேங்கடத்தை அவன்மலை என நக்கீரனர் கூருமையும் புராணங்க ளுட்பல நெடியோன் குன்றம் எனவே கூறலுமாராயின் வேங்கடம் அறுமுகக் கடவுள்மலையும் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடியாமை யாலும், முருகன் குறிஞ்சிநிலத் தெய்வமாகலின் அமையுமெனின், கயிலாயத்தையும் மேருவையும் கண்ணுதல் மலையெனவும், பொதியினை அகத்தியன்மலை எனவும் கூறலன்றி அவன்மலை எனக் கூறலின்மை யான் அவ்வாறே வேங்கடமும் நெடியோன்மலையாகலன்றி அறுமுகக் கடவுள் வரைப்பெனல் கூடாமையானும் அது பொருந்தாது என்பது'' இந்த எடுத்துக்காட்டு செங்கோலுக்குப் போதுமென நினைக்கிறேன்.

## 'செங்கோல்' தொடர் 15

''அரி என்னும் திருமாலே காப்பிய நாயகனாக அவருக்குத் தலைமை தருகின்ற இடங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. அதுபோல சிவனுக்குத் தலைமை தருகின்ற இடங்கள் வெளிப்படையாகத் தெரிய வில்லை; ஆராய்ந்துதான் கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது'' என் கிறது செங்கோல். ஆராய்ந்துதானே இந்த முடிவுக்கு வந்திருக் கிறது செங்கோல்; இன்னம் எதற்கு ஆராயவேண்டும்?

## 'செங்கோல்' தொடர் 16

''வைணவ ஆசாரியர்கள்கூட தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையையே பின்பற்றித் தமிழின் தனித்தன்மைக்குக் கேடு செய்துவிட்டனர். இந்த வைணவர்களிடமிருந்து கம்பர் பெரிதும் வேறுபடுகிருர் என்பதோடு தமிழைப் பொறுத்தவரையில் சைவநாயன்மார்களான நால்வரைப் பின்பற்றித் தமிழின் தனித் தன்மையைக் காத்திருக்கிருர் எனலாம்'' என்கிறது செங்கோல். ஆசாரியர்கள்தானே மணிப்பிரவாளநடையையே பின்பற்றித் தமிழின் தனித்தன்மைக்குக் கேடு செய்தவர்கள்! செங்கோலின் கருத்துப்படி ஆழ்வார்கள் யாரும் தமிழின் தனித்தன்மைக்குக் கேடு செய்திலரே! அப்படியிருக்க ஆழ்வார்களை விடுத்து நால்வரைப் பின்பற்றித் தமிழின் தனித்தன்மையைக் காத்திருக்கிருர் என்பது செங்கோலின் மனக்கோட்டை தானே!

இதே தொடரில் 'திருவேங்கட மலையைப் பெற்றதின் காரண மாகத் தொண்டைமண்டலத்திற்கு ஏற்பட்ட சிறப்பை 13 செய்யுள்க ளால் வருணிக்கிருர். வேங்கடமலையையும் அங்குக் கோயில்கொண் டுள்ள நாதனையும் 5 செய்யுள்களால் புகழ்ந்தேத்துகிருர்' என்கிறது நம் செங்கோல். இப்படிச் சொன்ன செங்கோலே தொடர் 10ல் 'நாடவிட்ட படலத்திலே கம்பநாடர் வேங்கடமலையை நான்கு செய்யுள்



களால் வருணிக்கப் புகுந்தவர், அந்த மலையில் நின்றவண்ணம் காட்சியளிக்கும் திருமாலைக் காட்டத் தவறிவிட்டார்' என்கிறது. 'அங்குக் கோயில்கொண்டுள்ள நாதனைப் புகழ்ந்தேத்துகின்ருர்' என்று இத்தொடரில் காட்டுகிறது. இதில் எது உண்மை என்பதை வாசகர்களே முடிவு செய்வார்களாக.

## 'செங்கோல்' தொடர் 17

தலைப்பு:— கம்பர் சைவரே.

''ஔவைப் பிராட்டியும்,......சைவர் என்று தெரிகின்றது. ஆனல் அவரே 'அரனை மறவேல்' 'திருமாலுக்கடிமை செய்' என்றும் பாடித் திருமாலையும் சிவனையும் சமநிலையிற் காட்டுகிருர்'' என்று தொடர் கின்றது செங்கோல். 'அரனை மறவேல்' என்பது ஆத்திசூடியில் உள்ளதா? 'அறனை மறவேல்' என்றதைச் சைவப்பெருமக்களுட் சிலர் 'அரனை மறவேல்' என அண்மையில் தவருகச் சொல்லினர்; மேலும் கொன்றைவேந்தனில் திருநெல்வேலிப் பிரதிகளில் 'சினத் தைப் பேணில் தனத்திற்கழிவு' என்றுள்ளதை 'சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு' என மாற்றிவிட்டனர் இவ்விவரங்களை எனது / 'வில்லிபாரதத்தில் விஞேதத்திருத்தங்கள்' என்ற கட்டுரையில் காணலாம்.

'சங்ககாலக் கவிஞர்களில் ஒருவரான கடுவன் இளவெயினனர் திருமாலையும் முருகனையும் தனித்தனிப் பாடல்களால் வழிபட்டதனைப் பார்க்கிறோம்' என்கிறது செங்கோல். திருமாலுக்குரிய மேன்மையும் முருகனுக்குரிய தன்மையும் விளங்குமாறு அவரவர்கட்குரிய தனித் தன்மையை விளக்குவதை அப்பாடல்களில் காணலாம்.

''இடைக்கால உரையாசிரியர்களிலேயும் பலர் தாங்கள் சிவபக்தரா யிருந்தும் சமணபௌத்த இலக்கியங்களுக்கு உரை எழுதினர்'' என் கிறது செங்கோல். பரிமேலழகரும் சிவபக்தர்தானு? என்பதைச் செங்கோலே சொல்லட்டும். மேலும் ''அவர் வேத மதத்தவராதலால் அவரை வைணவராகக் கொள்ளவும் வாய்ப்புண்டு; ஆனல் அவரது நெற்றியில் நாமந்தீட்டி ஆழ்வார் பட்டியலிலே சேர்க்க சந்தர்ப்பமே இல்லை'' என்கிறது செங்கோல்.

இங்கு இதை மறுப்பதற்கு முன் சில செய்திகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். நாமம், திருமண் என்பன ஒரு பொருட் சொற்கள், ஆழ்வார்கள் பாடல்களுள் நாமம்பற்றி இல்லை. ஆதலின்

---

/ கட்டுரை கிடைக்குமிடம்:— கி. வேங்கடசாமி ரெட்டியார், வி.பூதூர், வழி வளவனூர்-605 108 என்ற முகவரியில் ரூ. 1-50க்குக் கிடைக்கும்.

நாமம் பிற்காலத்தில் தோன்றியதுதான் என்ற கருத்தினராகி நாமம் பற்றிக் கம்பர் சொன்ன பாடல்களை இடைச்செருகல் என்று கொண்டனர் சிலர்.

பெரியாழ்வார் திருமொழி 3-4-8.

1) "சிந்துரப்பொடிக்கொண்டு சென்னியப்பித்
திருநாமம் இட்டங்கோ ரிலையந்தன்னால்
அந்தர மின்றித்தன் நெறிபங்கியை
அழகிய நேத்திரத்தால் அணிந்து
இந்திரன் போல்வரும் ஆயப்பிள்ளை
எதிர்நின்றங் கினவளை இழவே லென்னச்
சந்தியில் நின்றுகண்டீர் நங்கைதன்
துகிலொடு சரிவளை கழல்கின்றதே".

'திருநாமம் இட்டங்கோ ரிலையந்தன்னால்'-நேரியதாய் நீண்டு ஒட்டின இடத்திலே பற்றும்படி இளையதாய் நிறத்திருப்பதொரு இலையாலே திருநெற்றியிலே திருநாமமாக இட்டு ஊர்த்வபுண்ட்ராகாரமாக அழுத்திவைக்குமாய்த்து'—மாமுனிகள்.

'சாதிலிங்கப் பொடியைக்கொண்டு திருக்குழலிலே அலங்காரமாகச் சாத்தி (நாமமிடவேண்டிய) அந்த நெற்றியிலே (ஒட்டினுற் பிடித்துக் கொள்வதான) ஒரு தளிரான இலையால் ஊர்த்வபுண்ட்ரம் சாத்தி' வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்.

2) திருவிருத்தம் 49ல் 'மண்நேரன்ன ஒண்ணுதலே' என்பதற்கு 'திருமண்காப்பைத் தகுதியாகத் தரித்த திருநெற்றியை உடையவள்' என்பர் வை மு. சடகோப ராமாநுஜாசார்யர்.

இதனை அடியொற்றிக் கம்பநாடர் பால-கடிமணப்படலத்தில் (49) 'என்றும் நான்முகன்முதல் யாரும் யாவையும் — நின்ற பேரிருளினை நீக்கி நீள்நெறி சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடும். தன் திருநாமத்தைத் தானும் சாத்தியே' எனக் கூறியுள்ளதை மிகைப் பாடல் ஆக்கிவிட்டனர்.

கம்பரை அடியொற்றி திரு-அருணசலக் கவிராயர் பாடிய இராம நாடகத்திலே இவ்விடத்து.

பல்லவி

ராமசாமி கொண்டகோலம் என்னாலே சொல்லப்போமோ

அநுபல்லவி

கோமிதிலை ராசன்முன் அனேக-கோடி மன்மதனை நிகராக

சரணம்

பாதகடகம்சேர்த்தி மருங்கினிற் பசும்பொன் ஆடைபோர்த்தி மார்பின் மீதுபொன்னூல்ஏற்றித் தன்நாமமும் விளங்கவே சாத்தி



என்று கூறுவதால் கவிராயர் 'என்றும் நான்முகன்முதல்' என்ற பாடலைக் கம்பருடைய பாடல்தான் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார். கவிராயரும் சைவர்தான். அவர் உடன்பட்ட பாடலை இந்தச் சைவ ஞானிகள் உடன்பட மறுப்பது வியப்புக்குரியதே.

மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெள்ளிவிழா மலராக வெளியிட்ட கம்பராமாயணம் சுந்தரகாண்டம் சம்புமாலி வதைப் படலம் (832)

"ஐயனும் அமைந்து நின்றான் ஆழியான் அளவின் நாமம்
செய்சுடர் விளக்கிற் றேன்றும் நெற்றியே நெற்றியாக" என்றுளது.

பழைய பாடமும் இதுவே. டி பதிப்பில் இதற்கு விளக்கமாக, "திருமாலின் துவாதச நாமங்களைக் கூறியபடியே பன்னிரண்டு உறுப்புக்களில் இட்டுக்கொள்வது மரபாதலின், திருமண்காப்புக்கு நாமம் என்பது பெயராயிற்று. 'தன் திருநாமத்தைத் தானும் சாத்தியே' என்பர் முன்னும் (கடிமணப் 49). 'ஈராறு நாமம் உரைசெய்து மண்கொடிடுவார்கள் காணும் இமையோர்' என்றார் வில்லிபுத்தூரரும். நெய்யிட்டுப் பிரகாசிக்கும் தீபம்போன்றிருந்தது அநுமனது நெற்றி நாமம் என்றும் அது நெற்றிப்படையாகத் தோன்றும்படி என்றும் கூறியபடி. நெற்றி – முன்னணிப்படை" என்றுள்ளது காண்க. இதுகாறும் கூறியவாற்றால் நாமம் என்பது முன்னமேயுள்ளதுதான்; புதிதல்ல என்று உணர்க.

இதை மறுத்துச் செங்கோல் 'அவரது (கம்பரது) நெற்றியில் நாமம் தீட்டி ஆழ்வார் பட்டியலிலே சேர்க்கச் சந்தர்ப்பமே இல்லை" என்கிறது.

ஆயின் ரசிகமணி T. K. C. அவர்களைப்போலவும் செங்கோல் அரசரைப்போலவும் கம்பநாடரை மீசையுள ஆண்பிள்ளைச் சிங்கமாக ஆக்கி வீரர் பட்டியலில் சேர்ப்பதற்கு மட்டும் சந்தர்ப்பம் நிறைய இருக்கிறதுபோலும்! இவர்கள் தாடியும் உடையவர்களாயிருந்தால் திருவள்ளுவரைக் காட்டியிருப்பதுபோன்று கம்பரையும் தாடியும் மீசையும் உடையவர்களாகக் காட்டியிருக்கக்கூடும். 'கம்பராமனைக் கடவுளாகத்தான் ஏற்கவேண்டுமென்று எவரும் சொல்லவில்லை' என்கிறது செங்கோல். ஆயின், கம்பர் தம் ராமனை எப்படிக் காட்டியுள்ளார்? தெய்வமாகவும் தெய்வத்துக்கு மேலாகவும் தானே காட்டியுள்ளார்! இஃது எல்லோரும் அறிந்ததுதானே! மேலும் 'கம்பராமனை மானிட சமுதாயத்தின் வழிகாட்டியாக ஏற்றால்போதும்' என்கிறது செங்கோல். இஃது செங்கோலின் இராமபக்தி போலும்! மேலும் 'அதுவே சைவரான கம்பரின் குறிக்கோள்' என்று முடிக்

கிறது செங்கோல். செங்கோல் மற்றொரு புலவரை(க் கம்பர்போன்ற) நமக்கு நினைவூட்டினால் நாம் செங்கோலுக்கு நன்றி செலுத்தக் கடமைப்படுவோம்.

"சங்ககாலத்தில் மதப்பூசல் இல்லை; வேறுபாடின்றித் திருமால், சிவன், முருகன், கொற்றவை ஆகிய எல்லாத் தெய்வங்களையும் மக்கள் வணங்கிவந்தனர்; அதேபோல சைவராகிய கம்பரும் பொதுவாகத் தெய்வங்களைப் போற்றினார்; எடுத்துக்கொண்ட காப்பியத் தன்மைக்கேற்ப இராமபிரானை அதிகமாகப் பேசியிருக்கின்றார்; ஆகவே கம்பர் சமரசஞானி" என்று கற்பனை பண்ணிக் கொண்டது செங்கோல். இதனை நன்கு ஆராய்ந்து 'சங்ககாலச் சமயம் யாது' என்பதனைச் சங்கநூல்களாலே விளக்கி 'திருமாலே முத்திதரும் முதற்கடவுள்' என்பதைக்காட்டி, இச்சங்ககாலச் சமயமே தான் கம்பரின் சமயம் என்று உறுதிசெய்து, 'சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்'என்ற தலைப்பில் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலாசிரியர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அட்வகேட் அவர்களைத் தமிழுலகு நன்கறியும். 'ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம்' மாத இதழ்வாயிலாக, வடமொழி தமிழ்மொழி இரண்டிலுமுள்ள பிரமாண நூல்களை உரையுடன் வெளியிட்டு வருகின்றார். வியாக்கியானங்களையும் விளக்கங்களுடன் வெளியிடுகின்றார். அன்பர்களின் உண்மையான ஐயங்களை 'கேள்விபதில்' என்ற தலைப்பில் தீர்த்துவைக்கின்றார்.

முன்னோர்கள் கருத்துக்கு மாறாகச் சொல்பவர்கள் யாராயினும் அவர்களை உடனே கண்டிக்கவும் உண்மைகளை விளக்கவும் தகுந்த வன்மையாளர். அறிஞர்கட்கும் பக்தர்கட்கும் அடங்கியிருப்பவர். சுயநலமின்றிச் சமயத்துக்குத் தொண்டாற்றும் தூய வேதியர். 'வித்யா விசாரத' 'தீவ்யார்த்த ரத்னநிதி' என்று சிறப்புப் பெயர்களும் உடையவர். இப்பெரியாரை எவ்வளவு பாராட்டினும் தகும். இந்நூலைப் படிக்கும்போது இவரது பரந்த அறிவும் சிறந்த தொண்டும் நம்மால் அறியமுடிகிறது இப்பெரியார் இதுபோன்று பல நூல்கள் எழுதிச் சமயத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்ற நம்பெருமாள் திருவருள் பாலிப்பாராக.

**ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம் வாழ்க !**
**வைணவக் கம்பன் வாழ்க !!**

இங்ஙன்,
அன்புள்ள,
**கி. வேங்கடசாமி.**

வி.பூதூர். S.A. Dt.
**1—7—1984**

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# ஆசிரியரின் முதல்பாக முகவுரை

தமிழ்ப்புலவர்களில் சிலர் பல வருடங்களாகக் கம்பனின் சமயம் வைணவமே என்னும் பேருண்மையை மறைக்க முயன்று வருகின்றனர். வெள்ளிடை மலைபோல் விளங்கும் இவ்வுண்மையை நிலைநாட்டும் நூல் ஒன்று எழுதவேண்டும் என்னும் அவா நீண்டகாலமாக எந்தையார்க்கும் அடியேனுக்கும் உண்டு. அதற்குச் சந்தர்ப்பம் ஒன்று சில வருடங்களுக்கு முன் வாய்த்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுவரும் கம்பராமாயணப்பதிப்பினுடைய பதிப்பாசிரியர் குழுவின் தலைவராய் விளங்கும் திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை, M.A.B.L. அவர்கள் கழகப்பதிப்பின் திருவவதாரப்படலத்தில் பல திருத்தங்களைச் செய்து, 7—7—61 வானொலி இதழில் "கம்பராமாயணத்தில் பாடபேதங்கள்" என்னும் கட்டுரையிலும், தருமை ஆதீனத்தாரால் வெளியிடப்பட்டுவரும் "ஞானசம்பந்தம்" என்னும் பத்திரிகையின் பிலவ ஆவணி (10—9—61) இதழில் வெளிவந்த கட்டுரையிலும் கம்பனின் உண்மைச் சமயத்தைத் திரித்துக் கூறியிருந்தார்.

பிள்ளையவர்களின் கட்டுரைகளிலுள்ள கருத்துக்கள் தவறு என்று நிரூபித்து, கம்பனின் உண்மைச் சமயத்தைக் காட்டித்தரும் "கம்பனின் சமயம்" என்னும் நூல் பிலவ பங்குனி உத்தரத்தன்று (21—3—62) நம்மால் தொடங்கப்பெற்றது. நம்முடைய பத்திரிகையான "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" மாத இதழில் மாதந்தோறும் சிறிதுசிறிதாக வெளியிடப்பட்டுவந்தது. தொடங்கிச் சில மாதங்கள் வரை வெளிவந்தபகுதி பிள்ளையவர்களுக்கும் அனுப்பப்பட்டது. அவர்களிடமிருந்து யாதொரு பதிலுமில்லை. கழகப்பதிப்பின் ஆரணிய காண்டம் முற்பகுதி வரையிலுமே இப்போது தொடர்ச்சியாக வெளிவந்திருக்கிறபடியால் அது வரையிலுள்ள பகுதியின் ஆராய்ச்சி இன்று (குரோதி பங்குனி உத்தரத்தன்று) முதல் பாகமாக வெளியிடப்படுகிறது. கழகப்பதிப்பின் எஞ்சிய பகுதிகள் முழுவதும் வெளிவந்த பின் இந்நூலின் பிற்பகுதிகள் வெளியிடப்படும்.

மற்ற துறைகளிற்போலே, இலக்கியத்துறையிலும், மதத்துறையிலும் இப்போது நேர்மை மிகவும் குறைந்துவிட்டது. தங்கள் கருத்தைப் பழங்காவியங்களின் மீது தமிழ்ப்புலவர்கள் ஏற்றுகிறார்கள். இதை எடுத்துக்காட்டினாலும் தவறை ஒப்புக்கொள்ள மனமிருப்பதில்லை. பத்திரிகைகளும் உண்மையை வெளிப்படுத்தும் இத்தகைய நூல்களுக்கு மதிப்புரையெழுதத் தயங்குகின்றன. இது நாட்டுக்கு நல்லதல்ல. பிள்ளையவர்கள் நம் கருத்துக்கு மாறுபடுவாரானால், தம்

கருத்தை நிலைநாட்டி எழுதவேண்டும். இல்லாவிடில் முன்னம் தாம் எழுதியது தவறு என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இதுவே நேர்மையும் பெருந்தன்மையுமாகும். மௌனமாயிருப்பது புலவர்களுக்கு அழகல்ல. பத்திரிகைகளும், மற்ற தமிழ்ப்புலவர்களும் இத்தகைய நூல்களை நடுநிலைநின்று ஆராய்ந்து மதிப்புரைகளை எழுதவேண்டும். இதனால் நாடு நலம் பெறும். தங்களுக்குக் கசப்பாயிருக்கின்ற காரணத்தால் உண்மைகளை மறைக்கப்புகுவது நாட்டுக்குத் தீங்கையே விளைக்கும். தமிழ் நாட்டில் தீங்குகள் ஒடுங்கி நலங்கள் ஓங்க ஆதி பரம்பொருள் அருளுவாளுக.

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L.,
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

குரோதி
பங்குனி உத்தரம்.

## ஆசிரியரின் இரண்டாம்பாக முன்னுரை

நமது கம்பனின் சமயம் முதல்பாகத்தைப் பல பிரதிகள்பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் கழகப்புலவர்கள் அனைவருக்கும் வழங்கினர். எவரும் அதை மறுக்க முயலவில்லை. சில வருடங்களுக்குப் பிறகு பின்னை அவர்கள் சிவகதி அடைந்து விட்டார்.

சென்ற வருடம் திரு. ம. பொ. சிவஞானகிராமணி அவர்கள் "கம்பர் சைவரே" என்று நிலைநிறுத்துவதற்காகத் தமது 'செங்கோல்' பத்திரிகையில் சில கட்டுரைகள் எழுதினர். கட்டுரைத் தொடர் முடிந்ததும் அதை நூல் வடிவிலும் வெளியிட்டார். அந்நூலை மறுக்கும் நமது "சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்" என்னும் நூல் நமது ஸுதர்சனத்தில் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டு நமது மணிவிழாவின்போது கம்பனின் சமயம் இரண்டாம் பாகமாக வெளியிடப் பெறுகிறது. இதை அவ்வப்போது பெற்றுவந்த திரு. ம.பொ.சி. தமது செங்கோலில் "ஆடத்தெரியாத நாட்டியக்காரி வீதி கோணல் என்றாளாம்" என்கிறகணக்கிலே, நமது நூலுக்கு மறுப்பெழுத முற்பட்டால் தாம் வைதிகச் சைவராக மாறவேண்டியிருக்குமாகையால் தாம் மறுப்பெழுதப் போவதில்லை என்று எழுதி முடித்துவிட்டார். இந்நூலுக்கு ஆணித்தரமான அணிந்துரை அளித்த வி.பூதூர் வித்வான் கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. இனியாவது மனச்சாட்சியுள்ள தமிழறிஞர் எவரும் கம்பன் பரம வைணவனே என்னும் பேருண்மையை மறுக்கத் துணியமாட்டார்கள் என நம்புகிறேன்.

உண்மையை உயிரினும் ஓம்பும்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

18—11—84.

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்

[6—2—83 இதழ் முதல் வாரந்தோறும் 'செங்கோல்' என்னும் தமது பத்திரிகையில் திரு. ம. பொ. சி. என்று புகழ்பெற்ற தமிழரசுக் கழகத் தலைவரான ம. பொ. சிவஞானகிராமணி அவர்கள் "கம்பநாடர் சைவரா? வைணவரா?" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு ஸுதர்சனம் ஆசிரியர் (ஸுதர்சனர்) (ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், வழக்கறிஞர், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17) எழுதிய மறுப்புரை]

## I சங்ககாலத்தில் சமயநிலை

1. சில வருடங்களுக்கு முன் மதுரையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் தொல்காப்பியர் அரங்கில் நமது "சங்ககாலத் தமிழர் சமயம்" எனும் நூலை அங்கு வந்திருந்த தமிழ் அறிஞர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் இலவசமாக வழங்கினோம். அந்நூலைப் பெற்றுக்கொண்டவர்களில் திரு. ம. பொ. சியும் ஒருவர். அதைப் பெற்றுக்கொண்ட பல தமிழ் அறிஞர்கள் "எவராலும் மறுக்க வொண்ணாதபடி 'சங்ககாலத்தில் வைணவமதம் ஒன்றே வேதமதமாகக் கொள்ளப்பட்டுவந்தது' என்னும் உண்மையை நிலைநாட்டுவது இந்நூல்" என்று பாராட்டிவருகின்றனர். மாற்றுக்கருத்துடையவர் எவரும் இன்றுவரை அந்நூலை மறுக்கத் துணியவில்லை.

2. திரு. ம. பொ. சி. அவர்கள் தாம் அந்நூலைப் படித்ததாகவே காட்டிக்கொள்ளாமல் அந்நூலில் நாம் நிலைநாட்டியிருக்கும் முக்கியமான உண்மைக்கு முரணாக இக்கட்டுரைத் தொடரின் 1, 6, 9-வது பகுதிகளில் பின்வருமாறு எழுதுகிறார்:—

**இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகச் சொல்லப்படும் தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்திலேயே திருமாலானவர் முல்லை நிலத்து மக்களின் வழிபடு தெய்வமாகச் சொல்லப்படுகிறார். 'மாயோன் மேய காடுறை உலகம்' என்பது தொல்காப்பியச் சூத்திரம். தொல்காப்பியத்திற்கு முன்னும் பின்னும் தோன்றிய இலக்கியங்களிலேயும் திருமாலானவர்.**

'காடும் காடு சேர்ந்த நிலமும்' என்று தொல்காப்பியத்தால் வரையறுத்துச் சொல்லப்படும் முல்லை நிலத்து மக்களின் தெய்வமாக வருணிக்கப்படுகிறார். சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரத்திலேயும் காடும் காடு சேர்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்திலே வாழும் மக்கள் திருமாலை வழிபடுவதை இளங்கோவடிகள் 'ஆய்ச்சியர் குரவையிலே' காட்டிபடுத்துகின்றார். (ம. பொ. சி. கட்டுரை முதல் பகுதி)

இத்துடனன்றி, முல்லை நிலத்திலிருந்து வேறுபட்ட மலையும் மலை சேர்ந்த நிலமும் எனப்படும் குறிஞ்சி நிலத்திலே வாழும் மக்களும் திருமாலை வழிபட்டதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆம்; தமிழகத்தின் வடக்கெல்லையிலுள்ள வேங்கட மலையிலே திருமால் கோயில் கொண்டிருப்பதை வைணவப் பெரியவனான மாங்காட்டு மறையவனையே கொண்டு நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார், இளங்கோவடிகள். 'கடலும் கடல் சேர்ந்த நிலமும்' எனப்படும் நெய்தல் பிரதேசத்திலும் திருமால் கோயில் கொண்டிருப்பதை வஞ்சிக் காண்டத்திலே இளங்கோ கூறுகின்றார். "வயலும் சோலையும் அல்லது யாங்கணும் அயல்படக்கிடந்த நெறியாய்இல்லை" என்று வயல் வளம் படைத்த நன்செய் மண்டலமான சோழமண்டலத்தை இளங்கோ வருணிக்கிறார். 'வயலும் வயல் சார்ந்த நிலமும்' எனப்படும் சோழ மண்டலத்திலுள்ள திருவரங்கத்திலேயும் திருமால் படுத்த கோலத்தில் காட்சியளிக்கிறார் என்று வைணவ அர்ந்தணரான மாங்காட்டு மறையவனைக்கொண்டு இளங்கோவடிகள் நமக்கு அறிவிக்கின்றார். இதனால் சங்க காலத்திலே காடும் காடு சேர்ந்த இடமுமான நெய்தல் (முல்லை) நிலத்திலே வாழும் மக்களுக்கு மட்டும் உரிய தனித்தெய்வமான திருமாலானவர் தமிழகத்தில் நால்வகை நிலங்களிலேயும் வாழும் மக்களால் வழிபடும் பொதுத்தெய்வம் ஆகியிருந்தது புலப்படுகின்றது. ஆழ்வாராதியர்கள் தோன்றி, திருமால் வழிபாட்டை ஒருசமயத்தாருக்குரிய கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்கு முன்பிருந்த நிலை இது. (ம.பொ.சி. கட்டுரை முதல் பகுதி)

சமஸ்கிருத மொழிப் புலவர்கள் வேத காலம் என்கிறார்களே, அதை சங்ககாலம் என்கிறார்கள், தமிழ்ப் புலவர்கள்



இருத்துவுக்கு முற்பட்ட காலம் அது. அந்தக் காலத்திலே, சிவனை வழிபட்டு வந்தனர் தமிழர். ஆனால் 'சிவமதம்' என்னும் பொருளிலே "சைவம்" என்பதாக ஒரு மதம் நடைமுறையில் இருக்கவில்லை. அதுபோல விஷ்ணு என்று வடமொழிப் புலவர்கள் சொல்லும் தெய்வத்தையும் "திருமால்" "மாயோன்" என்னும் பெயர்களிலே சங்ககாலத்தமிழர் வழிபட்டு வந்தனர். இந்த இருவேறு தெய்வங்களையும் மனவேறுபாடின்றி தங்கள் தெய்வங்களாகவே தமிழர் ஏற்றுக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது. சங்க நூல்களான தொல்காப்பியம் என்னும் இலக்கணத்திலேயும், "பத்துப்பாட்டு" "எட்டுத் தொகை" எனப்படும் இலக்கியங்களிலேயும் திருமாலின் அவதாரங்கள் சொல்லப்படுகின்றன. ஆம்; அங்கு மிங்கும் குறிப்புகளாக. திருமாலின் அவதாரக் கதைகளை முழு அளவில் கூறும் தமிழ் நூல் எதுவும் சங்ககாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. (ம.பொ.சி. கட்டுரை 6-வது பகுதி)

பரிபாடலில் வரும் திருமாலைப்பற்றிய பாடல்கள் அனைத்தும் பக்திப் பாடல்களே என்பதையும் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். (ம. பொ. சி. கட்டுரை 9-வது பகுதி)

இனி, இவற்றுக்கு பதிலுரைப்போம்.

3. "சிவனை வழிபடுகிறவர்கள் சைவர்கள். விஷ்ணுவை வழிபடுவோர் வைணவர். சக்தியை வழிபடுவோர் சாக்தர். இந்திரனை வழிபடுவோர் ஐந்திரேயர். குமரனை வழிபடுவோர் கௌமாரமதத்தவர்" என்று இப்பகுதியிலேயே பிறிதோர் இடத்தில் எழுதுகிறார் ம. பொ. சி. இக்கூற்றுகளில் உள்ள பெரியதொரு குழப்பத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். இக்கூற்றின்படி பார்த்தால் திருமாலையும், முருகனையும் பாடியிருக்கும் கடுவன் இளவெயினனார் எனும் சங்ககாலப் புலவர் வைஷ்ணவ மதத்தையும், கௌமார மதத்தையும் சேர்ந்தவர் என்று சொல்லவேண்டிவரும். மிகப் பிற்காலத்தில் (600 - வருடங்களுக்குள்) கற்பிக்கப்பட்டதாக நமது 'சங்கரரும் வைணவமும்' என்னும் நூலில் நிலைநாட்டப்பெற்ற ஷண்மதங்களின் கடவுளர் அறுவரையும் வழிபடுகிறவர்கள் சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம், ஸௌரம் எனும் ஆறுமதங்களையும் சேர்ந்தவர்கள் என்னும் விசித்திரநிலை ஏற்படும்.

சங்ககாலத்தில் இந்திரன் வழிபாட்டையும், வருணன் வழிபாட்டையும், முருகன் வழிபாட்டையும், 'காடுகாள்' எனப்படும் கொற்றவை (சக்தி) வழிபாட்டையும், சிவன் வழிபாட்டையும், திருமால் வழிபாட்டையும் செய்துவந்தவர்கள் ஐந்திரேயம், வாருணம், கௌமாரம், சாக்தம், சைவம், வைஷ்ணவம் என்னும் எல்லா மதங்களையும் சேர்ந்தவர்கள் என்று சொல்லவேண்டிய அதிவிசித்திரநிலை ஏற்படும். இன்றுள்ள இந்துக்கள் பலர் தங்கள் விருப்பம் நிறைவேறுவதற்காக நாகூர் முதலான இஸ்லாமியத் தலங்களுக்கும், வேளாங்கண்ணி முதலான கிறித்துவத் தலங்களுக்கும் சென்று வழிபடுகிறார்கள். அந்த இந்துக்களை அவர்கள் தழுவிநிற்கும் சைவம் அல்லது வைஷ்ணவ மதத்தோடு, இஸ்லாமிய மதத்தையும், கிறித்துவமதத்தையும் தழுவி நிற்பவர்கள் என்று சொல்லவேண்டிய வேடிக்கையான நிலை ஏற்படும்.

4. இந்த அவத்தத்தைத் தவிர்க்கவேண்டுமானால் 'மதம்' என்னும் சொல்லுக்குச் சரியான பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும். சைவம், வைணவம் முதலான மதங்கள் வேதசாத்திரங்களில் காணப்படும் கடவுளர்களில் ஒருவரைப் பரம்பொருளாகவும், மற்ற கடவுளரை அவருக்கு அடங்கியவர்களாகவும் கொள்ளும் மதங்களேயாம். இம்முறையில் காணும்போது சிவனைப் பரம்பொருளாகக்கொண்ட மதம் சைவம் என்றும், விஷ்ணுவைப் பரம்பொருளாகக்கொண்ட மதம் வைஷ்ணவம் என்றும், சக்தியைப் பரம்பொருளாகக்கொண்ட மதம் சாக்தம் என்றும் கொள்வதே தக்கது. மதம் என்பதற்கு 'கொள்கை' என்று பொருளேயொழிய வழிபாடு என்று பொருளல்ல. இந்த சரியான பொருளைக்கொண்டால் முற்கூறிய விசித்திரமான (வேடிக்கையான) நிலைகள் ஏற்படமாட்டா. இந்த சரியான பொருளைக்கொண்டு பார்க்கும்போது விஷ்ணு ஒருவனையே பரம்பொருளாகக் கொண்டவர்களாகவே சங்ககாலத்தில் புலவர்கள் அனைவரும் இருந்தனர் என்று வெளிப்படையாகச் சங்கநூல்களில் காணக்கிடக்கிறது. அக்காலத்தில் வைஷ்ணவமதம் ஒன்றே வைதிக மதமாகச் சான்றோர்களால் கொள்ளப்பட்டது என்னும் நிலையையே இது காட்டுகிறது. இவ்விஷயத்தை நமது சங்ககாலத் தமிழர் சமயத்தில் 27 - பக்கங்களில் விரிவாக நிலைநாட்டியுள்ளோம்.

5. (1) உலகைப் படைத்தளித்து அழிக்கும் பெருமை. (2) எல்லாம் அறியும் பெருமை. (3) எல்லாம் வல்லவனாய் இருக்கை. (4) எங்கும் வியாபித்திருக்கை. (5) தன்னை அண்டியவர்களுக்கு மறுபிறப்பு இல்லாமற்செய்து வீட்டுலகத்தை அளிக்கவல்லவனாயிருக்கை. (6) நற்குணங்கள் அனைத்திற்கும் கொள்கலமாகவும், தாழ்ந்த



தன்மைகள் எதுவுமே இல்லாதவனாகவும் இருக்கை. (7) எவராலும் அளவிட்டு அறியமுடியாதவனாயிருக்கை. (8) மனிதர்களைக்காட்டிலும் உயர்ந்த தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனாய், ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாயிருக்கை. (9) உயிர்களுக்கெல்லாம் இயற்கை உறவினனாயிருக்கை. (10) முற்கூறிய ஒன்பது பெருமைகளும் இவனுக்கே உள்ளதாக வேதத்தால் சொல்லப்படுகிறவனாயிருக்கை—என்னும் பரம்பொருளுக்கேயுள்ள பத்து தனித் தன்மைகள் திருமால் ஒருவனுக்கே பரிபாடல் முதலான சங்கநூல்களில் சங்ககாலச் சான்றோர்களால் முழங்கப்பட்டுள்ளன என்றும், சிவன், கொற்றவை, முருகன், இந்திரன், வருணன் முதலான எந்த தெய்வத்திற்கும் இத்தன்மைகள் உள்ளதாகக் கூறப்படவில்லையென்றும் முற்கூறிய நூலில் பற்பல ஆதாரங்களைக்காட்டி நிரூபித்திருக்கிறோம். ஓராதாரமும் காட்டாமல் "சங்ககாலத்தில் இந்த இருவேறு தெய்வங்களையும் மனவேறுபாடின்றி தங்கள் தெய்வங்களாகவே தமிழர் ஏற்றுக்கொண்டிருந்தனர் என்று தெரிகிறது" என்றும், "பரிபாடலில் வரும் திருமாலைப் பற்றிய பாடல்கள் அனைத்தும் பக்திப்பாடல்களே" என்றும் திரு. ம. பொ. சி. எழுதுவது நேர்மையாகுமா என நடுநிலைநிற்போர் சிந்திக்கட்டும்.

6. திருமாலைப் பற்றிய பரிபாடல்கள் வெறும் பக்திப்பாடல்கள் அல்ல. "அக்காலத்தில் சான்றோர்கள் அனைவரும் திருமால் ஒருவனையே முற்கூறிய பத்து பெருமைகளையுமுடைய பரம்பொருளாகக் கொண்டிருந்தார்கள்; வேறு எந்த தெய்வத்தையும் அப்படிக் கொள்ளவில்லை" என்பதை நிலைநாட்டித்தரும் 'கொள்கை விளக்கப் பாடல்'களும் ஆகும் அவை என்பதை நாம் ஏராளமான சான்றுகளைக் காட்டி நமது நூலில் நிர்ணயித்து இவர் கையிலும் கொடுத்திருக்க, அதைக் காணாததுபோல் இப்படி எழுதுவது எந்த நியாயத்தில் சேர்ந்தது என்பதை நடுநிலையாளர்கள் நிர்ணயிப்பார்களாக. அந்நூலை இவர் தவறவிட்டிருக்கலாமாகையால் இவருக்கு மறுபடியும் அந்நூலில் ஒரு பிரதி அனுப்புகிறோம். நேர்மையிருந்தால் அந்நூலை இசைவதோ அல்லது ஆதாரங்காட்டி மறுப்பதோ செய்ய வேண்டும்.

7. தமது கட்டுரைத் தொடரின் முதல்பகுதியில் தொல்காப்பியத்தில் திருமாலானவர் முல்லைநிலத்து மக்களின் தெய்வமாக வருணிக்கப்படுகிறார் என்றும், அவ்வண்ணமே முருகன் முதலான தெய்வங்கள் குறிஞ்சி முதலான நிலத்து மக்களின் தெய்வங்களாக வருணிக்கப்படுகிறார்கள் என்றும் கூறுவதன்மூலம் திருமால் ஒரு நிலத்துக்குரியவரேயொழிய, எல்லா நிலத்துக்குமுரிய பரம்பொரு

ளாகச் சங்ககாலத்தில் கொள்ளப்படவில்லை என்று படிப்பவர்களின் மனத்தில் குழப்பத்தை விளைக்க முயலுகின்றார் ம. பொ. சி. இக்குழப்பத்தை ஆதாரத்தோடு நீக்குகின்றோம் இனி.

8. தொல்காப்பியத்தில் முதலாவதான அகத்திணை இயலில் ஐந்தாவது பாடலாக உள்ளது பின்வருமாறு:—

"மாயோன் மேய காடு உறை உலகமும்,
சேயோன் மேய மை வரை உலகமும்,
வேந்தன் மேய தீம் புனல் உலகமும்,
வருணன் மேய பெரு மணல் உலகமும்,
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே"

இப்பாடலுக்கு ம. பொ. சி. கூறும் பொருள் தவறானது. ஏனெனில்: (சங்ககாலத்திலேயே) முல்லைநிலத்தில் மாத்திரமல்லாமல் மற்ற நிலங்களிலும் திருமால் கோவில்கள் இருந்தன என்பதைக் காண்கிறோம்.

9. கல்லாடனார் என்னும் புலவர் இயற்றிய அகநானூற்றின் ஒன்பதாவது பாடலில், வேங்கடமலையைக் கடந்துசென்று பொருளீட்டி வினைமுடித்து மீண்டதலைமகன், தேர்ப்பாகனுக்குக் கூறியதாக உள்ள பாடலில்,

"அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
கொடு நுண் ஓதி மகளிர் ஓக்கிய
தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல்பாணி
நெடு மால் வரைய குடிஞையோடு இரட்டும்
குன்று பின் ஒழியப் போகி"

என்றவிடத்தில் 'நெடுமால் வரைய - குன்று ஒழியப்போகி' என்னும் தொடரால் நெடுமாலாகிற திருமால் எழுந்தருளியிருக்கும் வேங்கடக் குன்றையும் கடந்து தான் சென்றதாகக் குறிப்பிட்டான். தலைவன் வேங்கடமலைக்கும் அதைக்கடந்து அப்பாலும் சென்று பொருளீட்டி வருவது என்னும் மரபு அகநானூற்றின் பல பாடல்களில் காணப்படுவதால் இங்கு வேங்கடமலையைக் குறிப்பதாகக்கொள்வதே பொருத்தம். அகநானூற்றில் அறுபத்தோராம் பாடலில் 'விழவுமலி வேங்கடம்' என்று வருவதும் இதை வலியுறுத்துகிறது. எப்படியும் 'நெடுமால் வரைய - குன்று ஒழியப்போகி' என்னும் தொடர் சங்ககாலத்திலேயே திருமால் மலையாகிற குறிஞ்சி நிலத்தில் எழுந்தருளியிருந்ததைக் காட்டுகிறது.



10. அகநானூறு நூற்றுமுப்பத்தேழாம் பாடலில் உறையூர் முதுகூத்தனார் என்னும் புலவர்

"வென்று எறிமுரசின் விறல் போர்ச் சோழர்
இன் கடும் கள்ளின் உறந்தை ஆங்கண்
வரு புனல் நெரிதரும் இரு கரைப் பேரியாற்று
உருவ வெண் மணல் முருகு நாறு தண் பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீ இலை அமன்ற மரம் பயில் இறும்பில்
தீ இல் அடுப்பின் அரங்கம் போல
பெரும் பாழ் கொண்டன்று நுதலே"

என்னும் பாடற்பகுதியில், 'தலைமகன் பிரியப்போகிறான்' என நினைத்து வேறுபட்ட தலைமகளின் நிலையைக் கூறும்போது, "திருவரங்கத்தில் பங்குனி உத்தரத் திருநாளின்போது, மக்கள் மிகுதியாகத் திரண்டு காவிரியின் இருகரைகளிலும் உள்ள சோலைகளில் தங்கியிருந்தபோது பொலிவுடையதாகத் தோன்றிய அச்சோலைகள், அவ்விழாவின் முடிவில் அனைவரும் அரங்கத்தைவிட்டுப் போனபின் பொலிவிழந்து தோன்றுவதுபோல், தலைமகன் பிரிவை எண்ணிய தலைமகளின் நெற்றியும் பொலிவிழந்து தோன்றுகிறது" என்கிறார். இன்றும் திருவரங்கத்தில் பங்குனி பிரம்மோத்ஸவம் நடைபெறுவது அனைவரும் அறிந்தது. அந்த உத்ஸவம் சங்ககாலத்திலேயே நடந்துவந்தது என்று இப்பாடலிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. திருமாலைப்பற்றிய நான்காவது பரிபாடலில், "நல்யாற்று நடுவும் கால்வழக்கு அறுநிலை குன்றமும் பிறவும் அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்" [67-69] என்னும் பகுதி நல்யாற்று நடுவாகிற திருவரங்கமும், காலவழக்கை அறுத்து முக்தி அளிக்கும் குன்றமாகிற வேங்கடமும் திருமால் வெவ்வேறு பெயர்களுடன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் என்று பாடியிருப்பதிலிருந்து முற்கூறிய அகநானூற்றுப் பாடல்களில் வேங்கடத்திலும், திருவரங்கத்திலுமிருந்தது திருமால் கோவில்களே என்று தெளிவாகிறது. இதிலிருந்து சங்ககாலத்திலேயே மருதநிலத்திலும் திருமால் கோவில் கொண்டிருந்தான் என விளங்குகிறது. சிலப்பதிகாரத்திலும் இளங்கோவடிகளால் இவ்விஷயம் விரித்துரைக்கப்பட்டது. பதினைந்தாவது பரிபாடலில் திருமாலிருங்குன்றமாகிய குறிஞ்சிநிலத்திலும் திருமால் எழுந்தருளியிருந்தது விரிவாக வருணிக்கப்படுகிறது. பரிபாடல் திரட்டின் முதல்பாடலில் கூடல்மாநகரில் இருந்தையூர் என்னும் பகுதியில் திருமால் கோயில்கொண்டிருந்தது சிறப்பாக

வருணிக்கப்படுகிறது. இதிலிருந்து மருதநிலத்திலும் சங்காலத்தில் திருமால்கோயில் உண்டென்று தெரிகிறது.

11. பதிற்றுப்பத்து என்னும் சேரவேந்தர்களைப்பற்றிய சங்க நூலில் நான்காம்பத்தின் தொடக்கத்தில்,

"வண்டு ஊது பொலிதார், திரு ஞெமர் அகலத்து
கண் பொரு திகிரி, கமழ் குரற் துழாஅய்
அலங்கல், செல்வன் சேவடி பரவி,
நெஞ்சு மலி உவகையர் துஞ்சு பதிப் பெயர
மணி நிற மை இருள் அகல, நிலா விரிபு,
கோடு கூடு மதியம் இயலுற்றுங்கு"

[திருஞெமர் அகலம்—ஸ்ரீதேவி வாழும் மார்பு. திகிரி—சக்கரம். துழாஅய் அலங்கல் செல்வன்—துழாய் மாலையணிந்த உபயவிபூதிச் செல்வத்தையுடைய திருமால். கோடு—திருவிதாங்கோடு என்று வழங்கப்படும் திருவனந்தபுரம்.]

என்னும் பாடற்பகுதியில் குறிஞ்சிநிலமான திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலைப் பாடியிருப்பதிலிருந்து சங்ககாலத்தில் குறிஞ்சி நிலத்திலும் திருமால் கோயில்கொண்டிருந்தார் எனத் தெரிகிறது.

12. பத்துப்பாட்டில் ஒன்ருன பெரும்பாணுற்றுப்படையில்,

"நீடுகுலைக் காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்,
வெயில் நுழைபு அறியா, குயில் நுழை பொதும்பர்,
குறுங் கால் காஞ்சி சுற்றிய நெடுங் கொடி......
அருந் திறற் கடவுள் வாழ்த்தி"

என்னும் பகுதியில் மலையில் யானை படுத்திருப்பதுபோலே காஞ்சியில் (திருவெஃகாவில்) பாம்பணைப்பள்ளியில் திருமால் கிடக்குமழகு பாடப்படுகிறது. இதிலிருந்தும் சங்ககாலத்தில் மருதநிலத்தில் திருமால் கோயில்கொண்டு எழுந்தருளியிருந்தது காட்டப்படுகிறது.

13. இவ்வண்ணமாக, சங்ககாலத்திலேயே குறிஞ்சிநிலத்திலும், மருதநிலத்திலும் பல திருமால் கோயில்கள் இருந்ததாகச் சங்ககாலச் சான்ருேர்கள் கூறுகையால் ம. பொ. சி. யின் வாதம் தவருனது என விளங்குகிறது. மேலும் 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' என்னும் தொல்காப்பிய அடியின்படி மருதநிலத்தில் இந்திரனுக்குக் கோயில் இருந்ததாக சங்கநூல்களில் எங்கும் காணப்படவில்லை.



'வருணன் மேய பெருமணல் உலகமும்' என்னும் தொல்காப்பிய அடியின்படி வருணனுக்கு நெய்தல் நிலத்தில் கோயில் இருந்தாக எங்கும் சங்கநூல்களில் காணப்படவில்லை. 'சீரலைவாய்' என்னும் திருச்செந்தூராகிற நெய்தல் நிலத்தில் முருகனுக்கே கோவிலிருந்ததாகச் சங்கநூலில் காணப்படுகிறது. ஆகையால் 'மாயோன் மேய காடு உறை உலகமும்' என்று தொடங்கும் தொல்காப்பியப்பாடலுக்கு ம.பொ.சி. கூறும்பொருள் அடியோடு பொருந்தாது எனத் தெரிகிறது. இதன் சரியான பொருளை இனிக் காண்போம்.

14. இங்கு 'மாயோன்' என்றது திருமாலின் அவதாரமான கண்ணனை. 'மேய' என்றதற்கு 'ரட்சகனுகப் பொருந்திய' என்று பொருள். கண்ணன் காடுவாழ் சாதியாகப் பிறந்து, ஆயர்களைத் தன் உயிருக்கும் மேலாக ரட்சித்தவன். அதனுல் தமிழகச்சான்ருேர்கள் அவனைக் காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லைநிலத்துக்கு ரட்சகனுகக் கொண்டார்கள். முருகன் மலைப்பாங்கான நிலத்தில் வாழ்ந்த வேடர்களின் செல்வியான வள்ளியை மணந்து அந்நிலத்திலே பல விரவிளையாட்டுக்களைப் புரிந்தவன். அதனுல் தமிழகச்சான்ருேர்கள் அவனை மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்திற்கு ரட்சகனுகக் கொண்டார்கள். இந்திரன் மழை பொழிவிக்கும் தெய்வம். வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதநிலம் மழையின்றேல் அழிந்துவிடும். அதனுல் தமிழகச்சான்ருேர்கள் அவனை மருதநிலத்துக்கு ரட்சகனுகக்கொண்டார்கள். வருணன் கடலுக்கு அதிதேவதை. அதனுல் தமிழகச்சான்ருேர்கள் அவனைக் கடலும் கடல்சார்ந்த இடமுமான நெய்தல் நிலத்துக்கு ரட்சகனுகக் கொண்டார்கள். இப்பொருளில் எவராலும் எக்குற்றமும் கூற முடியாது.

15. இதில் பாடியிருக்கும் முறையிலும் ஒரு பொருத்தம் காண்கிறது. சங்ககாலத்தில் பரம்பொருளாகவும், ஸர்வரட்சகனுகவும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மாயோனை முதலில் வைத்தார் தொல்காப்பியர். வீரம் முதலான நற்குணங்களில் மாயோன் ஒருவனுக்கே அடுத்தபடி உள்ளவனுய், சிறு குழந்தையாயிருக்கும் போதே இந்திரனையும் வெற்றிகொண்டவனுன முருகனை இரண்டாம் படியில் வைத்தார். அடுத்து இந்திரனை மூன்ரும்படியில் வைத்தார். இந்திரனுக்கு அடங்கியவனுன வருணனை நான்காம்படியில் வைத்தார். ரட்சகர்களல்லாத உருத்திரன், யமன் முதலானுர்க்கு நிலமே ஒதுக்கப்

படவில்லை. ஆக, இப்பொருளே மிகப்பொருத்தமான பொருள் என விளங்குகிறது.

16. இப்படிக் கொள்ளாமல் திருமால் சங்ககாலத்தில் முல்லை நிலத்தில் மட்டும் கோயில் அமைத்து வழிபடப்பெற்றான் என்று ம. பொ. சி. கூறும் பொருளைக்கொண்டால் முற்கூறிய பல குற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும், "மூ ஏழ் உலகமும் உலகினுள் மன்பதும் மாயோய்! நின் வயின் பரந்தவை உரைத்தேம். மாயா வாய்மொழி உரைதர" [பரிபாடல் 3-9,10,11] [மாயோனே! எல்லா உலகங்களும், உலகினில் உள்ள ஜீவர்கள் அனைவரும் உன்னிடமிருந்தே உண்டானவர்கள் என்பதை அறியாத வேதம் சொல்ல நாங்கள் உரைத்தோம்.] "நின் சேவடி தொழாரும உளரோ" [பரிபாடல் 3-19] என்று சங்ககாலச் சான்றோர்கள் பாடியிருக்கும்போது திருமாலை முல்லைநிலத்திற்கு மாத்திரம் உரியவன் என்றோ, அந்நிலத்தினரால் மாத்திரம் தொழப்படுபவன் என்றோ எவர் கூறமுடியும்? ஆகையால் பரிபாடல் முதலானவற்றில் திருமால் ஒருவனே வேதத்தால் பரம்பொருளாக முழங்கப்படுபவன் என்று கூறியதை இத்தொல்காப்பியப் பாடல் வலியுறுத்துகின்றதேயொழிய, அதற்கு முரணாகப் பேசவில்லை எனத் தெளிவாகத் தெரிகிறது.

17. மேலும் சந்நியாசிகளின் இலக்கணத்தைக் கூறவந்த தொல்காப்பியர்,

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய"

[தொல்காப்பியம் பொருளதிகாரம் 9-71]

என்று சொல்லியிருப்பதிலிருந்து பூணூலையும், முக்கோலாகிற திரிதண்டத்தையும் தரித்த பெரியவர்களே அந்தக்காலத்தில் சந்நியாசிகளாகக் கருதப்பட்டனர் என விளங்குகிறது. பூணூலும், முக்கோலுமில்லாத சைவசந்நியாசிகளும், அத்வைத சந்நியாசிகளும் அக்காலத்தில் தோன்றவில்லையென்றோ, சான்றோர்களால் சந்நியாசிகளாகக் கருதப்படவில்லையென்றோ விளங்குகிறது. மற்ற சங்க இலக்கியங்களிலும் 'முக்கோற் பகவர்' என்று இவர்களை பாகவத சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களாக எடுக்கையால் இவர்கள் பாஞ்சராத்ரத்தைப் பின்பற்றுபவர்கள் எனத்தேறுகிறது. இவ்வண்ணமாக, சங்ககாலத்தில் விஷ்ணுவைப் பரம்பொருளாகக்கொண்ட வைஷ்ணவ மதம் ஒன்றே வைதிகமதமாகக் கொள்ளப்பட்டிருக்கும்போது, சங்ககாலத்தமிழர்களை சைவர்கள் என்று ம. பொ. சி. எழுதியது அடியோடு பொருந்தாது என்று நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.



18. இதற்குமேல் ம. பொ. சி. கேட்கக்கூடும். சங்ககாலத்தில் முருகபக்தர்களும், சிவபக்தர்களும் இருந்திருக்கிறார்களே; முருகனுக்கே திருமாலைக்காட்டிலும் பரிபாடலில் அதிகமான பாடல்கள் உள்ளனவே; ஆகையால் சங்ககாலத்தில் சைவர்கள் மிகுதியானவர்கள் என்று கூறித்தானே ஆகவேண்டும் என்பது அக்கேள்வி. இதற்கு பதில் பின்வருமாறு:—

19. முருகன் முதலான மற்ற தெய்வங்களுக்கு மிகுதியான பாடல்கள் இருந்தாலும் அப்பாடல்களில் பரம்பொருளுக்குரிய பெருமைகள் எதுவுமே பாடப்படவில்லை. திருமால்பற்றிய பாடல்களிலேயே பரம்பொருளுக்குரிய அத்தனை பெருமைகளும் காணக்கிடக்கின்றன. இதிலிருந்து சங்ககாலத்திலிருந்த அனைவருமே திருமாலை வேதம் புகழும் பரம்பொருளாகக்கொண்டிருந்தனர் என்றும், மோட்சத்தை விரும்பியவர்கள் அவனையே அடைந்து அதைப் பெற்றுப் போந்தனர் என்றும், மற்ற பயன்களை எளிதில் பெறவிரும்பியவர்கள் மற்ற தெய்வங்களையும் வழிபட்டனர் என்றும் விளங்குகிறது. மோட்சம் ஒன்றையே விரும்பியவர்களாகையாலே திருமாலைத் தவிர வேறு எவரையும் தொழாத முக்கோற்பகவர்களும், அவர்களது சீடர்களும் அக்காலத்தில் இருந்தார்கள் என்பதையும் மறுக்க இயலாது. இவர்கள் வைஷ்ணவர்களில் தலைசிறந்தவர்கள். சங்ககாலத்தில் இருந்த மற்றவர்கள் மற்ற பலன்களுக்காக மற்ற தெய்வங்களை அடைந்தாலும், அவர்களைப் பரம்பொருளாக நினையாமல் திருமால் ஒருவனையே பரம்பொருளாகக்கொண்டிருந்தார்களாகையாலே அவர்களும் வைஷ்ணவர்களே. இக்காலத்திலும் வைஷ்ணவர்களில் பெரும்பான்மையானவர்கள் இவ்வுலகப்பயன்களுக்காக மற்ற தெய்வங்களையும் வணங்குகின்றனர் என்பதும், மோட்சம் ஒன்றையே விரும்பும் ஒரு சில தலைசிறந்த வைஷ்ணவர்களே திருமாலைத்தவிர வேறு எந்த தெய்வங்களையும் நினையாத, மறந்தும் புறந்தொழாமாந்தர்களாக உள்ளனர் என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. கீதாசார்யனும் கீதையில் "வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" [கீதை 7-19] [கண்ணனே எல்லாம் என்று கூறும் மஹாத்மா எனக்கே மிகவும் கிடைத்தற்கு அரியவனாகவே உள்ளான்] என்று வருத்தப்பட்டானன்றோ.

20. சங்கநூல்களில் பரம்பொருளுக்குரிய எல்லாப்பெருமைகளும் திருமால் ஒருவனுக்கே கூறப்பட்டுள்ளது. மற்ற எந்த தெய்வத்திற்கும் கூறப்படவில்லை. திருமாலுக்குத் தாழ்வைக்கூறும் பிற்காலக் கட்டுக்கதைகளான (1) அடிமுடிதேடியகதை, (2) கண்ணைப்பிடுங்கி

அர்ச்சனை செய்தகதை, (3) சிவன் மத்ஸ்யாவதாரத்தை அழித்த கதை, (4) சிவன் கூர்மாவதாரத்தின் ஓட்டைப்பிரித்துத் தனக்கு ஆபரண மாகக்கொண்ட கதை, (5) சிவன் வராஹாவதாரத்தின் கொம்பை ஒடித்த கதை, (6) நரஸிம்மாவதாரத்தை, சிவன் சரபமாய் வந்து கிழித்த கதை, (7) திரிவிக்ரமனின் தோலை சிவன் உரித்து சட்டை யாகப் போர்த்துக்கொண்ட கதை, (8) ராமன் சிவலிங்க பூஜைசெய்த கதை முதலான சிவபுராணக் கதைகளில் ஒன்றுகூட சங்கநூல்களில் எடுக்கப்படவில்லை; முருகன், பிரமனைச்சிறையிட் அடைத்து, படைப்புத் தொழிலை மேற்கொண்ட கதை, முருகனுடைய மயில் வைநண்டத்தை அழித்த கதை, தகப்பனாகிய சிவனுக்கே பிரணவத்தின் பொருளை உபதேசித்த கதை முதலான கந்தபுராணக் கதைகள் எதுவும் முருகனைப்பற்றிய சங்கநூற் பாடல்களில் காணப்படவில்லை. இக் கதைகள் நாயன்மார்களுக்கு முற்பட்ட எந்தத்தென்மொழி வடமொழிக் கவிஞர்களாலும் பாடப்படவில்லை என்பதும், குறிப்பாக சிவபக்தனான காளிதாசனாலும் கூடத் தனது குமாரசம்பவத்தில் பாடப்படவில்லை என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

21. பிற்காலத்தில் சைவர்கள் சிவனுக்கு "பிறவாயாக்கைப் பெரியோன்" என்று பெருமை சொல்லிக்கொள்ளத் தலைப்பட்டனர். சங்கநூலான பரிபாடலிலோ திருமாலே சிவனையுள்ளிட்ட எல்லா ஜீவர்களையும் படைத்தவன் என்று முழங்கப்படுகிறது. பிற்காலச் சைவர்கள் திருமால் அவதாரங்களை எடுக்கையாலே பரம்பொருளாக முடியாது என்று வாதம் செய்தனர். சங்கநூலான பரிபாடலோ "முதல்முறை, இடைமுறை, கடைமுறை தொழிலில் பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே" [பரிபாடல் 3.71, 72] என்று திருமால் எடுக்கும் பலவகைப்பட்ட அவதாரங்கள் அனைத்தும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்வதற்கே என்றும், அவன் தானே தன்விருப்பத்தால் பிறக்கிறானேயொழிய அவனைப் பிறப்பித்தவர்கள் எவரும் இலர் என்றும் முழங்கிற்று. பிற்காலத்தில் சிவபக்தரான நாயன்மார்கள் சிவனே பிறவாமையாகிற வீட்டைத்தரவல்லன் என்று பாடினார்கள். சங்கநூல்கள் எதிலும் சிவன் அப்படிப் பாடப்பெறவில்லை. திருமாலைப்பற்றிய பாடல்களிலேயே,

"மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி
மணிதிகழ் உருபின் மாஅயோயே" [பரிபாடல் 3.2, 3]

[மறுபிறப்பை அறுத்துவிடும் குற்றமற்ற திருவடிகளையுடைய நீல மணியைப்போன்ற திருமேனியைக்கொண்ட மாயோனே] என்றும்,



"நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" [பரிபாடல் 15.15,16] [மணம்மிக்க துழாய் மாலையை அணிந்த திருமால் அளித்தாலல்லது எவராலும் வீட்டுல கத்திற்கு ஏறமுடியாது] என்றும் திருமாலே மோட்சமளிக்கவல்லவன் என முழங்கப்பெற்றது. இவற்றிலிருந்தும், சங்ககாலத் தமிழர் சமயத்தில் நாம் காட்டிய நூற்றுக்கணக்கான பிற சங்கநூல் மேற் கோள்களிலிருந்தும் சங்ககாலத்தில் அனைவரும் விஷ்ணுவையே பரம்பொருளாகக்கொண்ட வைஷ்ணவர்களாகவே விளங்கினர் என்றும், சிவன், சக்தி, முருகன் முதலான மற்ற எந்த தெய் வத்தையும் எவருமே பரம்பொருளாகக் கொள்ளவில்லையென்றும் கையிலங்கு நெல்லிக்கனியாகவும், வெள்ளிடை மலையாகவும் விளங்குகிறது.

22. மூன்று, நான்காவது பரிபாடல்களில் பரம்பொருளுக்கேயுரிய எல்லாப் பெருமைகளையும் அடுக்கடுக்காகத் திருமாலுக்குப் பாடிய கடுவன் இளவெயினனாரே, முருகனைப்பற்றிய ஐந்தாம் பாடலில் சிவனும், பார்வதியும் புணர்ந்ததனால் வீரியம் வெளிப்பட்டு, அதிலி ருந்து பிறந்த குழந்தை முருகன் என்று மிகத்தெளிவாகப்பாடினார். இதிலிருந்து சிவனும், பார்வதியும் ஆண், பெண் சேர்க்கையினால் வீரியம் வெளிப்படும் ஜீவர்களே என்றும், அந்த வீரியத்திலிருந்து பிறந்த முருகனும் ஜீவனே என்றும் சங்ககாலச் சான்றோர்கள் கருதினார்கள் என்று விளங்குகிறது. ஆக, சங்ககாலத்தில் சிவனையோ, சக்தியையோ, முருகனையோ பரம்பொருளாகக்கொண்ட சைவம், சாக்தம், கௌமாரம் என்னும் மதங்கள் வழக்கில் இல்லையெனத் தெளிவாகத்தெரிகிறது. இதிலிருந்து "சங்ககாலத்தில் சிவனையும், திருமாலையும் மனவேறுபாடின்றித் தங்கள் தெய்வங்களாகவே தமிழர் ஏற்றுக்கொண்டிருந்தனர் என்று தெரிகிறது" என்று ம. பொ. சி. எழுதியது அப்பட்டமான பொய் என விளங்குகிறது.

## II சங்ககாலத்திற்குப்பின் சமயநிலை

23. சங்ககாலத்துக்குச் சில நூற்றுண்டுகளுக்குப்பிறகு ஏற்பட்ட சிலப்பதிகாரகாலத்தில் சிவனை 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று பெருமைபேசும் சைவர்கள் தோன்றிவிட்டனர். சங்ககாலத்தில் தலை யெடுத்திராத சமண பௌத்த மதங்களும் தலையெடுக்கத் துவங்கி விட்டன. சிலப்பதிகார காலத்தையொட்டி அவதரித்த முதலாழ்வார்க ளின் திருவந்தாதிகளிலும், திருமழிசையாழ்வாரின் இருநூல்களிலும் சைவம், சமணம், பௌத்தம் என்னும் இம்மதங்கள் வேதத்துக்குப்

புறம்பானவை என்று கண்டிக்கப்படுகின்றன. திருமாலுக்குத் தாழ்வையும், சிவனுக்குப் பெருமையையும் கூறி, சைவர்கள் சிவ பரத்துவவாதம் செய்ததால், ஆழ்வார்கள் சிவனுடைய தாழ்வைக் காட்டி, வேதத்தில் நிலைநிறுத்தப்பட்ட திருமாலின் பரத்துவத்தை நிலைநாட்டவேண்டியதாயிற்று. சங்கத் தமிழர் சமயமும், பரமவைதிக சமயமுமான வைணவத்திற்குப் போட்டியாக சைவம் எழுந்ததாலேயே சைவத்தை ஆழ்வார்கள் கண்டித்தனர். வேதசாத்திரங்களில் காணப் படும் சிவனுடைய தாழ்வுகளை எடுத்துக் கூறினர். இதனால் கடுங் கோபங்கொண்ட பிற்கால நாயன்மார்கள் திருமாலைத் தாழ்த்தும் முற்கூறிய கட்டுக்கதைகளையெல்லாம் தங்கள் நூல்களில் பெய்து, அதனால் சிவனுக்குப் பரத்துவம் தேறிவிடுமென்று மனப்பால்குடித்த னர். ஆயினும் இந்த நாயன்மார்களுக்கும் முற்பட்ட ஆதிசங்கரரும், பிற்பட்ட வைதிக மதாசார்யர்களும் திருமாலையே வேதங்கண்ட முழு முதல்வனாகத் தங்கள் பாஷ்யங்களிலும், க்ரந்தங்களிலும் பொறித்து வைத்தனர். மத்வருடைய காலமான 12ஆம் நூற்றாண்டுவரை இந் நிலையே நீடித்து வந்தது. அதற்குப் பிறகே சைவர்களின் சித்தாந்த சாத்திரங்களும், ஸ்ரீகண்ட பாஷ்யமும் எழுதப்பட்டு, சிவனுக்குப் பரத்துவம் கூறுகின்றவர்கள் பெருகத்தொடங்கினர். இக்காலத்திலும் சக்திக்குப் பரத்துவம் கூறும் சாக்தம், முருகனுக்குப் பரத்துவம் கூறும் கௌமாரம், சங்ககாலத்தில் எங்குமே காணப்படாத கணபதிக்குப் பரத் துவம் கூறும் காணபத்யம், 'பீஷோதேதி ஸூர்ய:' [பரம்பொருளிடம் பயத்தாலே சூரியன் உதிக்கிறான்] என்று உபநிஷத்துக்களில் கூறப் பட்ட சூரியனுக்குப் பரத்துவம்கூறும் ஸௌரம் என்னும் மதங்கள் எழும் பவேயில்லை. இந்த தெய்வங்களுக்குப் பரத்துவம்கூறும் நூல் எதுவும் 13ஆம் நூற்றாண்டுவரை காணப்படவில்லை. இந்த தெய்வங்களுக்குப் பரத்துவங்கூறும் சில துதிநூல்களை 13ஆம் நூற்றாண்டுக்குப்பிறகே ஆதிசங்கரர் பெயரில் எழுந்த மடங்களில் உள்ள சங்கராசாரியர்கள் எழுதி, அதை ஆதிசங்கரர் எழுதியதாக ஒரு மயக்கத்தை ஏற்படுத்தினர். இத்துதிநூல்களிலிருந்து ஒரு துணுக்கைக்கூட 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட எவரும் எடுக்கவில்லையென்பது இவ்வுண்மையை வெளிப்படையாகக் காட்டுகிறது.

24. இப்படி 13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்ட 'ஆதி சங்கரர் ஷண்மதங்களை ஸ்தாபித்தார்' என்னும் கற்பனையைப் பற்றிக் கொண்டு ம. பொ. சி. தமது கட்டுரைகளில் எழுதுவது—அவர் சங்கரபாஷ்யங்களையும், மற்றுமுள்ள வடமொழி நூல்களையும் அறி வதற்குறுப்பான வடமொழி அறிவு இல்லாதவர் என்பதையும், அதனால் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்யத் தகுதியற்றவர் என்பதையும், சமீபகாலத்தில் சில பொய்யர்கள்கூறும் வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைபோல் கூறுகின்றவர் என்பதையும் காட்டித்தருகின்றது. 'ஆதிசங்கரர் ஷண்மதஸ்தாபகர்' என்பது முழுப்பொய் என்னும் விஷயத்தை எதிரிகளும் மறுக்கவொண்ணாதபடி நாம் நிலைநாட்டி யிருக்கும் 'சங்கரரும் வைணவமும்' என்னும் நூலை நாம் ம. பொ. சிக்கு அனுப்பியிருக்கிறோம். முடியுமானால் வடமொழி வல்லுநர்களைத் துணைகொண்டு நாம் அந்நூலில் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்க ம. பொ. சி. முற்படுவாராக.



## III கம்பனின் சமயம்

25. திரு. ம. பொ. சியின் கட்டுரையின் முக்கிய நோக்கம் "கம்பன் சமரச சைவனே" என நிரூபிப்பதேயாகும். இனி ம. பொ. சி. இவ்விஷயத்தை நிலைநிறுத்தக் கூறும் வாதங்களை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

26. கம்பராமாயணத்தைப் பரப்பிவந்தவர்களும், அதற்கு நாத்திகர்களால் எதிர்ப்பு வந்தபோது அதை எதிர்த்துக் காத்தவர் களும் சைவர்களேயாகையால், கம்பன் சைவனாகவே இருக்கவேண்டும் என்பது ம. பொ. சியின் வாதங்களில் ஒன்று. "விஷ்ணு கோயில்களில் வழிபடுகிறவர்கள் சைவர்களே மிகுதியாயிருப்பதால், அவ்வாலயங் களிலிருப்பவன் சிவனே" என்னும் வாதம் போன்றது இது. உலகக் காப்பியங்களில் இராமனையொத்த கதாநாயகன் எவரும் எங்குமில்லை யாகையால், எல்லா மதத்தவர்களும் இராமனிடம் ஈடுபடுகிறார்கள். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை" என்று பாரதி பாடியதுபோல் கம்பன் மஹாகவிகளில் தலைசிறந்தவனாகையால் அவனிடமும், அவனது பெருங்காவியத்திலும் எல்லா மதத்தவர்களும் ஈடுபடு கின்றனர். தமிழ்நாட்டில் சைவர்கள் மிகுதியாகையால், கம்பனிடம் ஈடுபட்டுக் கம்பராமாயணத்தில் போதுபோக்குகிறவர்களிலும் சைவர்கள் மிகுதியாகவுள்ளனர். ஸ்ரீ உ. வே. வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பராமாயணத்திற்கு எழுதிய உரையே அனைவராலும் உச்சிமேல்வைத்து மெச்சப்படுகின்றது என்பதையும், வைணவர்களிலும் பல புலவர்பெருமக்கள் கம்பராமாயணத்தில் ஈடுபட்டனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. ம. பொ. சி. தம் வாதத்தை வள்ளுவர் இளங்கோ விஷயத்திலும் செய்யலாம்.

சிலம்புச்செல்வரெனப் புகழ்பெற்ற ம. பொ. சிவஞானகிராமணியாரைப் போன்ற (சமரச) சைவர்களே சிலப்பதிகாரத்தில் ஈடுபடுவதால், இளங்கோவடிகள் சைவரே என ம. பொ. சி. கூறுவாரோ? ''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்று அகரத்தால் சொல்லப்படும் பகவானே ஜகந்காரணன் என்று திருக்குறள் கடவுள்வாழ்த்தின் முதற்பாடலிலும், ''ஈரடியால் உலகளந்தவன்'' என்று பொருட்பாலிலும், 'தாமரைக்கண்ணனின் உலகே வீட்டுலகம்' எனக் காமத்துப்பாலிலும் திருமால் ஒருவனே பரம்பொருள் என உணர்த்தியிருப்பவரும், திருமாலின் தேவியான திருமகளைச் சிறப்பித்துப் பாடியிருப்பவரும், சிவனையோ, முருகனையோ, காளியையோ எங்கும் தொடாதவருமான வள்ளுவரைச் சைவர்களே மிகுதியாக ஆதரித்து நாயனாராக்கிவிட்டதால் திருவள்ளுவர் சைவரே என ம. பொ. சி. கூறமுற்படுவாரா? முற்பட்டாலும் நடுநிலைநிற்கும் நல்லோர்கள் இவற்றை ஏற்பரோ?

27. ''நாடவிட்ட படலத்தில் திருவரங்கத்தையும், திருவேங்கடத்தையும் பாடிய கம்பன் அவற்றில் திருமால் கோயில் இருப்பதாகப் பாடாமையால் கம்பன் வைணவனல்லன்'' என்று வாதம் செய்கிறார் ம. பொ. சி.; ராமாயணத்தை ஆழ்ந்து படிக்காததால் விளைந்தது இவ்வாதம். ஸ்ரீராமபட்டாபிஷேகத்திற்குப் பின்பே, ஸ்ரீராமபிரானிடமிருந்து விபீஷணனால் பெறப்பெற்ற ஸ்ரீரங்கநாதன் இரண்டாற்றுக்கிடையிலான திருவரங்கத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றான் என்பது வரலாறு. '' அணியரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார் '' என்னும் பாடலில் இவ்வரலாற்றைக் கம்பனும் உணர்த்தியிருக்கிறான். அக்காலத்தில் ஸ்ரீரங்கநாதன் இங்கு எழுந்தருளாமலிருக்க, அவனைப்பற்றிப் பட்டாபிஷேகத்திற்குமுன் கம்பன் பாடுவானா? பாடியிருந்தால் (திரு. ம. பொ. சியைப்போல்) அசட்டுப்பட்டம் கட்டிக்கொண்டிருப்பானே! திருவேங்கடத்திலும் ஸ்ரீராமாவதாரகாலத்திற்குப் பிறகு பிருகு மஹரிஷியின் காலத்தில் எம்பெருமான் எழுந்தருளினான் என்பது ஸ்ரீவேங்கடாசல வரலாறு. ஆகையால், திருவேங்கடத்திலும் நாடவிட்ட படலத்தில் திருமால் எழுந்தருளியிருந்ததாகக் கம்பன் பாடவில்லை. இவ்வரலாற்று உண்மைகளை உணராமல், இவ்வாதங்களைக்கொண்டு திரு. ம. பொ. சி. கம்பனை சைவனுக்கமுயல்வது விதண்டாவாதமல்லது வேறில்லை. ம. பொ. சியின் மற்ற வாதங்களும் நிலைநிற்க மாட்டாதவையே என நிரூபிப்போம் இனி.



28. சிலம்புச்செல்வரான ம. பொ. சி. சிலப்பதிகாரத்தை ஆழ்ந்து கற்றவர். தம் வாழ்நாள் முழுவதும் அதிலேயே செலவழித்தவர். அதனாலேயே அவர் கம்பராமாயணம் முதலான மற்ற தமிழ் நூல்களில் ஆழ்ந்த புலமை இல்லாதவரானாரென்பது, அவருடைய கட்டுரையிலிருந்தே விளங்குகிறது. சங்கநூல்களில் அவரது புலமை மேம்போக்கானதே என்பதை இந்நூலின் தொடக்கத்திலே விரிவாக நிரூபித்தோம். கம்பனின் சமயத்தைப்பற்றிய இக்கட்டுரைத் தொடரில் கம்பன் மும்மூர்த்திகளுக்குள்ளே திருமாலையே முதல்வனகக் காட்டும் — நூற்றுக்கணக்கான பாடல்களைத் தொடாமலே விட்டுள்ளார். கம்பராமாயணத்தின் தொடக்கத்தில் உள்ள ''உலகம் யாவையும்'' என்னும் கடவுள் வாழ்த்துப்பாடலை எடுத்துக்கொண்டு 'இதில் திருமாலுக்கே உரிய அடையாளங்கள் எதையும் கம்பன் காட்டவில்லை' என்று கூறும் ம. பொ. சி. அதை ஒட்டியுள்ள இரண்டு பாடல்களில், உலகனைத்தையும் ஆக்கி அளித்து அழிப்பவனாக முதற்பாடலில் தம்மால் கூறப்பெற்ற முழுமுதல்வன் திருமாலே என்பதைத் தெளிவாகக் காட்டியிருப்பதைத் தொடாமலே சென்று விடுகிறார். இப்பாடல்களின் பொருளையே இவர் அறியவில்லையோ என்று நாம் ஐயுறுமாறு. 'முதல்பாடல் சிவனைப்பற்றியதே' என்று ம. பொ. சி. ஆதாரமில்லாமல் சாதிக்கிறார். இவ்விருபாடல்களை அடுத்த பாராவில் விரிவாக விளக்குவோம். 'இரணியன் வதைப் படலம் கம்பன் செய்ததல்ல' 'திருவேங்கடமலையில் உள்ள திருமாலைப் பாடாததேன்' முதலான தலைப்புக்களில் பல பக்கங்களை வீணாக்கியிருக்கும் ம. பொ. சி. திருமாலை மும்மூர்த்திகளுக்குள் முதல்வன் என்று கம்பன் கூறும் நூற்றுக்கணக்கான பாடல்களைக் கண்டுகொள்ளாமலே செல்கின்றார். இரணியன் வதைப்படலத்தில் ''சாணிலும் உளன்'' என்னும் பாடலை மேற்கோளாகக் காட்டும்போது அதிலுள்ள உயிரான தொடரான 'நீ சொன்ன சொல்லிலும் உளன்' என்னும் பகுதியை 'நான் சொன்ன சொல்லிலும் உளன்' என்று எடுக்கிறார். இப்பாடலில், '' 'இறைவனான திருமால் இல்லை' என்று நீ சொன்ன சொல்லிலும் அத்திருமால் இருக்கிறான்'' என்னும் பொருள் உடைய 'நீ சொன்ன சொல்லிலும் உளன்' என்னும் தொடரிலேயே பெருஞ்சுவை உள்ளது. 'நான் சொன்ன சொல்லிலும் உளன்' என்று ம. பொ. சி. இதை மாற்றுவது சுவைக்கேடாகவே உள்ளது. இவற்றிலிருந்து கம்பராமாயணத்தை ம.பொ.சி. ஆழ்ந்து கற்காமல் இக்கட்டுரைத் தொடரை எழுத முற்பட்டுவிட்டார் என விளங்குகிறது. காமகோடிப் பெரியபீடாதிபதியை

'நடமாடும் தெய்வம்' என்று புகழ்ந்து எழுதி, அவரது ஆராய்ச்சி இல்லாத கட்டுரைகளிலிருந்து மேற்கோள் காட்டுவதிலிருந்தும்—அவரிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு வைணவத்தை இழிவுபடுத்துவதற்காகவே அக்னிஹோத்ரம் ராமானுஜதாத்தாசாரியார் எழுதிய 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் நூலிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டுவதிலிருந்தும், ஆத்திகவேடம்பூண்ட நாத்திகரான அவரை 'பரம பாகவதர்' 'பரம வைஷ்ணவர்' என்று புகழ்வதிலிருந்தும் — திரு. ம. பொ. சி. வைணவத்திற்குத் தீங்கு இழைப்பதையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக்கொண்ட காமகோடிப் பெரியவரின் தூண்டுதலினாலேயே அவசரக்கோலமாக இக்கட்டுரைத் தொடரை எழுதியிருக்கிறார் என்று தெளிவாக விளங்குகிறது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே—'விஷ்ணுவுக்குத் தமோகுணமுண்டு' என்று பேசி, அதைப் பத்திரிகைகள் அனைத்திலும் வெளியிடச் செய்து, தமது விஷ்ணுத்வேஷத்தைப் பறைசாற்றிக்கொண்டவர் காமகோடிப் பெரியவர். அவரது அக்கூற்றை 'ஸாத்விக விஜய ஸர்வஸ்வம்' என்னும் எமது நூலில் விரிவாக மறுத்திருக்கிறோம். அதை ம. பொ. சிக்கும் அனுப்பியிருக்கிறோம். அதை இன்றளவும் பீடாதிபதியாலும், அவரது சீடர்களாலும் மறுக்க இயலவில்லை. அதனால் கடுங்கோபங்கொண்ட பீடாதிபதி தமது கட்டுரைகளிலும், காமரசக் கதைகளை வெளியிட்டு மக்களைக்கெடுக்கும் 'கல்கி' 'விகடன்' 'இதயம்' முதலான பத்திரிகைகளில் தமது சீடர்களைக்கொண்டு எழுதுவிக்கும் தலபுராணக் கட்டுரைகளிலும், இலக்கியக் கட்டுரைகளிலும் ஏராளமான இடங்களில் விஷ்ணுவை இழித்துரைத்தும், உரைப்பித்தும், வைஷ்ணவத்தைத் திரித்துரைத்தும், உரைப்பித்தும், பொய்களைப் பரவச்செய்துவருகிறார். இப்பொய்கள் அனைத்தையும் இதுகாறும் ஏழு சதகங்கள் (700 கேள்வி பதில்கள்) வெளிவந்துள்ள நமது ஸுதர்சனர் பதில்களில் நடுநிலையாளர்கள் தலைகுலுக்கி வரவேற்கும்படி மறுத்து, உண்மையை நிலைநாட்டியிருக்கிறோம். 'காமகோடிப் பெரியவர் மிகக்கொடிய விஷ்ணு த்வேஷி' என்பதை ஜீரணித்துக்கொள்வதற்கு ம. பொ. சியின் மனம் இடம் கொடுக்குமானால், இந்த ஸுதர்சனர் பதில்களையும் அவருக்கு அனுப்பச் சித்தமாயிருக்கிறோம். காமகோடிப் பெரியவரின் கைக்கூலியான தாத்தாசாரியர் இயற்றிய 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் நூலிலுள்ள வாதங்களை வைணவ உலகத்திலுள்ள சான்றோர்கள் அனைவரும் கண்டித்துச் சிதறவடித்திருக்கும் கட்டுரைகளைத் தாங்கிய 'அக்னிஹோத்ரியும் வைணவமும்' எனும் நம் வெளியீட்டையும் ம. பொ. சிக்கு அனுப்பியிருக்கிறோம். இந்நூல்களைக்கொண்டு காமகோடிப் பெரியவருடையவும், அவரது கைக்கூலியுடையவும் கட்டுரைகள் நிலைநிற்கமாட்டாத புன்சொற்களே என்பதை ம. பொ. சி. எளிதில் உணரலாம். இதை உணரும் நடுநிலைமை அவருக்கு ஏற்படவேண்டும் என்று நாம் பரம்பொருளைப் பிரார்த்திக்கிறோம்.



இப்படிக் கம்பராமாயணத்தில் ஆராய்ச்சியில்லாமல், காமகோடிப் பெரியவரின் தூண்டுதலினால் கட்டுரைத் தொடரை எழுத முற்பட்ட ம.பொ.சி. காமகோடிப் பெரியவரைப் பின்சென்று ஔவையார் இயற்றிய ஆத்தி சூடியில் 'அரனைமறவேல்' என்றுள்ளதாக எழுதியதின்மூலம் தாம் ஆத்தி சூடியைக்கூட ஆழ்ந்து கற்கவில்லை என்று புலப்படுத்திக்கொள்கிறார் அந்தோ!. இப்போதாவது ஆத்திசூடியை எடுத்துப் பார்த்தாரானால், இடையின 'ர'கரத்திற்கும், 'ல'கரத்திற்கும், 'வ'கரத்திற்கும், 'ழ'கரத்திற்கும், 'ள'கரத்திற்கும் உரிய நீதி மொழிகளுக்குப் பிறகு வரும் 'அறனை மறவேல்' என்னும் நீதி மொழியை 'அரனை மறவேல்' என்று காமகோடி பீடாதிபதி மாற்றியது தமிழறிவின்மையால் ஆயது என்பதை உணர்ந்து, காமகோடிப் பீடாதிபதியைப்போல் இன்னமும் பிடிவாதம் பிடிக்காமல் நேர்மையுடன் தவறை ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த நேர்மை அவருக்கு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் ஆத்திசூடியைக்கூட ம. பொ. சி. ஆழ்ந்து கற்கவில்லை என்னும் உண்மை வெள்ளிடைமலையாக விளங்கும். காமகோடிப் பெரியவரைப் பின்சென்று ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு அவப்பொருளுரைக்குமிடங்களும் இத்தகையவையே என்பது நமது நூல்களைப் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும். "சிறியார் சிவப்பட்டார்" [நான்-திருவ 6] என்னும் பாசுரத்தை "செத்தார் சிவப்பட்டார்" என ம. பொ. சி. மேற்கோள் காட்டுகிறார். இது திவ்யப்ரபந்தத்திலும் இவர் நுனிப்புல் மேய்ந்தவரே எனக் காட்டித் தருகிறது. ஆக, சிலம்புச் செல்வரான ம. பொ. சிக்கு மற்ற தமிழ் நூல்களில், குறிப்பாகக் கம்பராமாயணத்தில், ஆழ்ந்த புலமை இல்லாமையாலேயே இக்கட்டுரைத் தொடர் எழுந்துள்ளது என்று நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இந்நூலின் எஞ்சிய பகுதிகளில் நடுநிலையாளர் அனைவரும் ஏற்கும்படி இதை நிலைநாட்டுவோம்.

29. "உலகம் யாவையும்" என்னும் முதல்பாடலில் "யதோ வா இமாநி பூ₄தாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபி, ஸம்விஶந்தி, தத்₃விஜிஜ்ஞாஸஸ்வ தத்₃ ப்₃ரஹ்மேதி" [எதனிடமிருந்து இந்த ஜீவராசிகள் (ஸ்ருஷ்டிகாலத்தில்) தோன்றுகின்றனவோ, எதனால் தோன்றியவை உயிர் வாழ்கின்றனவோ, (ப்ரளய காலத்தில்) எதனிடம் சென்றடைகின்றனவோ அதை ப்ரஹ்மமென்றறிவாயாக] என்னும் உபநிஷத்தைப் பின்பற்றி ஜகத்

காரணப்பொருளை சரணம் பற்றினன். இந்த ஜகத்காரணப்பொருள் எது என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக,

"சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை
எற்(கு) உணர்த்தரிது எண்ணிய மூன்றனுள்
முற்குணத்தவரே முதலோர்; அவர்
நற்குணக் கடலாடுதல் நன்றரோ"

[புல்லறிவாளர்களால் அறியமுடியாத பரம்பொருள் நிலையை என்னல் உரைக்க இயலாது; ஸத்வம், ரஜஸ், தமம் என்று மூன்ருக எண்ணப்படும் குணங்களுள் முதலாவதான ஸத்வகுணத்தை உடைய திருமாலே (முறையே) ரஜோகுணத்தையும், தமோகுணத்தையும் உடைய பிரமனையும், சிவனையுங்காட்டிலும் முதல்வர். அவரது கல்யாணகுணக்கடலில் குடைந்தாடுவதே நன்று] என்னும் பாடலை அமைத்திருக்கிருன் கல்வியிற்பெரிய கம்பன். ஸத்வகுணத்தையுடையவர் திருமாலே என்பதும், பிரமன் ரஜோகுணத்தையுடையவன் என்பதும், சிவன் தமோகுணத்தையுடையவன் என்பதும் ஸகல சாஸ்திரங்களிலும் பிரசித்தம். இருபத்தைந்து வருடங்களுக்கு முன் காமகோடிப் பீடாதிபதி "திருமாலுக்கும் தமோகுணம் உண்டு" என்று ஆதாரமில்லாமல் கூறியபோது, ஸாத்விக விஜய ஸர்வஸ்வத்தில் பீடாதிபதி வாய்திறக்கமுடியாதபடி நூற்றுக்கணக்கான வேத சாத்திர ஆதாரங்களைக் காட்டி "திருமால் ஒருவரே சுத்த சத்துவகுணமுடையவர்" என நிலைநாட்டியிருக்கிருேம். இன்றளவும் பீடாதிபதியால் இதை மறுக்க இயலவில்லை. ம. பொ. சி. இவ்விஷயம் ஏதுமறியாமல் "கம்பன் சைவனே" என எழுதுவது நடுநிலையாளர்களால் விலவறச் சிரிக்கத்தக்கது. கம்பன் இத்துடன் நில்லாமல், அடுத்த பாடலில் "ஆதி யந்தம் அரி என யாவையும் ஓதினர் அலகில்லன உள்ளன வேதம் என்பன மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லது பற்றிலர் பற்றிலார்" [முதலிலும் முடிவிலும் "ஹரி: ஓம்" என்று ஓதும் அளவற்ற வேதங்களை ஓதிய பற்றற்றவர்கள் உண்மை நெறியாகவும், அடையத்தக்கவனுகவுமுள்ள அந்த ஹரியின் பாதங்களைத் தவிர வேறு எதையும் பற்றமாட்டார்கள்] என்று இந்த முழுமுதல்வன் ஹரியே என நிலைநாட்டினர். வேதங்களைத் தொடங்கும்போதும், முடிக்கும்போதும் வைதிகர்கள் "ஹரி: ஓம்" என்று ஓதுகிருர்களேயொழிய "ஹர: ஓம்" என்று ஓதுவதில்லை. முதற் பாடலில் 'அன்னவர்க்கே' என்னும் ஏகாரத்தாலும், இரண்டாம் பாடலில் 'முற்குணத்தவரே முதலோர்' என்னும் ஏகாரத்தாலும், மூன்றும் பாடலில் 'பாதமல்லது பற்றிலர்' என்னும் எதிர்மறையாலும் திருமால் ஒருவனைத் தவிர மற்றை இரு மூர்த்திகளையும் ஞானிகள்



பற்றமாட்டார்கள், தானும் பற்றவில்லை எனக் கம்பன் தெளிவாகக் காட்டுகிருன். அவன் குறிப்பிடும் பரம்பொருள் திருமாலே எனத் தெளிவாக எடுத்துக்காட்டும் இரு பாடல்களைத் தொடாமலே, 'முதற் பாடலில் கம்பன் சிவனையே கருதுகிருன்' என ம. பொ. சி.எழுதுவது அவருக்கு மனச்சாட்சி உண்டா என நம்மை ஐயமுறவைக்கிறது. நேர்மையிருந்தால் செங்கோலில் நமது இந்த பதில்களைச் சுருக்கமாகவாவது எடுத்து ம. பொ. சி. பதிலுரைக்கட்டும்.

30. பல வருடங்களுக்கு முன் அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் G. சுப்பிரமணியப்பிள்ளை என்பவர் திருவவதாரப்படலத்தில் பல பாடல்களை மாற்றிக் கம்பன் வைணவனல்லன் எனக் காட்ட முயன்றபோது, நாம் உடனே "கம்பனின் சமயம்" எனும் தலைப்பில் மறுப்பு வெளியிட்டோம். பல்கலைக் கழகத்தார் அதில் பல பிரதிகளை வாங்கிக் கம்பராமாயணப் புலவர்களிடம் அளித்தனர். எவராலும் இன்றளவும் அந்நூலுக்கு மறுப்பு எழுத இயலவில்லை. அந்நூலின் இரண்டாம் பாகமாக ம. பொ. சிக்கு மறுப்பான இந்நூலை எழுதுகிருேம். இதற்கு ம. பொ. சி. ஏதேனும் பதில் எழுதுகிருரா என்று பார்த்துக்கொண்டு, எழுதினல் அதை மூன்ரும் பாகத்தில் விமர்சிப்போம். எழுதினுலும், எழுதாவிட்டாலும், "கம்பன் வைணவனே" என்பதைக் கம்பராமாயணத்திலிருந்து நூற்றுக்கணக்கான பாடல்களைக் காட்டி இனி எவரும் வாய்திறக்கமுடியாதபடி நிரூபிப்போம்.

31. கம்பராமாயணத்தில் ஆழ்ந்த புலமையில்லாமல் ஒரு சில பாடல்களையே மேற்கோளாகக் காட்டி, கம்பன் சைவனே என அடம்பிடிக்கும் ம.பொ.சியைப் போலல்லாமல், கம்பராமாயணத்தில் ஆழ்ந்த புலமை உள்ளவரும், பிறப்பால் சைவரும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் ஒய்வுபெற்ற தமிழ்த்துறைத் தலைவருமான டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தமது "அறிவியல் தமிழ்" என்னும் நூலில் "கம்பன் கண்ட மெய்ப்பொருள்" என்னும் தலைப்பில் கம்பராமாயணப் பாடல்களில் பலவற்றை மேற்கோளாகக் காட்டி 'கம்பன் வைணவனே' என நிறுவியிருப்பதை இனி விரிவாகக் காட்டுகிருேம். இதைப் பார்த்தபின்பாவது ம. பொ. சியின் கண் திறக்கும் என நம்புகிருேம்.

## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் கட்டுரை

**நாராயணனே ராமன்:** பரமபத நாதனுகிய நாராயணனே இராமனுக அவதரித்தான் என்ற செய்தியைக் கம்பநாடன் காவியத்தில் பல இடங்களில் பெற வைக்கின்ருன். இராமனது அவதாரத்தைக் கூறும் கவிஞன்

''ஒருபகல் உலகெலாம் உதரத் துட்பொதிந்(து)
அருமறைக்கு உணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை''
[பால-திருவ 2.10-3]

என்று கூறுவன். பிரளயகாலத்தில் எல்லாவுலகங்களையும் தன் திருவயிற்றில் மறைத்து வைப்பவன் நாராயணன்; உலகம் உண்ட பெருவாயன்; [திருவாய் 6-10-1] பாலனாய் ஏழ் உலகு உண்டு பரிவு இன்றி ஆல்இலையில் அன்னவசம் செய்யும் அண்ணல் அவன் [திருவாய் 4-2-1] நான்மறைகளாலும் உணர முடியாத அவனை. அந்த அஞ்சனக் கருமுகிலை, கோசலை மகனாகப் பெற்றாள். இதனையே பிறிதோரிடத்தில்,

''எழுதரிய திருமேனிக் கருங்கடலைச்
செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்''
[பால-குலமுறை 20]

என்று மேலும் வற்புறுத்துவன். இக்குழந்தைக்கு 'இராமன்' எனப் பெயரிடப் பெற்றது என்பதைக் கூறும் கவிஞன் இதனை வலியுறுத்து கின்றான்.

''கராம்மலே யத்தளர் கைக்கரி எய்த்தே
அராவணை யில்துயில் வோய்என அந்நாள்
விராவி அளித்தருள் மெய்ப்பொரு ளுக்கே
'இராமன்' எனப்பெயர் ஈந்தனன் அன்றே''
[பால-திருவ 119]
[கராம்-முதலை; கைக்கரி-யானை; அராவணை-பாம்புப் படுக்கை]

முதலை வாயில் அகப்பட்ட களிறு 'ஆதிமூலமே' எனக்கூவ, அதனை முன்வந்து அளித்த திருமாலே இராமனாகப் பிறந்தான் என்பது ஈண்டு மீண்டும் வலியுறுத்தப் பெறுவதைக் காண்க. இதே கருத்து விராதன் வாய்மொழியாகவும்,

''கடுத்துநிமிர் கராம்கவ்வக் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை அனைத்தினும்சென்(று) ஒளிகொள்ள உறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத்து அரும்பரமே பரமேஎன்று
எடுத்தொருவா ரணம் அழைப்ப நீயோவந் தேன்என்றாய்''
[கராம்-முதலை] [ஆரணி, விராதன் வதை 49]

என்று வந்துள்ளது. சனகன் மாளிகையில் இராமன் திருப்பள்ளி எழுதலைக் கூறவந்த கவிஞன்,



''கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச்
சிலைதடக்கைக் கொண்ட கொண்டல்'' [பால-மிதிலை 154]
[ஆழி-சக்காப்படை]

என்று கூறுவன். 'பாற்கடலில் துயிலும் பரந்தாமனே சக்கரப் படையை நீத்துவிட்டு, கோதண்டத்தைத் திருக்கையில் கொண்ட முகில்வண்ணன்' என்று கூறுவதனால் இக்கருத்து மேலும் அரண் செய்யப்பெறுவதைக் காண்க. இன்னும்,

''பஞ்சணை பாம்பணை யாகப்பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே இராமன்''
[ஆரணி சடாயுவுயிர்நீத்த 142]

என்று சங்கரன் கொடுத்த வாளால் இராவணனால் சிறகொடிக்கப் பெற்ற சடாயு வாக்கில் வைத்துக் கூறப்பெற்றுள்ளதை எண்ணி உணர்க. திருமாலே இராமனாக அவதரித்துள்ளான் என்பதை,

''சங்கு சக்கரக் குறியுள தடக்கையில் தாளில்
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை
செங்கண் வில்கரத்து இராமன்அத் திருநெடு மாலே''
[கிட்கிந்-நட்புகொள் 79]

என்று அநுமன் வாக்கிலும் வந்துள்ளமை காண்க.

இறைவன் பிறப்பில்லாதவன்; ஆனால் பல பிறப்புகளையுடையவன்.

''பிறப்பில் பல்பிறவிப் பெருமான்'' [திருவாய் 2-9-5]

என்பது ஆழ்வார் வாக்கு. பிறப்பில்லாதவன் என்றது ஏனையோரைப் போல் வினை காரணமாகப் பிறக்கும் தன்மையில்லாதவன் என்றவாறு. பல பிறவிகளையுடையவன் என்றது அடியார்கள் பொருட்டாகப் பல பிறப்புகளை (அவதாரங்களை) மேற்கொள்பவன் என்றபடி. இதுவே அவதார இரகசியம். கம்ப நாடன் இதனை நான்முகன் வாக்காக,

''தோற்றம் என்பதொன்று உனக்கில்லை'' [யுத்த-மீட்சி 107]

என்று கூறுவன். இராமனது பிறப்பினைக்கூறும் பகுதியில் இதனை விளக்கமாகக் காணலாம். பிறிதோர் இடத்தில் இராமனைக் குறிப்பிடுமிடத்து,

''மெய்யே பிறந்தேயும் பிறந்தி லாதான்'' [யுத்த-நாகபாசப் 222]

என்று இக்கருத்தினை மேலும் வற்புறுத்துவன்.

**நாராயணனே முதற்கடவுள்:** நாராயணனே உலகின் முதற்கடவுள் என்பதைக் கம்ப நாடன் தன் காவியத்தில் பல இடங்களில் வற்புறுத்து கின்றான். சீதை தூயவள் என்று அங்கியங் கடவுள் மெய்ப்பித்த பிறகு தேவர்களின் வேண்டுகோட்கிணங்க நான்முகன் இராமனது உண்மைச் சொரூபத்தை விளக்குகின்றான்.

"மறைகளின் தலைகள் மன்பெரும்பர மார்த்தமென்(று)
உரைக்கின்ற மாற்றம் அன்ப நின்னையல் லால்மற்றிங்(கு)
யாரையும் அறையா" [யுத்தமீட்சி 101]

[மறைகளின் தலைகள் - உபநிடதங்கள்]

என்ற பாசுரப் பகுதியில் உபநிடதங்கள் குறிப்பிடும் 'பரம்பொருள்' திருமாலைக் குறிக்குமேயன்றித் தன்னையோ, சிவனையோ அல்லது இந்திரனையோ குறிக்கவில்லை என்று உணர்த்துவதை அறிக. அடுத்து, சிவபெருமான்,

"முன்னை ஆதியாம் மூர்த்திநீ மூவகை உலகின்
அன்னை சீதையாம் மாதுநின் மார்பின்வந் தமைந்தாள்"
[யுத்த-மீட்சி 113]

என்பதால் திருமாலே முதற்கடவுள் என்றும், சீதையே உலக அன்னையென்றும் உறுதி செய்வன். இப்பகுதியில் வரும் பாசுரங்கள் யாவும் இக்கருத்தையே பலபடியாக வலியுறுத்துகின்றன. நிகும்பலையைக் குலைத்தபின் இலக்குவனுக்கும் இந்திரசித்துக்கும் நடந்த போரில் பின்னவன் விட்ட நான்முகன் படையை அப்படையாலேயே அழித்து அதன் வேகத்தைத் தணித்தனன். அப்போது அதனைக் கண்டு வியந்த தேவர்களிடன் சிவபெருமான் கூறிய,

"நாராயண நரர்என்றுஇவர் உளராய் நமக்கெல்லாம்
வேராய்முழு முதற்காரணப் பொருளாய்" [யுத்த-நிகும்பலை 141]

என்ற வாக்கிலும் இதனைக் காணலாம். சேதுவை அமைக்க வருணனை வழி வேண்டியபொழுது, வருணன் வரத் தாமதித்ததனல், இராமன் சினங்கொள்கின்ருன். இதனைக் கவிஞன்,

"உற்றெடு தனியே தானே தன்கனே
உலகம் எல்லாம் பெற்றவன் முனியப் புக்கான்"
[யுத்த வருணனை வழி 63]

என்று குறிப்பிடும் இடத்தில் 'இராமனே பரம்பொருள்' என்று தற்கூற்ருகக் கூறுவதைக் காண்க. அடுத்து வருணன் வாயில் வைத்து,

"நவையறும் உலகிற் கெல்லாம் நாயக நீயே"
[யுத்த வருணனை வழி 67]

என்றும்,

"எள்ளலா காதமூலத்(து) யாதுக்கும்
முதலாய்உள்ள வள்ளலே" [யுத்த வருணனை வழி 71]

என்றும் பின்னும் வற்புறுத்துவன். அங்கதனுக்கு அறவுரை கூறும் வாலியின் கூற்ருக வந்துள்ள,



"மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக் குற்றதம்மா"
[கிட்கிந்-வாலிவதை 148]

என்ற பாடற் பகுதியும்,

"மும்மையாம் உலகம் தந்த முதல்வற்கும் முதல்வன்
தூதாய்ச் செம்மையால் உயிர்தந் தாய்க்கு"
[சுந்தர-உருக்காட்டு 71]

என்று சீதை அநுமனைக் குறிப்பிடும் பாடற் பகுதியும் திருமாலே முழு முதற்கடவுள் என்பதனைப் பின்னும் அரண் செய்கின்றன. இதனையே,

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன்" [சுந்தர-பிணிவீட்டு 80]

என்று அநுமன் வாய்மொழியாகவும்,

"மூவர்க்கும் தலைவ ரான மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்ருர் காகுத்த வேடங் காட்டி"
[யுத்த-கும்பகருணன் வதை 150]

என்று கும்பகருணன் வாய்மொழியாகவும் கவிஞன் பேசுவன். ஞான ஒளி தட்டுப்பட்ட கவந்தனும்,

"மூலமே இல்லா முதல்வனே நீளடுத்த
கோலமே யார்க்கும் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ? ஆலின் அடையோ? அடைக்கிடந்த
பாலனே? ஆதிப் பரமனே? பகராயே" [ஆரணி-கவந்த 44]

என்று இராமன் முதற்பொருள் என்று கூறுவதைக் காண்க. மேலும், விராதன் வாய்மொழியாக,

"மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ? உனக்கென்ன குறையுண்டோ?
வையத்தார் வானத்தார் மழுவாளிக்கு அன்றளித்த
ஐயத்தால் சிறிதுஐயம் தவிர்ந்தாரும் உளர்ஐயா"
[ஆரணி-விராதன் வதை 59]

[மெய்-நீயே பரதத்துவம் என்னும் உண்மை; மழுவாளி - பரமசிவன்; ஐயம் - பிச்சை, சந்தேகம்.]

என்று பின்னும் கூறுவன். இக்கருத்து நம்மாழ்வாரின்

"பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும்
நாயகன் அவனே; கபாலநல் மோக்கத்துக் கண்டுகொண்மின்"
[திருவாய் 4-10-4]

4

என்ற பாசுரப் பகுதியின் கருத்துடன் இயைந்திருத்தல் கண்டு மகிழத்தக்கது. மேலும், கம்பநாடன் திருமால் அன்னமாய் இருந்து அருமறைகள் உரைத்ததைக் குறிப்பிடும் ஆழ்வார்களின் பாசுரங்களை [பெரியதிரு 11-4-8] நினைந்து,

''அன்னமாய் அருமறைகள் அறைந்தாய்நீ அவையுன்னை
முன்னம்ஆர் ஓதுவித்தார் எல்லாரும் முடிந்தாரோ?''
[ஆரணி-விராதன் வதை 60]

என்று விராதன் வாய்மொழியாகப் பேசுவன். இதில் நாராயணனே ஊழிக்குப் பிறகும் நிலைபெற்று நிற்பவன் என்ற கருத்து வற்புறுத்தப் பெற்றுள்ளமை காண்க. மேகநாதன் ஏவிய நான்முகன் கணையால் இலக்குவன் அறிவொடுங்கி அயர்ந்தபோது தம்பி இறந்தான் என்று புலம்புகின்றான் இராமன். பின் அறிவு சோர்ந்து துயருறுகின்றான். அப்போது வந்த தேவர்கள், ''முன்பு பின்பு நடு இல்லாய்!'' [யுத்த-பிரமாத்திரப் 227] என்று விளித்துப் பேசுவதிலும் இதைக் காணலாம். நிகும்பலையைக் குலைக்கும்போது மேகநாதன் தன்னை இகழ்ந்து பேசியபோது, மறுமாற்றம் உரைக்கும் விடணனின் பேச்சில்,

''மூவகை உலகம் ஏத்தும் முதல்வன்;
எவர்க்கும் மூத்த தேவர்தம் தேவன்''
[யுத்த நிகும்பலை யாகப் 175]

என்று குறிப்பிடும் பகுதியிலும் இக்கருத்து மிளிர்வதைக் காணலாம். கவிஞனே பிறிதோர் இடத்தில்,

''மூவ ராய்முத லாகி மூலம தாகி ஞாலமும் ஆகியத்
தேவ தேவர் பிடித்த போர்வில் ஒடிந்த சேவகர்''
[அயோத். கைகேசி சூழ்வினை 62]

[தேவ தேவர்—சிவன்: சேவகர்—இராமன்]

என்று இக்கருத்தை மேலும் வற்புறுத்துவன். இராமன் கோலம் புனைதலைக் கூறும் இடத்தில் இராமனைக் கவிஞன்,

''முப்பரம் பொருளிற்குள் முதலை மூலத்தை''
[பால. கடிமணப். 69]

என்று குறிப்பிடுவன். முடிசூடப் போகும் இராமனின் திருமேனியைக் (திவ்வியமங்கள விக்கிரகத்தைக்) கண்டு ஊரார் வாய்மொழியாக,

''காலம்ஆ கணிக்கும் நுண்மைக் கணக்கையும் கடந்து நின்ற
மூலமாய் முடிவி லாத மூர்த்திஇம் முனிவன் என்பார்''
[அயோத். கைகேயி சூழ்வினை 91]

என்றும் அவனது 'ஆதி அம் சோதி உருவைச்' சுட்டிக் காட்டுவன்.



உலகத் தோற்றத்திற்கு முதற் காரணன்: நாராயணனே உலகத்திற்கு முதற்காரணன் [தத்துவத்திரயம் ஈசுவரப் பிரகரணம் 12] என்ற வைணவ சமயக் கருத்தைக் கவிஞன் கவந்தன் வாய்மொழியாக,

''நிற்கு நெடுநீத்த நீரின் முளைத்தெழுந்த
மொக்குளே போலமுளைத்தெழுந்த அண்டங்கள்
ஒக்கவுயர்ந் துள்ளே தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு எளிதோ பரம்பரனே'' [ஆரணி. கவந் 48]

[நீர்-ஆவரண நீர்; மொக்குள்-நீர்க்குமிழிகள்; பக்கம்-தன்மை; பரம்பரன்-மிகச் சிறந்தவன்]

என்று கூறுவன். மெய்யறிவு தோன்றப்பெற்ற விராதன் புகழ் மொழியாக,

''ஓயாத மலரயனே முதலாக உளராகி
மாயாத வானவர்க்கும் மற்றெழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகின் முதல்தாதை நெறிமுறையால்''
[ஆரணி, கவந்தன் வதை-53]

என்று பின்னும் வற்புறுத்துவன். இக்கருத்துகள்,

''தான்ஓர் உருவே தனிவித்தாய் தன்னின் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றும்ஆய்''
[திருவாய் 1.5.4]

என்ற ஆழ்வார் பாசுரக் கருத்தினை அடிப்படையாகக்கொண்டு வந்திருப்பது கண்டு மகிழத் தக்கது.

இறைவன் இவ்வுலகத்தைப் படைக்கும்பொழுது யாதொரு விகாரமும் அடைவதில்லை [தத்துவத்திரயம், ஈசுவரப்பிரகரணம் சூ.26] இக்கருத்தைக் கம்பநாடன்,

''அண்டம் பலவும் அனைத்துயிரும்
அகத்தும் புறத்தும் உளவாக்கி
உண்டும் உமிழ்ந்தும் அளந்திடந்தும்
உள்ளும் புறத்தும் உளையாகிக்
கொண்டு சிலம்பி தன்வாயில்
கூர்நூல் இயையக் கூடுஇயற்றிப்
பண்டும் இன்றும் அமைக்கின்ற
படியை ஒருவாய் பரமேட்டி'' [யுத்த-பிரமாத்திரப் 226]

என்று தேவர்களின் வாய்மொழியாகக் கூறுவன். ''ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் ஸர்வ சக்திக்குக் கூடாதொழியாதிறே'' [தத்துவத்திரயம், ஈசுவரப்பிரகரணம் சூ.29] என்ற தத்துவத்திரயக் கூற்றினையும் காண்க. இக்கருத்தினையே திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் அழகாகக் கவி அமைத்துக் காட்டுவர்.

சரீர சரீரி பாவனை: சித்தும் அசித்தும் ஈசுவரனின் உடலாக அமைந்துள்ளன என்பது வைணவ சமயக்கொள்கை [திருவரங்கத்து மாலை-18] இஃது உடல் உயிர்த்தொடர்பு (சரீர - சரீரிபாவனை) என்று வழங்கப்பெறும். இக்கருத்து,

"வானின்று இழிந்து வரம்புஇகந்த
மாபூ தத்தின் வைப்புஎங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறனும் உளன்என்ப" [அயோத்-காப்பு]

என்ற பாடற்பகுதியில் அமைந்திருப்பதைக் காண்க. இங்கு 'வான்' என்பது மூலப்பிரகிருதி (அசித்து). மூலப்பகுதியிலிருந்து தோன்றிய ஐந்து பூதங்களின் விகாரமே இந்த அகிலம்.

"வானும் நிலனும் முதலீறில் வரம்பில் பூதம்"
[அயோத். நகர்நீங்கு 120]

என்று பூதங்களின் வரம்பின்மையைப் பின்னும் விளக்குவன். இங்கு உணர்வு என்பது தர்மபூத ஞானம். பிரகிருதியின் உள்ளே இருப்பதற்கு ஊனுக்குள் உயிர் இருப்பது உவமை; அங்ஙனமே அவன் அதன் வெளியில் இருப்பதற்கு உயிரில் உணர்வு இருப்பது உவமை. மேற்கூறிய பாடலில் 'ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறனும் உளன் என்ப' என்னுமிடத்து,

"திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவது மாய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்"
[திருவாய் 1.1.7]

என்ற ஆழ்வார் பாசுரத்தின் கருத்தினை அடக்கிக்கொண்டிருப்பது கண்டு மகிழத் தக்கது. 'உயிர் உடம்பினுள் இருந்து அதனைத் தரிக்கச் செய்து அதற்குத் தலைவனாக நின்று அதனை நடத்துவது போலவே' இறைவனும் எல்லாப் பொருள்களுள்ளும் இருந்து அவற்றைத் தரிக்கச்செய்து அவற்றிற்குத் தலைவனாக நின்று அவற்றைத் தன் விருப்பம்போல் நடத்துகின்றனன் என்பது கருத்து.

அசித்து விகாரத்திற்கு இடமானது. ஐந்து பூதங்களின் விகாரமின்றி அகிலம் என்ற ஒன்று இல்லை.

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்கம் உலகம்"
[தொல். பொருள். மரபு.89]

என்பர் தொல்காப்பியனாரும். கம்பநாடன் இக்கருத்தையே,

"அலங்கலில்தோன்றும் பொய்ம்மை அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்"
[அலங்கல் - மாலை] [சுந்தர. காப்பு]



எனக் கூறுவன். அலங்கலைக் கண்டு அரவு என மருளுதல், திரிபுணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு. ஐந்து பூதங்களும் தனித்தனியே இருக்கும் தன்மையை விட்டு ஒன்றுகச் சேர்வதனுலும், அங்ஙனம் சேர்ந்த சேர்க்கை அறுவகையாக விகாரப்படுவதனுலும், தேவர், மனிதர், விலங்கு, தாவரம் என்னும் பாகுபாடு கொள்வதனுலுமான இந்த உலகத்தோற்றம் மக்களிடம் திரிபுணர்ச்சியை உண்டாக்குதல் கூடும். இந்தத் திரிபுணர்ச்சி உண்மைப் பரம்பொருளைக் கண்ட மாத்திரத்தில் ஒழிந்துவிடும் என்று கூறுவன் கவிஞன்.

பிறிதோரிடத்தில் இந்த உடல் - உயிர் உறவுபற்றிய கருத்து மிகத் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளது.

"மூன்றுரு எனக்குணம் மும்மை யாம்முதல்
தோன்றுரு எவையும்அம் முதலைச் சொல்லுதற்கு
ஏன்றுரு அமைந்தவும் இடையின் நின்றவும்
சான்றுரு உணர்வினுக்(கு) உவந்த தாயினன்" [கிட்கிந்-காப்பு]

[முதல்-மூலப் பிரகிருதி; தோன்று உரு-மூலப்பகுதியில் தோன்றும் எல்லாத் தத்துவங்கள்; ஏன்றுரு - வடிவமைந்த அகிலம்; இடையில் நின்றவும் - சீவர்கள்; சான்ற உரு - சிறந்த சரீரம்.]

என்ற பாடலில் இந்த விளக்கத்தைக் காணலாம். மூலப்பிரகிருதியும், அதில் தோன்றும் சேதநாசேதநங்களின் வடிவமான எல்லாப் பிரபஞ்சமும் இறைவனுக்குத் திருமேனியாகும் என்பது கருத்து. மூலப் பிரகிருதியினின்றும் தோன்றும் தத்துவங்கள் 24 என்பதை,

"பொங்கு ஐம்புலனும் பொறிஐந்தும்
கருமேந் திரியம் ஐம்பூதம்
இங்குஇவ் உயிர்ஏய் பிரகிருதி
மான்ஆங் காரம் மனங்களே" [திருவாய் 10.7.10]

என்ற ஆழ்வார் பாசுரம் விளக்கும். அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன் ஐந்தும்; மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறி ஐந்தும்; வாக்கு, கால், கை, பாயு, உபத்தம் ஆகிய கருமேந்திரியம் ஐந்தும்; மண், நீர், எரி, கால், வான் என்னும் பூதங்கள் ஐந்தும்; இங்குள்ள இந்த ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப்பிரகிருதி ஒன்றும்; மகத் தத்துவம் ஒன்றும்; அகங்கார தத்துவம் ஒன்றும்; மனம் ஒன்றும் ஆக 24. இவற்றுடன் ஆன்மா (புருடன்), இறைவன் (ஈசுவரன்) ஆகிய இரண்டும் சேர விசிட்டாத்வைத தத்துவங்கள் 26 ஆகின்றன.

படைப்புக் காலத்திற்கு முன்னர் சேதநாசேதநங்களெல்லாம் தன் திருமேனிக்குள் வியாபித்து நிற்கப் பரம்பொருள் ஒன்றே தனித்து நிற்கும். அந்தப் பரம்பொருள் 'பலவாக ஆகக்கடவேன்' என்று சங்கற்பங்கொண்டு இவ்வுலகத்தையெல்லாம் தன் திருமேனியினின்றும் விரியச்செய்யும். இங்ஙனம் தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் என்ற நால்வகைப் பிறவியாகத் தோன்றிய பொருள்தோறும் இறைவன் மறைந்து அந்தர்யாமியாகப் பரந்துள்ளான். இதனைக் கம்பநாடன் இந்திரன் வாய்மொழியாக,

"ஒன்றாகி மூலத்(து) உருவம் பலவாகி
உணர்வும் உயிரும் பிறிதாகி ஊழி
சென்று சறுங்காலத்(து) அந்நிலைய தாகித்
திறத்துலகம் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே"
[ஆரணி. சரபங்கன் பிறப்புநீங்கு-30]
[ஆசறுதல் முடிதல்]

என்று கூறுவன். இங்கு 'ஒன்றாகி.........ஞானக் கொழுந்தே' என்றது,

"கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும்
கரந்துஎங்கும் பரந்துளன், இவைஉண்ட கரனே."
[திருவாய் 1.1.10]

என்ற ஆழ்வார் பாசுரப் பகுதியை நினைவிற் கொண்டு என்க. மேலும் இந்திரன் வாய்மொழியாகவே இறைவனின் அந்தர்யாமித்துவத்தை,

"தோய்ந்தும் பொருளனைத்தும்
தோயாது நின்றசுடரே!"
[ஆரணிய. சரபங்கன் பிறப்பு 27]

என்று வற்புறுத்துவன்.

**முத்தொழில்களையுடையவன்:** ஈசுவரன் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் தனது சங்கல்பத்தாலேயே வருத்தமின்றி நிறைவேற்றுவான் [தத்துவத்திரயம்-ஈசுவரப் பிரகரணம் சூத். 21.25] இதனைக் கம்பநாடன்,

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே"
[கம்ப. தற்சிறப்புப்பாயிரம் 1]



என்று கூறுவன். இங்கு 'உளவாக்கல்' என்பது சூக்கும வடிவினவாகவுள்ளவற்றைத் தூலவடிவினவாகச் செய்தல்; இல்லாததை உண்டாக்குவது அல்ல. இஃது 'உள்ளது போகாது, இல்லது வாராது' என்னும் சத்காரியவாதம்; சூனிய வாதத்துக்கு மறுதலை. "இத்தொழில்களைச் சிறுர் மணல் வீடு கட்டி அழிக்குமாப்போலே கேவல விளையாட்டாகவே நிறைவேற்றுவான் இறைவன்" [தத்துவத்திரயம்-ஈசுவரப் பிரகரணம். சூத். 22, 24] இதனையே பிறிதோர் இடத்தில் கம்பநாடன்,

"உலகம் யாவையும் படைத்து அளித்து
உண்டு உமிழொருவன்" [பால. அகலிகைப்.7]

என்றும், மற்றோர் இடத்தில்,

"காட்டுவாய் உலகம் காட்டிக்
காத்தவை கடையிற் செந்தீ
ஊட்டுவாய் உண்பாய் நீயே"
[யுத்த. வருணனை வழிவேண் 69]

என்றும் வற்புறுத்துவன்.

**ஆயிரம் பெயருடையவன்:** இறைவன் அநந்த கல்யாணகுணங்களையுடையவன்; அவன் பெருமைகள் பேசிமுடியா. இவற்றை அடக்கிக்கொண்டு அவன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட (எண்ணற்ற) பெயர்களைத் தாங்கி நிற்கின்றான். கம்பநாடன்,

"நினையும் தேவர்க்கும் நமக்கும்ஒத் தொருநெறி நின்ற
அனகன் அங்கணன் ஆயிரம் பெயருடை அமலன்"
[அயோத். சித்திரகூட-1]

என்று இராமனைக் குறிப்பிடுவன். மண்ணுலகில் பிறந்து விசேட அறிவைப் பெறாத நம்மைப்போலவே, அறிவு ஆற்றல்களில் மிக்கவரென்று நம்மால் மதிக்கப்பெறும் தேவர்களாலும் அவன் பெருமையை அறியவொண்ணாது என்பது கவிஞனின் குறிப்பு. ஆண்டவன் ஆயிரம் பெயருடைய அமலன் என்பதையே கருடன் வாய்மொழியாக,

"பேரா யிரங்கள் உடையாய்
பிறந்த பொருள்தோறும் நிற்றி" [யுத்த. நாகபாசம் 261]

என்று பேசுவன். "நாமங்கள் ஆயிரம் உடைய நம் பெருமான்" [திருவாய் 5.9.11] "பேரும் ஓர் ஆயிரம் பிறபல உடைய எம் பெருமான்" [திருவாய் 1.3.4] "பேராயிரம் உடைய பேராளன்" [பெரி.திரு 8.1.6] என்ற ஆழ்வார்களின் வாக்குகளை நினைவிற் கொண்டே இங்ஙனம் கவிஞன் பேசுவன்.

மந்திரங்களுள் சிறந்தது திருமந்திரம்; நாராயண நாமம். இராமநாமமும் இதுவேயாகும். இதன் பெருமை சொல்லுந்தரமன்று. இந்நாமம் அருகிலிருந்து தன்னைப் பக்தியுடன் சொன்னவர்களுடைய விருப்பங்களை நிறைவேறச் செய்யும். இதனைச் சொல்லவேண்டும் என்ற எண்ணமேயின்றித் தம் குழந்தைகட்கு இப்பெயரை இட்டு அழைக்கினும், பரிகாசமாகவோ இழிவாகவோ பொருளுணர்ச்சி யின்றியோ சொல்லினும், இது கொடுக்கும் பலனிலிருந்து தவறுது. இத்தகைய மந்திரத்தின் பெருமையைக் கம்பநாடன்,

"மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் தவத்தை: தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை, 'இராமன்' என்னும்
செம்மைசேர் நாமந் தன்னை" [கிட்கிந். வாலிவதை.71]

என்று சிறப்பித்துப் பேசுவன். மூலமந்திரம் என்பது தலைமையான மந்திரம். உலகுக்கெல்லாம் மூலமந்திரம் இதுவேயாகும். இம்மந்திரத்தைச் செபிப்பார் பரமபதத்தையடைந்து அப்பெருமானுடைய சுயரூபம் முழுவதையும் திரிகரணங்களாலும் அநுபவித்துப் பெருமகிழ்வு அடைவர்.

"சரணம்ஆகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம்;
மரணம்ஆனல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" [திருவாய் 9-10-5]

என்று ஆழ்வார் பணித்தபடி எம்பெருமானுடைய அடியார்கட்கு இப்பிறப்பின் இறுதியிலேயே முக்தி கிடைத்தலால் அந்நாமம், 'இம்மையே எழுமை நோய்க்கும் மருந்து' எனக் குறிப்பிடப் பெற்றது. முக்தி பெற்றவர்க்கு வினைவயமான பிறப்பு இல்லை என்பது வைணவ சமயத்தின் கொள்கை.

**சரணுகதித்வம், கைங்கர்யம்:** இராமகாதையைச் சரணுகதி தத்துவத்தை விளக்கவந்த காவியம் என்பர் மெய்ப்பொருளறிஞர்கள்; இதனைச் 'சரணுகதி வேதம்' என்றே கொள்வர். அபயம் அடைந்த சுக்ரீவனும் விடணனும் எங்ஙனம் காக்கப் பெறுகின்றனர் என்பதைக் காவியம் பலவாறுக விளக்குகின்றது. இவர்கள் இருவரும் இராம கைங்கரியத்தில் மிகவும் ஈடுபட்டுப் பணியாற்றுவதையும் காணலாம். சரணுகதித்வம், கைங்கரியம் என்ற இரண்டுமே வைணவ சமயத்தின் முக்கியமான கொள்கைகளாகும்.



"'அகலகில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
* * *
புகலொன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" [திருவாய் 6-10-10]

என்பதனுல் சரணுகதித்வமும்,

"ஒழிவுஇல் காலம்எல்லாம் உடனுய் மன்னி
வழுவிலா அடிமை செய்யவேண் டும்நாம்
தெழிகுரல் அருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதிஎந்தை தந்தை தந்தைக்கே" [திருவாய் 3-3-1]

என்பதால் கைங்கரியத்துவமும் விளக்கப்பெறுகின்றன. சரணுகதித்வம் இராமன் வாய்மொழியாகவே,

"வெற்றியே பெறுக தோற்க வீகவி யாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ அடைக்கலம் பகர்கின் றனே" [யுத்த. வீடணனடைக் 108]

என்ற பாசுரப் பகுதியில் விளக்கம் பெறுகின்றது. இந்தக் கட்டத்தில் இராமனே பலவாறு இதற்கு விளக்கம் தருகின்றுன். [யுத்த. வீடணனடைக் 109 to 120] இறைவனுக்கு அடிமை செய்யவேண்டும் என்ற எண்ணமும், அங்ஙனம் மேற்கொள்ளும் செயலும் சுக்கிரீவன், வீடணன், அநுமன், சடாயு முதலிய பலரிடத்தும் காணப்பெறுகின்றன. "அடியாரின் ஏவல் செய்தி" [அயோத். நகர் நீங்கு 152] என்ற அன்னையின் வாக்கின்படி ஏவல்கேட்டு நிற்கும் இலக்குவன் கைங்கரிய வடிவமாகின்றதைக் காவியம் எங்கும் காணலாம்.

**இறுவாய்:** ஒரு நூல் சிறப்புற்று விளங்குவதும் அந்நூலை யாத்த கவிஞன் பெரும்புகழுடன் திகழ்வதும் அந்நூல் யாத்தற்கு அவன் தேர்ந்தெடுக்கும் பொருளைப் பொறுத்துள்ளன. கம்பன் தேர்ந்தெடுத்த கதைப் பொருளோ மிகச் சிறந்தது. அது திருமாலின் அவதாரமான "காசில் கொற்றத்து இராமன் கதை" [கம்ப. தற் சிறப்புப் பாயிரம்-4] ஆகும். இயல்பாகவே இராமனைப் புகழ்தற்குரிய இடங்கள் பல. அவ்விடங்களில் எல்லாம் திருமாலைப் பரம்பொருளாகக் கொள்ளும்படி பலமுறை கூறியுள்ளான் கவிஞன். எனவே, கம்பனுக்கு உயிருக்கு உயிராகவும், உணர்வுக்கு உணர்வாகவும், ஒப்புயர்வற்றதாகவும் கொண்ட கடவுள் பரமபதநாதனே என்பது பெறப்படும். மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரானுகிய அவனே அவன் கண்ட மெய்ப்பொருள்; பிறவிக்கு முதற்காரண

மாகவுள்ள அறியாமை (அவிச்சை) நீங்குதற்கும் விடுபேற்றினைப் பெறுவதற்கும் முக்கியக் காரணமாயும், தூயதாயும், என்றும் ஒரே தன்மையதாயுமுள்ள அதுவே (அவனே) அவன் கண்ட செம்பொருள்; ஈசுவரன்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு" [குறள் 358]

## மகாகவி அ. கு. ஆதித்தரின் கட்டுரை

32. "சடையப்பவள்ளலைப் பலவிடங்களில் குறிப்பிட்ட கம்பன் வைணவனுயிருந்தால் நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களைக் குறிப்பிடாமல் இருப்பானு? அப்படிக் குறிப்பிடாமல் இருப்பதிலிருந்தே அவன் வைணவன் அல்லன் எனத் தெரிகிறது" என்று வாதம் செய்கிருர் ம. பொ. சி; கம்பன் "ஆழ்வார்களை நம் காவியத்தில் பெயரிட்டுக் குறிப்பிட்டால் மற்ற சமயத்தினர் 'இது ஒரு சமயச் சார்புடைய காவியம்' என எண்ணி இதன் அருகில் வரவும் மாட்டார்கள். அதனுல் அவர்கள் இராமகுணங்களை அறியாமல் போய்விடக்கூடும்" என்று கருதி ஆழ்வார்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் விட்டிட்டான் எனக்கொள்ளலாமே? இப்படி அவன் பெரிய ராஜதந்திரத்துடன் காவியத்தை அமைத்ததாலன்றே ம.பொ.சி. போன்ற தீவிர சைவர்களும் அவன் காவியத்தில் ஈடுபடும்படியாயிற்று! ஆழ்வார்களைப் பெயரிட்டு எடுக்காவிட்டாலும், அவர்களுடைய கருத்துக்களை ஆயிரக்கணக்கான பாடல்களில் பொறித்து வைத்திருக்கிருன் கம்பன். பிறப்பால் சைவரும், ஆயிரம் பிறை கண்டவரும், நூறுமுறைக்குமேல் கம்பராமாயணத்தைப் படித்துத் துய்த்தவருமான மகாகவி. அ. கு. ஆதித்தர் அவர்கள் தமது 'கம்பர் கவிவளம்' என்னும் நூலில் 'கம்பரும் ஆழ்வார்களும்' என்னும் தலைப்பில் பல கம்பராமாயணப்பாடல்களைக்கொண்டு இதை விரிவாகக் காட்டியிருப்பதைக் காண்போம் இனி. இதைக் கண்டபின்பாவது ம. பொ. சி. உண்மையை உணரப்பெறுவார் என நம்புவோம்.

(1) இராமன் கௌசிக முனிவருடன் சென்று கன்னிவேட்டை யாகத் தாடகையை வதைத்து அப்பால் மிதிலை நகர்வீதியில் வருகிருன். அப்பொழுது சீதை மாடியில் நின்றுகொண்டிருந்தாள். "அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்". "ஒருவரை ஒருவர்தம் உள்ளத்து ஈர்த்தலால் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்". பின்னர் "மைந்தனும் முனியொடு மறையப் போயினன்" சீதை இராமனை எண்ணி எண்ணி விரகமுற்றுள். மாலைப்பொழுதின்



இருள் வந்தது. சீதை இராமனின் நீலநிறத்தை எண்ணி எண்ணி இரக்கமுற்றுள், வாட்டமுற்றுள். இந்த இடத்தில் கம்பர் :—

கடலோ, மழையோ, முழுநீலக் கல்லோ,
காயா நறும்போதோ,
படர்பூங்குவளை நறுமலரோ,
நீலோற்பலமோ, பானலோ
இடர்சேர் மடவார் உயிர்உண்பது யாதோ
என்று தளர்வாள்முன்
மடல்சேர் தாரான் நிறம்போலும்
அந்திமாலை வந்ததுவே. [மிதிலைக் காட்சி]

நீலநிறத்தைக் காயாம்பூ, குவளை, நீலோற்பலம், பானல் என்று வளம்பட வருணிக்கிருர் கம்பர், இவ்வருணனைக்கு வழி வகுத்தவர் நம்மாழ்வார். [பெரிய திருஅந்தாதி 73]

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலரென்றும் காண்தோறும்—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான்உருவே என்று.

ஆழ்வார் வாக்கு கம்பரிடம் அழகுபெற வெளிவருகின்றது.

(2) இருளின் கருநிறத்தில் நீலநிற இராமனை எண்ணி எண்ணி உள் உடைந்தாள் சீதை. பஞ்சுப் பொதியில் உற்ற தீபோல் அவன் உள்ளத்தைக் காதல் நோய் வாட்டியது. யான் ஒரு பெண், இத்துணை அல்லற்படுகின்றேன்; அவர் வந்து ஆறுதலாக ஒரு நல்ல சொல் உரைப்பதற்கில்லையே. இது ஆண்மையாகுமா? என்று எண்ணினுள்.

"பஞ்சு அரங்குதீயில் ஆவிபற்ற—
சஞ்சலங் கலந்தபோது, தையலாரை உய்யவந்து
அஞ்சல் அஞ்சல் என்றிலாத ஆண்மை என்ன ஆண்மையே?"

ஆ, விம்மிப் புடைத்த தனங்காள்! நீர் திரண்டு பெற்ற பயன் என்? இனி, அவனை அணைவதற்கு ஒரு வழியாக யாதேனும் தவம் செய்யலாம் எனின், உடனே அதனைப் புரியும்—என்று நொந்து கூறினள்—நெஞ்சழிந்து நைதலும், அஞ்சேல் என்று கூருத ஆண்மையும், விறுகொண்ட பயனற்ற தனங்கள் தவஞ்செய்து உய்யவேண்டும் என்பதும் கம்பர் கருத்தில் உள்ளன. இக்கருத்து நாச்சியார் தம் விரகத்தால் கூறியவை. [நாச்சியார் திருமொழி 13-9]

''நெஞ்சு ஊடுஉருவ ஏவுண்டு நிலையும் தளர்ந்து நைவேனை
அஞ்சேல் என்னுன் அவன் ஒருவன்''
''அழிலும் தொழிலும் உருக்காட்டான்
அஞ்சேல் என்னுன் அவன் ஒருவன்''

''குற்றமற்ற முலைதன்னைக் குமரன்கோலப் பணைத்தோளோடு
அற்றகுற்றம் அவைதீர அணைய''

''கொம்மைமுலைகள் இடர்தீர—
கோவிந்தற்கு ஓர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே
இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்?''

நாச்சியார் வாக்கில் வந்த விரகமொழிகள் கம்பர் வாக்கில் சீதையின் மொழிகளாகச் சிறந்து தோன்றுகின்றன.

(3) திருமணத்துக்கு முந்திய இரவிலும் சீதை இராமனை நினைத்து ஏக்குறுகிருள்.

''கருஞாயிறு போல்பவர் காலொடுபோய்—
ஒருநாள் தரியாது ஒழிவார் உளரோ'' [கடிமணப் படலம்]

என இராமனைக் கருஞாயிறு என்று சீதை குறிப்பதாய்க் கம்பர் கவி தருகின்ருர். இப்பெயரில் கம்பர் ஒரு தனி இன்பம் அனுபவிக்கிருர். குகப்படலத்தில்,

'' செஞ்சவே — அஞ்சன ஞாயிறன்ன ஐயனை நோக்கி '' என்று பாடினுர். சரபங்கர் பிறப்பு நீங்கு படலத்தில் '' கண் தாம் அவை கருஞாயிறு எனக் கண்டான் ''. இலங்கைகாண் படலத்தில் ''கதம் மிகுந்து—ஒரு கருஞாயிறு ஒத்தான் ''. மூலபல வதைப் படலத்தில் '' பட்டார் உடல்படு — கட்டு ஆர்சிலைக் கருஞாயிறு போல்வான் '' வேல் ஏற்றபடலத்தில் '' சாலிகை முதல்—நீலநிற ஞாயிறன்ன நெடியவன் '' இவ்வாறு பல இடங்களில் இராமனின் நீலநிறத்தைப் போற்றுகிருர் கம்பர். இதற்கு வித்திட்டவர் நம்மாழ்வாரே ஆவார். (இயற்பா திருவிருத்தம் 17)

இருள் விரிந்தால் அன்ன—அரவணைமேல்
இருள்விரி நீலக் கருஞாயிறு சுடர் கால்வதுபோல்
இருள்விரி சோதிப் பெருமான்—

ஆழ்வார் ஒருமுறை கருஞாயிறு எனத் தந்தார். அதனை அநுபவித்துக் கம்பர் அழகுபெற ஆறுமுறை சொல்லிச் சொல்லித் திளைக்கிருர்.



(4) இனி அயோத்யா காண்டத்துக்கு வருவோம். இராமனுக்கு முடிசூட்ட எண்ணித் தசரதர் தம் குருவாகிய வசிட்டர், மற்றும் அமைச்சர்கள் கருத்தை அறிய விரும்புகிருர். வசிட்டர் இராமன் தகுதிகளை அறிவித்து, இறுதியில்

''மனிதர் வானவர் மற்றுளோரில்—
மண்ணினிலும் நல்லன்—கண்ணினும் நல்லன்
கற்றவர் கற்றிலாதவரும்
''உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்''

என்று கூறுகிருர். இக்கவியைப் படிக்கும்போது நமக்கு நம்மாழ்வார் திருவாய்மொழி 6-7-1,

''உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான்'' என்ற அருள்வாக்கு நினைவில்எழுகிறது.

(5) இராமனுக்கு முடிசூட்ட எண்ணிய காரியம் கைகேசி சூழ் வினையால் தடைப்பட்டது. இதனை அறிந்த இலக்குவன் வெகுண்டு எழுந்து பெற்ருேரை ஒறுப்பான் துடித்து நிற்கிருன். துடிக்கின்ற அவனைப் பார்த்து இராமன்

''நெறியோர் கண் நில்லாதது—
ஈன்ற தாய் தந்தையர் என்ருல்,
அவர்மேல் சலிக்கின்றது ஏனோ?'' என்று தம்பியின் சினத்தை ஆற்ற முயன்ருன். இலக்குவன் அதற்குப் பதிலாக,

''நற்றுதையும் நீ,
தனி நாயகன் நீ, வயிற்றிற் பெற்ருயும் நீ, பிறர் இல்லை—''

என்று பேசி நின்ருன். இ ரா ம னை யே முழுமுதலாக, இலக்குவன் கூறும் இவ்வாசகம் நமக்கு ஆழ்வார்களின் நல் வாக்குகளை அறிவித்து நிற்கிறது. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி

''தந்தையும் தாயும் மக்களும் மிக்க சுற்றமும்...
அந்தமும் வாழ்வும் ஆய எம்பெருமான் அரங்க
மாநகரமர்ந்தானே [5-7.2]

''எந்தாதை தாதை அப்பால் எழுவர்
பழ அடிமை வந்தார்—'' [7-2.6]

''எம்பிரானை, எந்தை தந்தை தந்தைக்கும்
தம்பிரானை, தண் தாமரைக் கண்ணனை— [திருவாய் 1.10.3]

இவ்வாக்குகளின் கருத்தைக் கம்பர் இலக்குவன் வாயிலாக இராமனைக் குறிப்பிடுகிருர்.

(6) இராமன் நாட்டைவிட்டுப் புறப்பட்டுக் கங்கைக்கரையை யடைந்து குகனுடைய உறவைப் பெற்றன். குகனைப் பார்த்து "நீ போய்" இனிது உன் ஊரில் தங்கி, "நாவாயொடும் சாருதி விடியல்" என்றன். குகன் இராமன் அழகில் சொக்கி நின்றன். "நீ போய்" என்று இராமன் கூறிய சொல் அவன் உள்ளத்தை வாட்டியது; உடனே அவன்,

"இப் பார்குலாம் செல்வ, நின்னை இங்ஙனம்
பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்
யான், இன்னலின், இருக்கை நோக்கித் தீர்கிலேன்"

என்று கூறினன், உன்னைப் பார்த்த கண்ணை இப்புறம் அப்புறம் திருப்ப முடியாமல்—பார்த்துப் பார்த்து உன் அழகைப் பருகிப் பருகிக் கொண்டிருக்கிறேன். உரியவருக்குத் தெரியாமல் களவு செய்யும் திருடனைப்போல் யான் உன் அழகைப் பருகிக் களித்து, ஒரு கள்வன் போல் வேலை செய்கிறேன் என்ற கருத்தில், கம்பர் "பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்" என்று கூறினர். கள்வன் என்ற இச்சொல் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. "என் உள்ளங்கவர் கள்வன்" என்று சம்பந்தர் கூறினர் அல்லவா? திருமங்கையாழ்வாரும் அவ்வாறே கண்ணனைக் கள்வனுகக் கூறி மகிழ்கின்றர்.

"புள்ளாய் ஏனமுமாய்ப் புகுந்து என்னை உள்ளங் கொண்ட
கள்வா,—என் கண்கள் நீர் சோர்தருமால்"

[பெரியதிருமொழி 7.2.1]

ஆழ்வாரும் நாயனரும் தெய்வத்தைக் கள்வன் ஆக்கினர். இராமன் குகனுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டு நிற்பதனல், இராமன் கள்வனுதல் வேண்டும். "கள்வனேன்" என்பதை "கள்வனே" என்று பாடியிருப்பின் இராமன் கள்வன் ஆவான். ஆனல் இங்கு பூனை பாலைக் குடிப்பதுபோல இராமனுடைய அழகைப் பருகிவிருக்கிற குகனே கள்வன் ஆகிறன்.

(7) கங்கையாற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தபின், இராமனிடம் குகன் விடைபெறுகின்றன். பிரிவாற்றமைக்கு ஆறுதலாக இராமன் குகனைப் பார்த்து,

"என் உயிர் அனையாய் நீ. இளவல் உன் இளவல்,
நன்னுதல் இவள் நின் கேள்—";

என்று கூறினன். சீதை அசோகவனத்திற் சிறையிருக்கும்போது இராமனுடைய பெருங்குணங்களை எண்ணினள். அவற்றுள் ஒன்று—



ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி நீ.
தோழன். மங்கை கொழுந்தி எனச் சொன்ன
ஆழி நண்பினை உன்னி மயங்குவாள்.

ஏழை வேடன் எம்பி நின் தம்பி— நீ தோழன்— இவள் நின் கேள்—இந்த வாக்கினைக் கம்பர் எங்கிருந்து பெற்றர்? திருமங்கையாழ்வார் திருமொழி (5.8.1) கூறுகிறது:—

ஏழை, ஏதலன், கீழ் மகன் என்னது இரங்கி
மற்றவற்கு இன்னருள் சுரந்து
"மாழை மான் மடநோக்கி உன்தோழி,
உம்பி எம்பி" என்று ஒழிந்திலை—உகந்து
"தோழன் நீ எனக்கு; இங்கொழி" என்ற சொற்கள் வந்து
அடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ண, நின் அடியிணை அடைந்தேன்
அணிபொழில் திரு அரங்கத்து அம்மானே.

திருமங்கையாழ்வார் ஒருமுறை கூறியதைக் கம்பர், இராமன் வாக்காகவும் சீதை வாக்காகவும் இருமுறை தந்துள்ளார்.

(8) இராமன் காட்டிலிருக்குங்கால் அவனை அழைக்கப் பரதன் வருகிறன். இராமன் தன் தந்தையாரின் உடல் நலம்பற்றி உசாவ "மல்லுயர் தோளினன் வலியனே?" என்றன். பரதன், தந்தையார் இறந்த செய்தியைக் கூறியதும் இராமன் பொருமினன், புலம்பினன். எவ்வாறு?

"நந்தா விளக்கு அனைய நாயகனே" என்று தொடங்கி, "அந்தோ, இனி வாய்மைக்கு ஆர் உளார்" என்றன். "நந்தா விளக்கு" எத்துணை அழகிய சொற்றொடர்! அணையாத தீபம்! தசரதரைப் போற்றி இராமன் கூறியதாகக் கம்பர் தந்த இந்தச் செந்தமிழ்ச் சொல் யாண்டுப் பிறந்தது? திருமங்கையாழ்வார் பாடுகிறர்:— (3-8-1)

"நந்தா விளக்கே, அளத்தற்கு அரியாய்,
நரநாரணனே, கருமாமுகில்போல் எந்தாய்" மேலும்,
"சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே,
நந்தா விளக்கின் சுடரே"— [4.9.2]

(9) இனி ஆரண்ய காண்டத்துக்கு வருவோம். இங்கு முதன் முதல், விராதன் வந்து ஊறு புரிந்து, இறுதியில் சரண் அடைந்து இராமனைப் போற்றுகிறன். எவ்வாறு?

"தாய் தன்னை அறியாத கன்றில்லை —
மாயை இது என்கொலோ! வாராதே வர வல்லாய்"

வருவது போலக் காட்டி, நீ வர மாட்டாய்; வாராதாய்போல் காட்டி வந்து நிற்பாய்—என்று தெய்வ இயல்பு கூறப்படுகிறது.

நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில்

"வந்தாய் போலே வாராதாய்,
வாராதாய் போல் வருவானே [6-10.9]
வந்தாய் போலே வந்தும், என் மனத்தினை நீ
சிந்தாமல் செய்யாய்" [3-2.5]

என்று அருளியதை அடியொற்றியது இது.

(10) இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் செல்கிறான். சீதை அஞ்சி நடுங்குகிறாள். அச்சமயம் சடாயு உதவிக்கு வந்து அவள் அச்சத்தை அகற்றச் சில ஆறுதல் மொழிகள் கூறுகிறான்.

"தத்துற்று அயரேல் தால பலத்தின் ஏழும்
கொத்து ஒப்பன——
பத்திற்கும் இன்றே பனிசவது பார்த்தி என்றான்"

பனங்காய்க்குலை விழுகிற மாதிரி இவன் தலை பத்தும் தரையில் விழச் செய்வேன்—என்று சடாயு கூறுகிறான். நல்ல உவமை! பனம்பழத்தின் விழ்ச்சி பற்றிய புதிய ஒரு உவமை நயம் உன்னுவாருக்கு நல்ல உவகை தரும். இப்பனம்பழ உவமையை நமக்கு முந்து தந்தருளியவர் திருமங்கையாழ்வார். (9-1.7)

வானுளார் அவரை வலிமையால் நலியும்
மறிகடல் இலங்கையார் கோனைப்
பானுநேர் சரத்தால் பனங்கனிபோலப்
பருமுடி உதிர வில்வளைத்தோன். மேலும்—
தேனுகன்ஆவி போய்உக ஆங்குஓர்
செழுந்திரள் பனங்கனி உதிர [9-8.7]

ஆழ்வார்களின் திருவாக்கு கம்பரின் பெருவாக்காகக் கனிந்து உருகி வர, நாம் இன்பத்துக்குமேல் இன்பம் பருகுகிறோம்.

(11) ஆரண்யகாண்ட முடிவில் கவந்தன் வதைக்கப்படுகிறான். அக்கவந்தன் மெய்யறிவுற்று இராமனைப் போற்றுகிறான். எவ்வாறு?

"காண்பார்க்கும் காணப்படுபொருட்கும் கண் ஆதி,
ஆண்பாலோ, பெண்பாலோ, அப்பாலோ, இப்பாலோ?"

தெய்வம் ஆண் பெண் அலி என நிறுவ முடியாதது. அளவிட முடியாத ஒன்று என்று அறிவிக்கிறார் கம்பர். ஆழ்வார் கூறுகிறார்:—



ஆணல்லன் பெண் அல்லன், அல்லா அலியும் அல்லன்
காணலும் ஆகான் உளன்அல்லன், இல்லையல்லன்.
[திருவாய்மொழி 2-5-10]

ஆணினோடு பெண்ணுமாகி, அல்லவோடு நல்லவாய்—
ஒன்றலாத மாயையாய்—கரந்துசென்ற கள்வனே.
[திருமழிசையாழ்வார் சந்த விருத்தம் 26]

ஆழ்வார்கள் கம்பராகப் பரிணமிக்கிறார்கள். கம்பர் ஆழ்வாராகப் பக்தியில் ஆழ்ந்து பாடுகிறார்.

(12) இனிக் கிட்கிந்தா காண்டத்துக்கு வருவோம். சீதையைத் தேடப் புறப்பட்ட இராமன் சபரி கூறிய முறையே கிட்கிந்தை மலையில் சுக்கிரீவனுடன் நட்பு பூண்டு, அவன் அண்ணனாகிய வாலியை மறைந்திருந்து கொன்றான். அறத்தின் உருவாக வாலி எண்ணிய இராமன் ஆயுதம் கொண்டு, ஆயுதம் இல்லாத தன்னைக் கொன்றது வாலிக்கு மிக்க எரிச்சல் ஊட்டிற்று. சிறிதும் எதிர்பாராத நிகழ்ச்சி இது. இராமன் தன் எதிரில் வரக்கண்டதும் உள்ளம் பொங்கிப் பலவாறு வசை பாடினான்.

"பரக்கழி" என்பது பலராலும் இழிவாகக் கருதப்படும் மிகக் கீழ்த்தரமான செயல். நெல்லை மாவட்டத்தில் இச்சொல் வழக்கில் உள்ளது. சென்னையில் இக்கருத்து "சுத்தப்பொறுக்கி" என்று கூறப்படுகிறது. பெருத்த சிறுமை என்று பொருள் தரும் இச்சொல்லை வாலி இராமனுக்குச் சூட்டினான்.

"பரக்கழி இதுநீ பூண்டால் புகழை யார் பரித்தற் பாலார்?"

என்று கேட்டான். சான்றவனாகிய நீ கயவனாக மாறின், இனி யாரே சால்பு தாங்கி நிற்பர் — என்பது பொருள். இந்தப் "பரக்கழி" என்னும் மொழியைத் திருமங்கையாழ்வார் திருவாய் மொழித்துள்ளார்.

"அரக்கர்குலப் பாவை தன்னை
மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்,
எம்பனைத் தோளி பரக்கழிந்து—புகுவர் கொல்லோ" [3.7.3]

"பணைத்தோளி பரக்கழிந்து [3-7.9]

மேலும்,

"பரக்கழித்துக் குறும்பு செய்வான்ஓர் மகனைப்பெற்ற—"
[நாச்சியார்திருமொழி 12.3]

(13) வானர வீரர்கள் சீதையைத் தேடப் புறப்பட்டு வருகிற வழியில், எரியுண்டு அழிநிலையிற் கிடந்த சம்பாதியைக் கண்டார்கள். சம்பாதி வானர வீரர்களைப் பார்த்து

எல்லீரும் அவ் இராம நாமமே
சொல்வீர், அது எனக்குச் சோர்விலா
நல்சரப் பயன் நல்குமே
வல்லீரே, வாய்மை வளர்க்கும் பண்பினீர்

என்று துதிபாட வேண்டுகிறான். இதனைப் படிக்கும்போது நமக்கு

"நானும் சொன்னேன், நமரும் உரைமின் நமோ நாராயணமே
நங்கள் வினைகள் தவிர, உரைமின் நமோ நாராயணமே"

என்ற பெரியதிருமொழி [6.10.6, 9] எண்ணத்தில் எழுகிறது.

(14) இனிச் சுந்தர காண்டத்துக்கு வருவாம். சிறையில் இருக்கும் சீதை இராமனின் உருவ அழகு குண அழகுகளைப் பற்றிப் பலவாறு எண்ணினாள். அவற்றில் ஒன்று:—

மெய்த் திருப்பதம் மேவுஎன்ற போதிலும்
இத்திருத் துறந்து ஏகுஎன்ற போதிலும்
சித்திரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்.

முன்பு "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதாக" கூறப்பட்ட முகம் இப்போது "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை" முகமாகக் கூறப்பட்டது. இது வாடாத மலர் — எனக் குறித்தார் கம்பர். இக்கருத்து திருமங்கையாழ்வார் திருமொழியாகும். [2.8.7]

"ஓவிநல்லார் எழுதிய தாமரை அன்ன கண்ணும்
ஏந்து எழில் ஆகமும்—"

(15) தீய அரக்கர்கள் மத்தியில் சீதை நெறி தவறாது இராமனையே எண்ணி இருக்கிற நிலையை அனுமான் கண்டான். ஆ! இவள் அன்றோ குலமகள்! நீரில் நெருப்பில் நின்று தவம் புரிவதாற் பயன் என்? தன்னை நேர்நெறியில் நிறுத்துவதே இல்லறப் பெரிய மாண்பு! என்று வியந்தான்.

வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்
துங்குவ அருந்துவ நீக்கி நோற்பவர்
எங்குளர்!—இல்லின் மாண்புடை
மங்கையர் மனத்தவம் நவிலற்பாலதோ! [காட்சிப் படலம்]



நேர்நெறியில் அடக்கமாக வாழ்வதே பெருந்தவம் என்ற — கம்பரின் இக்கருத்தைத் திருமங்கையாழ்வார் தருகிறார். [3.2.2]

"காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால்
நுகர்ந்து; (நெடுங்காலம்) ஐந்து
தீயொடுநின்று தவஞ்செய்ய வேண்டா
திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர்"

(16) சீதையைவிட்டு அனுமான் புறப்படும் நேரத்தில், அவன் தன்னை வந்து பார்த்ததற்கு அடையாளமாகச் சீதை தனக்கும் இராமற்குமே நேர்ந்த சில செய்திகளைக் கூறி அனுப்புகிறாள். அவற்றுள் ஒன்று :—

காகம் ஒன்றை முனிவந்து, அயல் கல் எழுபுல்லால்
வேகவெம்படை விட்டது மெல்லவிரிப்பாய் [சூடாமணிப் படலம்]

இக்கதைக்கு ஆதாரம் யாது? பெரியாழ்வார் திருமொழி [3.10.6]

"சித்திர கூடத்திருப்ப, சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே இராமாவோ, நின் அபயம் என்றழைப்ப—
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததும் ஓர் அடையாளம்"

இது இராமன் சீதைக்கு அறிவிக்கும்படி அனுமானிடம் கூறியது; கம்பர் இதனைச் சீதை இராமனுக்குக் கூறிவிட்டதாக மாற்றினார்.

(17) இனி யுத்தகாண்டம் தொடங்குகிறது. வீடணன் அடைக்கலம் வேண்டிவருகிறான். வானர வீரர்கள் அவனுக்கு அடைக்கலம் அளிப்பதற்கு எதிர்ப்புச் செய்கிறார்கள். அனுமான் மட்டும் இணக்கம் அறிவித்தான். யாவர் கருத்தையும் கேட்டறிந்த இராமன் இறுதியில் அறிவிக்கிறான்:—

உடைந்தவர்க்கு உதவானுயின்,
உள்ளதொன்று ஈயானுயின்,
அடைந்தவர்க்கு அருளானுயின்,
அறம்என்னும்? ஆண்மை என்னும்?

திருமழிசைப்பிரான் சந்த விருத்தம் [92] இக்கருத்தை அறிவித்து நிற்கிறது.

"நின்தனக்கு அடைக்கலம் புகுந்த
என்னை, அஞ்சலென்ன வேண்டுமே"

(18) இராவணன் முதல்நாள் போரில் முற்றும் தோல்வியுற்றுத் தன் முடி படை துணை யாவும் இழந்து கைகளை நாற்றி, நிலத்தைக் கால்நகங்களால் கிளறி நிற்கிறான். அப்போது அவனைக் கண்ட இராமன் இரங்கி,

"ஆள், ஐயா, உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு நாளை வா"

என்று கூறிப் பரிவு காட்டினான். இராவணன் படைகள் மறைந்ததற்குப் "பெருங்காற்றில் பஞ்சு பறப்பதுபோல" என்று கூறாமல் "பூளைபோல" என்று கம்பர் உவமித்தார் ஏன்? முன்னோர் கூறிய முறை அது ஆதலின். [பெரிய திருமொழி 4.10.6]

"காற்றிடைப்பூளை கரந்தென அரந்தையுறக்
கடல் அரக்கர் தம்சேனை
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை
துறந்த கோலவில் இராமன்!"

திருமங்கையாழ்வார் கூறிய பூளைப்பூ உவமையே கம்பராலும் எடுத்தாளப்பட்டது.

இதுகாறும் ஆழ்வார்கள் வாக்கு கம்பர் வாக்காக விளக்கமுற்றதாக 19 இடங்கள் கண்டோம். இங்கெல்லாம் கம்பரை முதலில் கூறிப் பின்னர் ஆழ்வாரை அறிவித்தோம். இனித் தோசையைத் திருப்பிப்போடுவோம். ஆழ்வார்களை முதலிற்கூறி, கம்பர் அவர்களை எடுத்தாளும் விதத்தை விளக்கிச் சில கூறுவாம்.

(19) நம்மாழ்வார் திருவாய்மொழி [7-1-3]

"வேதியா......உன்திருவடிச்
சாதியா வகைநீதடுத்து...
ஆதியாகி, அகலிடம் படைத்து...
சோதிநீள் முடியாய், தொண்டனேன் மதுசூதனனே"—

இச்செய்யுளைப் படிக்கும்போது, அதன் எதுகை ஒலிநயம் கும்பகர்ணன் வதைப் படலத்தின் ஈற்றிலுள்ள,

"நீதியால் வந்ததொரு நெறியல்லால்...
சாதியால் வந்தசிறு நெறி அறியான் என்தம்பி
ஆதியாய், உனையடைந்தான்...
வேதியா இன்னம் உனக்கு அடைக்கலம் யான் வேண்டினேன்"

என்ற செய்யுளை நமக்கு நினைப்பூட்டுகின்றது.



(20) திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி (7-3-8)

"இனி எப்பாவம் வந்து எய்தும் ?—
முனியை, முத்தினை, பத்தர் நுகர்கின்றதோர்
கனியைக் காதல்செய்து இன்று கண்டுகொண்டேனே"

திருமாலைப் பக்தர்கள் நுகரும் ஒரு கனியாகக் கண்டார் ஆழ்வார். இந்தக் கனியை நனிதுய்த்து இன்புறுகின்றார் கம்பர். திருவள்ளுவர் கூறும் "கனியிருப்பக் காய்" என்னும் "கனி" அளவாக இல்லாமல், "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக்" கனிந்து உருகி அனுபவித்து இச் சொல்லை வடிக்கிறார் கம்பர். மாயா சனகப் படலத்தில், இராவணன் சீதைமுன் வந்து இச்சை மொழிகள் பேசுகிறான். அவள் நிந்திக்கிறாள். எவ்வாறு? நீ உன் திறம் பற்றி நூறு பேசுகிறாய், இராமனோடு

பூசலின் எதிர்ந்தேன் என்றாய்
போர்க்களம் புகுந்தபோது—என்
ஆசையின் கனியைக் கண்டிலை போலும் அஞ்சி"

என்று கூறுகிறாள். சீதை ஆசையின் கனியாக விளங்குகிறான் இராமன். பிஞ்சு முற்றிக் காய்; காய் முற்றிப் பழம்; பழம் பக்குவமானது கனி. அதற்குமேல் யாதும் இல்லை. அதுபோல் சீதை அவாவின் உச்சகட்டமாக நிற்கிறான் இராமன். ஆழ்வார் திருமாலைப் பக்தர்களின் கனி என்றார். கம்பர் இராமனைச் சீதையின் ஆசைக் கனியாகக் கூறினார்; கனி என்னும் சொல்லில் திளைக்கிறார் கம்பர். முதன் முதலாகச் சீதையைப் பற்றிக் குறிப்பிடும்போது; மிதிலைக் காட்சிப் படலத்தில்

"குன்றும் சுவரும் திண்கல்லும் நின்றுருகப்
பெண்கனி நின்றாள்"

என்று குறிப்பிட்டார். அஃது யாது? பெண்கனி! இந்தப் பெண்கனிக்கு ஏற்ற ஈடாகத் தோன்ற வேண்டுமே இராமன்? அவனைக் குறிப்பிடும்போது அதே மிதிலைக் காட்சிப்படலத்தில்,

"இருள்கனியும் போல்பவன் தனியும்
தானும் அத்தையலும் ஆயினன்"

என்றார். இத்தகைய ஒரு புலமை கம்பர் தவிர வேறு எப்புலவர் பெற்றார்? அவர் நயங் கண்டல்லவா உலகம் அவரைக் கவிச்சக்கரவர்த்தி என்று பாராட்டுகிறது.

கடிமணப்படலத்தில் இராமன் தனிமையில் சீதையை நினைத்துத்

"திருவே, உயிரின் கருவே, கனியே"

என்று உள்ளம் உருகுகிருன்.

சூர்ப்பநகை இராமனின் எழிலைக் கண்டு

"கனிந்த நீல நன்மலை"

என்று வியந்து நிற்கிருள். சரபங்கர் பிறப்புநீங்கு படலத்தில் இந்திரன் இராமனைக் கண்ட நிலையைக் கம்பர்

"கண்டனன் நான்மறையின் கனியை"

என்று குறிப்பிடுகிருர். இவ்வாறு உள்ளங்குளிர்ந்து பண்பாடு உயர்ந்த நிலையைக் கம்பர் 'கனி' என்று குறித்து இன்புறுகின்ருர்.

இராமன் காட்டுக்குச் சென்றதும், அவனை அழைக்க பரதன் வருகிருன். அவன் நிலை என்ன?

"கல் கனியக் கனிகின்ற துயரான்"

என்று கவிதந்தார் கம்பர்.

குகன் தன் பரிவாரங்களை அப்பால் நிறுத்தித் தனியாக வந்து இராமனைக் கண்ணுற்ருன். அந்த இடத்திற் கம்பர் கவி என்ன?

"கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தான்".

நோக்கிக் களித்தான் என்று பாடுவர் பிறர்; "கனிந்தான்" என்பது கம்பர் கவி. "கனி என்னும் சொல்லில் உள்ளம் உருகி இன்புறுகின்ருர் கம்பர்.

(21) **பொய்கையாழ்வார்**

வையம் தகளியா, வார்கடலே நெய்யாக,
வெய்யகதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.—இயற்பா 1.

**பூதத்தாழ்வார்**

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன், நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.



இவ்விரு ஆழ்வார்கள் பாடலில் திளைத்த கம்பர் வாக்கு—

பைஅணைப் பல்தலைப் பாந்தள் ஏந்திய
மொய்நிலத் தகழில், மூழங்குநீர் நெய்யில்
வெய்யவன் விளக்கமா, மேரு பொன்திரி
மைஎடுத் தொத்தது மழைத்த வானமே. (கார்காலப்படலம்)

(22) ஆழ்வார்கள் திருமாலே—கண்ணனை

"அஞ்சன வண்ணன், அஞ்சனமேனியன்
முகில் வண்ணன், கொண்டல் வண்ணன்,
கடல்வண்ணன், கார்மேனியன்,
மணிவண்ணன், மாணிக்கப் பண்டாரம்

இவ்வாறு பெயர்கள் கூறித் திளைக்கிருர்கள்.

நாச்சியார் (திருமொழி 12-4)

"கார்த்தண் முகிலும் கருவிளையும் காயா மலரும்
கமலப் பூவும் ஈர்த்திடுகின்றன என்னை"

என்று வியந்து பாடுகிருர். தொண்டரடிப்பொடியாழ்வார்

"பச்சை மாமலைபோல் மேனி, பவளவாய்,
கமலச் செங்கண் அச்சுதா—என்னும்
இச்சுவை தவிர வேறு—எச்சுவை
பெறினும் வேண்டேன்"

என்று உளம் உருகி நிற்கிருர். இவ்வாறு பல இடங்களில் ஆழ்வார்கள் கூறும் கருத்துகளைக் கம்பர் தொகுத்துத் தொகுத்து அழகிய பாமாலைகள் புனைந்துள்ளார்.

கம்பர் கற்பனைக் கடல். அவர் கருத்தில் பல நுட்பங்கள் பிறக்கின்றன. ஆழ்வார்கள் கூறிய கருஞாயிறு, அஞ்சனம், மேகம், கடல், நீலமணி யாவற்றையும் துய்த்த கம்பர் கங்கைப் படலத்தில் பாடுகிருர் :—

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறைய—
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ! இவன் அழகென்பது அழியா அழகுடையான்!

செஞ்ஞாயிறு தரும் வெப்பத்தைத் தாங்க முடியாமல் நாம் நீலக் கண்ணுடி அணிகிருேம். இராமன் "நீலமணி" "மரகதமலை" போல் இருக்கிருன். கதிரவனின் வெவ்விய ஒளி இராமன் என்னும் நீல மலை மேற்பட்டு எதிர் ஒளி வீசுகிறது. எதிர் ஒளியின் நீல நிறம் எங்கும் பரவி, வெங்கதிரோன் ஒளியை மறைக்கிறது. எங்கும் நீலமாக நிழல் பரவுகிறது. இக்கருத்துக் கொண்டே

"வெய்யோன் ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறைய"

என்றுபாடித் திளைக்கிறார் கவிச் சக்ரவர்த்தி. இராமன் உலகுக்கு நிழல் தந்து நிற்கிறான். இன்னும் இராமன் உருப்பற்றிக் கம்பர் கூறுவன சில காண்பாம்.

இராமனைக் கண்டு அனுமான் வியந்த முறை:—

" மஞ்செனத் திரண்டகோல மேனிய—மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி—நளிர் இரும்பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த கண்ணான்—"

கரிய மேகம், தேம்பாக் கஞ்சம் இங்கு குறிக்கப்பட்டன.

இராமனை முதன் முதல் சுக்கிரீவன் கண்ட நிலை:

" கண்டனன் என்ப மன்னோ கதிரவன் சிறுவன்: காமர்
குண்டலம் துறந்த கோல வதனமும் குளிர்க்கும் கண்ணும்,
புண்டரி கங்கள் பூத்து, புயல்தழீஇ, பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த மரகதக்கிரி அனையனை.

கோல வதனம், தாமரை, மேகம், திங்களின் தன்மை, மரகதக் கிரி—இங்கு குறிக்கப்பட்டன.

இராமனை வாலி கண்ணுற்ற நிலை—

" கண்ணுற்றான் வாலி நீலக் கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று, வரிவில் ஏந்தி வருவதே போலும்—"

விண்முகில் கமலம் பூத்து, அது தரையில் இறங்கி வில் ஏந்தி வருவதுபோல் கண்டான்.

கும்பகர்ணன் கண்ட இராமன்:—

கண்டனன் வதனம் வாய் கண் கை கால் எனப்
புண்டரி கத்தடம் பூத்து—பொன் சிலை—
மண்டலம் தொடர்ந்து மண் வயங்க வந்ததோர்
கொண்டலிற் பொலிதரு கோலத் தான் தனை

முகம் கண் கை வாய் கால் எல்லாம் தாமரைப் பூப்போல் பொலிவுறும்: இந்திர வில்லுடன் நீலவானம் உருக்கொண்டு பூமியிற் பொலிவுறுவது போன்ற ஒரு காட்சி.

விடணன் கண்ட இராமன் நிலை:

கார்க்கடல் கமலம் பூத்தது எனப் பொலிவானைக் கண்டான்.
படர் மழை சுமந்தகாலை, பருவ வான், அமரர் கோமான்
அடர்சிலை துறந்ததென்ன, ஆரம் தீர் மார்பினனை



கற்றை வெண்ணிலவு நீக்கி, கருணையாம் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிலுைய முழுமதி முகத்தினானை—

இராமனுக்கு முடிசூட்டு விழா. மங்கல நீராடியபின் தாமரை மலர்கள் நிறைந்த ஒரு நீலமலை போல் இராமன் தோன்றுகிறான். சீதை அம்மலையைச் சார்ந்த ஒரு மயில் போலும் காட்சியளிக்கிறாள். இக்காட்சியில் மக்கள் மெய் மறந்து களித்து நிற்கிறார்கள். கம்பர் கவிபாடுகிறார் :—

மரகத சயிலம் செந்தாமரை மலர்காடு பூத்து—
திரைகெழுகங்கை வீசும் திவலையால் நனைந்து, செய்ய
இருகுழை தொடரும் வேல்கண் மயிலொடும் இருந்த தேய்ப்ப—
பெருகிய செல்வி கண்டார் பிறப்பெனும் பிணிகள் தீர்ந்தார்.

இவ்வாறு ஆழ்வார்கள் பாடலின் சாரத்தை எல்லாம் நாம் அனுபவிக்க ஒரு நாடகமாகத் தந்தார் கம்பர். "குருகைநாதன் குரைகழல் காப்பதே" என்று கம்பர் தமது காவியத்தைத் தொடங்கி ஆழ்வார்களின் திருவாக்குகளை நிறைய அமைத்து; மரகதமலை, மயில் இரண்டையும் ஏற்றில் நிறுவிப் பிறவிப் பிணியை அறுத்து, ஆழ்வார்களின் பெரிய ஆழ்வாராக விளங்குகிறார். ஆழ்வார்களின் வாக்கு வித்து. "ஏகமுதல்" அது கம்பர் உள்ளத்தில் "முளைத்துத் திண்பணை போக்கிச் சாகை தழைத்து அரும்பி மலர்ந்து" நாம் நனி துய்க்கக் கனிந்து நிற்கிறது. பயன் காண வேண்டியது நம் கடன்.

33. "கம்பநாடர் திருமாலின் அவதாரங்களையும் லீலைகளையும் மட்டுமல்லாமல் சிவபெருமானின் அருட்செயல்களையும் லீலைகளையும் கூட சுவைபடச் சொல்லியுள்ளார்......சிவபுராணங்களிலே திருமாலைத் தாழ்த்தியும், விஷ்ணுபுராணங்களிலே சிவனைத் தாழ்த்தியும் பல செய்திகளும் கதைகளும் உண்டு. அவற்றில் ஒன்றைக்கூடத் தமது காப்பியத்தில் சேர்க்கவில்லை என்பது அவர் சைவ வைணவ ஒற்றுமைக்காகவே இராம கதையைப் படைத்தார் என்பதை உறுதிப்படுத்தும்" என்று ம. பொ. சி. தமது கட்டுரைத் தொடரின் கடைசிக் கட்டுரையில் குறிப்பிடுகிறார். கம்பன் "நாராயணனே முழுமுதற்கடவுள். பிரமன், சிவன் முதலானோர் அவனால் படைக்கப்பட்டவர்களே" என்பதைத் தன் காப்பியத்தில் நூற்றுக்கணக்கான பாடல்களில் தெளிவாகக் காட்டியிருக்கிறான். பெரும்புலவரான டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இப்பாடல்கள் பலவற்றை எடுத்துக்காட்டியிருப்பதை 31வது பாராவில் விரிவாக அச்சிட்டிருக்கிறோம். இதுபோல் 'சிவன், திருமால் பிரமன் முதலான அனைவரையும் படைத்தான்" என்று கம்பன் ஒருபாடலிலாவது

கூறியிருக்கிறன் என்று ம. பொ. சி. யால் காட்டமுடியுமா? அப்படிக் காட்டினாலொழிய, கம்பன் சைவன் என்று வாய்திறக்க வழியில்லையே. அப்படி ஒருபாடலும் இல்லாமையாலன்றோ ம. பொ. சி. யால் காட்ட முடியவில்லை. கம்பன் சிவனுக்குப் பாடியிருக்கும் பெருமைகள் எல்லாம் அவன் பரம்பொருள் என்று நிறுவ உதவாதவை. அதனாலேயே ஆழ்வார்கள் முதலான பரமவைஷ்ணவர்களாலும் சிவனுக்கு உள்ளவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை. "மாதொருபாகனாக இருப்பது, புலித்தோலாடை அணிந்திருப்பது, மழுவையும் உடுக்கையையும் கரத்தில் தாங்கியிருப்பது, நெற்றியிலும் ஒரு கண்ணைப்பெற்று முக்கண்ணனாகக் காட்சியளிப்பது, தலையில் சடையையும் அச்சடையிலே பிறைச்சந்திரனையும் கங்கையையும் தாங்கியிருப்பது, திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது வெளிப்பட்ட விஷத்தை உண்டதால் கண்டம் கறுத்திருப்பது, காளையின்மீது அமர்ந்திருப்பது, திரிபுரத்தை எரித்தது, ஆலின் கீழிருந்து நால்வருக்கு உபதேசித்தது, தக்கனுடைய யாகத்தை அழித்தது" முதலான பெருமைகளைக் கம்பன் சிவனுக்குப் பாடியிருப்பதாக ம. பொ. சி. அடுக்குவது சிவன் பரம்பொருள் என்று கம்பன் கருதினான் எனக் காட்டுமா? "படைத்தல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்வது, ஸத்வகுணத்தையே உடையவனாயிருப்பது, எவராலும் வெல்லமுடியாதவனாயிருப்பது, எங்கும் வியாபித்திருப்பது, முக்தியளிக்க வல்லவனாயிருப்பது" முதலான பரம்பொருளுக்கேயுரிய பெருமைகளில் ஒன்றைக்கூடக் கம்பன் சிவனுக்குள்ளதாகப் பாடவில்லையே. ம. பொ. சி. சிவனுக்குக் கம்பன் பாடியதாகக் கூறும் பெருமைகளையெல்லாம் ஆழ்வார்களும் சிவனுக்குப் பாடியிருக்கிறார்களே. "திருமாலுக்குப்போலே சிவனுக்கும் தாழ்வைக்கூறும் கதைகளைக் கம்பன் பாடவில்லை" என்று ம. பொ. சி. கூறுவது அப்பட்டமான பொய்யல்லவா! கடவுள் வாழ்த்துப் பாடல்களிலேயே "முற்குணத்தவரே முதலோர்" என்னும் பகுதியில் சத்துவகுணமுடைய திருமால் முதல்வனையொழிய ரஜோகுணமுடைய பிரமனும், தமோகுணமுடைய சிவனும் முதல்வர் அன்று என்று கூறுவதன்மூலம் சிவனுடைய தாழ்வைத் தெளிவாக உணர்த்தியிருக்கிறானே கம்பன். "மழுவாளிக் கன்றளித்த ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாருமுளரையா" [ஆரணிய-விராதன்வதை-59] என்று சிவன் திருமாலிடம் பிச்சைபெற்றுச் சாபம் நீங்கிய கதையை வெளிப்படையாகவே பாடியிருக்கிறானே. "சந்திரனை வென்றானும் உருத்திரனைச் சாய்த்தானும், துந்து எனும் தானவனைச் சுடுசரத்தால் துணித்தானும், வந்த குலத்திடை வந்த ரகு வென்பான் வரிசிலையால், இந்திரனைவென்று திசை இருநான்கும்



செருவென்றான்" [பால-குலமுறை 11] என்னும் பாடலில் இராமனுடைய முன்னோர்களில் ஒருவன் சிவனைச் சண்டையில் சாய்த்தவன் என்று பாடியதன்மூலம் சிவனுடைய தாழ்வைக்காட்டியிருக்கிறானே. அப்படியிருக்க "கம்பன் ஓரிடத்தில் கூடச் சிவனைக்குறைத்துக் கூறவில்லை" என்று ம. பொ. சி. எழுதுவது பெரும் பொய்யல்லவா. இங்கு நாம் எடுத்துக்காட்டியுள்ள பாடல்களிலிருந்து கம்பன் வைணவனே என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்குமே. கம்பன் சைவனல்ல, வைணவனே எனும் உண்மையை ம. பொ. சி. போன்ற தீவிர சைவர்களின் நெஞ்சமும் இசைந்து தீரவேண்டும்படி அடுத்த பாராவில் பற்பல கம்பராமாயணப் பாடல்களைக் காட்டுவோம் காண்மின்.

34. (1) பாலகாண்டம். திருவவதாரப் படலத்தில் தேவர்கள் அனைவரும் இராவணனால் துன்புற்றுச் சிவனிடம் சென்று முறையிட்ட போது, "படுபொருள் உணர்ந்த அப்பரமன் யாம் இனி அடுகிலம் என மறுத்து அவரோடேகினன்" [7] என்று 'என்னால் இராவணாதியரோடு போரிட இயலாது' என்று கையை விரித்துவிட்டு அவர்களோடுசிவன் பிரமனிடம் சென்றதாகக் கம்பன் கூறினான். 'அடுகிலம்' என்ற பதத்தால் சிவனது சக்தியின்மையைக் கம்பன் உணர்த்தினான். இது சிவனுக்குத் தாழ்வில்லையா? அடுத்த பாடலில் "கறைமிடற்றிறைவனும் கடவுளோர்களும் மறைமுதற்கிழவனை வந்து நண்ணலும்" என்று தன்னால் முடியாத காரியத்திற்குப் பிரமன் பரிகாரம் காணலாம் என்று சிவன் தேவர்களோடு பிரமனிடம் சென்றதாகவும் அதற்கடுத்த பாடலில் "நான்முகக் கடவுளை அடிதொழுது அமரர் கண்டகர் இடிநிகர் வினையமது இயம்பினரோ" எனறு நான்முகனைச் சிவன் அடிவணங்கி முறையிட்டதாகவும் கூறுகையால், கம்பன் பிரமனைக் காட்டிலும் சிவனைத் தாழ்ந்தவனாகக் கருதினான் என விளங்கவில்லையா? அதையொட்டியுள்ள "இருபதுகரம் தலை ஈரைந்து என்னும் அத்திருவிலி வலிக்கொரு செயலின்று எங்களால், கருமுகில் என வரும் கருணையங்கடல் பொருது இடர் தணிக்கின் உண்டு எனும் புணர்ப்பினர்" (11) என்னும் பாடலில், "பிரமன் சிவன் முதலான எல்லா தேவர்களும் இராவணனை அழிக்கத் தங்களால் இயலாது, திருமாலே அவனை அழிக்கமுடியும்" என்று உணர்ந்ததாகக் கூறுகையாலும், திருமால் கருடன்மேல் எழுந்தருளியதும், "எழுந்தனர் கறைமிடற்றிறையும், தாமரைச்செழுந்த விசுகந்த அத்தேவும் சென்றெதிர் விழுந்தனர் அடிமிசைவிண்ணுளோரொடும் தொழுந்தொறும் தொழுந்தொறும் களிதுளங்குவார்" (14) என்று சிவனும், பிரமனும், மற்ற தேவர்களும் திருமாலைப் பலகால் அடி

யில் விழ்ந்து தொழுதனர் எனக் கூறுகையாலும், "சூடினர் முறைமுறை துளவத்தாள்மலர்" [15] என்று திருமாலின் திருவடிகளிலுள்ள துளவமாலையைத் தலையில் சூடியதாகச் சொல்லுகையாலும், மேல் வரும் பாடல்களில் (16-19) சிவன் முதலிய அனைவரும் திருமாலிடம் தமது சக்தியின்மையை விண்ணப்பித்ததாக விளம்புகையாலும், "என்றனர் இடர்உழந்து இறைஞ்சி ஏத்தலும், மன்றலர் துளவினன் வருந்தல் வஞ்சகர்தம் தலை அறுத்து இடர்தணிப்பென் தாரணிக்கு" [20] என்னும் பாடலில் வணங்கித் துதித்த அவர்கள் அனைவர்க்கும் திருமால் அபயமளித்ததாகப் பாடுகையாலும், திருமாலின் ஆணையைப் பின்சென்று மற்ற தேவர்கள் வானரங்களாக அவதரித்தபோது, "புராரி மற்று யானே வாதசேய் எனப் புகன்றுன்" [28] என்று சிவனும் "அநுமன் எனது அம்சமே" எனவுரைத்ததாக முழங்குகை யாலும், அடுத்த பாடலில் பிரமனும், சிவனும் அவ்வாறே வானரராகப் பிறந்ததாகத் தெரிவிக்கையாலும், கம்பன் திருமாலையே தேவர் தலைவனை பரம்பொருளாகவும், பிரமன் சிவன் முதலான தேவர்களை அவனைவிடத் தாழ்ந்த ஜீவர்களாகவுமே கருதினுன் எனக் கையிலங்கு கனியாகவும், வெள்ளிடைமலையாகவும் விளங்கவில்லையா? கம்பன் "பரகதி உணர்ந்தவர்க்கு உதவுபண்ணவன்" [12] "அருள்தரு கமலக்கண்ணன்" [29] என்று திருமாலை மோக்ஷமளிப்பவனுகவும், "பொருள்தரும் இருவர்" [29] என்று பிரமனும், சிவனும் அர்த்த, புருஷார்த்தத்தையே அளிக்கவல்லவராகவும் பாடியிருப்பதும், "முப் பரம்பொருளிற்குள் முதல்வன்" [137] என்று இப்படலத்திலும், கடி மணப்படலத்திலும் [69] பறைசாற்றியிருப்பதும் இதை வலியுறுத்த வில்லையா? வேள்விப்படலத்தில் "எங்கள் நான்மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால்"[16] என்று நாலுவேதங்களுக்கும், சிவன் முதலிய எல்லா தேவர்களுடைய அறி விற்கும் எட்டாதவன் செங்கண்மால் என்று பாடுகையால் இது மேலும் வலியுறுத்தப்படவில்லையா? அகலிகைப்படலத்தில் "உலகம் யாவையும் படைத்தளித்துண்டுமிழ் ஒருவன்" [7] "பூதநாயகன் புவிமகள் நாயகன் பொருவில் வேதநாயகன்" [16] என்று திருமாலை முழுமுதல்வனுகப்பாடி, 19, 20 பாடல்களில், "தஞ்சமில்லை நின் சரணமே சரண்" என்ற பிரமன், சிவன் முதலானுர்க்கு "அஞ்ச லஞ்சலென்றுரைத்தனன் உலகெலாமளந்தோன்" என்று முழங்கி யிருப்பதொன்றே போதுமே கம்பன் வைணவன் எனக் காட்ட. பரசராமப்படலத்தில் "திரிபுரம் எரித்த தேவன் வரிசிலை இற்றதாக மற்றவன் முனிந்துமன்னே" [29] என்று திருமால் கோபித்ததால் சிவனுடைய வில் இற்றுப்போயிற்று என்று கூறுகையாலும், அடுத்த பாடலில் "வெற்றிகாட்டிய கரியமாலும்" [30] என்று திருமால் வென்ற தாகப் பாடுகையாலும் கம்பன் திருமாலைவிடச் சிவன் தாழ்ந்தவன் என்றே கருதினுன் எனத் தெரியவில்லையா?



(2) அயோத்தியாகாண்டம். கடவுள் வாழ்த்துச் செய்யுள் "கூனும் சிறிய கோத்தாயும் கொடுமையிழைப்பக் கோல் துறந்து கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண்காத்த கழல் வேந்தை" எனும் பிற்பாதியால் அயோத்தியாகாண்டம் தொடங்கிக் காவியம் முழுவதின் சுருக்கத்தைக் கூறுகிறது. "வானின்றிழிந்து" என்னும் முற்பாதியின் முதற்பதம் ஸ்ரீமந்நாராயணன் பரமபதத்திலிருந்து அவதரித்து வந்தே இவ்வருஞ்செயலைச் செய்தான் எனக் கூறுவதன் மூலம் பாலகாண்டத்தின் சுருக்கத்தைக் கூறுகிறது. "வரம்பு இகந்த மா பூதத்தின் வைப்பு எங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப" [எல்லையற்ற பஞ்ச பூதங்களின் விகாரமான உலகெங்கும் — உடல்மிசை உயிரெனவும், உயிரும் அதன் குணமான ஞானம்போலவும் உள்ளேயும், வெளி யிலேயும் வியாபித்து விளங்குகிறுன் என்று (மறைகள்) கூறும்] எனும் எஞ்சியபகுதி "உடல் மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்துளன்" [திருவாய்மொழி 1-1-7] எனும் நம்மாழ்வார் அருளிய தமிழ்மறையையும், "யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூ யதேऽபி வா। அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:॥" [தை-நா 11] [இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவு மான அனைத்தினுள்ளும் நாராயணன் வியாபித்து விளங்குகிறுன்] என்ற வடமொழி மறையையும் நினைவுறுத்துவதன் மூலம் கம்பன் உபயவேதாந்தியான பரமவைஷ்ணவனே எனக் காட்டுகிறது. "சுடரறிவருநிலை விண்" [திருவாய்மொழி 1-1-8] என்று மூலப்ர க்ருதியை நம்மாழ்வார் 'விண்' என்று குறித்ததையொட்டி, அதையே 'வான்' என்று கம்பன் குறிக்கிறுன் என்றும், "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதம்" என்று மூலப்ரக்ருதியினின்று தோன்றி எல்லை யற்றுப் பரந்துகிடக்கும் பஞ்சபூதங்களைக் குறிக்கிறுன் என்றும் கூறுவதுண்டு. மந்திரப்படலத்தில் கோசலை அரங்கநாதனை அடைந்து இராமனுக்கு அருளவேண்டும் என்று பிரார்த்தித்ததைக் கூறும் போது "மேவி மென்மலராள் நிலமாதெனும் தேவிமாரொடும் தேவர்கள் யாவர்க்கும் ஆவியும் அறிவும் முதலாயவன்" [93] என்று பிரமன் சிவன் முதலான எல்லா தேவர்களுக்கும் ஸ்ரீ பூமிநாயகனை அத்திருமாலே உயிராகவும் அறிவு கொடுத்தவனுகவும் இருப்பவன் என்று பாடியது திருமாலின் பரத்துவத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. அடுத்தபாடலில் "உலகு யாவையும் மன்வயிற்றின் அடக்கிய மாயனைத் தன் வயிற்றில் அடக்கும் தவத்தினுள்" [94] என்று கோசலையைக் கூறும்போது திருமால் பிரளயகாலத்தில் உலகனைத்தையும் தன்

வயிற்றில் அடக்கியவன் என்று குறிப்பிட்டது இதை வலியுறுத்துகிறது. கங்கைப் படலத்தில் "பங்கயத்தயன் பண்டு தன் பாதத்தின் அங்கையில் தருகங்கையில் ஆடினன்" [16] என்னும் பாடலில் பிரமன் திரிவிக்கிரமனான திருமாலின் திருவடிகளை விளக்கிய நீரே கங்கை நதியானது என்னும் வரலாற்றை உணர்த்தி, அடுத்துள்ளதோர் பாடலில் " கங்கைவார் சடைக்கற்றையன் " [18] என்று அந்த கங்கையையே சிவன் தன் தலையில் தரித்து நிற்கிறான் என்று கூறியதிலிருந்து, திருமாலின் திருவடியை விளக்கிய பிரமனையும், அந்த ஸ்ரீபாததீர்த்தத்தைத் தலையிலே தரித்த சிவனையும், கம்பன் பரம்பொருளாகக் கருதியிருக்கமுடியாது; திருமால் ஒருவனையே பரம்பொருளாக அறுதியிட்டிருக்கமுடியும் என்று தெளிவாக விளங்குகிறது. சித்திரகூடப்படலம் முதற்பாடலில் "நினையும் தேவர்க்கும் நமக்கும் ஒத்து ஒருநெறி நின்ற அனகன் அங்கணன் ஆயிரம் பெயருடை அமலன்" என்று இராமனைக அவதரித்த செந்தாமரைக் கண்ணனான திருமால் நம்மைப்போன்ற மனிதர்களுக்கும் நாம் கொண்டாடும் தேவர்களுக்கும் ஒரே நெறியாய் (உபாயமாய்) இருப்பவன் என்று பாடியிருப்பதிலிருந்து கம்பன் பரமவைஷ்ணவன் என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். பள்ளியடைப்படலத்தில் பரதன் சபதத்தில் ராமனுக்குத் தான் தீங்கிழைத்திருந்தால் " தழைத்த தண் துளவினேன் தலைவன் அல்லன் என்று அழைத்தவன் " [99] அடையும் தீக்கதிக்குச் செல்வதாக சபதம் செய்வதாகப் பாடுவதிலிருந்து கம்பன் பரமவைஷ்ணவன் என்றும் " 'அரியதிகன்' என்று உரைப்போர் அறிவிலோர்; அவர்களுக்குப் பரகதி சென்றடைய முடியாது" என்று கிஷ்கிந்தாகாண்டத்தில் 'அரனதிகன்' என்ற பாடலில் கருதியிருக்கமுடியாது என்றும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இது பற்றி அப்பாடல் வரும்போது மேலே விரித்துரைப்போம். ஆற்றுப் படலத்தில் "விமலன் உந்தியில் பூத்தவன் முதலிய புவியுள் தோன்றினர்" [16] என்று பாடியிருப்பதிலிருந்து தன் உந்தித் தாமரையில் பிரமனைப் படைத்த திருமாலே பரம்பொருள் என்றும், அவனிடமிருந்து படிப்படியாக உண்டான பிரமன் சிவன் முதலானவர்கள் பரம்பொருள் அல்லர் என்றுமே கருதினன் கம்பன் எனத் தெற்றென விளங்குகிறது. குகப்படலத்தில் "மூன்றுலகமீன்றுனை முன்னீன்றுனை" [65] என்று உலகைப் படைத்த பிரமனைப்படைத்த திருமாலையே ராமனைகப் பாடியிருப்பது இவ்விஷயத்தை வலியுறுத்துவதோடு இராமன் மும்மூர்த்திகளின் அவதாரம் என்பது பொருந்தாப் பேச்சே என்றும் நிலைநாட்டுகிறது. இது பற்றியும் பிறகு விரித்துரைப்போம். கிளைகண்டு நீங்கு படலத்தில் "புண்டரீகத் தனி முதற்கும்



போக்கரு விண்டுவின் உலகிடை விளங்கினனரோ" (11) என்று உந்தித் தாமரையில் பிறந்த முதல்வனான பிரமனுக்கும் விஷ்ணுலோகம் அடைதற்கரிது என்று பாடியிருப்பதும் முற்கூறிய விஷயங்களை வலியுறுத்துவதோடு கம்பன் பரமவைஷ்ணவன் என்றும் காட்டித்தருகிறது. மேலே "கிளரகன் புனலுள்நின்று அரி ஒர் கேழலாய் இளையெனும் திருவினை ஏந்தினனரோ, உளைவரும் பெருமையோர் எயிற்றின் உட்புரை, வளரிளம் பிறையிடை மறுவில் தோன்றவே" [119] என்று வராகப்பெருமான் பிரளயகாலத்தில் பூமிதேவியை தந்தத்தால் தூக்கியெடுத்த பெருமையைப் பேசுகிறான். "ஊழி ஆழிக்கண் இரு நிலம் உருகெழு கேழலாய் மருப்பின் உழுதோய்" [பரிபாடல் 3-23, 24] "வைவால் மருப்பின் களிறு மணன் அயர்பு புள்ளி நிலனும் புரைபடல் அரிது" [பரிபாடல் 2.33, 34] முதலான இடங்களில் சங்ககாலத் தமிழர்கள் பிரளய காலத்தில் திருமால் ஆதிவராகக் கோலமெடுத்ததைப் பாடியிருப்பது போலே கம்பனும் பாடியிருப்பதிலிருந்து சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என எளிதில் உணரலாம். திருமாலின் அவதாரங்களைச் சங்ககாலத் தமிழர்போலே பல இடங்களில் பேசியிருக்கும் கம்பன் பிற்காலத்தில் அவ்வவதாரங்களுக்கு ஏற்பட்ட தாழ்வுகள் எதையும் ஆதரிக்காததிலிருந்து அவன் பரமவைஷ்ணவன் என விளங்குகிறது. அடுத்த பாடலில் "ஆதிய அமைதியின் இறுதி ஐம்பெரும் பூதமும் வெளியொழிந்து எவையும் புக்கபின் நாதன் அவ்வகன் புனல் நல்கி நண்ணரும் சோதியாம் தன்மையில் துயிலல் மேவினன்" [120] என்று பிரளயகாலத்தில் திருமால் அனைத்தையு முண்டு பிரளயஜலத்தில் சயனித்திருப்பதைப் பாடினன். "ஏற்ற இத்தன்மையின் அமரர்க்கு இன்னமுது ஊற்றுடைக் கடல்வணன் உந்தி உந்திய நூற்றிதழ்க் கமலத்தின் தொய்தின் யாவையும் தோற்றுவித் துதவிட முதல்வன் தோன்றினன்" [21] என்று ஸ்ருஷ்டிகாலத்தில் திருமாலுடைய உந்தித்தாமரையில் அனைத்தையும் படைக்கைக்காக நான்முகன் படைக்கப்பட்டான் என்று கூறுவதும் முற்கூறிய விஷயங்களை வலியுறுத்துகிறது. இவ்வண்ணமாக, சிவன்—பிரமன், திருமால் முதலான அனைவரையும் படைத்தானென்றே காத்தானென்றே அழித்தானென்றே எங்கும் கூறாததிலிருந்து கவிச் சக்கரவர்த்தி கம்பன் பரமவைஷ்ணவன் என்பது சிறுவர்க்கும் விளங்கும்.

(3) **ஆரணியகாண்டம்.** கடவுள் வாழ்த்துப்பாடலில் பின்னிரண்டு அடிகளிலும் "வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் - தெரி

கிலா ஆதிதேவர் அவர் எம் அறிவினுக்கறிவரோ" என்று ரிஞ்சவின் எனப்படும் பிரமன் முதலான அனைவரும் அறியமாட்டாத ஆதிதேவர் என்று பிரமனையும் படைத்த திருமாலைக் குறிக்கையாலே மும்மூர்த்திகளும் ஒன்று என்றோ, ஒத்தவர் என்றோ கம்பன் கருதியிருக்க இடமேயில்லை என விளங்குகிறது. முதல்படலமான விராதன் வதைப்படலத்தில், விராதன் துதியில் திருமாலே பரம்பொருள் என்பதைக் கம்பன் பல பாடல்களில் காட்டுகிறான். துதியின் முதல் பாடலில் "வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தன உன் பாதங்கள்" [48] என்று திருமால் திரிவிக்கிரமனாக உலகளந்த திருவடிகளை வேதங்கள் அனைத்தும் போற்றுகின்றன என்று காட்டுகிறான். அடுத்தபாடலில் "கடுத்தகராம் கதுவ நிமிர் கையெடுத்து மெய்கலங்கி, உடுத்த திசையனைத்தினும் சென்று ஒலிகொள்ள உறு துயரால், அடுத்த பெரும் தனிமூலத்து அரும் பரமே பரமே என்று, எடுத்தொரு வாரண மழைப்ப நீயோ அன்று ஏனென்றாய்" [49] என்று கஜேந்திரன் ஆதிமூலமே என்று கூப்பிட்டபோது அவனைக் காக்கத் திருமாலே ஓடிவந்ததிலிருந்து அவனே பரம்பொருள் எனக் காட்டுகிறான். அடுத்த பாடலில் எவருடைய துணையையும் எதிர்பாராமல் அனைத்துலகிலும் அவதரித்து ரக்ஷிப்பவன் தாமரைக் கண்ணனாகிற திருமாலே என முழங்குகிறான். அதற்கடுத்த பாடலில் இப்படி இவ்வுலகில் அவன் அவதரிப்பது அவனுக்கு ஒரு விளையாட்டு எனக் காட்டுகிறான். அடுத்தபாடலில் "தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில், இனி நின்ற முதல்தேவர் என்கொண்டு என்செய்வாரே" [51] என்று திருமாலே ஆதிகாரணனாகையாலே அவனையொழிந்த தேவர்களால் எதுவும் தமது வலிமையால் செய்யமுடியாது என முழங்கினான். "ஓயாத மலரயனே முதலாக உளராகி மாயாத வானவர்க்கும் மற்றொழிந்த மன்னுயிர்க்கும், நீயாகில் முதல்தாதை நெறிமுறையால் ஈன்றெடுத்த, தாயாவார் யாவரே தருமத்தின் தனிமூர்த்தி" [52] என்று பிரமன் முதலான அனைவர்க்கும் திருமாலே தந்தையும் தாயுமாவார் என உணர்த்தினான். அடுத்தபாடலில் "நீயாதி பரம்பரமும் நின்னவே உலகங்கள், ஆயாத சமயமும் நின்னடியவே அயலில்லை, தீயாரின் ஒளித்தியால் வெளிநின்றால் தீங்குண்டோ? வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ" [54] என்று திருமாலே பரம்பொருள் என்றும், இதையறியாமல் மற்ற தெய்வங்களைப் பரம்பொருளாகக்கூறும் சமயங்களும் அந்தர்யாமியான அவனையே சொல்லுகின்றன என்றும், தீயவர்களுக்கு அவன் இப்படித் தன்னை மறைத்துக் கொள்கிறான் என்றும் கூறும் கம்பனை சைவன் என்று சொல்ல ம. பொ. சிக்கு எப்படி மனம்வந்ததோ தெரியவில்லை. "தாய்



தன்னையறியாத கன்றில்லை; தன்கன்றை, யாயுமறியும் உலகின் தாயாகின் ஐய!, நீயறிதி எப்பொருளும் அவையுன்னை நிலையறியா, மாயை இது என்கொலோ வாராதே வரவல்லாய்" [55] என்ற அடுத்த பாடலில் "இப்படி உனது குழந்தைகள் உன்னையறியாமலிருப்பது நீ விளைத்த மயக்கத்தாலேயே" என்று கூறினான். "வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே" [6.10.9] என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் பின்பகுதியை இப்பாட்டில் கம்பன் தழுவியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. "பன்னலாமென்றுலகம் பலபலவும் நினையுமால், உன்னலாற் பெருந்தெய்வம் உயர்ந்துளோர் ஒழுக்கன்றே, அன்னவூர்தியை முதலா அந்தணர் மாட்டருந்தெய்வம், நின்னலாவில்லாமை நெறிநின்றார் நினையாரோ" [56] என்ற அடுத்த பாட்டில் இவ்வுலகிலுள்ள பாமரமக்கள் பல பல தெய்வங்களை உபாஸிக்கிறார்கள் என்றும், ஆனால் உயர்ந்துள்ளவர்கள் உன்னைத் தவிர வேறெவரையும் உபாஸிக்கத்தக்க தெய்வமாகக் கொள்ளமாட்டார்கள் என்றும், பிரமன் முதலாக அனைத்தந்தணர்களுக்கும் செல்வமான வேதத்தில் (மாடு - செல்வம்) நீயே அருந்தெய்வமாக முழங்கப்படுகிறாய் என்பது நன்னெறி நிற்பவர்களின் கொள்கை என்றும் திருமால் ஒருவனே வேதமுதல்வன் எனப் பாடியிருப்பதிலிருந்து கம்பன் மிக உறுதியான வைஷ்ணவன் என்று விளங்குகிறது. இவனைச் சைவன் என்று கூசாமல் எழுதுவதற்கு ம. பொ. சியின் மனம் எப்படி இடம் கொடுத்தது? அடுத்த பாடலில் "பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர் இருவினையுமுடையார்போல் அருந்தவம் நின்றியற்றுவார், திருவுறையுமணிமார்ப! நினக்கென்னை செயற்பால, ஒருவினையுமில்லார்போலுறங்குதியால் உறங்காதாய்" [57] என்று (ஆள் கூட்டம், அரசாங்கபலம் முதலானவற்றில்) ஒப்பில்லாத (சைவம், சாக்தம் முதலான) சமயங்கள் பரம்பொருளாகக் கூறுகின்ற (சிவன் சக்தி முதலான) தெய்வங்கள் புண்யபாபங்களையுடைய முனிவர்களைப்போலே சடைமுடி முதலானவற்றை தரித்து அருந்தவம் புரிகின்றார்கள் என்றும், ஆனால் திருமாலுக்கு வினைகள் இல்லாமையால் யோகநித்ரை புரிகின்றானென்றும், ஆனால் அப்போதும் உலகைக் காப்பதற்காகச் சிந்தை செய்கின்றானாகையால் அவன் உறங்காதவனே என்றும் பாடியிருப்பதிலிருந்து கம்பன் சிவன் முதலான தெய்வங்களைப் புண்யபாபங்களுடைய ஜீவர்களாகவே கருதினான் என்றும், திருமாலொருவனையே புண்யபாபங்களற்ற பரம்பொருளாகக் கருதினான் என்றும் தெளிவாக விளங்குகிறது. "இருமை வினையுமில ஏத்துமவை" [பரிபாடல் 13.48] "மறுபிறப்பறுக்கும் மாசில்சேவடி மணிதிகழ்

உருபின் மாஅயோயே!" [பரி.3.23] என்றும் திருமாலைத் துதிக்கின்றவர்களுக்கே புண்யபாபங்களும் அதனுலுண்டாகும் மறுபிறப்பும் கிடையாதென்று முழங்கியிருக்கும் சங்ககாலத் தமிழர்களின் சமயமே கம்பனின் சமயம் என்று தெளிவாகிறது. "அரவாகிச் சுமத்தியால் அயிலெயிற்றினேந்துதியால், ஒருவாயின் விழுங்குதியால் ஓரடியாலொளித்தியால், திருவான நிலமகளை இஃதறிந்தால் சீறுளோ, மருவாரும் துழாயலங்கல் மணிமார்பின் வைகுவாள்" [58] என்னும் அடுத்த பாடலில் "கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்ப்புக் கிடந்திடும், தன்னுள் கரக்குமுமிழும், தடப்பெருந்தோளாரத் தழுவும் பாரென்னும் மடந்தையை, மால்செய்கின்ற மாலார் காண்பாரே" [திருவாய் 2.8.7] என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தில் நம்மாழ்வார் அருளியதை முற்றும் தழுவி, கவிநயம் தோற்றப் பாடுவதன்மூலம், இவ்வுலகிற்குப் பலவகையினும் உதவும் பரம்பொருள் திருமாலே என்று காட்டுகிறன் கம்பன். "மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீ விதித்த மன்னுயிர்கள், உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறையுண்டோ, வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த, ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாருமுளரையா" [59] என்ற அடுத்த பாடலில் "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே, கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின்" [திருவாய் 4-10.4] என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழியை அடியொற்றி, 'பிச்சை வாங்கிய சிவன் ஜீவனே; அவனுக்குப் பிச்சையளித்து ரக்ஷித்த திருமாலே பரம்பொருள்' என்று நிலைநாட்டினன். இத்தகைய பாடல்களுக்கு என்ன கதி என்பதுபற்றி ம. பொ. சி. அவசியம் பதில்சொல்லித் தீரவேண்டும். பதில்சொல்லும் நேர்மை உள்ளதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். "அன்னமாய் அருமறைகள் அறைந்தாய் நீ அவையுன்னை, முன்னம் ஆரோதுவித்தார் எல்லாரும் முடிந்தாரோ, பின்னமாயொன்றுதல் பிரிந்தேயோ பிரியாதோ, என்னமாமாயமிவை ஏனமாய் மண்ணிடந்தாய்" [60] என்னும் அடுத்த பாடலில் அன்னமாயிருந்து பிரமன் முதலானர்க்கு அருமறைகளை ஓதுவித்த திருமாலுக்கு அவற்றை ஓதுவித்தவர் எவருமில்லை என்று உணர்த்துவதன்மூலம் திருமால் ஒருவனே பரம்பொருள் என அறுதியிட்டான் கம்பன். "ஒப்பு இறையும் பெறலரிய ஒருவா! முன் உவந்துறையும், அப்புறையுள் துறந்து அடியேன் அருந்தவத்தால் அணுகுதலால், இப்பிறவிக்கடல் கடந்தேன் இனிப்பிறவேன் இருவினையும், துப்புறழும் நீர்த்த சுடர்த் திருவடியால் துடைத்தாய் நீ" [61] என்னும் துதியின் கடைசிப் பாடலில் திருப்பாற்கடலிலிருந்து திருமாலே



இராமனுக அவதரித்தான் என்றும், அவனுடைய திருவடிபட்டதால் தன்னுடைய இருவினைகளும், அதனுல்வரும் பிறவித்துன்பமும் ஒழிந்தன என்றும் விராதனைப் பாடவைத்து 3ம் பரிபாடலின் தொடக்கத்திலும் [பரிபாடல் 13.48]லும் இருவினைகளையும் ஒழித்து மறுபிறப்பறுக்கும் திருவடிகளையுடையவன் திருமாலே என்று பாடிய சங்ககாலத் தமிழர்கள் பின்பற்றிய வைஷ்ணவ சமயமே தனக்கும் மதமாகும் என்று தெளிவுறக் காட்டினன். இத்தகைய கம்பனை — பொதுவாழ்வில் பொறுப்புமிக்க பதவிகளை வகிக்கும் ஒரு தலைவர் சைவன் என்று நவித்துகூற, அதை மறுக்கும் பொறுப்பு நமக்கு ஏற்பட்டு விட்டதே! சரபங்கர் பிறப்புநீங்கு படலத்தில் இந்திரன் சரபங்கரிடம் வந்து 'நான்முகன் தன் உலகத்தை உனக்கு அளிக்க விரும்புகிறுன்' என்று கூற, சரபங்கர் தான் அங்கு செல்ல விரும்பவில்லை என்கிறுர். அதற்குக் காரணத்தை 'பிரமன் உலகம் அல்பமானது; சிற்பங்களைப் போல் அழியக்கூடியது' என்று கூறுகிறுர். இதிலிருந்து நான்முகனுடைய உலகம் வீட்டுலகமன்று என்றும், நான்முகன் ஜீவனே என்றும் விளங்குகிறது. இந்த சமயத்தில் இராமன் முதலியவர்கள் சரபங்கருடைய ஆச்சிரமத்துக்கு வருகிறுர்கள். இந்திரன் இராமனைக் காண்கிறுன், பிறகு தொழுகின்றுன், பிறகு துதிக்கின்றுன். துதிக்கத் தொடங்குவதற்கு முந்திய பாடலில் "நல் அறத்தின் செம் நெறியின் உய்த்தும் திருஅளித்தும் வீடு அளித்தும் சிங்காமைத் தங்கள் கவசமாய் ஆருயிராய்க் கண்ணும் மெய்த்தவமாய்க் கடை இலா ஞானமாய்க் காப்பானைக் காணு அவசமாய்ச் சிந்தை அழிந்து அயலே நின்றுன்" [26] என்று பரம்பொருளுக்கு உள்ள பெருமைகளை எல்லாம் இராமனுக்குக் கூறி, அவனைக் கண்டு இந்திரன் தன் வயமிழந்து அருகில் நின்று துதிக்கலுற்றுன் என்கிறுன் கம்பன். துதியின் முதற்பாடலில் "வேதநெறி முறையின் தேடி ஆய்ந்த உணர்வின் உணர்வே" என்றும், மற்றும் பரம்பொருளுக்குரிய பல பெருமைகளையும் பேசி, "இப்பெருமைகளையுடைய திருமாலாகிற நீ முன்பு எங்களுக்கு அளித்த வரத்தின்படி அவதரித்திருக்கிருயே! நாங்களும் கால்வைக்கக்கூசும் இந்நிலத்தில் உன் திருவடித்தாமரைகள் நிற்கின்றனவே!" என்று வியப்புறுகின்றுன். இரண்டாவது பாடலிலும் "கருங்கடலில் கண்வளராய்" என்று திருமாலாகிய இராமனை விளித்து, அவனுக்குப் பரம்பொருளுக்குள்ள பெருமைகளை எல்லாம் பேசுகிறுன். அடுத்தபாடலில் "நாழி நவைநீர் உலகெலாம் ஆக நளினத்து நீ தந்த நான்முகனுர் தாமே ஊழி பல பலவும் நின்று அளந்தால் ஒன்றும் உலவாப் பெருங்குணத்த உத்தமனே! மேல்நாள் தாழி தரை ஆகத் தண் தயிர் நீராகத் தடவரையே மத்து ஆகத் தாமரைக்

கைநோவ ஆழிகடைந்து அமுதம் எங்களுக்கே ஈந்தாய்! அவுணர்கள் தாம் நின் அடிமை அல்லாமை உண்டோ'' என்று உலகைப்படைப்பதற்காக நான்முகனைப் படைத்தவன் திருமாலே என்றும், அவனும் அளக்கமுடியாத குணங்களையுடையவன் திருமாலென்றும், கடல் கடைந்து அமுதமளித்தவன் அவனே என்றும் பாடுகிறான். அடுத்த பாடலிலும் பரம்பொருளுக்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்கே பேசுகிறான். துதியின் கடைசிப் பாடலில் ''வல்லை வரம்பு இல்லாத மாயவினை தன்னால் மயங்கினரோடு எய்தி மதிமயங்கி மேல்நாள், அல்லை இறைவன் நீ ஆதி எனப் பேதுற்று அலமருவேம், முன்னை அறப்பயன் உண்டாக எல்லை வலயங்கள் நின்னுழை என்று அந்நாள் எரியோனைத் தீண்டி எழுவர் என நின்ற தொல்லை முதல் முனிவர் சூளுற்றபோதே தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ? எந்தாய்!'' என்று ''எல்லா தேவர்களுக்கும் தலைவன் நீயே ஆவாயா, அல்லவா என்று மயங்கும் நாங்கள் தெளியும்படியாக சப்தரிஷிகள் அக்னி சாட்சியாக 'திருமாலே அனைத்துலகுக்கும் தலைவன்' என்று சத்தியம் செய்தபோதே பரம்பொருள் யார் என்ற ஐயம் உன்னால் தொலைக்கப் பட்டதல்லவோ'' என்று முழங்குவதன்மூலம் திருமாலே பரம்பொருள் என்று நிலைநாட்டினான் கம்பன். இவ்வளவு தெளிவாகக் கம்பன் பல இடங்களில் பேசியிருக்கும்போது ம. பொ. சி. கம்பன் சைவனே என்றும், மும்மூர்த்திகளும் இராமனாக அவதரித்தனர் என்றும் எழுதுவது தருமா என்பதை நடுநிலைநிற்போர் ஆராய்வாராக. இந்திரன் இவ்வண்ணமாகத் துதிசெய்து சென்றபின் இராமன் முதலானோர் சரபங்கரை அடைகின்றார்கள். முனிவன் ''போயின இருவினை புகலுறு விதியால் மேயினை இனி ஒரு வினை இலை விறலோய்!'' [40] என்று இராமனைக் கண்டதால் தனது இருவினைகளும் நீங்கி விட்டன என்று கூறி, அடுத்த பாடலில் இந்திரன் வந்து தனக்கு நான்முகனுலகைத் தந்தானென்றும், அதைத் தான் விரும்பவில்லை என்றும், அழிவில்லாத உயர்பதத்தையே அடையப்போவதாகவும் கூறி இராமனைக் கண்டுகொண்டே அக்னியில்மூழ்கி உடலைவிட்டான். இப்படலத்தின் கடைசிப் பாடலில் சரபங்கர் அடைந்த பயனைக் குறிக்கும்போது, ''அண்டமும் அகிலமும் அறிவரும் நெறியால், உண்டவன் ஒரு பெயர் உணர்குநர் உறுபேறு, எண் தவநெடிது எனின் இறுதியில் அவனைக், கண்டவர் உறுபொருள் கருதுவது எளிதோ'' [44] என்று அனைத்துலகையுமுண்ட திருமாலே இராமன் என்றும், அவனுடைய ஒரு திருநாமத்தை நினைப்பவர் எண்ண அரிய பயனைப் பெறுவார்கள் என்றால், அவனை நேரே கண்டு உடலைவிட்டவர் அடையும் பயனின் பெருமையைக் கூறமுடியுமோ என்றும் கவிக் கூற்றாகப் படலத்தை முடிப்பதிலிருந்து திருமாலே இராமன் என்றும் அவனுடைய உலகமே வீட்டுலகம் என்றும் கவிச்சக்கரவர்த்தியாம் கம்பன் கருதினான் எனத் தெளிவாகிறது. இக்கம்பனை சைவன் என்றும், இந்த இராமனை மும்மூர்த்திகளின் அவதாரம் என்றும் கூறுவதே!



அகத்தியப் படலத்தில் அகத்திய முனிவன் இராமன் வரப்போகிறதை எண்ணி மகிழும் பாடலில்,

''இரைத்த மறை நான்கினொடு இயைந்த பிற யாவும்
நிரைத்த நெடு ஞான நிமிர்கல்லில் நெடுநாள் இட்டு
அரைத்தும் அயனும், அறியாத பொருள், நேர் நின்று
உரைத்து உதவுமால் எனும் உணர்ச்சியின் உவப்பான்'' [43]

*['முறைப்படுத்தி வளர்த்த நெடிய ஞானமாகிய உயர்ந்த அம்மியில் மிக்கொலிக்கின்ற வேதங்கள் நான்கினையும் அவற்றோடு இயைபுடைய பிறநூல்கள் எல்லாவற்றையும் இட்டு நெடுநாள் அரைத்தும் பிரமனும் அறியவியலாத பரம்பொருள் நம் கண்ணெதிரே நின்று உரையாடி அருளை உதவப்போகின்றது' என்கின்ற வியப்புணர்ச்சியால் மகிழ்கின்றவன்] என்று இராமனைப் பிரமனும் அறியமுடியாத பரம்பொருள் என்று அகத்தியன் வாயிலாக உரைக்கிறான் கம்பன். இந்தக் கம்பன் இராமனைப் பிரமனின் அவதாரமாகக் கருதியிருக்கமுடியுமா என்பதை நடுநிலையாளர் சிந்திப்பாராக. இப்படலத்திலேயே அகத்தியன் இராமனுக்கு விஷ்ணுதநுஸ்ஸைக் கொடுக்கும்போது,

''விழுமியது சொற்றனை; இவ் வில் இது இவண் மேல் நாள்
முழுமுதல்வன் வைத்துளது; மூவுலகும், யானும்
வழிபட இருப்பது; இது தன்னை வடி வாளிக்
குழு; வழு இல் புட்டிலொடு கோடி என நல்கி'' [55]

*[சிறந்த கருத்தினைச் சொன்னாய், இந்த வில், முழு முதல்வனாகிய திருமால் முற்காலத்து இங்கு வைத்தது; முன்னுலகத்தாரும் யானும் வழிபாடு செய்ய இருப்பது; இவ்வில்லை அம்பின் திரள் குறைதல் அறியாத புட்டிலோடு கொள்வாயாக' என்று சொல்லிக்கொடுத்து] என்று விஷ்ணுவை 'முழுமுதல்வன்' என்று குறிப்பிட்டான் அகத்தியன். வால்மீகத்திலும் இவ்விடத்தில் அகத்தியன் கொடுத்தது விஷ்ணு தநுஸ் என்றே குறிப்பிடப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் இப்பாடலின் குறிப்புரையில் ''முழுமுதல்வன் என்றது திருமாலை, தேவர்க்கும் அவுணர்க்கும் போர் நிகழ்ந்த காலத்தில் திருமால் கருடன் மேலூர்ந்து இவ்வில்லை ஏந்தி அவுணரை வென்றான் என்பதும், அவ்வில்லையே அகத்தியன் இராமனுக்குக் கொடுத்தான் என்பதும், ''எறுழ்வலிப் பொருவில்தோள் அவுணரோ டமரர்பண் டிகல்செய்காலத், துறுதிறற் கலுழன்மீ தொருவனின் றமர்செய்தா னுடையவில்லும், தெறுசினத் தவர்கள் மூப் புரநெருப் புறவுருத் தெய்தவம்பும், குறுமுனிப் பெயரினன் நிறைதவர்க் கிறைதரக் கொண்டுநின்றான்' [யுத்த-மந்திரப் 87] என்ற

* 61, 62, 69, பக்கங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் உள்ளபடி பொழிப்புரை தரப்பெற்றுள்ளது.

விடணன் கூற்றல் விளங்கும்'' என்று எழுதியிருப்பதிலிருந்து கம்பனும் இது விஷ்ணுவின் வில்லே என்று, யுத்தகாண்டம் மந்திரப் படலத்தில் வலியுறுத்தியிருக்கிறுன் என்றும் விளங்குகிறது. திரு. T. K. சிதம்பரநாத முதலியார் 'கல்கி'யில் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் இங்கு 'முழுமுதல்வன்' என்ற தொடருக்கு 'சிவன்' என்று பொருள் எழுதினர். அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாம் அதை மறுத்து 'இது விஷ்ணுவின் வில்லே' என்று நிலைநாட்டி எழுதிய கடிதம் கல்கியில் பிரசுரிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தை டி. கே. சியாலும் மறுக்க இயலவில்லை. இப் பாடலிலிருந்தும் கம்பன் வைஷ்ணவனே என விளங்குகிறது. சூர்ப்பணகைப் படலத்தில்,

'' 'சிந்தையின் உறைபவற்கு உருவம் தீர்ந்ததால்;
இந்திரற்கு ஆயிரம் நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண் ஓர் மூன்று; நான்குதோள
உந்தியின் உலகு அளித்தாற்கு' என்று உன்னுவாள்'' [12]

[(அச்சூர்ப்பணகை) ''யாவரது மனத்திலும் தங்குபவனுகிய மன்மதனுக்கு வடிவம் ஒழிந்தது; தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்கள் (உண்டு); சிவபிரானுக்கு முற்பட்ட மலர்போலுங் கண்கள் மூன்று (உண்டு); (தனது) திருவுந்தியினின்று உலகங்களை உண்டாக்கியருளின திருமாலுக்கு நான்கு தோள்கள் (உண்டு)'' என்று நினைப்பாள்.] என்னும் பாடலிலிருந்து 'திருமாலே தனது உந்தித் தாமரையில் பிரமனைப் படைத்து உலகனைத்தையும் தோற்றுவித்தான்' என்னும் மறைமுடிவு சூர்ப்பணகை போன்ற அரக்கிக்கும் பிரஸித்தமாயிருந்தது எனக் கம்பன் கருதினுன் என விளங்குகிறது. இவன் வைஷ்ணவன் என்பதை எவரேனும் மறுக்கமுடியுமோ? கரன்வதைப் படலத்தில்,

''தமிலப் போர் வல்அரக்கர்க்குச் சுட்டினுள்,
அமலத் தொல் பெயர் ஆயிரத்து ஆழியான்
நிமலப்பாதம் நினைவின் இருந்தஅக்
கமலக் கண்ணனைக் கையினில் காட்டினுள்'' [15]

[குற்றம் அற்ற பழமையான ஆயிரம் பெயர்களையும் சக்கரப்படையினையும் உடைய திருமாலின் குறையில்லாத திருவடிகளை நினைவிற் கொண்டு இருந்த, தாமரை மலர்போலும் கண்களையுடைய அவ்விராமனைப் பேராரவாரத்தோடு போர்புரிதலில் வல்லவரான கரன் வீரர்க்குச் சூர்ப்பணகை (தன்) கையாற் சுட்டிக்காட்டினுள்] என்னும் பாடலில் அண்ணுமலைப் பல்கலைப்பதிப்பில் குறிப்புரையில் '' 'அமலத் தொல் பெயராயிரத் தாழியான்' என்றது இராமனுடைய குலதெய்வமான அரங்கநகரப்பனை; 'கோதறு தவத்துத் தன்குலத்துளோர் தொழும் ஆதியஞ்சோதியை அடிவணங்கினுன்' [1294] என்றதும்



நோக்கத்தகும்'' என்று எழுதியிருப்பதிலிருந்து இராமனின் குலதெய்வமான திருமால் அரங்கநகரப்பனே என்பதே கம்பனின் கருத்தெனத் தெளிவுற விளங்குகிறது. (அரங்கன் திருவரங்கத்தில் எழுந்தருளுவதற்கு முன்னமே) காவிரிக்கரையில் அரங்கனைப் பாடாததிலிருந்து கம்பன் சைவனே என விளங்குகிறது என்று எழுதிய ம. பொ. சியைக்கண்டு அறிவாளிகள் பரிதாபப்படுவார்களேயொழியக் கோபப்படமாட்டார்கள். அப்படலத்திலேயே கரன் வெகுண்டு வருவதைக் கூறும்போது,

''அங்கு அரக்கர் அவிந்து ஒழிந்தார்! எனப்
பொங்கு அரத்தம் விழி வழிபோந்து உக
வெங்கரப் பெயரோன் வெகுண்டான்; விடைச்
சங்கரற்கும் தடுப்பருந் தன்மை யான்'' [22]

['அங்கே அரக்கர் மாண்டொழிந்தனர்' என்று [சூர்ப்பணகை] கூற, காளையை வாகனமாக உடைய உருத்திரனுலும் தடுத்தற்கரிய தன்மையினையுடைய கொடிய கரன் என்னும் பெயருடைய அரக்கன், கண்ணினின்று குருதி பொங்கிவந்து சிந்தச் சினந்தான்] என்னும் பாடலில் ''ஏறூரும் இறையோனுன சங்கரனுலும் கரனைத் தடுக்க முடியாது'' என்னும் கவிக்கூற்றிலிருந்து கம்பன் சிவனைப் பரம் பொருளாகக் கருதியிருக்கவே முடியாது என விளங்குகிறது. இவ் விடத்தில் பல்கலைக்கழகப் பதிப்பின் குறிப்புரையில் ''விடை - காளை; சங்கரற்கும் என்பதனுள்'கு' உருபுமயக்கம். 'சங்கரற்குந் தடுப்பருந் தன்மையான்' என்றது, அழித்தற்கடவுளான உருத்திரமூர்த்தியாலும் தடுத்தற்கரிய தன்மையுடையான் என்று கரனுடைய பேராற்றல் கூறியவாறு. உம்மை உயர்வு சிறப்பு'' என்று எழுதியிருப்பதிலிருந்தும் இது தெளிவாகிறது. கம்பன் சைவனுயிருந்தால் இப்படி எழுதுவானு என்பதை ம. பொ. சி. நடுநிலைநின்று ஆராய்ந்து தம் தவறை உணரவேண்டும். அப்படலத்திலேயே,

''கண்டுநின்று, கருத்து உணர்ந்தான் என,
அண்டர் நாதன் தடக் கையின், அத்துணை,
பண்டுபோர் மழுவாளியைப் பண்பிலுல்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன்'' [178]

என்னும் பாடலில் இராமன் வருணனிடமிருந்து பெற்ற வில் மழுவாளியாகிற சிவனைப் போரிலே வெற்றிகொண்டதும், பின்பு மழுவாளியாகிற பரசுராமனிடமிருந்து பெற்றுக்கொண்டதுமாகும் என்று கூறுவதன்மூலம் சிவனைக்காட்டிலும் விஷ்ணுவின் பெருமையை, பரசுராமப்படலத்தில் விளக்கப்பெற்றதை, இங்கும் வலியுறுத்தித் தான் வைணவனே என உறுதிப்படுத்துகிறுன் கம்பன். மாரீசன் வதைப் படலத்தில் சூர்ப்பணகை ஸீதையை ராவணனுக்கு வர்ணிக்கும்போது,

''என்வயின் உற்ற குற்றம்
யாவர்க்கும் எழுத ஒண்ணுத
தன்மையன் இராமனேடும்
தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள்,
வேய்வயின் மென்தோள் கொண்டாள்,
பொன்வயின் மேனிகொண்டாள்,
பொருட்டினல் புகுந்தது என்றுள்'' [67]

என்னும் பாடலில் சூர்ப்பணகையின் வாயிலாக 'தாமரை தவிரப் போந்தாள்' என்று ஸீதையை இலக்குமியின் அவதாரமாகக் குறிப்பிடுகிருன் கம்பன். இவ்வண்ணமாக ஸ்ரீதேவியின் அவதாரமாகப் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிருன். கலைமகள் மலைமகள் அவதாரமாக எங்குமே குறிப்பிட்டதில்லை. இராமனை மும்மூர்த்திகளின் அவதாரமெனக் கருதியிருந்தால், கம்பன் ஸீதையை அலைமகள் கலைமகள் மலைமகள் மூவருடைய அவதாரமாக ஓரிடத்திலாவது கூறியிருக்கவேண்டும். அப்படிக் கூருமல் அலைமகள் அவதாரமே எனக் கூறுகிறபடியால், இராமனை மும்மூர்த்திகளின் அவதாரமாகக்கொண்டால் கற்பினுக்கு அரசியான ஸீதையின் கற்பிற்கு ஊறு ஏற்படும். ஆகையால் கம்பன் இராமனை மும்மூர்த்திகளின் அவதாரமாகக் கருதியிருக்கவே முடியாது என விளங்கும். அப்படலத்திலேயே,

'' 'பகையுடை அரக்கர் என்றும், பலர் என்றும் பயிலும் மாயம்
மிகையுடைத்து என்றும், பூண்ட விரதத்தை விடுதும் என்றும்,
நகையுடைத்து ஆகுமன்றே ஆதலின் நன்று இது' என்னு,
தகையுடைத் தம்பிக்கு, அந்நாள் சதுமுகன் தாதை
சொன்னுன் '' [235]

என்னும் பாடலில் இராமனைச் ''சதுமுகன் தாதை'' என்று குறிப்பிடுவதால் இராமனை நான்முகனின் அவதாரமாகக் கருதியிருக்க முடியாது என்றும், நான்முகற்குத் தந்தையான திருமாலின் அவதாரமே இராமன் என்றே கருதியிருக்கமுடியும் என்றும் விளங்குகிறது.

''நீட்டினன், உலகம் மூன்றும் நின்று எடுத்து அளந்த பாதம்,
மீட்டும் தான் நீட்டற்கு, அம்மா! வேறும் ஓர் அண்டம்
உண்டோ'' [242]

என்னும் பாடலில் இராமனைத் திரிவிக்கிரமனுகக் காட்டியிருப்பதும்,

''அக்கணத்தினில், ஐயனும் வெய்யதன்
சக்கரத்தின் தகைவு அரிது ஆயது ஓர்,
செக்கர்மேனிப் பகழி செலுத்தினன்—
'புக்கதேயம் புக்கு இன் உயிர் போக்கு' என்னு'' [246]

என்னும் பாடலில் இராமனைச் சக்கரமேந்திய திருமாலாகக் காட்டியிருப்பதும் இராமன் திருமாலின் அவதாரமே என்றே கம்பன் கருதினுன் என்று வலியுறுத்துகின்றன. இப்படிப் பல பாடல்கள் உள.



சடாயு உயிர்நீத்தபடலத்தில் இராவணன் சந்நியாசி வேடங்கொண்டு சீதையிடம் வருதலைக் குறிக்கும்போது,

''முளைவரித்தண்டு ஒரு மூன்றும் முப்பகைத்
தளையரித் தவத்தவர் வடிவும் தாங்கினுன்'' [20] என்றும்,

''தாமரைக் கண்ணெடு ஏர்தவத்தின் மாலையன்
ஆமையின் இருக்கையன் வளர்ந்த ஆக்கையன்
நாமநூல் மார்பினன் நணுகினனரோ
தாமனத் தருந்தி இருந்த சூழல்வாய்'' [23] என்றும்

திரிதண்டத்தையும் பூணூலையும் தாமரைமணிமாலைகளையும் கொண்ட வைணவ சந்நியாசிகளின் வேடத்திலேயே வந்தான் என்கிருன் கம்பன். சீதையை நம்பவைப்பதற்காக உண்மைச் சந்நியாசியின் வேடத்தைக்கொண்டு வந்ததைக் கூறுகையாலே, கம்பன் வைணவ சந்நியாசிகளையே உண்மைச் சந்நியாசிகளாகக் கருதும் வைணவன் என விளங்குகிறது.

''நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய''

என்று வைணவ சந்நியாசிகளின் அடையாளங்களையே சந்நியாசியின் இலக்கணமாக வகுத்த தொல்காப்பியரின் சங்ககாலத்தமிழர் சமயமே கம்பனின் சமயம் என்றும் தெளிவாகிறது. ''மாத்திரி தண்டு'' [34] என்று திரிதண்டத்தைப் பெருமைமிக்கதாகவும்,

''அனகமாநெறி படர் அடிகள்! நும்மலால்
நினைவதோர் தெய்வம் வேறிலாத நெஞ்சினன் சனகன்'' [39]

என்று வைணவ சந்நியாச நெறியை 'அனகமாநெறி'என்றும், சனகனை 'வைணவ சந்நியாசிகளைத் தவிர வேறு தெய்வத்தை அறியாதவன்' என்றும் குறிப்பிடும் கம்பனைச் சைவன் என்று ஒரு பிரமுகர் எழுதுவதே! அப்படலத்திலேயே மேலே சடாயு இராவணனைக் குறித்துக் கூறும் பாடல்களில்,

''முத்தேவரில் மூலமுதற்பொருளாம்
அத்தேவர் இம்மானிடர் ஆதலினல்
எத்தேவரொடு எண்ணுவது எண்ணமிலாப்
பித்தேறினையாதல் பிழைத்தனையால்'' [100] என்று

''மும்மூர்த்திகளில் மூலமுதற்பொருளாக எல்லாச் சாத்திரங்களும் முழங்கும் திருமாலே இராமனுக அவதரித்தவன்; அவனுக்கு வேறு எந்த தேவரையும் உவமையாக்கவொண்ணுது'' என்று முழங்குகை

10

யாலே, கம்பன் திருமாலின் பரத்துவத்தைத் தெளிவுற உணர்ந்தவன் என்றும், அவன் இராமனை மும்மூர்த்திகளின் அவதாரமாகக் கருதியிருக்கவே முடியாது என்றும் வெள்ளிடை மலையாக விளங்குகிறது. அடுத்த பாடலில்,

''புரம் பற்றிய போர் விடையோன் அருளால்
வரம் பெற்றவும் மற்றுள விஞ்சைகளும்
உரம் பெற்றன ஆவன உண்மையினேன்
சரம் பற்றிய சாபம் விடுந்தனையே'' [101] என்று

''மும்மூர்த்திகளில் மற்றொருவனான சிவன் இராவணனுக்கு அளித்த வரங்களெல்லாம் இராமன் சரம்விடும் வரையிலேயே நிற்கும்'' என்று கூறுவதிலிருந்து கம்பன் சிவனைப் பரம்பொருளாகக் கருதியிருக்கவே முடியாது என விளங்குகிறது. சங்கரன் கொடுத்த வாளால் சடாயு வெட்டுண்டு வீழ்ந்தபின்பு சடாயுவின் மன நிலையைக் குறிக்கும் பாடலொன்றில்,

''பஞ்சனை பாம்பணையாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே இராமனுதலால்
வெஞ்சின அரக்கனால் வெல்லற்பாலனோ
வஞ்சனை இழைத்தனன் கள்ளமாயையால்'' [142]

என்று பாம்பணைப் பள்ளிசேர்ந்த அஞ்சனவண்ணனை திருமாலே இராமன் என்று ஏகாரமிட்டுக் கூறுகையால், கம்பன் இராமனை மும்மூர்த்திகளின் அவதாரம் என்று கனவிலும் கருதியிருக்க இடமில்லை என்று விளங்குகிறது. அப்படலத்திலேயே இராமன் சீதையைக் காணாமல் துன்புற்றபோது உலகத்திலுண்டான குழப்பத்தைக் கூறும் பாடலொன்றில்,

''நீலமேனி நன்னெடியவன் மனநிலை திரிய
மூலகாரணத்தவனெடு முடிவுற முற்றும்
காலமாமெனக் கடையிடுகணிக்கரும் பொருள்கள்
மேல கீழுற கீழன மேலுறும் வேலை'' [162]

என்று திருமாலே மூலகாரணனென்றும், பிரளயகாலத்தில் அனைத்தையும் தன்னுள் கொண்டவன் என்றும் குறிப்பதிலிருந்து கம்பன் வைணவர்களில் முன்நிற்பவன் என்று விளங்குகிறது. அப்படலத்திலேயே ''திருவின் நாயகன்'' [178] என்று இராமனைக் குறிப்பதிலிருந்தும் கம்பன் இராமனைத் திருமாலின் அவதாரமாகவே கருதினன் என்று விளங்குகிறது. அப்படலத்திலேயே சடாயு இராமனுக்குத் தேறுதல் கூறும் பாடல் ஒன்றில்,



''இலக்க முப்புரங்களை எய்தவில்லியார்
தலைக்கலத்திரந்தது தவத்தின்பாலதோ'' [195]

என்று சிவன் பிரமனின் சாபத்தால் தன்கையில் ஒட்டிக்கொண்ட கபாலத்திலே இரந்துண்டதைக் குறிப்பிடுகையால், கம்பன் 'சிவனும் ஓர் சீவன்' என்றே கருதினன் எனத்தெளிவாகிறது. அப்படலத்திலேயே சடாயு வீடடைதலைக்குறிக்கும்போது,

''சீதங்கொள் மலருளோனும் தேவரும் என்பதென்னே
வேதங்கள் காண்கிலாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணில் பார்த்தான் படிவங்கொள் நெடியபஞ்ச
பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம்புக்கான்'' [215]

என்று ''பிரமனும் மற்ற தேவர்களாலும் வேதங்களாலும் காண முடியாதவன் இராமன். அவனுடைய பாதங்களைக் கண்ணால்கண்டு உயிர்விட்ட சடாயு பிரளயகாலத்திலும் அழியாத பரமபதத்தை அடைந்தான்'' எனக் கம்பன் குறிப்பதிலிருந்து பிரமன் சிவன் முதலான எல்லாத் தேவர்களும் சீவர்களே என்றும், திருமால் ஒருவனே பரம்பொருள் என்றும், அவனுடைய உலகமே அழியாத வீட்டுலகம் என்றும் கூறும் வைணவ மதத்தைப் பின்பற்றியவனே கவிச்சக்கரவர்த்தி என விளங்குகிறது. கவந்தன் படலத்தில் உள்ள கவந்தன் துதியைத் தொடங்குவதற்கு முந்திய கவிக்கூற்றில் ''விண்ணின் நின்றனன் விரிஞ்சனே முதலினர் யார்க்கும் கண்ணில் நின்றவன்'' [41] என்று இராமபிரானைப் பிரமன் முதலிய அனைவருக்கும் கண்ணில் நின்றவன் என்று குறிப்பிடுகிறான் கம்பன். இதிலிருந்து பிரமனையும் படைத்த திருமாலே இராமன் என்பதையும் வலியுறுத்துகிறான். மும்மூர்த்திகளின் அவதாரம் இராமன் என்னும் கொள்கையை வெடிவைத்துத் தகர்க்கும் நூற்றுக்கணக்கான பாடல்களில் இதுவும் ஒன்றாகும். துதியில் முதல் பாடலில்,

''ஈன்றவனோ எப்பொருளும் எல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனோ தேவர் தவத்தின் தனிப்பயனோ
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி இருவினையேன் சாபத்தினிடர் துடைத்தாய்'' [42]

என்று மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமாக இராமனைக் குறித்திருப்பதிலிருந்து — பரமபதத்திலுள்ள நாராயணனே பிரமனைப் படைத்துப் படைப்புத் தொழிலைச் செய்யும்படி நியமித்து அவனுக்கு அந்தர்யாமியாயிருந்து அச்செயலை நடத்திவைக்கிறான் என்றும், 'விஷ்ணு' எனப்படும் திருமாலாகத்தானே அவதரித்துக் காத்தல் தொழிலைச்செய்கின்றான் என்றும், உருத்திரனைப்

படைப்பித்து ஸம்ஹாரத்தொழிலைச் செய்யும்படி நியமித்து அவனுக்கு அந்தர்யாமியாய்நின்று அச்செயலை நடத்திவைக்கின்றான் என்றும் விளங்குகிறது. "மூலமும் நடுவும் ஈறும்" என்று தொடங்கும் சுந்தரகாண்டப் பாடலிலும் இக்கருத்தாலேயே "சூலம் திகிரி சங்கு கரகம்" ஆகியவற்றைத் திருமாலுடையவையாகவும், ஆலமும், மலரும், வெள்ளிப்பொருப்பும் அவனுடைய இருப்பிடங்களே என்றும் கூறுகிறான் கம்பன். இப்படிக்கொள்ளாவிட்டால் பிரமனையும் சிவனையும் திருமாலைக் காட்டிலும், இராமபிரானைக் காட்டிலும் வேறு பட்டவர்களாகவும், தாழ்ந்தவர்களாகவும் காட்டும் நூற்றுக்கணக்கான பாடல்கள் பொருந்தமாட்டா. இப்படி மூன்று கவடாய் முளைத்தெழுந்தவன் திருமாலே என்பதை அடுத்த பாடலில்,

"மூலமே இல்லா முதல்வனே, நீ முயலும்
கோலமே யார்க்கும் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ, ஆவின் அடையோ, அடைகிடந்த
பாலனோ ஆதிப்பரனோ பகராயே" [43]

என்று ஆலிலைக்கண்ணனே இவன் என்று காட்டுவதன்மூலம் தெளிவுபடுத்துகிறான் கம்பன். அடுத்த பாடலில்,

"காண்பார்க்கும் காணப்படுபொருட்கும் கண்ணாகிப்
பூண்பாய்போல் நிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
மாண்பால் உலகை வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ" [44]

என்று உலகத்தையெல்லாம் தன் வயிற்றில் ஒடுக்கிய திருமாலே இராமன் என்று காட்டுவதோடு "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன் காணலுமாகான்" என்னும் நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை அடியொற்றுகிறான் கம்பன். இதுபோல் ஆழ்வார்களின் பாசுரங்களை நூற்றுக்கணக்கான இடங்களில் கம்பன் தழுவியிருக்கின்றான். நூல்விரிவிற்கஞ்சி அதனைத்தையும் எடுக்கின்றிலோம். "ஆதிப்பிரமனும் நீ" என்னும் அடுத்தபாடலிலும் பிரமன் முதலான எல்லாத் தேவர்களுக்கும் அந்தர்யாமி திருமாலே என்பதை வலியுறுத்துகிறான் கம்பன். அடுத்த பாடலில் இதயக்கமலத்தில் இத்திருமாலே உறைகின்றான் என்று காட்டி, அடுத்தபாடலில் வேள்விகளால் வழிபடப்படுபவன் அவனே என்று உணர்த்தி, அண்டங்களெல்லாம் நீரில் முளைத்தெழும் நீர்க்குமிழிகள்போலே அவனிடமே தோன்றுகின்றன என்று விளக்கி, அதற்கடுத்தபாடலில் 'வேதத்தால் சொல்லப்படுபவன் அவனே' என்று தெரிவித்து, அடுத்தபாடலில் "எனக்குப் பிறவி மயக்கத்தை நீக்கி, துன்பக்கடலில்நின்றும்



என்னைக் கரையேற்றிய உன் கருணைக்கு என்னிடம் என்ன நன்மையுள்ளது?" என்று வியந்து தன் துதியை முடிக்கின்றான் கவந்தன். கவந்தன் துதியிலும் திருமாலின் பரத்துவமே கம்பனால் நிலைநாட்டப் பட்டுள்ளது என்பது வெளிப்படை.

(4) கிட்கிந்தாகாண்டம். இதில் கடவுள் வாழ்த்துப்பாடலில்—ஆரண்யகாண்டக் கடவுள் வாழ்த்தில் "வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா ஆதிதேவர் அவர் எம் அறிவினுக்கு அறிவரோ" என்று பாடியதுபோலவே "உணர்வினுக்கு உணர்வுமாயினாய்" என்று பாடுகையாலே, இதுவும் பிரமனைப்படைத்த திருமாலைப் பற்றியதே என விளக்குகிறது. முதலாவதான பம்பாநதிப்படலத்தில் இலக்குவன் இராமனை மாலைக்கடன்களைச் செய்யும்படி வேண்டுகின்ற பாடலில்,

"ஆண்டு, அவ்வள்ளலை, அன்பு எனும் ஆர் அணி
பூண்ட தம்பி 'பொழுது கழிந்ததால்
ஈண்டு இரும்புனல் தோய்ந்து உன் இசை என
நீண்டவன் கழல்தாழ் நெடியோய்!' என்றான்" [35]

என்று இராமனின் புகழைப்போலே உலகெங்கும் நீண்டு தாவிய திருமாலின் திருவடிகளைத் தொழும்படி கூறுவதாகச் சொல்லுகையாலே, கம்பனின் சமயம் வைணவமே என விளங்குகிறது. அடுத்ததான அனுமப்படலத்தில் இராமன் வாயிலாக அனுமனைப் புகழும்போது,

"இல்லாத உலகத்தெங்கும் ஈங்கு இவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொல் இச்சொல்லின்செல்வன்
வில்ஆர்தோள் இளையவீர! விரிஞ்சனோ விடைவல்லானோ" [20]

என்னும் பாடலில் அடியவனான அனுமன் திருமாலுடைய அடியவர்களான பிரமனோ அல்லது சிவனோ ஆகமுடியுமே தவிர, திருமாலாக முடியாது என்பதை 'விரிஞ்சனோ விடைவல்லானோ' என்னும் பகுதியால் உணர்த்துகின்றான். அடுத்ததான நட்புக்கோட்படலத்தின் இரண்டாம் பாடலில் "வாலியைக் கொல்லும் காலன் வந்தான்" என்று இராமனைக் கண்டு அனுமன் கூத்தாடியதைக் குறிக்கும்போது, "ஆலம் உண்டவனின் நின்று அருநடம் புரிகுவான்" என்று சிவனைப் போலே கூத்தாடினான் என்கிறான் கம்பன். "புராரி மற்று யானே வாதசேய் எனப்புகன்றான்" என்று பாலகாண்டம் திருஅவதாரப் படலத்தில் 'சிவனே அனுமனாகத் தோன்றியவன்' எனக்கூறியதை யொட்டி அனுமனுக்குச் சிவனை உவமையிடுகிறான். அனுமனைச் சிவனாகக் கம்பன் காட்டும் இத்தகைய பாடல்கள் கம்பன் சிவனைப்

பரம்பொருளாகக் கிருதியவனல்லன் என வலியுறுத்தும். அதே படலத்தில்,

"தேறினன் அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர்அன்றே
மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடராகி மன்னோ
ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள்ஆதி
வேறு உள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றோ!" [13]

என்று திருமாலே 'அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர்' என்று குறித்து, அவனே மானிடவுருக்கொண்டு வந்தான் என்று காட்டி, 'சிவன், பிரமன் முதலான பரம்பொருள் அல்லாத தேவர்களை இராமன் அவதரித்தபின்பு மானுடம் வென்றது' என்று காட்டுகிறான் கம்பன். இவன் பரமவைணவன் என்பதற்கு வேறொரு பாடலும் சான்று வேண்டுமோ? இருப்பினும் மற்றும் பற்பல பாடல்களைச் சோம்பாது காட்டுவோம் காண்மின். அப்படலத்திலேயே இராமன் வாலியின் அநீதிச்செயலைக்கேட்டு வெகுண்டதைக் கூறும்போது,

"பொய்யிலாதவன் வரன்முறை இம்மொழி புகல
ஐயன் ஆயிரம் பெயருடை அமலர்க்கும் அமலன்
வையம் நுங்கிய வாய் இதழ் துடித்தது மலர்க்கண்
செய்யதாமரை ஆம்பல் அம்போதெனச் சிவந்த" [72]

என்று, ஆயிரம்பேருடையவனும், அமலர்க்கும் அமலனும், வையமுண்டபெருவாயனும், தாமரைக்கண்ணனுமான திருமாலே இராமன் எனக்காட்டினான் கம்பன். அடுத்தபாடலில்,

"திறத்து மாமறை அயனொடு ஐம்முகன் பிறர்தேடிப்
புறத்து அகத்து உணரரிய தன் பொன்னடிக்கமலம்
உறச்சிவப்ப இத்தரைமிசை உறல் அறமாக்கல்
மறத்தை வீட்டுதல் அன்றியே பிறிது மற்றுண்டோ" [73]

என்று "பிரமனும் ஐந்து முகங்களையுடைய சிவனும் மற்ற தேவர்களும் காண இயலாத தன் திருவடித்தாமரைகள் சிவக்கும்படியாக இப்பூமியிலே திருமால் அவதரித்தது அறத்தை நிலைநிறுத்தவும், மறத்தை அழிக்கவுமேயன்றோ" என்று கூறினான் கம்பன். பிரமனும் சிவனும் தேடிக்காணமுடியாதவன் இராமன் என்று கூறியிருக்கும் கம்பனைச் சைவன் என்று கூறுவதும், இவ்விராமனை மும்மூர்த்திகளின் அவதாரம் என்று கூறுவதும் கலியின் கூற்று என்றல்லால் வேறு சொல்லாவது உண்டோ? மிகத் தெளிவாகப் பரதத்துவ நிர்ணயம் செய்திருக்கும் இப்பாடலைச் சில பதிப்புகளில் எடுத்துவிட்டார்கள். இதுவும் கலியின் கொடுமையேயாம். இப்பாடலை எடுத்தவர்கள் இதைவிடத் தெளிவாகக் கம்பன் திருமாலின் பரத்துவத்தைப்



பாடியிருக்கும் நூற்றுக்கணக்கான பாடல்களுக்கு என்ன பதில் கூறுகிறார்கள் என்பது உலகுக்குத் தெரிய வேண்டும். அடுத்தபடியாக அனுமன் சுக்கிரீவனுக்கு இராமன் யார் என்று கூறும் மூன்று பாடல்கள் மிகத் தெளிவாக உள்ளன.

"சங்கு சக்கரக் குறி உள தடக்கையில் தாளில்,
எங்கு இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை,
செங்கண் விற்கரத்து இராமன் அத்திரு நெடுமாலே
இங்கு உதித்தனன் ஈண்டு அறம் நிறுத்துதற்கு இன்னும்" [79]

என்பது அவற்றில் முதற்பாடல். இதில் திருவடிகளிலும், திருக்கைகளிலும் சங்குசக்கரக் குறி இருப்பதையும், திருமேனியில் மஹா புருஷ லக்ஷணம் நிறைந்திருப்பதையும், செந்தாமரைக் கண்ணையும் கொண்டு இராமன் அத்திரு நெடுமாலே என அனுமன் வாயிலாக ஏகாரமிட்டுக் கூறுகிறான் கம்பன். 'மும்மூர்த்திகளும் இராமனாக அவதரித்தனர்' என்னும் கூற்று பெரும் பொய்யே என்று அம்பலப்படுத்தும் நூற்றுக்கணக்கான பாடல்களில் இஃது ஒன்றாகும். அடுத்தபாடலில்

"செறுக்கும் வண்திறல் திரிபுரம் தீ எழச் சினவிக்
கறுக்கும் வெஞ்சினக்காலன் தன் காலமும் காவால்
அறுக்கும் புங்கவன் ஆண்டபேர் ஆடகத்தனிவில்
இறுக்கும் தன்மை அம்மாயவற்கன்றியும் எளிதோ?" [80]

என்று "திரிபுரம் எரித்தவனும் காலனைக் காலால் உதைத்து அழித்தவனுமான சிவனுடைய ஒப்பற்ற வில்லை ஒடிக்கும் திறம் மாயவனாகிற திருமாலுக்கன்றி வேறு எவர்க்கும் எளிதல்ல" எனக் கூறுவதன் மூலம் சிவனைக் காட்டிலும் வலிமைமிக்க திருமாலே இராமன் என்று தெளிவுறக் காட்டினான் கம்பன். இவனையோ சைவன் என்பது?

"என்னை ஈன்றவன் இவ்வுலகு யாவையும் ஈன்றான்
தன்னை ஈன்றவற்கு அடிமை செய் தவம் உனக்கு அஃதே
உன்னை ஈன்றவற்கு உறுபதம் உளது என உரைத்தான்
இன்ன தோன்றலை அவன் இதற்கு ஏதுஉண்டு இறையோய்" [81]

என்னும் அடுத்த பாடலில் "சிவனாகிற என்னைப் படைத்தவனும் உலகைத்தையும் படைத்தவனுமான பிரமனையே உண்டாக்கின திருமாலுக்கு அடிமைசெய். அதுவே உனக்குத் தவமாகும். சுக்கிரீவனாக உன்னைப் படைத்தவனான சூரியனுக்கு அவனது பதவியைக் கொடுத்தவன் இத்திருமாலே. இப்படி நான் அறுதியிடுவதற்குக் காரணங்கள் பல உள" என்று சிவனையே அனுமன் என்

றும், சிவனைப் படைத்த பிரமனைப் படைத்தவன் திருமாலே என்றும் அறுதியிடுகிறான் கம்பன். "போது தங்கு நான்முகன் மகன் அவன் மகன் சொலில் மாதுதங்கு கூறன் ஏறதூர்தி என்று வேதநூல் ஓதுகின்றதுண்மை அல்லதில்லை மற்றுரைக்கிலே" [திருச்சந்த 72] "நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" [நான்-திருவ 1] என்று வேதங்களை யொட்டி ஆழ்வார்கள் அருளிச்செய்ததையே பின்பற்றியவன் கம்பன் என்று இப்பாடலிலிருந்து விளங்குகிறது. இவனைச் சைவன் என்று நாகூசாமல் எழுதுவதே! அடுத்ததான மராமரப் படலத்தில் சுக்கிரீவன் இராமனைப் புகழ்ந்துரைக்கும்போது,

"வையம்நீ வானும்நீ மற்றும்நீ மலரின்மேல்
ஐயன்நீ ஆழிநீ ஆழிவாழ் அமலன்நீ
செய்ய தீவினைதெறும் தேவும்நீ நாயினேன்
உய்யவந்து உதவினாய் உலகம்மூன்று உதவினாய்" [17]

என்று எல்லாப் பொருள்களுக்கும் அந்தர்யாமியாகவும், திருப்பாற் கடலில் பள்ளிகொண்டிருப்பவனாகவும், தீவினைகளை அழிப்பவனாகவும், உலகனைத்தையும் படைத்தவனாகவும் உள்ள திருமாலே இராமன் என்று கூறுவதும் குறிக்கொள்ளத்தக்கது. வாலிவதைப்படலத்தில்,

"மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை, 'இராமன்' என்னும்
செம்மை சேர்நாமம் தன்னைக் கண்களின் தெரியக்கண்டான்' [71]

என்று வாலி இராமபாணத்திலே இராமநாமத்தைக் கண்டதைக் கூறும்போது இராமநாமத்துக்கு ஒப்பற்ற பெருமையைக் கூறுகிறான் கவிஞர்பெருமான். இந்த இராமநாமத்துக்கு உரியவனாகிற இராமன் நாராயணனே என்பதை,

"கண்ணுற்றான் வாலி நீலக் கார்முகில் கமலம்பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலை" [75]

என்று அடுத்துள்ள பாடலில் தெளிவாக்கியிருக்கிறான் கம்பன். அப்படியிருக்கும்போது, "இராமநாமத்துக்குப் போட்டியாக நாராயண நாமத்தின் பெருமையைக் கூறுவதற்காகவே வைணவர்கள் இரணியன் வதைப்படலத்தைக் கற்பித்துச் சேர்த்துவிட்டார்கள். இரணியன் வதைப்படலம் இராமனுக்கும் நாராயணனுக்கும் இடையே போட்டியை உண்டாக்குகிறது" என்று மனம் போனபடி எழுதுகிறார் ம. பொ. சி. இவ்வாதம் ஒரு கண நேரமும் நிலைநிற்கமாட்டாது என நிலைநாட்டுவோம் இனி.





நூற்றுக்கணக்கான பாடல்களில் இராமன் நாராயணனே என்று உறுதிசெய்திருக்கும்போது இராமனுக்கும் நாராயணனுக்கும் போட்டி என்பதும் இராம நாமத்துக்கும் நாராயண நாமத்துக்கும் போட்டி என்பதும் சிறிதும் பொருந்தாது என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். ம. பொ. சி. போன்ற தீவிர சைவர்களுக்கு எவ்வளவு சொன்னாலும் விளங்காது. காமாலைக்கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளன்றோ. தம்முடைய இக்கற்பனைக்குக் காமகோடியின் கைக்கூலி யான அக்னிஹோத்ரியை ஆதாரம் காட்டுவது அருவருக்கத் தக்கது. அக்னிஹோத்ரியின் அபத்த வாதங்களை வைணவ உலகம் முழுதும் திரண்டெழுந்து கண்டித்திருக்கும் 'அக்னிஹோத்ரியும் வைணவமும்' என்னும் நூலை ம. பொ. சிக்கு அனுப்பியிருக்கிறோம். அதைப் பார்த்தபின்பாவது அவரது அகக்கண் திறக்குமா? இப்படலத்திலேயே வாலி உண்மை உணரப்பெற்று இராமனைத் துதிக்கும் பாடல்களும் திருமாலின் பரத்துவத்தைப் பறைசாற்றுகின்றன.

"ஏவுகூர் வாளியால் எய்துநாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்தருளினாய்
மூவர் நீ முதல்வன் நீ முற்றும் நீ மற்றும் நீ
பாவம் நீ தருமம் நீ பகையும் நீ உறவும் நீ" [121]

என்னும் முதற்பாடலில் பிரமன், உருத்திரன், இந்திரன் எனப்படும் மூவருக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் இராமனாகிய திருமாலே என்றும், அம்மூவருக்கும் முதல்வனாயிருப்பவன் அவனே என்றும் மற்று அனைத்துமாயுமிருக்கும் அவனே தனக்கு அந்திமகாலத்தில் அறிவு தந்தருளினான் என்றும் கூறுகிறான் வாலி.

"புரம் எலாம் எரிசெய்தோன் முதலினோர் பொருஇலா
வரம் எலாமுருவி என்வசை இலாவலிமை சால்
உரம் எலாமுருவி என் உயிரெலாம் நுகரும் நின்
சரம் அலால் பிறிது வேறு உளதரோ தருமமே" [122]

என்னும் அடுத்தபாடலில் "முப்புரங்களையும் எரித்தவனாகிற சிவன் முதலானவர்கள் அளித்த ஒப்பற்ற வரங்களை அழித்து, அவ்வரங்க ளால் உண்டான என் வலிமையை அழித்து, உயிரையும் குடிக்கும் உனது சரம் எனக்கு உண்மை அறிவை அளித்ததாகையால் அதுவே மேலான அறமாய் நிற்கிறது என்று கூறுவதன்மூலம் சிவன் முதலானவர்கள் தந்த வரங்கள் தன் உடலைக் கொழுக்கவைத்துத் தன்னைத் தீயவழியில் செலுத்தின என்றும், இராமனது அம்பே

அக்கொழுப்பை அடக்கி, தனக்கு அறிவை அளித்தது என்றும் கூறுகிறான் வாலி. ஆக, பாலகாண்டம் திருவவதாரப்படலத்தில் "பரகதி உணர்ந்தவர்க்கு உதவுபண்ணவன்" [12] என்று திருமாலே பரகதியை அருளவல்லவன் என்றும் "பொருள் தரும் இருவர்" [29] என்று பிரமனும், சிவனும் வீட்டைக்காட்டிலும் வேறுபட்ட 'பொருள்' என்னும் புருஷார்த்தத்தையே அளிக்கவல்லவர்கள் என்றும் கூறியதே இங்கும் வலியுறுத்தப்படுகிறது. இப்படிக் காவியத்தின் நெடுகிலும் ஒருமுகமாகக் கூறியிருக்கும் கம்பன் பரமவைணவன் என்பதில் ஐயுறவும் இடமுண்டோ? அடுத்தபடி "மாவலச் சூலியார்" என்று தொடங்கும் பாடல் இவ்வர்த்தத்தையே வலியுறுத்துகிறது. ஆயினும் அப்பாடல் சில ஏடுகளில் மாத்திரமே காணப்படுகிறது என்று பழைய பதிப்பில் குறித்திருக்கையால் அதை விடுத்து மேலே செல்வோம். அடுத்துவரும் இருபாடல்களில் "யாவரும் எவையுமாய் இருப்பவன் நீயே என்று அறிவுடையவர்கள் அருளுகின்றார்கள். தருமமே உருவான உன்னைக் கண்டுகொண்டேன்; இனி வேறென் நினைக் காண்பேனே? எனது பெரும்பழவினைகளையெல்லாம் அழித்து எனக்கு உன் பரமபதம் தருவாய்" என்று பிரார்த்திக்கிறான் வாலி. இப்பாடல்களில் ஆழ்வார்களுடைய பாசுரங்கள் பலவும் தழுவப்பட்டுள்ளன. அப்படியிருக்க, நம்மாழ்வாரின் பெயரை எடுக்கவில்லையாகையால் கம்பன் வைணவனல்லன் என்று கதைக்கும் ம. பொ. சி. யைக் கண்டு நகைப்பதே செயற்பாலது. அடுத்தபடியாக, சுக்கிரீவனுக்கு வாலி உரைத்த உறுதிமொழிகளிலும் திருமாலின் பரத்துவம் அறுதியிடப்படுகிறது.

"மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள் இணிவில் தூக்கி
அறைகழல் இராமனாகி அறநெறி நிறுத்தவந்த
இறை ஒரு சங்கையின்றி எண்ணுதி எண்ணம் மிக்கோய்" [132]

என்னும் பாடலில், "வேதங்களும் முனிவர்களும் பிரமனும் சொல்லும் பரம்பொருளே இராமனாக அவதரித்து அறநெறியை நிலைநிறுத்த வந்தது என்பதில் ஐயமில்லை" என்று கூறுகையால் பிரமனாலும் புகழப்படும் திருமாலே இராமன் என்பதே கம்பன் கருத்து என்பது மறுபடியும் உறுதியாகிறது. மேல்வரும் பாடல்களிலும் பரம்பொருளுக்குள்ள பெருமைகளையெல்லாம் இராமனுக்குக் கூறி "திருமறுமார்பன்" [135] என்று அவனைத் திருமாலாகக்காட்டி 'அவனுக்கு அடிமை செய்வாயானால் உயர்ந்த நிலையை அடைவாய்' என்று தம்பிக்கு உறுதி கூறுகிறான் வாலி. இப்படலத்தின் கடைசியில் வாலி அங்கதனுக்கு ஆறுதல் கூறும் பாடல்களும் இராமனாகிற திருமாலே வீடளிக்கும் பெருமைபெற்றவன் எனக்காட்டுகின்றன. "வீரன் தான் வந்து விடுதந்தான்" என்று கூறிய வாலி,



"பாலமை தவிர் நீ என்சொல் பற்றுதிஆயின் தன்னில்
மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருள் வில்லுந்தாங்கி
கால்தரை தோயநின்று கட்புலக்கு உற்றது அம்மா
மால்தரும் பிறவிநோய்க்கு மருந்தென வணங்கு மைந்த" [148]

என்னும் அடுத்தபாடலில் "பரம்பொருளே இராமனாக அவதரித்துக் கண்காண நிற்கின்றது. அவனே பிறவி நோய்க்கு மருந்து என்று வணங்குவாயாக" என்று தன் மைந்தனுக்கு உபதேசிக்கின்றான். அடுத்த பாடலில் மன்னுயிர்க்கு உறுதிசெய்பவனாகிற அவ்விராமனின் மலரடி சுமந்து வாழும்படி தன் மகனுக்குக் கட்டளையிடுகிறான் வாலி. அடுத்துள்ளதொரு பாடலில் "பொய்யடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ" [151] [பொய்நிறைந்திருக்கும் மனத்தவர்க்குப் புலப்படாத பரம்பொருளே] என்று இராமனை விளித்து அங்கதனை அவனுக்கு அடைக்கலப் பொருளாகக் கொடுக்கிறான் வாலி.

"தன் அடி தாழ்த்தலோடும் தாமரைத் தடங்கணானும்
பொன் உடைவாளை நீட்டி நீ இது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின இறந்து வாலி
அங்கிலை துறந்து வானத்து அப்புறத்து உலகன் ஆனான்" [152]

என்னும் அடுத்தபாடலில் வாலி இராமனின் அருளினாலே பரமபதம் அடைந்தான் எனக்காட்டுகிறான் கம்பன்.

"மாஅயோயே! மாஅயோயே! மறுபிறப்பறுக்கும் மாசில்சேவடி
மணிதிகழ் உருபின் மாஅயோயே" [பரிபாடல் 3]

என்று மாயோனாகிற திருமாலே மறுபிறப்பறுக்கவல்லவன் என்றும், "நாறிணர்த்துழாயோன் நல்கின் அல்லதை, ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" [பரிபாடல் 15] என்று திருமால் அளித்தாலல்லது விட்டுலகுக்கு எவராலும் ஏறமுடியாது என்றும் சங்ககாலத் தமிழர் அறுதியிட்டனர். அதை அடியொற்றியே கம்பனும் விராதன், சரபங்கன், சடாயு, சபரி, வாலி ஆகிய அனைவர்க்கும் திருமாலின் அவதாரமான இராமனே விடுபேறு அருளினான் என்று பாடுகிறான். இதிலிருந்து சங்ககாலத்தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என்று தெளிவாகிறது. நாடவிட்ட படலத்தில்,

"அரன் அதிசன் உலகளந்த அரி அதிசன் என்று உரைக்கும் அறிவி
பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல்" [24]

[லோர்க்குப் என்னும் பாடலில், 'அரன் அதிகன்' என்றும், 'அரி அதிகன்' என்றும் (முறையே) சொல்லும் சைவர்களும், வைணவர்களும் அறிவில்லாதவர்கள் என்றும், அவர்களுக்குப் பரகதியை அடைவது அரிது என்றும் கம்பன் கூறுவதால், அவன் ஒரு சமரசவாதியே என்கிறார் ம. பொ. சி. இதுவரையில் அரியே அரனைக்காட்டிலும் அதிகனான பரம்பொருள் என்று கம்பன் நூற்றுக்கணக்கான பாடல்களில் கூறியிருப்பதை நாம் காட்டியிருக்கிறோம். மேலும் காட்டப்போகிறோம். ம. பொ. சி. கூறும் பொருள் அவற்றோடு முரண்படும். ம.பொ.சி. கூறுகிறபடி பொருள்கொண்டால், கம்பன் தன்னைத்தானே அறிவில்லாதவன் என்றும், தனக்குப் பரகதி கிடையாது என்றும் கூறுவதாகத் தேறும். "வையத்தார் வானத்தார் மழுவாளிக்கு அன்றளித்த ஐயத்தால் சிறிதையம் தெளிந்தாரும் உளர் ஐயா" என்று கூறும் விராதனும், "எழுவரென நின்ற தொல்லை முதன்முனிவர் சூளுற்றபோதே தொகைநின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய்" என்று கூறிய இந்திரனும், அரனைக்காட்டிலும் அரி அதிகன் என்று கூறியதாகக் கம்பனால் குறிக்கப்பெறும் மற்றும் பலரும் அறிவில்லாதவர் என்றும், அவர்களுக்குப் பரகதிகிடையாது என்றும் கொள்ளவேண்டிவரும். மேலும், அரனுக்கு எந்த அடைமொழியையும் இடாமல், அரிக்கு 'உலகளந்த' என்னும் அடைமொழியை இட்டிருப்பதும் பயனற்றதாகிவிடும். ஆகையால் ம. பொ. சி. கருதும் பொருள் இப்பாடலுக்குப் பொருந்தாது என்றும், வேறுவகையாகவே இதற்குப் பொருள் கொள்ளவேண்டும் என்றும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். எப்படிப் பொருள்கொள்வது எனில்? இரண்டு வகையாகக் கொள்ளலாம்:— (1) "அரன் அதிகன்; உலகளந்த அரியும் அதிகன்" என்று கூறும் அறிவில்லாதவர்களுக்கு என்று உம்மையைச் சேர்த்துக்கொண்டு, "உலகுக்குக் காரணமாக இரண்டு பரம்பொருள்கள் எப்படியிருக்கமுடியும்? என்று கூட ஆராயாத அறிவிலிகளுக்கு" என்று கொள்ளலாம். (2) "அரன் அதிகன்? உலகளந்த அரி அதிகன்? என்றுரைக்கும் அறிவிலோர்க்கு" என்று இரண்டு கேள்விக்குறிகள் தொக்குநிற்பதாகக் கொண்டு "அரன்தான் பரம்பொருளோ? உலகளந்த அரிதான் பரம்பொருளோ?" என்று ஐயப்பட்டுக்கொண்டேயிருக்கும் அறிவிலிகளுக்குப் பரகதியடைவது அரிது என்று கம்பன் கூறுவதாகவும் கொள்ளலாம். "சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர் ஐயா" என்னும் விராதன் வாக்குக்கு இது மிகப் பொருந்தியிருக்கும். "ஸம்ஸாரச்சேற்றில் ஆழ்ந்திருக்கும் நாம்



பரம்பொருள் யாரென அறிந்து அவன்காலில் விழுந்தால்தான் அவன் நம்மை அதில்நின்றும் எடுப்பான். அப்படியிருக்க, 'அரனும் பரம்பொருள்தான், அரியும் பரம்பொருள்தான்' என்று முன்னுக்குப்பின் முரணாகப் பேசும் அறிவிலிகளான சமரசவாதிகளுக்கும், அரன் பரம்பொருளோ அரி பரம்பொருளோ என்று ஐயப்பட்டுக்கொண்டேயிருக்கும் அறிவிலிகளுக்கும் பரகதியடையவே முடியாது" என்னும் பொருளே கம்பனுடைய காவியம் முழுவதையும் காண்பார்க்குப் பொருத்தமான பொருள் என விளங்கும். "பரகதி உணர்ந்தவர்க்கு உதவுபண்ணவன்"[12] என்று திருமாலைப் பரகதியளிப்பவனாகவும், "பொருள்தரும் இருவர்"[29] என்று பிரமனும், சிவனும் பொருளையே அளிக்கக்கூடியவர்கள் என்றும் திருவவதாரப்படலத்திலேயே முழங்கியவனன்றோ கம்பன். ஆக, பரிபாடலில் "மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே!" [3] என்றும் "நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"[15] என்றும், திருமால் ஒருவனே மறுபிறப்பை அறுத்து, வீட்டுலகை அளிக்கவல்லவன் என்னும் சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என்பது கல்வெட்டாயிற்று. நாடவிட்ட படலத்தில் திருவேங்கடவனைத் திருமலையிலும், திருவரங்கனைக் காவிரி நடுவிலும் கூறுதலிருந்தே கம்பன் வைணவன் அல்லன் என்று எழுதி, தமது நூலில் 73-ம் பக்கத்திலிருந்து தொடங்கிப் பல பக்கங்களை வீணாக்கியிருக்கிறார் திரு. ம. பொ. சி. இராமன் பட்டாபிஷேகத்திற்குப் பின் விபீஷணனுக்குப் பிரமனுலகிலிருந்து இக்ஷ்வாகுவால் அடையப்பெற்ற தன் குலதெய்வமான திருமாலை அளித்தான் என்றும், இலங்கைக்குச் செல்லும் வழியில் அத்திருமால் காவிரி நடுவில் கோயில்கொள்ளத் திருவுள்ளம் பற்றிவிட்டான் என்றும், அதற்குப் பின்பே அவனுக்கு 'அரங்கன்' எனும் பெயர் ஏற்பட்டது என்றும் பல தென்மொழி வடமொழி நூல்களில் உள்ளது. "நான்முகத் தயன் பணிந்த கோயிலே" [திருச்சந்த விருத்தம்] "இலங்கையர்கோன் வழிபாடுசெய் கோயில்" [திருப்பள்ளியெழுச்சி] என்று கம்பனுக்கு முற்பட்ட ஆழ்வார்களும் அருளினர். "அணியரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்" [பாலகாண்டம்-குலமுறை கிளத்துபடலம்] முதலானவிடங்களில் கம்பனும் இதை ஏற்றுக்கொண்டு பாடியுள்ளான். அப்படியிருக்க, கம்பன் திருவரங்கன் காவிரிக்கரைக்கு எழுந்தருள்வதற்கு முன் அவனை அங்கு எப்படிப் பாடுவான்? இதைக்கூட ஆராயாமல் ம. பொ. சி. ஆகாயக் கூத்தாடுவது அறிவாளிகளால் நகைக்கத்தக்கதேயாகும். இராமனுக்கு அடுத்த யுகத்தில் அவதரித்த கண்ணனின் தாயான

யசோதை கலியுகத்தில் வகுளமாலிகையாகப் பிறந்தாள் என்றும், ஸ்ரீநிவாஸன் அவளுக்குப் பிள்ளையாகப் பிறந்து திருமலையில் எழுந்தருளினன் என்றும் திருவேங்கடத் தலபுராணம் உள்ளது. "கலௌ வேங்கட நாயகः" "கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் வேங்கடவன்" என்னும் பொதுஜன வழக்கும் இதை வலியுறுத்துகிறது. கலியுகத்தில் திருமலையில் எழுந்தருளிய தெய்வத்தைத் திரேதாயுகத்தில் சுக்கிரீவன் வாயிலாகக் கம்பன் எப்படிக் குறிக்க முடியும்? இதையும் அறியாமல் ஆகாயக்கோட்டை கட்டும் ம. பொ. சி.யின் ஆராய்ச்சியின்மையைக்கண்டு அறிவாளிகள் அனைவரும் பரிதாபப்படுகிறார்கள். சுக்கிரீவன் வாயிலாக அரங்கனையும், திருவேங்கடவனையும் குறிப்பிடாத கம்பன் "அணியரங்கம் தந்தானை" என்று அரங்கனையும், "வலம் கொள் நேமி மழை நிறவானவன் அலங்கு தாள்இணை தாங்கிய அம்மலை" என்று ஆறு செல் படலத்தில் திருவேங்கடவனையும் கவிக்கூற்றாகக் குறிப்பிடுவதிலிருந்தே ம. பொ. சி. யின் வாதம் தவிடுபொடியாகிவிட்டது! திருவேங்கடவன் எழுந்தருள்வதற்கு முன்னமே ஆதிசேடன் திருமலையுருவெடுத்து நின்றான் என்று திருவேங்கடத் தலபுராணம் கூறுகையால்,"நோடுறு மால்வரை யதனைக்குறுகுதிரேல் உம்நெடியகொடுமை நீங்கி விடுதிர்" [29] என்று நாடலிட்ட படலத்தில் திருமலை வீடளிக்கவல்லது என்று கூறுவதிலிருந்து கம்பன் பரமவைணவன் என்றும், "அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம் எளிதில் பெறல் உரிமை ஏத்துகம்"[பரிபாடல்15]என்று தெற்குத் திருமலையான திருமாலிருஞ்சோலைமலை வீடளிக்கவல்லது என்று பாடியிருக்கும் சங்ககாலத் தமிழர்சமயமே கம்பனின்சமயம் என்றும் தெற்றென விளங்குகிறது. கம்பனின் பாடல்களை ஆராயாமல், வைணவத்தை அழிப்பதையே தன் வாழ்க்கைக் குறிக்கோளாகக்கொண்டு கால்நூற்றாண்டுக்கும் மேலாகச் செயல்பட்டுவரும் காமகோடி பீடாதிபதியையும் அவரது கைக்கூலியான அக்நிஹோத்ரம் தாத்தாச்சாரியரையும் ஆதாரமாகக் காட்டும் ம. பொ சி. க்கு இவை எப்படி விளங்கும்? பிலநீங்குபடலத்தில்,

"எருத்து உயர் கடர்ப் புயம் இரண்டும் எயிறு என்ன,
மருத்து மகன் இப் படி இடந்து, உற வளர்ந்தான்;
கருத்தின் நிமிர் கண்ணின் எதிர் கண்டவர் கலங்க,
உருத்து உலகு எடுத்த கருமாவினையும் ஒத்தான்" [69]

[கருமா—வராகம்]

"மா வடிவுடைக் கமல நான்முகன் வகுக்கும்
தூ வடிவுடைச் சுடர் கொள் விண் தலை துளக்கும்



மூஅடி குறித்து முறை ஈர்.அடி முடித்தான்
பூ வடிவுடைப் பொரு இல் சேவடி புரைத்தான்" [70]

என்று கம்பன் திருமால் உலகையிடந்தெடுத்த வராஹாவதாரத்தையும், எல்லாவுலகையும் அளந்த திருவிக்கிரமாவதாரத்தையும் குறிப்பிடுவதிலிருந்து, "கேழல் திகழ்வரக்கோலமொடு பெயரிய ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு ஊழி யாவரும் உணரா ஆழி முதல்வ" [பரிபாடல் 1] "கீழேழுலகமும் உற்ற அடியினை" [பரிபாடல் 3] "இவ்வுலகம் தந்து அடிப்படுத்ததை" [பரிபாடல் 4] என்று திருமாலே ஆதிவராகமாகவும், திரிவிக்கிரமனாகவும் அவதரித்த ஊழிமுதல்வனை பரம்பொருள் என்று கொண்ட சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என்று மிகத் தெளிவாக விளங்குகிறது. வராஹமும், திரிவிக்கிரமனும் சிவனிடம் பங்கப்பட்டனர் எனக்கூறும் சைவசமயக்கதையைச் சங்கத்தமிழரும் கம்பனும் ஓரிடத்திலும் எடுக்காததிலிருந்து சங்கத்தமிழரும், கம்பனும் சைவமதத்தை ஏற்றவரல்லர் என விளங்குகிறது. ஆறுசெல் படலத்தில்

"வலம் கொள் நேமி மழை நிற வானவன்
அலங்கு தாள் இணை தாங்கிய அம் மலை
விலங்கும் வீடு உறுகின்றன; மெய்ந் நெறி
புலன் கொள்வார்கட்கு அனையது பொய்க்குமோ?" [36]

"ஆய குன்றினை எய்தி, அருந் தவம்
மேய செல்வரை மேவினர், மெய்ந் நெறி
நாயகன்தனை நாளும் வணங்கிய
தூய நல் தவர் பாதங்கள் சூடினார்" [37]

என்று திருமலையைத் திருமாலின் இருப்பிடமாகப் பாடி அவனே மெய்ந்நெறி நாயகன் என்றும், திருமலையில் வாழும் விலங்குகளும் வீடுறும் என்றும் பாடுவதிலிருந்து கம்பன் திருமாலையே பரம்பொருளாகக் கொண்ட பரமவைணவன் என விளங்குகிறது.

"மேலை விரிஞ்சன் வீயினும் வீயா மிகை நாளீர்;
நூலை நயந்து, நுண்ணிது உணர்ந்தீர்; நுவல் தக்கீர்;
காலனும் அஞ்சும் காய் சின மொய்ம்பீர்; கடன் நின்றீர்;
ஆலம் நுகர்ந்தான் என்ன வயப் போர் அடர்கிற்பீர்;" [9]

என்று சிரஞ்ஜீவியான அனுமன் பிரமன் அழியுங்காலத்திலும் அழியமாட்டான் என்று பாடுகையால், பிரமனைக் கம்பன் அழியக்கூடிய ஜீவனாகவே கருதினான் என விளங்குகிறது. மும்மூர்த்திகளின் அவதாரம் இராமன் என்னும் அபத்தக்கொள்கையை அடியோடு

சாய்க்கும் பல பாடல்களில் இஃது ஒன்றாகும். இனி, சுந்தரகாண்டத்திற்குச் செல்வோம்.

(5) சுந்தரகாண்டம். கடவுள் வாழ்த்தில் பஞ்சபூதங்களாலான சரீரத்தோடு பிறப்பது எவனைக் கண்டால் சடக்கென ஒழியுமோ, மறைகளுக்கு இறுதியான அவனே கைவில் ஏந்தி இராமனாய் அவதரித்தான் என்கிறான் கம்பன். 'பரகதி உணர்ந்தவர்க்கு உதவுபண்ணவ'னாகத் தன்னால் குறிக்கப்பட்ட திருமாலே இராமன் என்று இதிலும் உணர்த்துகிறான். அத்திருமாலே மறைகளுக்கு இறுதியாகிறான் எனக் குறிக்கையால், முதல் பரிபாடலில் "நின்வலையின் நிறுத்தும் ஏவல் உழந்தமை கூறும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே" "வாய்மொழிப்புலவ" என்றும், இரண்டாம் பரிபாடலில் "வடு இல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்" என்றும், "நாவல் அந்தணர் அருமறைப் பொருளே" என்றும், மூன்றும் பரிபாடலில் "மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர வலந்து; வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதைதும், நீ என மொழியுமால் அந்தணர் அருமறை" "நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்திரோ முன்னை மரபின் முதுமொழி முதல்வ" "பதினுயிரம் கை முதுமொழி முதல்வ" "கால முதல்வனை, ஏஎ இன கிளத்தலின் இனமை நற்கு அறிந்தனம்" "வேதத்து மறை நீ" "தொல்லியல் புலவ" என்றும், நாலாம் பரிபாடலில் "அவை நின் ஓர் அன்னோர் அந்தணர் அருமறை" என்றும், பதின்மூன்றும் பரிபாடலில் "பாப்புப் பகையைக் கொடி எனக் கொண்ட கோடாச் செல்வனை ஏவல் இன் முதுமொழி கூறும்" என்றும் பதினைந்தாம் பரிபாடலில் "நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின்" என்றும் பாடிய சங்கத்தமிழர் சமயமான வைணவமே தன் சமயம் எனக் காட்டுகிறான் கம்பன். ஊர்தேடு படலத்தில்,

"கரியனாய், வெளியனாய்ச் செய்யனாய்க் காட்டும் காண்டற்கு
அரியனாய் எளியனாய்த் தன் அகத்துறை அழகனே போல்" [102]

என்று கிருதயுகத்தில் வெள்ளை நிறத்தவனாகவும், திரேதாயுகத்தில் சிவந்த நிறத்தவனாகவும், கலியுகத்தில் கரியவனாகவும் காட்சியளிக்கும் திருமாலே இராமன் என்று அறுதியிடுகிறான் கம்பன். நிந்தனைப் படலத்தில், "தோற்றனை பறவைக்கன்று துள்ளுநீர் வெள்ளம் சென்னி ஏற்றவன் வாளால் வென்றாய்" [43] என்று சிவன் இராவணனுக்கு அளித்த வாள் பரமபாகவதனான சடாயுவைக் கொல்லவே பயன்பட்டது என்று குறிப்பிடுவதன்மூலம் சிவன் இராவணன் தீமைபுரிய உதவிசெய்ததைக் குறிப்பிடுகிறான் கம்பன்.



"வாராது ஒழியான் எனும் வன்மையினால்,
ஓர் ஆயிர கோடி இடாக்கு உடையேன்;
தீராய் ஒருநாள் வலி—சேவகனே!
நாராயணனே! தனி நாயகனே"

[சுந்தரகாண்டம் உருக்காட்டுபடலம், 6-ம் பாடல்]

என்று "நாராயணனே தனிப்பெரும் பரம்பொருள்" என்பதை ஸீதையின் வாயிலாகப் புலப்படுத்துகிறான் கம்பன். "இராமநாமத்துக்கும் நாராயண நாமத்துக்கும் போட்டி" என்று ம. பொ. சி. கதைத்தது கம்பனின் கருத்தல்ல என்பது இதிலிருந்தும் தெரிகிறது.

"மும்மைசூழ் உலகம்தந்த முதல்வற்கும் முதல்வன் தாதுஆய்
செம்மையால் உயிர்தந்தாய்க்குச் செயல்என்னால் எளியதுண்டோ
அம்மையாய் அத்தனாய அப்பனே! அருளின் வாழ்வே!
இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோடு என்றாள்"

[ஷ் 7 ம் பாடல்]

என்னும் பாட்டில் ஸீதைவாயிலாக உலகைப்படைத்த பிரமனையும் படைத்த திருமாலே இராமன் என்று அறுதியிடுவதும் குறிக்கொள்ளத்தக்கது. மும்மூர்த்திகளும் இராமனாய் அவதரித்தனர் என்னும் கொள்கையைத் தகர்க்கும் பாடல்களில் இதுவும் ஒன்று.

"சுருங்கிடை! உன்ஒரு துணைவன் தூயதாள்
ஒருங்குடை உணர்வினோர், ஓய்வுஇல் மாயையின்
பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனென், காலினால் என்றான்" [ஷ் 97-ம் பாடல்]

என்னும் பாடலில் "திருவடியைச் சிந்திப்போர்க்குப் பிறவிப் பெருங்கடலைக் கடத்தும் திருமாலே இராமன்" என்று அநுமன்வாயிலாக முழங்குவதன்மூலம் "மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே" என்று முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவ சமயமே தன் சமயம் எனக் காட்டுகிறான் கம்பன்.

"ஐயனும் அமைந்துநின்றான் ஆழியான் அளவில் நாமம்
நெய்சுடர் விளக்கின் தோன்றும் நெற்றியே நெற்றியாக
மொய்ம்மயிர்ச் சேனைபொங்க முரண்அயில் உகிர்வாள் மொய்த்த
கைகளே கைகளாகக் கடைக்கூழை இருவால் ஆக"

[ஷ் சம்புமாலிவதைப்படலம் 21-ம் பாடல்]

என்னும் பாடலில் அனுமன் தன் நெற்றியில் திருநாமம் இட்டிருந்ததைக் காட்டுகிருன் கம்பன். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் கம்பராமாயணப் பதிப்பில் இப்பாடலின் பொழிப்புரை வருமாறு :— ''நெய்யிடுதலால் சுடர்விட்டெரியும் திப்பிழம்புபோல, திருநாமம் தரித்து விளங்கும் தன் நெற்றியே நெற்றிப்படையாகவும், தன்மேனி முழுவதும் சிலிர்த்துநின்ற மயிர்த்தொகுதிகளே நடுப்படையாகவும், கூரிய நகங்கள் மிக்க கைகளே பக்கப்படைகளான கைகளாகவும், திருவாலே பின்னணிப் படையான கடைக் கூழையாகவும்கொண்டு அனுமனும் போருக்குச் சன்னத்தனுயிருந்தான்'' என்று. பாலகாண்டம் கடிமணப்படலத்தில் ''தன் திருநாமத்தைத் தானும் சாத்தியே''[49] என்று இராமன் திருநாமம் இட்டிருந்தான் என்று காட்டிய கம்பன இங்கு இராமபக்தனை அனுமனும் திருநாமமிட்டிருந்தான் என்று காட்டுவதன்மூலம் ராமபக்தனை தானும் திருநாமமணிந்த வைணவனே என்பதனை உணர்த்துகிருன் கம்பன். இவ்விடத்தில் கழகப் பதிப்பின் குறிப்புரையில் ''அனுமன் திருமாலின் அடியான் என்பதற்கேற்ப 'அரும்பியல் துளபப் பைந்தார் அனுமன்' என்பர் பின்னும் [மாயாசனக 58]'' என்று எழுதியிருப்பது காணத்தக்கது. இன்றளவும் தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் அனுமன் திருவுருவத்தின் நெற்றியில் திருநாமமே இடப்பட்டிருப்பது அனைவரும் அறிந்தது. இனி பிணிவீட்டுபடலத்தில் ''மூலமும் நடுவும் ஈறும்'' என்று தொடங்கும் 80 வது பாடலைக் காட்டி இராமன் மும்மூர்த்திகளின் அவதாரம் என்று திரு. ம. பொ. சியும், மற்றும் சிலரும் கூறுவதை ஆராய்வோம். இப்படலத்தில் இராவணன் அனுமனை ''நீ யார்'' என்று வினவும் பாடல்களில்

''நேமியோ? குலிசியோ? நெடுங்கணிச்சியோ?
தாமரைக் கிழவனே? தறுகண் பல்தலைப்
பூமிதாங்கு ஒருவனே? பொருது முற்றுவான்
நாமமும் உருவமும் கரந்து நண்ணினுய்'' [70]

என்பது ஒன்று. இதில் இராவணன் அனுமனை ''திருமாலோ? இந்திரனே? சிவனே? பிரமனே? ஆதிசேடனே?'' என்று வினவுகிருன். மேலே மூன்று பாடல்களும் இராவணன் இம்மாதிரியே வினவும் பாடல்கள். அடுத்த பாடலிலிருந்து ஒன்பது பாடல்களில் அனுமன் விடை கூறுகின்ருன்.

''சொல்லிய அனைவரும் அல்லென், சொன்ன அப்
புல்லிய வலியினேர் ஏவல் பூண்டிலேன்;
அல்லிஅம் கமலமே அனைய செங்கண் ஓர்
வில்லிதன் தூதன்யான்; இலங்கை மேயினேன்'' [74]



என்பது அவற்றில் முதற்பாடல். ''இதில் இராவணனுல் எடுக்கப்பெற்ற திருமாலையும் சேர்த்து 'புல்லியவலியினேர்' என்று அனுமன் கூறுவது எப்படிப் பொருந்தும்?'' என்னும் ஐயம் எழக்கூடும். திருமாலும் தேவர்களில் ஒருவனுகையாலும், தேவர்களால் தனக்கு அழிவில்லை என்று இராவணன் வரம்பெற்றிருக்கையாலும், திருமாலாலும் நேரே வந்து இராவணனை அழிக்கமுடியாது என்பது கருதித் திருமாலையும் புல்லிய வலியினேர்களில் சேர்த்தான் என்றே கொள்ள வேண்டும். இல்லாவிடில் திருமாலே இராமன் என்று தன் காவியம் முழுவதிலும், இங்குள்ள அனுமன் விடையில் ஆரும் பாடலிலும் கூறியிருப்பது பொருந்தாமல் போய்விடும். இப்பாடலிலேயே 'அல்லிஅம் கமலமே அனையசெங்கண்' என்று இராமனைச் செந்தாமரைக் கண்ணனை திருமாலின் அவதாரமே என உணர்த்துவது காணத்தக்கது. அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் குறிப்புரையிலும் இது குறிக்கப்பட்டது. ஆறுவது பாடலில் இதனைத் தெளிவாகவே கூறப்போகிருன் அனுமன்.

''அனையவன் யார்? என, அறிதியாதியேல்
முனைவரும் அமரரும் மூவாதேவரும்
எனையவர் எனையவர் யாவர் யாவையும்
நினைவுஅரும் அருவினை முடிக்க நின்றுளோன்'' [75]

என்பது அனுமன் விடையில் அடுத்த பாடல். இதில் ''நினைவு அரும் அருவினை'' என்றது ''(மனிதர் தவிர) எவராலும் அழிவில்லை'' என்று பிரமனிடம் பெற்றிருந்த வரத்தை அழிப்பதாகிற நினைத்தற்கும் அரிய காரியமாகும். இங்கு மூவர் தேவரும் என்று திருமாலைச் சேர்த்தெடுத்திருப்பதும் சென்ற பாட்டில் காட்டியவகையிலேயே ஆகும். ''நினைவரும் இருவினை முடிக்க'' என்று பாடமானபோது திருமாலால் இருவினைகளாகிற புண்யபாபங்களை முடிக்க இயலாது என்று கூறுவது கம்பனுடைய மற்ற பல பாடல்களுக்குப் பொருந்தாதாகையால், 'மூவர் தேவரும்' என்றது 'பரம்பொருளல்லாத பிரமன், உருத்திரன், இந்திரன் என்னும் முப்பெரும் தேவர்கள்' என்றே பொருள்படும். 70ம் பாடலில் நேமியோ? என்று பரம்பொருளான திருமாலை எடுத்துவிட்டு ''குலிசியோ நெடுங்கணிச்சியோ தாமரைக் கிழவனே'' என்று இந்த முப்பெருந்தேவர்களையும் ஏறுவரிசையில் சேர்த்தெடுத்திருப்பது காணத்தக்கது. ''ஸ ப்4ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்3ர:'' [தை-நா 11] என்று உபநிஷத்தும், ''ப்4ரஹ்ம ருத்3ரேந்த்3ர பூ4தாநாம் மநஸாமபி அகோ4சரம்'' [பிரமன், உருத்திரன், இந்திரன் ஆகியவர்களுக்கு மனத்தாலும் நினைக்க அரியன் திருமால்] என்று ரிஷிகளும்

"நளிர்மதிச் சடையனும், நான்முகக் கடவுளும், தளிரொளி இமையவர் தலைவனும்" [திருவாசிரியம் 7] "பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும்" [திருவாய் 3.1.10] முதலான இடங்களில் ஆழ்வார்களும் இவர்களைச் சேர்த்தெடுத்திருப்பது காணத்தக்கது. "இருவினையும் இல ஏத்துமவை" என்னும் பரிபாடலில் திருமாலைப் பற்றிச் சங்கத்தமிழர் பாடியிருப்பதை அடியொற்றிக் கம்பரும் பல பாடல்களில் பாடியிருப்பதைக் காட்டியிருக்கிறோம். ஆகையால் இப்படியே பொருள்கொள்ளவேண்டும். விடையில் நாலாவது பாடலில் "தேவரும் பிறரும் அல்லன் மூவருமல்லன்" என்று கூறியிருப்பதிலும் மூவர் என்பதற்கு இப்படியே பொருள்கொள்ளவேண்டும். இனி,

**"காரணம் கேட்டியாயின் சடையிலா மறையின் கண்ணும்**
**ஆரணம் காட்டமாட்டா அறிவினுக்கு அறிவும் அன்னுன்**
**போர் அணங்கு இடங்கர்கவ்வ, பொதுநின்று "முதலே" என்ற**
**வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான"** [79]

என்னும் விடையின் ஆறுவது பாடலில் கஜேந்திரன் பொதுவாக 'ஆதிமூலமே' என்றபோது காக்கவந்த பரம்பொருள் திருமாலே என்று கூறுவதன்மூலம் பிரமன், சிவன் முதலானுர் பரம்பொருளல்லர் என்பதைக் காட்டி, அத்திருமாலே இராமனுக அவதரித்தவன் என்று அனுமன் வாயிலாக முழங்குவதன்மூலம் கம்பன் தன்னைப் பரம வைணவனுக வெளிப்படுத்திக் கொள்கிருன். இவனைச் சைவன் என்பதும், 'அடுத்த பாடலில் இவன் இராமன் மும்மூர்த்திகளின் அவதாரம் என்று கூறுகிருன்' என்பதும் எப்படிப் பொருந்தும்? என்று நடுநிலையாளர் சிந்திக்கவேண்டும். இனி அடுத்த பாடலை ஆராய்வோம். திருமாலே இராமனுக வந்தான் என்று இப்பாடலில் கூறியிருப்பதைக் காண்பவர்களுக்கு, பரம்பொருள் அல்லாதவர்கள் என்று இப்பாடலில் உணர்த்தப்பட்ட பிரமனும் சிவனும் திருமாலோடு தொடர்பற்ற தனித்தத்துவங்களோ என்னும் ஐயம் எழக்கூடும். அப்படித் தொடர்பற்ற தனித்தத்துவமாயிருந்தால் உலகமனைத்துமாயிருப்பவனுக வேதங்களில் ஓதப்படும் பரமாத்மாவாகத் திருமால் இருக்கமுடியாது. இக்குறையைத் தவிர்ப்பதற்காகவே அடுத்த பாடலில் பரம்பொருளாகிற திருமால் மற்ற இருமூர்த்திகளுக்கும் அந்தர்யாமியாயிருப்பவனுகையாலே அவர்களுடைய இருப்பிடங்களும் இவனுடைய இருப்பிடங்களே என்றும், அவர்களுடைய ஆயுதங்களும் இவனுடைய ஆயுதங்களே என்றும் காட்டுவதன்மூலம் மும்மூர்த்திகளுக்குள்ளும் இருக்கும் திருமாலே இராமனுக வந்தானுகையாலே மற்ற இருமூர்த்திகளும் திருமாலுக்கு உடலாக ஒன்றியிருப்பவர்களேயொழியத் தனித்தத்துவங்கள் அல்லர் என்று அறுதியிடுகிருன் கம்பன்.



"மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன்—கைவில் ஏந்தி
சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்" [80]

என்னும் பாடலில் கம்பன் தான் ஆழ்வார்களைப்போலே விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைச் சார்ந்தவன் என்று மிகத் தெளிவாகக் காட்டுகிருன். "சிவனுய் அயனுய்" என்ருரன்ருே நம்மாழ்வார். "அனைத்தும் நீ. அனைத்தின் உட்பொருளும் நீ ஆகலின்" [பரிபாடல் 3] என்றும், "பூவனும் நாற்றமும் நீ" [பரிபாடல் 1] [பிரமனும் அவன் செய்யும் படைப்புத் தொழிலும் உன் அதீனமே] ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ" [பரிபாடல் 1] [சிவனும் அவன் செய்யும் அழிப்புத் தொழிலும் உன் அதீனமே] என்றும் பிரமன் சிவன் முதலான எல்லாப் பொருள்களுக்குள்ளும் அந்தர்யாமியாய் நின்று அவர்கள் செய்யும் படைப்புத் தொழில் அழிப்புத்தொழில் முதலானவற்றைச் செய்யும் பரம்பொருள் திருமாலே என்னும் சங்ககாலத் தமிழர்சமயமான வைணவத்தையே பின்பற்றியவன் கம்பன் என்பது இதிலிருந்தும் விளங்குகிறது. சென்ற பாடல் ஈருகக் காவியம் நெடுகிலும் திருமாலே இராமனுக அவதரித்தவன் என்று பன்னிப் பன்னி உரைத்து வரும் கம்பன் இப்பாடலில் மாத்திரம் மும்மூர்த்திகளின் அவதாரம் இராமன் என்று கூறுகிருன் என்று உரைப்பது ஏற்புடைத்தாகுமா? என்று நடுநிலைநின்று சிந்தித்தால் திரு ம. பொ. சி. க்கே தம் கூற்றின் பொருந்தாமை விளங்குமாகையால் இவ்விஷயத்தை இத்துடன் இங்கு விடுகிறோம். இதுபற்றி மேலும் எவரேனும் எழுதினுல் இங்கு சொல்லவேண்டிய மற்றும் பல விஷயங்களைக் கூறுவோம்.

**"புரம் பிழைப்பு அருந்திப்புகப் பொங்கியோன்**
**நரம்பு இழைத்த நின்பாடலின் நல்கிய**
**வரம்பிழைக்கும்; மறைபிழையாதவன்**
**சரம்பிழைக்கும் என்று எண்ணுதல் சாலுமோ"** [103]

என்ற பாடலில் "திரிபுரம் எரித்த சிவனைத் துதித்து நீ பெற்ற வரங்கள் அழிந்துபோகும். வேதநெறி தவருத இராமனது அம்பு தப்பவே தப்பாது" என்று கூறுவதன்மூலம் அழியக்கூடிய வரங்களை அரக்கனுக்குக் கொடுத்த சிவன் பரமாத்மாவாக இருக்கமுடியாது என்றும், அரக்கனை அழிப்பதற்குத் தப்பாத சரத்தைவிடக்கூடிய இராமபிரானே பரமாத்மாவாயிருக்கமுடியும் என்றும் உணர்த்துகிருன் கம்பன். இவனைச் சைவன் என்பது அடுக்குமோ ?

"அப்பு உறழ்வேலே காறும் அலங்குபேர் இலங்கை தன்னை
எப்புறத்து அளவும் தீய ஒருகணத்து எரித்த கொட்பால்
துப்பு உறழ்மேனி அண்ணல், மேருவில் குழையத் தோளால்
முப்புரத்து எய்த கோலே ஒத்தது அம்மரிப்போர் வால்" [137]

என்னும் பாடலில் "பவளமேனியனை சிவன் முப்புரம் எரிப்பதற்கு ஏய்த (திருமாலாகிற) அம்பை யொத்திருந்தது அனுமனுடைய வால்" என்று கூறுவதன்மூலம் அனுமனுக்குச் சிவனை உவமையிடுகிறுன்.

"உகக்கடை உலகம் யாவும் உணங்குற ஒரு தன் நாட்டம்
சிகைக்கொழும் கனலேவீசும் செயல்முனம் பயில்வான்போல,
மிகைத் தெழுதியராயோர் விரிநகர் வீய, போர்வால்
தகைத்தல் இல்லோன்மை சாலும் தனிவீரன் சேணில்
உய்த்தான்" [138]

என்னும் பாடலில் "யுகத்தின் முடிவில் எல்லா உலகும் அழியும்படி தன் நெற்றிக் கண்ணுல் தீயை வீசும் செயலே முன்பே பயின்று கொள்பவன்போலே, தனி வீரனுன அனுமன் தீயோரின் இலங்கை நகர் அழியும்படி தன் ஒப்பற்ற வாலே நெடுந்தூரம் செலுத்தினுன்" என்று கூறுவதன்மூலம் "அனுமன் சிவனின் அமிசமே" என்று உணர்த்துகிறுன் கம்பன்.

"நீல்நிற நிருதர். யாண்டும் செய்பொழி வேள்வி நீக்க,
பால்வரு பசியன் அன்பால் மாருதிவாலேப் பற்றி
ஆலமுண்டவன் ஈன்று ஊட்ட உலகெலாம் அழிய உண்ணும்
காலமே என்னமன்னே கனலியும் கடிதின் உண்டான்" [140]

என்னும் பாடலில் "அரக்கர்கள் நெய் சொரிந்து புரியும் யாகங்களை எங்கும் புரியவொட்டாமல் நீக்கிவிட்டதனல், தன் வயிற்றில் பசி மிக்கவனுன அக்னிதேவன், ஆலாகலவிஷத்தையுண்ட சிவன் ஊழி முடிவில் உண்பிக்க உலகெலாம் தான் உண்ட அக்காலமாகவே கருதி மாருதியின் வாலே ஆதாரமாகக்கொண்டு விரைவில் உண்ணல் ஆனுன்" என்று கூறுவதன்மூலம் இவ்விஷயம் மறுபடியும் உணர்த்தப் படுகின்றது. "இவ்வாறு கருதியது சிவபிரான் அமிசமாக அனுமன் உள்ளமையால் என்றும் கொள்க" என்று பஸ்கலைக்கழகப் பதிப்பில் குறிப்புரை உள்ளது காண்க. திரு அவதாரப்படலத்திலிருந்து தொடங்கி, காவியம் முழுவதிலும் அனுமனை சிவனமிசமாகவே குறிப் பிடுவதிலிருந்து கம்பன் சிவனைப் பரம்பொருளான இராமனின் பக்தனுகவே கருதினுன் என்றும், பரம்பொருளாகக் கருதவில்லே என்றும் விளங்குகிறது. இவனைச் சைவன் என்பது முறையாகுமோ?



6. உயுத்தகாண்டம். மிகப்பெரியதான இக்காண்டத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலில் கம்பன் தன்னை ஆழ்வார்களை அடியொற்றிய விசிஷ்டாத்வைதி என்று காட்டிக்கொள்கிறுன். அப்பாடல் பின்வருமாறு:—

"ஒன்றே என்னின் ஒன்றேயாம் பல என்றுரைக்கின் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம் ஆமேஎன்னின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம் உளதென்றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங்கென்னே பிழைப்பம்மா"

நாராணன் ஒருவனே கடவுள் என்றும், அவன் எல்லாப்பொருள்களையும் தன் உடலாகக்கொண்டு பரவியிருப்பதால் பல பொருள்களாகவுமாகிறுன் என்றும் கூறுவது விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதம். "அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆகலின்" என்று திருமாலைப் பற்றிப் பரிபாடலில் கூறுவதன்மூலம் சங்ககாலத் தமிழர்களும் தாங்கள் இம்மதத்தையே தழுவிநின்றவர் என்பதைக் காட்டினர். அதையே இப்பாட்டில் கம்பன் "ஒன்றே என்னின் ஒன்றேயாம் பல என்று உரைக்கின் பலவேயாம்" என்று கூறினுன். "ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள்நின்ற, நன்றெழில் நாரணன்" [திருவாய் 1.3.7] என்ற ஆழ்வாரின் வாக்கை ஒரு வகையில் கம்பன் இவ்வடியில் அடியொற்றியது காணத்தக்கது. "பரம்பொருளுக்கு எப்பொருளும் நேர்நில்லாதாகையாலே அது எப் பொருளும் போன்றதன்று என்றும் கூறலாம்; ஆயினும் பரம்பொருளுக்குப் பல பொருள்களை உவமையாகக் கூறியே அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்" என்னும் கருத்தை,

"கட்டுரைக்கில் தாமரைநின் கண்பாதம் கையொவ்வா,
சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனியொளி ஒவ்வாது,
ஒட்டுஉரைத்து இவ்வுலகு உன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதி!"
[திருவாய் 3.1.2]

"செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம்
செந்தாமரை அடிகள் செம்பொன் திருவுடம்பே" [திருவாய் 2.5.1]

முதலான பாடல்களில் கூறிய நம்மாழ்வாரை அடியொற்றி இப்பாடலின் இரண்டாவது அடியில் "அன்றே என்னின் அன்றேயாம், ஆமே என்னின் ஆமேயாம்" என்று பாடுகிறுன் கம்பன்.

"உளனெனில் உளன் அவன் உருவமிவ்வுருவுகள்
உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள்
உளனென இலனென இவைகுணமுடைமையில்
உளன் இருதகைமையொடு ஒழிவிலன் பரந்தே" [திருவாய் 1-1-9]

என்னும் பாடலில் நம்மாழ்வார் "இறைவன் உளன் என்று கூறினுல் இவ்வுலகனைத்தையும் உருவாகக்கொண்டு அவன் தேறுளதுபோலே, இறைவன் இலன் என்று கூறினுலும், இவையனைத்தையும் அருவாகக் கொண்டு அவன் தேறவே செய்வான். இப்படி எப்படிச் சொன்னுலும் தேறுகின்றமையால் அவனை எங்கும் நிறைந்தவனுய்க்கொள்வதே அடுக்கும்" என்று கூறியதை அடியொற்றி இப்பாடலில் மூன்றும் அடியில் கம்பன் "இன்றே என்னின் இன்றேயாம் உளதென்றுரைக்கின் உளதேயாம்" என்று கூறியிருப்பது வெளிப்படை. இப்படி மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது பரப்பொருள் பல முரண்பாடுகளோடு தோன்றுவதைக் கருதி நாகாமடியில் "நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங்கென்னே பிழைப்பம்மா" என்கிருன் கம்பன். இக்கருத்தையே "கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதலே" [திருவாய் 2-5-10] என்றும், "படியே இதுவென்றுரைக்கலாம்படியனல்லன்" [திருவாய் 8-8-2] என்றும் நம்மாழ்வார் கூறியிருப்பது காணத்தக்கது. நற்குணங்களால் நிறைந்தவன் என்னும் பொருளையுடைய 'நம்பி' என்னும் சொல்லை இங்கு இடுவதன் மூலம் காவியம் முழுவதும் நற்குணக் கடலாகத் தன்னுலே காட்டப்பட்ட திருமாலே இவன் என்று உணர்த்துகிருன். "நமக்கிங்கென்னே பிழைப்பம்மா" என்று கூறியதனுல், "நம்மாழ்வார் போன்ற ஞானியர்கள் இம்முரண்பாடுகளைத் தெளியவைக்க வேண்டுமேயொழிய நம்மால் இவற்றின் பொருளை உணர்ந்து பிழைக்கவொண்ணுது" என்னும் கருத்தைக் காட்டுகிருன். ஆக, இப்பாடலில் ஆழ்வார்களை அடியொற்றி விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தைப் பின்பற்றியவனே தான் என்பதைக் காட்டுகிருன் கம்பன். முதலாவதான கடல் காண்படலத்தில் இராமன் கடலைக் கண்டதை வர்ணிக்கும்போது,

"சேயகாலம் பிரிந்தவலத் திரிந்தான் மீண்டும் சேக்கையின்பால்,
மாயன் வந்தான் கண்வளர்வான் என்று கருதி வரும் தென்றல்,
தூய மலர்போல் நுரைத்தொகையும் முத்தும் சிந்திப் புடைசுருட்டிப்
பாயல் உதறிப் படுப்பதே ஒத்த திரையின் பரப்பம்மா" [4]

என்னும் பாடலில் "'நெடுங்காலம் பிரிந்து இராமனுய் அவதரித்து அலைந் திரிந்தவனுகிய திருமால் படுக்கையில் இன்பங்கொண்டு மீண்டும் கண்வளர வந்துள்ளான்' என்று எண்ணிக் கடலானது பாயைச் சுருட்டி உதறிப் பரப்பியதுபோலே அலையெறிந்தது" என்னும் கருத்தைத் தெரிவிப்பதன்மூலம் "திருமாலே இராமனுக அவதரித்து வந்துள்ளான்" என்று மிகத் தெளிவாகக் காட்டுகிருன் கம்பன்.



அடுத்ததான மந்திரப்படலத்தில்,

"எறுழ்வலிப் பொருவில்தோள் அவுணரோ(டு) அமரர்பண்(டு)
இகல்செய் காலத்(து)
உறுதிறல் கலுழன்மேல் ஒருவன்நின்(று) அமர்செய்தா
னுடைய வில்லும்
தெறுசினத் தவர்கள்முப் புரம்செருப் புறஉருத் தெய்த அம்பும்
குறுமுனிப் பெயரினுன் நிறைதவர்க் கிறைதரக் கொண்டு
நின்றுன்" [87]

என்று "திருமாலுடைய வில்லையும், சிவனுக்குத் திரிபுரம் எரிக்கப் பயன்பட்டதாய், திருமாலின் அம்சம் பெற்றதான அம்பையும் அகத்தியன் இராமனுக்குக் கொடுத்தான்" என்று விடணன் வாயிலாகக் கூறுகிருன் கம்பன். இதிலிருந்து ஆரணியகாண்டத்தில் அகத்தியப்படலத்தில் "விழுமியது சொற்றனை" என்னும் பாடலில் கம்பன் "இராமனுக்கு அகத்தியன் முழுமுதல்வனுடைய வில்லைக் கொடுத்தான்" என்று கூறியது திருமாலின் வில்லைப்பற்றியதே என்று விளங்கும். அங்கு முழுமுதல்வன் என்றதையே "கலுழன்மேல் ஒருவன்" என்று விவரிக்கையால் கம்பன் திருமாலையே ஒப்பற்ற முழுமுதல்வனுகக் கருதினுன் என்று விளங்குகிறது. 'முழுமுதல்வன்' என்ற சொல்லுக்கு டி. கே. சி. சிவன் என்று பொருள்கூறியது பொருந்தாதென்றும் விளங்குகிறது. அதே படலத்தில்,

"சிவனும் நான்முகத் தொருவனும் தேவர்க்கும் தெரியா
அவனும் மற்றுள அமரரும் உடனுறைந் தடங்கப்
புவனம் மூன்றும்நாள் ஆண்டுள தாண்டவப் பொருவில்
உவனி லாமையி னுேவலி ஒதுங்கியோ உரையாய்" [114]

என்று இராவணன் தற்பெருமை பேசும் பாட்டிலும் 'தேவர்க்கும் தெரியா அவன்' என்று முன்னும் பின்னும் சொல்லப்பட்ட சிவன், பிரமன் முதலான தேவர்க்கும் அறியமுடியாதவன் திருமால் என்று கம்பன் கூறுவது குறிக்கொள்ளத்தக்கது.

"ஆயி ரம்பெரும் தோள்களும் அத்துணைத் தலையும்
மாயி ரும்புவி உள்ளடி அடக்குறும் வடிவும்
தீய சாலவும் சிறிதென நினைந்துயாம் இன்னும்
ஓயு மானிடன் உருவுகொண் டனன்கொலோ உரவோன்" [115]

என்ற அடுத்த பாடலில் "ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" [பரமபுருஷன் ஆயிரம் தலைகளையும், ஆயிரம் கண்களையும், ஆயிரம் கால்களையும் உடையவன்] என்று வேதத்தில்

சொல்லப்பட்ட பரமாத்மா திருமாலே என்று இராவணன் வாயிலாக உணர்த்துகிருன் கம்பன். இதிலிருந்தும் "ஆயிரம் விரித்த கைம் மாயமள்ள! பதினுயிரம் கைமுதுமொழி முதல்வ!" "கீழேழுலகமும் உற்ற அடியினே!" "இனைத்தென எண்வரப்பறியா யாக்கையை" என்று பரி பாடலில் பாடிய சங்கத்தமிழர்களின் வைணவ சமயமே தன் சமயமெனக் காட்டுகிருன் கம்பன். அடுத்த பாடலில் சிவனைக் குறிக்கும்போது "பித்தனுகிய ஈசன்" என்று பித்தன் என்று சிவனைக் குறிப்பிடுகை யால், சிவபக்தனுன இராவணனும் சிவனைப் பித்தன் என்றே கருதியதாகக் காட்டுகிருன் கம்பன். "பித்தா பிறைசூடி" என்றனர் சிவனடியார்களும். இவற்றிலிருந்து கம்பனுடைய இராவணனும் திருமாலைப் பெரியவனுகவும், சிவனை அவனிலும் தாழ்ந்தவனுகவுமே கருதினுன் என விளங்குகிறது. "சிவனும் நான்முகத்தொருவனும் தேவர்க்கும் தெரியா அவனும்" என்று வரிசைப்படுத்தியது இதைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. "தேவர்க்கும் தெரியா அவன்" என்ற இடத்தில் " திருநெடுமாலாம் அவன் " என்ற பாடபேதமுமுண்டு. இனி கம்பனது கவிநயம் களிநடம் புரியும் இரணியன் வதைப்படலத் தைக் காண்போம்.

## ம. பொ. சி.யின் வாதங்களின் பொருந்தாமை

"இரணியன் வதைப்படலம் இராவணனது மந்திராலோசனைக்குப் பொருந்தாததாகையாலும், இருநூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்ட ஒரு படலம் இவ்விடத்தில் தேவைப்படவில்லையாகையாலும், இப்படலத்தில் சிவநிந்தனைப் பிரசாரம் செய்யப்படுகிறதாகையாலும் இது கம்பன் செய்ததல்ல. வைணவ வைதிகர்களின் இடைச் செருகலே" என்று கூறுகிருர் ம. பொ. சி. இதுவரையில் நாம் எடுத்திருக்கும் பற்பல பாடல்களில் கம்பன் திருமாலையே பரம்பொருளாகவும், வீடளிக்கவல்லவனுகவும், அழியாதவனுகவும் பாடியிருப் பதையும், பிரமனும் சிவனும் பரம்பொருளல்லாத சீவர்களே என் றும், விட்டிலும் வேறுபட்ட பொருளையே தரக்கூடியவர்களென்றும், திருமாலால் படைத்து அளித்து அழிக்கப்படுகிறவர்கள் என்றும் பாடியிருப்பதையும், சிவன் திருமாலிடமிருந்து பிச்சைபெற்றதி லிருந்தே அவன் பரம்பொருளல்லன் என்று விளங்குகிறது என்று விராதன் வதைப்படலத்தில் பாடியிருப்பதையும், இராமனின் முன்னோர் களில் ஒருவன் உருத்திரனையே சாய்த்துவிட்டான் என்று குலமுறை கிளத்துபடலத்தில் பாடியிருப்பதையும் காட்டியிருக்கிறேம். இப் பாடல்களையெல்லாம் காணுதவர்போலிருந்துகொண்டு இரணியன் வதைப்படலத்தில் மாத்திரம் சிவனைத்தாழ்த்திக் கூறியிருக்கிறது என்று



ம.பொ.சி. சொல்லுவது விதண்டாவாதமே. வான்மீகத்தில் இல்லாத ஒரு பெரியபடலத்தைக் கம்பன் தனது காவியத்தில் புகுத்தியிருப்பதின் காரணத்தைப் பல அறிஞர்கள் பலவாருகக் கூறுவர் என்று தமிழறிஞர்களில் தலைசிறந்தவரான மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் (பின்வருமாறு) கூறுவர்.

"இது கம்பநாடரின் புதுப்படைப்பு. முதனூலில் இல்லாதது. இதனை ஆசிரியர் திருவரங்கத்து மேட்டழகர் திருமுன்பு அரங்கேற்றப் புக்கபோழ்து இப்பகுதி முதனூலாகிய வான்மீக ராமாயணத்தில் இல்லையெனச் சிலர் தடைசெய்த காலத்து, முன்பெழுந்தருளியிருந்த நரசிங்கமூர்த்தம் தன் திருமுடி யசைத்து நகைத்துப் பெருமுழக்கம் செய்ததாகவும் அந்த வியத்தகு நிகழ்ச்சியை நினைந்து பெரியோர்கள் அதனை ஏற்றனர் என்பதாகவும் கூறப்படும் செய்தி செவியாறலாக வந்துள்ளது.

"இப்படலம் இயற்றியதற்குப் பற்பல காரணங்கள் பகர்வர்; அவற்றுள் ஒன்று பின்வருமாறு—கம்பர் வடமொழிப் பாகவதத்தையும் தமிழில் ஆக்க எண்ணினர் ; ஆயினும் தமது வாழ்நாட்குள் அது கைகூடுமோ என ஐயுற்று அம்முயற்சியை விடுத்துப் பின்னர்ச் சிரஞ்சீவிகளாய அநுமனையும் வீடணனையும் பாடிச் சிறப்பித்த இவர், மகாபாகவத சிரோமணியும் 'பிரகலாத நாரத பராசர' எனத்தொடங்கி வழங்கும் சுலோகத்தில் முதலிடம் பெற்றவனும், சிரஞ்சீவியுமான, பிரகலாதாழ்வான் வரலாற்றினையேனும் செந்தமிழிற்பாடுவோம் எனக்கொண்டு, இதனைப் பாடிச் சமயோசிதமாகவும், வீடணன் கூற்ருகவும் இராமாயணத்தில் அமைத்தனர் என்ப. இப்படலம் 'இரணியன் கதைப்படலம்' என்று சில பிரதிகளில் காணப்படுகிறது"

இப்படி சைவரான ஐயர் அவர்களே கூறியிருப்பதற்கு முரணுக விதண்டாவாதங்கள் செய்வதன்மூலம் 'எப்படியாவது இரணியன் வதைப்படலத்தைக் கம்பனுடையதல்லாததென்று ஆக்கிவிடவேண்டும்' என்னும் தம் மனப்பான்மையையே காட்டிக்கொண்டவராகிருர் ம. பொ. சி. இவ்விஷயத்துக்கு எத்தொடர்புமில்லாத "வ. பி. வைணவம்" என்னும் நூலை விரிவாக மேற்கோள் காட்டுவதும் இந்த மனப்பான்மையையே வெளிப்படுத்துகிறது. 29—1—84 செங்கோலில் நாம் தாத்தாசாரியாரைத் தரக்குறைவாகப் பழிப்பதாகக் கூறுகிருர் ம. பொ. சி. நாம் இவருக்கு அனுப்பியிருக்கும் "அக்னிஹோத்ரியும் வைணவமும்" எனும் வெளியீட்டில் வைணவ சமூகத்தில் இருகலையிலும் அறிஞர்கள் என்று பெயர்பெற்ற அத்தனைபேரும்

தாத்தாசாரியரின் 'வ. பி. வைணவம்' நூலை நம்மைக் காட்டிலும் கடுமையாகக் கண்டித்திருப்பதை வெளியிட்டிருக்கிறோம். அக்கண்டனங்களுக்கு இன்றுவரை தாத்தாசாரியர் எந்த பதிலும் எழுதவில்லை. இப்படி அவரே மறுக்காமலிருக்கும் கண்டனங்களுக்கு ம. பொ. சி. 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு வாதாடுவது விந்தையிலும் விந்தையாகும். கம்பனின் காவியத்தில் இடைச்செருகல்கள் உண்டு என்பது அனைவரும் அறிந்தது. ஆனால் அவ்விடைச் செருகல்கள் பல பிரதிகளில் காணப்படமாட்டா. கம்பனுடைய நடைக்கு ஒவ்வாத பாடல்களாகவும் அவை இருக்கும். ஆகையால் அறிஞர்கள் அவற்றை ஏற்பதில்லை. அச்சிட்டிருப்பவர்களும் அவற்றை மிகைப் பாடல்களாகவே அச்சிட்டிருக்கிறார்கள். இரணியன் வதைப்படலமோவெனில் கம்பராமாயணப் பிரதிகள் சுவடிகள் அனைத்திலும் காணப்படுகிறது. திருவவதாரப்படலத்தில் பல பாடல்களை மாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பிலும், உ. வே. சா. பதிப்பிலும் மற்றும் பற்பல சைவர்கள் பதிப்பிலும் அப்படியே காணப்படுகிறது. அறிஞர்கள் அத்தனைபேரும் இப்படலத்தில் கம்பனின் கவிநயம் களிநடம்புரிகின்றது என்று கொண்டாடுகிறார்கள். பன்மொழிப் புலவரும் உலகமொழிகளிலுள்ள மகாகாவியங்களையெல்லாம் ஆய்ந்தறிந்த அறிஞர் பெருமகனுமான வ. வே. சு. ஐயர் அவர்கள் "ஸ்ரீபாகவதத்தில் உள்ள பிரகலாத சரித்திரத்தையும், அதை அனுசரித்துப் பொய்மரபோதன்ன ஆந்திரபாகவதத்தில் எழுதிய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணிய வதைப் படலம் வெகு சுலபமாக வென்றுவிட்டது" என்று பாலபாரதத்தில் (மே. 1925) எழுதியிருப்பதையும், கம்பராமாயண அறிஞர்களில் தலைசிறந்தவரான பேராசிரியர் செல்வகேசவராயரவர்கள் "இரணியப்படலம் ஒன்று தவிர ஏனைக் கம்பராமாயணம் முற்றும் அழிந்துவிட்டாலும் பெரிதல்ல. கம்பருடைய கவிதா சாமர்த்தியத்தையும் இயற்கைப் புலமையினையும் காட்ட இப்படலம் ஒன்றுமே போதுமான சான்றாகும்" (தமிழ் கலைக்களஞ்சியம்; பகுதி 3) என்று கூறியிருப்பதையும், தமிழ்ப் பேரறிஞர்களில் ஒருவரான தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் "தவ வலிமை புய வலிமை போன்ற பல திறங்களாலும் விறிப்பெருகிய ஆணவத்திற்கு இராவணனை இரணியனோடு வைத்துப்பார்க்கலாம். இப்படலம் சின்ன ராமாயணம் என்று போற்றத்தக்கது" என்று கருதியிருப்பதையும் ம. பொ. சி. யே எடுத்துக்காட்டியிருக்கிறார். இப்படியிருக்கும்போது "இருநூறு செய்யுட்களைக் கொண்ட படலம் தேவையா?" "இராமனுக்கும் நாராயணனுக்கும் போட்டி" "இராமநாமத்துக்கும் நாராயண



நாமத்துக்கும் போட்டி" முதலான விதண்டாவாதங்களைச் செய்வதும், வைணவத் துரோகியின் நூலை மேற்கோள் காட்டுவதும் ம. பொ. சி. யின் பிடிவாதத்தையே வெளிப்படுத்துகின்றன. ம. பொ. சி. இரணியன் - வதைப்படலத்தைக் கம்பனுடையதல்லாததாக்குவதற்கு முக்கிய காரணம் யாதெனில்: "பிரமன், சிவன் முதலான தெய்வங்களைக் காட்டிலும் திருமாலே தலைசிறந்த பரம்பொருள் என்னும் உண்மையை வெளிப்படுத்தும் நூற்றுக்கணக்கான பாடல்கள் கம்பராமாயணம் முழுதும் ஆங்காங்கு விரவிக்கிடக்கின்றன. அவற்றைப் பொதுமக்களின் பார்வையிலிருந்து மறைத்துவிடலாம். ஆனால் அவை அத்தனைக்கும் சமமான பாடல்கள் நிறைந்துகிடக்கும் இப்படலத்தைக் கம்பனுடையது என்று ஒப்புக்கொள்ளும் வரையில் கம்பன் வைணவன் என்னும் உண்மையை மறைக்கவே முடியாது. ஆகையால் இப்படலத்தைக் கம்பனுடையதல்ல என்று கூறுவதே கம்பனைச் சைவனுக்குவதற்கு எளியவழி" என்னும் அவரது எண்ணமேயாகும். பல பதிப்புக்களில் 176 பாடல்களேயுடைய இரணியன் வதைப்படலத்தைத் தமது நூலின் 59-ம் பக்கத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களைக்கொண்டதென்றும், 65-ம் பக்கத்தில் முந்நூறுக்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்டது என்றும் 102-ம் பக்கம் முதலானவற்றில் இருநூறு செய்யுட்களைக்கொண்டது என்றும் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதிலிருந்தே 'எப்படியாவது இரணியன் வதைப்படலத்தைக் கம்பனுடையதல்லாததாக்கிவிடவேண்டும்' என்னும் இவருடைய எண்ணம் தெளிவாக விளங்குகிறது. ஆகையால் இவருடைய விதண்டாவாதங்களை நடுநிலைநிற்கும் நல்லோர் எவரும் ஏற்கமாட்டார்கள். இனி இப்படலத்தின் பாடல்களைக் காண்போம்.

**"வேதம் கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனே ஈந்தான்**
**போதம் கண்ணிய வரம்அவன் தரக்கொண்டு போந்தான்**
**காதும் கண்ணுதல் மலரயன் கடைமுறை காணுப்**
**பூதம் கண்ணிய வலிஎலாம் ஒருதனி பொறுத்தான்"** [1]

[வேதங்களால் கருதப்பட்ட பொருள்கள் அனைத்தையும் பிரமனே ஆசாரியனாக இருந்து இரணியனுக்கு உபதேசித்தான். தன் அறிவினால் ஆய்ந்து குறிப்பிட்ட வரங்கள் அனைத்தையும் அப்பிரமன் தரப் பெற்று வந்தான். அழிக்கும் தொழிலையுடைய நெற்றிக்கண்ணனான சிவனும், உந்தித்தாமரையில் பிறந்த பிரமனும் முடிவுகாணவொண்ணாத ஐம்பெரும் பூதங்களிடமுள்ள வல்லமைகள் அனைத்தையும் தான் ஒருவனே தாங்கிநின்றான்] என்று பிரமனுக்கும் சிவனுக்கும் பூதங்களுடைய வலிமையை முடிவுகாணமுடியாது என்று கூறியிருக்கையால்

கம்பன் அவ்விருவரையும் சீவர்களாகவே கருதினன் என்று விளங்குகிறது. "கண்ணுதலோன் அயன்" என்று 1914ல் பதிப்பிக்கப்பெற்ற ம. சண்முகம்பிள்ளை பதிப்பில் பாடம் காண்கிறது. "கண்ணுதலோன் அவன்" என்னும் பாடமும் சில பதிப்புக்களில் காணப்படுகிறது. "கண்ணுதல் மாலயன்" என்று சில பதிப்புக்களில் காணப்படும் பாடம் "பூதங்கள் தொறும் உறைந்தால் அவை உன்னைப் பொறுக்குமோ?" என்று கம்பன் விராதன் வதைப்படலத்தில் கூறிய தற்கும், "மாபூதத்தின் வைப்பெங்கும்......உள்ளும் புறத்தும் உளன் என்ப" என்று அயோத்தியாகாண்டக் காப்புப் பாடலில் பாடியதற்கும், மற்றும் பல கம்பராமாயணப் பாடல்களுக்கும் முரணுமாதலால் அநாதரிக்கத் தக்கது.

"எற்றை நாளினும் உளனெனும் இறைவனும் அயனும்
கற்றை அஞ்சடைக் கடவுளும் காத்தளித் தழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினே அதன்புறத் தலவா
மற்றை அண்டத்தும் தன்பெய ரேசொல வாழ்ந்தான்" [2]

என்னும் பாடலில் திருமாலை 'என்றுமேயுள்ள இறைவன்' என்று பரம்பொருளாகக் கூறி, பிரமனுக்கும் உருத்திரனுக்கும் பரம்பொருளுக்குரிய அடைமொழி எதையும் கூருததிலிருந்து கம்பன் பரம வைஷ்ணவன் என்று விளங்குகிறது.

"ஓதப் புக்கவன் உந்தைபே ருரைஎன லோடும்
போதத் தன்செவித் தொளையிரு கைகளாற் பொத்தி
மூதக் கோய்!இது நற்றவம் அன்றென மொழியா
வேதத் துச்சியின் மெய்ப்பொருள் பெயரினை விரித்தான்" [22]

என்னும் பாடலில் பிரகலாதனுடைய ஆசிரியன் அவனை "ஹிரண்யாய நம:" என்று ஓதச்சொன்னவுடன் பிரகலாதன் தன் இருசெவிகளையும் கைகளால் பொத்தி "வேதத்துச்சியான உபநிஷத்துக்களில் பரம்பொருளாக முழங்கப்பெறும் நாராயணனுடைய நாமத்தை ஓதினன்" என்று கூறுகிறுன் கம்பன்.

"ஓ(ம்)ந மோநாரா யணயவென்(று) உரைத்துளம் உருகித்
தான் அமைந்திரு தடக்கையும் தரைமிசைத் தாங்கிப்
பூரி நக்கண்கள் புனலுக மயிர்ப்புறம் பொடிப்ப
ஞான நாயகன் இருந்தனன் அந்தணன் நடுங்க" [23]

என்னும் அடுத்தபாடலில் பிரகலாதன் ஓதிய வேதத்துச்சியின் மெய்ப்பொருட்பெயர் திருவெட்டெழுத்தே என்று காட்டுகிறுன் கம்பன்.



"ஓமித்யேகாக்ஷரம்; நம இதி த்வே அக்ஷரே: நாராயணுயேதி பஞ்சாக்ஷராணி; ஏதத்வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதம்" ['ஓம்' என்பது முதலிலுள்ள ஓரக்ஷரம், 'நம:' என்பது அடுத்துள்ள இரண்டக்ஷரங்கள், 'நாராயணுய' என்பது அடுத்துள்ள ஐந்தக்ஷரங்கள்; இதுவே நாராயணனுடைய எட்டெழுத்து மந்திரமாகும்] என்று நாராயணுேபநிஷத்தில் சொன்ன திருமந்திரத்தையே "வேதத்துச்சியின் மெய்ப்பொருள் பெயர்" என்கிறுன் கம்பன். "வேதத்துச்சியின் மெய்ப்பொருள்" என்று நாராயணனைக் குறிப்பதன் மூலம் சங்கத்தமிழர் முதற்பரிபாடலில் "நின்வலவயின் நிறுத்தும் ஏவல் உழந்தமை கூறும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே!" 'வாய்மொழிப்புலவ!" என்றும், இரண்டாம் பரிபாடலில் "வடு இல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்" என்றும், "நாவல் அந்தணர் அருமறைப் பொருளே!" என்றும், மூன்ரும் பரிபாடலில் "மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர வலந்து, வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும் நீ என மொழியுமால் அந்தணர் அருமறை" "நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ முன்னை மரபின் முதுமொழி முதல்வ!" "பதினுயிரம் கை முதுமொழி முதல்வ!" "கால முதல்வனே, ஏஎ இனகிளத்தலின் இனைமைநற்கு அறிந்தனம்" "வேதத்து மறை நீ" "தொல்லியல் புலவ!" என்றும், நாலாம் பரிபாடலில் "அவை நின்ஓர் அன்ஓர் அந்தணர் அருமறை" என்றும், பதின்மூன்ரும் பரிபாடலில் "பாப்புப்பகையைக் கொடி எனக் கொண்ட கோடாச் செல்வனை ஏவல் இன் முதுமொழி கூறும்" என்றும், பதினைந்தாம் பரிபாடலில் "நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின்" என்றும் முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே தன் சமயம் என்று காட்டுகிறுன் கம்பன். இதைக் கேட்ட ஆசிரியன் வெகுண்டதை அடுத்தபாடலிலும், அதற்கடுத்த பாடலில் பிரகலாதன் விடையையும் கூறுகிறுன் கம்பன்.

"என்னை உய்வித்தேன் எந்தையை உய்வித்தேன் இனைய
உன்னை உய்வித்(து)இவ் வுலகையும் உய்விப்பான் அமைந்து
முன்னை மூலத்தின் முதற்பெயர் மொழிவது மொழிந்தேன்
என்னை குற்றம் நான் இயற்றியது இயம்புதி என்ருன்" [25]

என்னும் அப்பாடலில் "முன்னை மூலத்தின் முதற்பெயர்மொழிவது" என்று திருவெட்டெழுத்தைக் குறிக்கிறுன் கம்பன். 'முன்னை

மூலத்தின் முதற்பெயர்" என்று "ஆதியந்தம் அரி என" என்று காவியத்தின் தொடக்கத்தில் வேதத்தின் முதலிலும் முடிவிலும் சொல்லப்படும் ஹரிநாமமான ஓங்காரத்தைக் கூறி, அந்த ஓங்காரத்தின் பொருளையே திருவெட்டெழுத்து விவரிக்கின்றது என்ற வைணவ சித்தாந்த ஸாரத்தை வெளிப்படுத்துகிறான் கம்பன். "குலந்தரும்" (பெரியதிரு 1-1-9) என்னும் பாட்டிலும் "நாராயணா என்னா நா என்ன நாவே" என்று சிலப்பதிகாரத்திலும் சொல்லப்பட்ட அர்த்தத்தையே இங்கு கம்பன் தழுவிநிற்கிறான் என்று உ. வே. சாமிநாத அய்யர் உரை காட்டும். இதற்கடுத்தபாடல் ஆசிரியனின் வேண்டுகோளைக் கூறுவது. அதற்கடுத்த பாடலிலிருந்து ஏழுபாடல்கள் பிரகலாதன் விடையைக் கூறுவன.

"வேத பாரகன் அவ்வுரை கூறலும் விமலன்
ஆதி நாயகன் பெயரன்றி யான்பிறி(து) அறியேன்
ஓத வேண்டுவ(து) இல்லையென் உணர்வினுக்(கு) ஒன்றும்
போதி யாதும் இல்லையென்(று) இவையிவை புகன்றான்" [28]

என்பது விடையின் முதற்பாடல். இதிலிருந்து நாராயணனே ஆதிநாயகன் என்னும் தன் கொள்கையை ஞானநாயகனை பிரகலாதன் வாயிலாகக் கூறுகிறான் கம்பன்.

"தொல்லை நான்மறை வரன்முறை துணிபொருட்(கு) எல்லாம்
எல்லை கண்டவன் அகம்புகுந்(து) இடங்கொண்ட(து) என்னுள்
இல்லை வேறுஇனிப் பெரும்பதம் யானறி யாத
வல்லை யேல்இனி ஓதுவி நீதியின் வழாத" [28]

என்னும் இரண்டாம் பாடலில் "பழமையான நான்கு வேதங்கள் மரபுவழுவாது தெளிந்த எல்லாப் பொருள்களுக்கும் பேரெல்லையும் முடிவுமாகக் காணப்படும் ஸ்ரீமந்நாராயணன் என் மனத்தின் உள்ளே புகுந்து அதனைத் தன் இருப்பிடமாகச் செய்துகொண்டான். இனி என்னால் அறியப்படாது வேருகவுள்ள பெரிய திருநாமமில்லை. வன்மையுடையை ஆகில், வேத நீதிக்கு முரண்படாத பொருள் ஏதேனும் உண்டெனில் போதிப்பாயாக" என்று கூறுவதாக உ. வே. சா. வின் பதவுரை விளக்கும். "தொல்லை நான்மறைத் துணிபொருள்" என்னும் தொடருக்கொப்பாக இரண்டு கம்பன் பாட்டுக்களையும் காட்டும். இதிலிருந்து கம்பன் இப்படலத்தில் மாத்திரமல்லாமல் கம்பராமாயணம் முழுவதுமே வேதநெறிக்கு முரண்படாது வைணவனுகவே காட்சி அளிக்கின்றான் என்பதே தமிழ்த்தாத்தாவின் கருத்து என விளங்குகிறது.



"ஆரைச் சொல்லுவ தந்தண ருமறை யறிந்தோர்
ஓரச் சொல்லுவ தெப்பொரு ளுபநிட தங்கள்
தீரச் செய்வினை தேவரும் முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவ தல்லது பிறிதுமொன் றுளதோ" [29]

என்று "அருமறையறிந்த அந்தணர்களும், உபநிடதங்களும், தேவரும் முனிவரும், பரம்பொருளாகச் சொல்லும் திருமாலின் திருநாமத்தைச் சொல்லுவதைக் காட்டிலும் வேறொரு சிறந்த பெயரும் சொல்லுவதற்கில்லை" என்று மூன்றும் பாடலில் பிரகலாதன் வாயிலாக முழங்குவதிலிருந்து "அவை நின்றோர் அன்றோர் அந்தணர் அருமறை" "மாயா வாய்மொழி உரைதர" "நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின்" "கெடு இல் கேள்வியில் நடுவாகுதலும்" "பாப்புப்பகையைக் கொடியெனக்கொண்ட கோடாச்செல்வனை ஏவலில் முதுமொழி கூறும்" "ஏஎ இன கிளத்தலின் இனமை நற்கு அறிந்தனம்" "வேதத்து மறை நீ" "வாய்மொழிப் புலவ" "தொல்லியல் புலவ" "புகரறு காட்சிப் புலமும் நீ" முதலான பலவிடங்களில் பரிபாடலில் சங்ககாலச் சான்றோர்கள் திருமால் ஒருவனையே வேதங்கள் முழங்கும் பரம்பொருளாகக் கொண்டதைப் பின்பற்றியவன் கம்பன் என்று விளங்குகிறது.

"வேதத் தானும் நல் வேள்வியி னுனுமெய் யுணர்ந்த
போதத் தானுமப் புறத்துள வெப்பொரு ளானும்
சாதிப் பார்பெறும் பெரும்பதந் தலைக்கொண்டு சமைந்தேன்
ஓதிக் கேட்பது பரம்பொரு ளின்னமொன் றுளதோ" [30]

என்ற அடுத்த பாடலிலும் பிரகலாதன் வாயிலாக இதையே வலியுறுத்துகிறான் கம்பன். "பரம்பொருளின்னமொன்றுளதோ" என்று அழுத்தமாகக் கேட்பதிலிருந்து கம்பன் பரம வைஷ்ணவன் என்று விளங்குகிறது.

"செவிகளாற் பல கேட்டில ராயினும் தேவர்
அவிகொள் நான்மறை யகப்பொருள் புறப்பொரு ளறிவார்
கவிக ளாகுவர் காண்குவர் மெய்ப்பொருள் காலாற்
புவிகொள் நாயகற் கடியவர்க் கடிமையிற் புக்கார்" [32]

என்னும் பாடலில் "காலாலுலகமளந்தவனை திருமாலே உலகிற்கு நாயகன்" என்றும் "அவனுடைய அடியார்க்கடியார்கள் கேள்வி ஞானமில்லாதவராயினும் எல்லா அறிவையும் பெற்றவராவர்" என்றும் கூறுவதிலிருந்து உலகளந்த திருமாலே பரம்பொருள் என உணர்த்து

கிறுன் கம்பன். ''மேழுலகமும் உற்ற அடியினை'' முதலான இடங் களில்சங்கத்தமிழர் அறுதியிட்ட முடிவைத் தழுவியபடி இது.

''எனக்கும் நான்முகத் தொருவற்கும் யாரினு முயர்ந்த
தனக்கும் தன்னிலை யறிவரு மொருதனித் தலைவன்
மனக்கு வந்தனன் வந்தன யாவையு மறையோய்
உனக்கு மின்னதி னல்லதொன் றில்லென உரைத்தான்'' [33]

என்னும் பாடலில், திருமாலே யாவரிலும் உயர்ந்தவன் என்றும், நான் முகனும் தன்னும்கூடத் தன்னுடைய பெருமையை அறியமுடியாத ஒரு தனித்தலைவன் என்றும் கூறியிருப்பது ''ஸோ அங்க வேத யதி வா ந வேத''[யஜு] [அப்பரமாத்மா தன் பெருமையைத் தானே அறிவானே மாட்டானோ?] ''தனக்கும் தன் தன்மை அறிவரியானை'' [திருவாய் 8-4-6] ''தாம் தம் பெருமை அறியார்'' [பெரியதிரு 5-2-1] ''உன் னைப் புரை நினைப்பின் நீயலது உணர்தியோ முன்னைமரபின் முது மொழி முதல்வ'' [பரிபாடல்] என்று முழங்கப்பட்ட திருமாலின் முதன்மையை ஏற்றுக்கொண்ட பரமவைஷ்ணவன் கம்பன் எனக் காட்டுகிறது. இவ்வாறு பிரகலாதன் விடைகூற, அந்தணன் அவனை இரணியனிடம் அழைத்துச்செல்ல, இரணியன் 'நீ என்ன சொன்னுய்?' எனப் பிரகலாதனை வினவுகிறுன். அப்போது பிரகலாதன்,

''சுருதி யாதியில் தொடங்குறு மெல்லையிற் சொல்லும்
ஒருவன் யாவர்க்கும் நாயகன் திருப்பெயருணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத் திடர்க்கடல் கடக்க
உரிய மற்றிதின் நல்லதொன் றில்லென வுரைத்தான்'' [40]

என்று ''வேதங்கள் தொடங்கும்போது 'ஹரி: ஓம்' என்று எவனு டைய பெயர் சொல்லப்படுகிறதோ, அவனே அனைவர்க்கும் நாயகன். அவனுடைய திருநாமத்தையே நான் சொன்னேன். துன்பக்கடலைக் கடப்பதற்கு அதைவிடச் சிறந்ததொன்றுமில்லை'' என்று கூறுகிறுன். காவியத்தின் தொடக்கத்தில்,

''ஆதியந்தம் அரியென யாவையும்
ஓதினர் அலகில்லனவுள்ளன வேதமென்பன''

என்று கூறியதையே ''சுருதியாதியில் தொடங்குறுமெல்லையில் சொல்லும் ஒருவன்'' என்று கூறுகிறுன் என்பது வெளிப்படை. இதி லிருந்து கம்பன் தன் காவியத்தில் தொடக்கத்திலிருந்து இறுதிவரை விஷ்ணுபரத்துவத்தையே வலியுறுத்தி வருகிறுன் என விளங்குகிறது. அடுத்த பாடலில் ''அது என்ன என்று சொல்லுவாய்'' என்று இரணியன் கேட்க,



''காமம் யாவையும் தருவது மப்பதங் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதும் செந்தழல் முகந்த
ஓமவேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேள் நமோ நாராயணாய'' [42]

என்னும் பாடலில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் தருவதும் ஒப்பற்ற திருமாலின் திருவெட் டெழுத்தேயாகும் என்கிறுன் பிரகலாதன். இங்கு ''குலந்தரும்'' [பெரியதிருமொழி 1-1-9] என்று தொடங்கும் திருமங்கையாழ்வாரின் பெரியதிருமொழிப் பாடலைக் கம்பன் அடியொற்றியிருப்பது வெளிப் படை. அடுத்த பாடலில் உலகிலுள்ள அறிவாளிகள் அனைவரும் இவ்வெட்டெழுத்தையே எண்ணுகிருர்கள் என்று கூறி,

''முக்கண் தேவனும் நான்முகத் தொருவனு முதலா
மக்கட் காறுமிம் மந்திர மறந்தவ ரிறந்தார்
புக்குக் காட்டுவ(து) அரிதுஇது பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கின ரல்லவ ரிதன்நிலை யுணரார்'' [43]

என்னும் அடுத்தபாடலில் ''முக்கண்ணனுகிற சிவனும் நான்முகனும் மற்ற எல்லா சீவர்களும் இந்த மந்திரத்தை மறந்தார் என்ருல் அவர்கள் இருந்தும் இல்லாதவரேயாவர்'' என்று கூறுவதிலிருந்து கம்பன் வைணவர்களில் முன்நிற்பவன் என்று விளங்குகிறது. இப் பாடலைக்கண்டு வயிறெரிந்தே ம. பொ. சி. இரணியன் வதைப் படலமே கம்பனுடையதல்ல என்று விதண்டாவாதம் செய்கிருர். மேலும் சில பாடல்களிலும் பிரகலாதன் திருவெட்டெழுத்தின் பெரு மையைக் கூற, இரணியன் கடும்கோபங்கொண்டு பிரகலாதனைப் பல பாடல்களில் பழித்துத் தானே முழுமுதற்கடவுள் என்று கூறிக் கொள்கிறுன். பிரகலாதன் இதற்குப் பல பாடல்களில் விடையிறுக் கிறுன். அவை எல்லாமே சங்ககாலத் தமிழர் கண்ட பரமவைதிகமத மான விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை விரித்துரைப்பவை. ஆழ்வார் களுடைய பாடல்களையும் பகவத்கீதை முதலான சாஸ்திரங்களையும் அடியொற்றியவை.

''ஓராவுதி கடைமுறை வேள்வி யோம்புவோர்
அராவணை அமலனுக் களிப்ப ராலது
சராசர மனைத்தினுஞ் சாருமென்பது
பராவரு மறைப் பொருள் பயனு மன்னதால்'' [68]

என்பது அவற்றில் முக்கியமான பாடல். இதற்கு ''திருமாலே வேள்விகளால் ஆராதிக்கப்படும் பரம்பொருள்; அவனுக்களிக்கும்

பூர்ணாஹுதி எல்லாவுயிர்களுக்கும் சென்றுசேரும். ஓமம் செய்யுங்கால் எஞ்சியுள்ள நெய் முதலிய ஓமதிரவியங்களை 'ஸ்ரீவிஷ்ணவே ஸ்வாஹா' என்று உரைத்து ஒரே ஆஹுதியாய் ஓமம்செய்வர்; அது சராசரமனைத்தினும் சாரும் என்பது கூறப்பட்டது. 'எல்லா நதிகளும் கடலில் சேர்ந்து சங்கமமாதல்போன்று எந்தத்தேவதைகளை வணங்கினாலும் அந்த வணக்கம் கேசவனையே சார்கின்றது' என்றதும் ஒப்புநோக்குக" என்று உ. வே. சாமிநாதய்யர் உரை எழுதி யிருப்பது காணத்தக்கது. இதிலிருந்து அந்தணர் அனைவரும் பரம்பொருளாகக்கொண்ட திருமாலையே கம்பனும் பரம்பொருளாகக் கொண்டவன் என விளங்குகிறது. பிரகலாதனின் இவ்வுரையைக் கேட்ட இரணியன் கடும் சீற்றம்கொள்கிறான். அவனைக்கொல்லக் கட்டளையிடுகிறான். ஏவலாளர்களின் கொடுமைகள் பயனற்றவை யாயின. பிரகலாதனை நெருப்பில் வீழ்த்தியவுடன் "அரியென்று தொழுதுநின்றனன் நாயகன் தாளிணை குளிர்ந்தது சுடுதீயும்" [85]. நாகங்களைப் பிரகலாதன்மீது ஏவினர். திருப்பெயர் மறவாதானை பிரகலாதன் அப்போதும் துடித்திலன். பாம்புகளின் விடம் அமுதமா யிற்று. திக்குயானையை ஏவினர். அப்போது பிரகலாதன்—

"எந்தாய்! பண்டொ ரிடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதற்பொரு ளேயென்று
உந்தாய் தந்தை யினத்தவ னேத
வந்தான் என்றன் மனத்தின னென்றான்" [93]

என்னும் பாடலில் "கஜேந்திரன் மூல முதற்பொருளே! என்று கூப்பிட்டபோது வந்து உதவின திருமால் என் மனத்திலிருக்கிறான்" என்று கூறினவுடன் யானை அவனைத்தொழுது அஞ்சி அகன்றது. திருமாலின் முதன்மையைத் தெளிவாகக் காட்டும் இந்த கஜேந்திர விருத்தாந்தத்தைக் கம்பன் தன் காவியத்தில் பற்பல இடங்களில் பாடி யிருப்பதிலிருந்தே அவன் பரம வைஷ்ணவன் என விளங்குகிறது. சிவனுக்குப் பரத்துவத்தைக் கூறும் அடிமுடி தேடிய கதை முதலான சங்க நூல்களில் காணப்படாத பொய்க்கதைகளைக் கம்பன் எவ்விடத்திலும் தொடாயலிருப்பதிலிருந்தும் இது வலியுறுத்தப்படுகிறது. அதற்கு மேல் இரணியன் கடும் கோபம்கொண்டு அந்த யானையைக் கொல்லச் சொன்னான். அது பயந்து பிரகலாதனை தந்தத்தால் குத்திற்று. அந்த தந்தங்கள் வாழைத்தண்டுபோல் ஒடிந்தன. உடனே பிரகலாதனைக் கடலில் தள்ளிவிட இரணியன் கட்டளையிட்டான். பிரகலாதன் நடுநிலை தவறாத ஒப்பற்ற தலைவனான நாராயணனின் நாமத்தைச் சொல்லுகையாலே கடல் ஒரு பள்ளம்போன்று விளங்க,



பிரகலாதனைப் பிணித்திருந்த மலை குடுவை போலானது. கடலில் அவன் மூழ்கவில்லை. இவ்விடத்தில்

"ஆதிப்பண்ணவன் ஆயிரநாமம்
ஓதுற்றான் மறை யொல்லையுணர்ந்தான்" [103]

என்று கூறுகிறான் கம்பன். இதிலிருந்தும் வேதங்களில் கூறப்படும் ஆதிமுதல்வன் திருமாலே என்னும் கம்பனது கருத்து விளங்குகிறது. அப்பொழுது ஆலிலைக்கண்ணன் போலே விளங்கினான் பிரகலாதன் என்கிறான் கம்பன். இதிலிருந்தும் பிரளயகாலத்தில் அனைத்தையும் தன் திருவயிற்றிலேயொடுக்கித் துயிலும் திருமாலையே முழுமுதல் வனாகக்கொண்டவன் கம்பன் என விளங்குகிறது. அடுத்தபடியாகப் பல பாடல்களால் திருமாலைத் துதிக்கிறான். "கொடியாய் குறியாய் குணமேதுமிலாய் நெடியாய்"என்கிறான் அவன். "குணமேதுமிலாய்" என்றது மூலப்ரக்ருதியின் குணங்களான சத்துவம் முதலானவை இல்லாத ஸ்வரூபத்தையுடையவன் என்பதைக் காட்டுகிறது.

"வரு நான்முக னைம்முகன் வானவர்கோன்
திருநான்மறையின் நெறியே திரிவார்
பெரு நாள் தெரிகின்றிலர் பேதைமையேன்
ஒருநாளுனை யெங்ஙன முள்ளுவெனோ" [106]

என்னும் பாடலில் "வேதநெறிப்படி ஒழுகும் நான்முகனும், ஐந்து முகத்தையுடைய சிவனும், இந்திரனும் நீண்டநாளாக உன் பெருமையை உணர்ந்திலர்" என்கிறான் "பெண்ணுலாம் சடையினானும் பிரமனுமுன்னைக் காண்பான் எண்ணிலாவூழியூழி தவம் செய்தார்" [திருமாலை 44] என்னும் ஆழ்வார்களின் கொள்கையைப் பின்பற்றிய பரமவைணவன் கம்பன் என்று இதிலிருந்து விளங்குகிறது.

"செய்யா தனவோ வினைதீ வினைதான்
பொய்யா தனவந் துபுணர்ந் திடுமால்
மெய்யே யுயிர்தீர் வதோர்மேல் வினை நீ
ஐயா வொருநா ளுமயர்த் தனையோ" [107]

[அடியேன் புரியாத பாபச்செயல்களோ இல்லை; அவைகளின் விளைவுகள் தவறாது வந்து என்னையே அடையும்; இது உண்மையே; தலைவனே! உயிரானது அக் கர்மம் விட்டு நீங்கும்படியான ஒப்பற்ற சிறந்த அருட்செயலை ஒருபொழுதேனும் நீ என் விஷயத்தில் மறந்தனையோ] என்னும் பாடலில் திருமாலே தன் அடியார்களுக்கு வினைகள் அனைத்தையும் தீர்க்கக்கூடியவன் என்று கூறு

கிருன். "இருவினையுமில ஏத்துமவை" என்று சங்கத்தமிழர் திருமாலைப் பற்றிய பரிபாடலில் கூறிய பரம்பொருளிலக்கணமே இங்கு கம்பனுலும் திருமாலுக்குச் சொல்லப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

"ஆயப் பெறுநன் னெறிதம் மறிவென்று
ஏயப் பெறுமீ சர்களெண் ணிலரால்
நீயப் புறநிற் கநினைக் கிலர் நின்
மாயப் பொறிபுக் குமயங் குவரால்" [108]

[ஆராய்ந்து பெறத்தக்க சிறந்த வழியாவது தமதறிவே என நினைந்து அந்த ஞானமே உயர்ந்ததெனக் கருதும் தேவர்கள் கணக்கற்றவர்கள். நீ அவர்களுடைய அறிவையும் கடந்து நிற்கையால் அவர்கள் உன் உண்மை நிலையைச் சிந்திக்க இயலாதவர்களாகி உனது மாயையாகிற பிரகிருதியில் அகப்படுத்தும் இந்திரியங்களுக்கு வசப்பட்டுக் கலங்குவர்.] என்னும் பாடலில் எல்லா தேவர்களும் அஹங்காரத்தாலே கலங்கி, புலன் வசப்பட்டு உன்னை அறியமாட்டார்கள் என்று கூறுவதன்மூலம் பரதத்துவ நிர்ணயம் செய்கிருன்.

"தாமே தனிநா யகரா யெவையும்
போமே பொருளென் றபுரா தனர்தாம்
யாமே பரமென் றனரென் றவர்க்கு
ஆமே பிறர்நின் னலதா ருளரே" [109]

[தாங்களே நிகரற்ற முதல்தலைவர்களாய் எல்லாப்பொருள்களும் தங்களுக்குத் தெரியும் என்று கூறிய பழமையான அந்த தேவர்கள் (ஆகமபுராண நூல்களில்) தாங்களே பரம்பொருள் என்று மொழிந்தனர். இவ்வாறு கூறிய அவர்களுக்கு அந்தப் பரத்துவம் சித்திக்குமோ? (சித்தியாது). உன்னையன்றி வேறுயார் பரம்பொருளாவார்?] என்னும் பாடலில் மற்ற தேவர்களும் தங்களையே பரம்பொருள் என்று சில நூல்களில் கூறிக்கொண்டாலும் அவர்களுக்கு முதன்மை தேருது என்று தெளிவாகக் காட்டுகிருன் கம்பன். இத்தகைய பாடல்கள் நிறைந்திருக்கையாலேயே இப்படலத்தையே கம்பனுடையதல்ல என்று விதண்டாவாதம் செய்கிருர் ம. பொ. சி. என்பது வெளிப்படை.

"ஆதிப் பரமா மெனிலன் றெனலாம்
ஓதப் பெருநூல் களுலப் பிலவால்
பேதிப் பனநீ யலைபேர் இலையால்
வேதப் பொருளே விளையா டிதியோ" [110]



[(ஒரு தெய்வத்தை) முதற்பரம்பொருளாகுமென்று (எவரேனும்) கூறினுல் (அதனை மறுத்து வேருெருவர்) அவ்வாறு அன்று எனப் பகர்தல்கூடும். இவ்வண்ணம் மாறுபட்டுக் கூறுவதற்கு ஏதுவாகப் பெருமைசான்ற நூல்கள் கணக்கற்றன. அவை தம்முள் மாறுபடுவன; (ஆனுல் பரம்பொருளாயுள்ள) நீயோ மாறுவதில்லை. நான்மறைகளில் கூறப்பட்ட பரம்பொருளாய் உள்ளவனே! இது உன் திருவிளையாடலோ?] என்னும் பாடலில் முன்பாடலில் சொன்னதையே வலியுறுத்துகிருன்.

"அம்போ ருகனு வரனு வறியார்
எம்போ லியரெண் ணிடினென் பலவாக்
கொம்போ டடைபூக் கனிகா யெனினும்
வம்போ மரமொன் றெனும் வாசகமே" [111]

[(உன் உண்மைப் பெருமையைத்) தெரியாதவரான என்னைப்போன்ற சீவர்கள் (உன்னையே பரம்பொருளாக எண்ணுமல் உன்னைப் பிரமனுகவும் சிவனுகவும் பலபொருள்களாகக் கருதினுல் அஃது எப்படிப் பொருந்தும்? கிளையும் காயும் கனியும் என்று குறிக்கும்படி பல பொருள்களாக விளங்கினுலும் மரம் ஒன்றுதான் என்று சொல்லும் சொல் புதுமையானதோ?] என்னும் பாடலில் தான் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவன் என்பதை மிகத் தெளிவாகக் காட்டினுன் கம்பன்.

"பரம்பொருள் திருமாலாயிருக்க அது சிவன் என்றும் பிரமனென்றும் கூறி மயங்குவர். அச்சிவபெருமானும் பிரமனும் மரத்தின் உறுப்புக்களாகிய பூ இலைபோன்று பரவஸ்துவாகிய உன் அங்கங்களே; அவற்றிற்கு மூலமாய் நிற்கும் மரம்போன்ற மூலப்பொருள் நீயே என்பது கூறப்பெற்றது" என்று இவ்விடத்தில் உ. வே. சாமிநாதய்யர் உரை எழுதியிருப்பது நடுநிலையாளர்களால் குறிக்கொள்ளத் தக்கது.

"நின்னிற் பிறிதாய் நிலையிற் றிரியா
தன்னிற் பிறிதா யினதா மெனினும்
உன்னிற் பிறிதா யினவோ வுலகம்
பொன்னிற் பிறிதா லபொற் கலனே" [112]

[உலகங்கள் உன்னிடத்தினின்றும் வேருகி நிலைமைமாறித் தத்தம் தன்மைகளில் திரிந்து தமக்குள்ளே பலவேறு வகைப்பட்டனவாணுலும்

உன்னினின்றும் வேறுபட்டனவாகிவிடுமா?, பொன்னாற்செய்யப்பட்ட ஆபரணங்கள் அந்தப் பொன்னினின்றும் வேருகக் கருதப்படுவதில்லையே.] என்னும் பாடலில் "பொன்கொண்டு செய்யப்பட்ட அணிகள் பலவும் பொன் அடைந்த மாறுதல்களாகவே அதினின்று வேறுபடாததுபோல் உன்னிலும் வேறல்ல" என்னும் கருத்தைக் கூறியிருக்கையால் உலகிற்கு நிமித்தகாரணமாக மாத்திரமல்லாமல் உபாதான காரணமாகவும் இருப்பவன் நாரணனே என்னும் விசிஷ்டாத்வைத வேதாந்தக் கருத்தைத் தழுவியவன் கம்பன் என்று விளங்குகிறது. "மூலமும் நடுவும்" என்று தொடங்கும் சுந்தரகாண்டப் பாடல் பிரமனும் சிவனும் திருமாலின் அவயவங்களே (பகுதிகளே) என்னும் இவ்விருபாடல்களின் கருத்தைத் தழுவியதாகையால் ம. பொ. சி. கூறுவதுபோல் மும்மூர்த்திகளும் இராமனாகப் பிறந்தனர் என்று அப்பாடலிலிருந்து தேருது என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். "பூவனும் நீ-ஒருவனும் நீ" என்று முதற்பரிபாடலில் சங்கத்தமிழரும் இக்கருத்தையே தழுவினர்.

> "தாய்தந்தை யெனும் தகைதந் தனைதான்
> நீதந் தனைநீ யுறுநெஞ் சினன்நான்
> நோய்தந் தவனே நுவல்தீர் வுமெனு
> வாய்தந் தனசொல்லி வணங் கினனல்" [113]

[தாயும் தந்தையும் என்று சொல்லப்படும் அன்பின் தன்மையுடன் வந்து என்னை நீ படைத்தருளினாய். நீ எழுந்தருளியிருக்கப்பெற்ற உள்ளத்தையுடையவன் அடியேன். அடியேனுக்குப் பிறவிப் பிணியைக் கொடுத்தவனாகிய நீயே அப்பிணிக்குச் சிறப்பான மருத்துவனுவாய் என்று உண்மையான சொல்லைச் சொல்லி வணங்கினன்.] என்னும் பாடலில் பிறவிப் பிணிக்குத் திருமாலே மருந்தாவான் என்று சொல்லித் துதியை முடிக்கிருன் பிரகலாதன். "மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி மணிநிகழ் உருபின் மாஅயோயே" "நாறிணர்த் துழாயோன் நல்கினல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" என்று பரிபாடலில் சங்கத்தமிழர் காட்டிய வைணவ சமயத்தைப் பின்பற்றி நிற்பவனே கம்பன் என்று இதிலிருந்தும் விளங்குகிறது. இப்படிப் பிரகலாதன் துதியில் பரதத்துவநிர்ணயம் செய்திருப்பதற்காகக் கம்பனுடைய இப்படலத்தையே கம்பனுடைய தல்லாததாக்கிய ம. பெ. சி. விராதன் துதி முதலான மற்றும் பலவிடங்களில் கம்பன் செய்திருக்கும் பரதத்துவநிர்ணயத்திற்கு என்ன சொல்லுகிருர் என்பது உலகிற்குத் தெரியவேணும்.



அடுத்தபடியாகப் பிரகலாதனுக்கு விஷங்கொடுத்தும் அவன் இறவாததைப் பார்த்து, குதிரைச் சம்மட்டிகளால் அவனை அடிக்கச்செய்தான். அப்போது,

> "வெய்யார், முடிவு இல்லவர், வீசியபோது,
> 'உய்யான்' எனும் வேலையின் 'உள் உறைவோன்
> கை ஆயிரம் அல்ல; கணக்கு இல' என்று,
> எய்யா, உலகு யாவையும் எண்ணினனல்" [116]

*[கொடுமையே உருவானவர்களும் எண்ணிறந்தவர்களும் ஆகிய அசுரர்கள் (குதிரைச் சம்மட்டிகளைக் கொண்டு பிரகலாதனை) அடித்துத் துன்புறுத்தியபொழுது (கண்டோர், 'இனி இவன்) பிழைக்கமாட்டான்' என்றெண்ணிய அச் சமயத்தில், '(உயிர்க்குயிராய் என் நெஞ்சத்தின்) உள்ளே எழுந்தருளியிருப்பவனுகிய திருமாலுக்குக் கைகள் ஆயிரம் என்னும் அளவிற்பட்டு அடங்குவன அல்ல; எண்ணிறந்தனவாகும்' என்று அறிந்து, எல்லா உலகங்களுமாய் விளங்கும் அம் முதல்வனது பேருருவினைத் தன்னுள்ளத்துள்ளே தியானித்துக் கொண்டிருந்தான் (பிரகலாதன்).] என்னும் பாடலில் புருஷஸூக்தத்தில் கணக்கற்ற கைகளையுடையவனுகக் கூறப்படும் பரம்பொருள் திருமாலே என்று காட்டுவதன்மூலம் தான் பரம வைணவன் என்பதை நிலைநாட்டுகிருன் கம்பன். "ஆயிரம் விரித்த கைம்மாயமள்ள! பதினுயிரம் கை முதுமொழிமுதல்வ! நாருயிரம் கை ஆறு அறிகடவுள்! அனைத்துமல்ல பலஅடுக்கல் ஆம்பல் இனைத்தென எண்வரைப்பறியா யாக்கையை" என்று பரிபாடலில் சங்ககாலத் தமிழர் பாடிய திருமாலின் முதன்மையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவன் கம்பநாடன் என்பது இதிலிருந்து விளங்குகிறது. இப்படிப் பிரகலாதனைப் பலவகையாகக் கொல்ல முயன்றும் அவன் இறவாமையை அறிந்த இரணியன் 'யானே இவனுயிரை உண்பேன்' என முழங்கிக்கொண்டு அவனை நெருங்கினன். அப்போது பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலில் திருமாலின் முதன்மையைக் கையிலங்கு கனியாகக் காட்டுகிருன் கம்பன்.

> "வந்தானை வணங்கி, என் மன்னுயிர்தான்
> எந்தாய்! கொள எண்ணினையேல், இதுதான்
> உந்தாய்; அரிது அன்று; உலகு யாவும் உடன்
> தந்தார் கொள நின்றதுதான் எனவும்" [118]

---

* அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பிலுள்ளபடி பொழிப்புரைகள் இங்கு தரப்படுகின்றன.

[(யானே உயிர் உண்பன் என்று கூறி) வந்தவனாகிய இரணியனை(ப் பிரகலாதன்) வணங்கி, 'என் தந்தையே! எனது நிலைபெற்ற உயிரை நீ கவர்ந்துகொள்ள எண்ணினையாயின் இதோ எடுத்துக்கொள்; (எனது உயிர் தந்தையாகிய உனக்குக் கொடாது பேணிவைத்தற்குரிய) அரிய பொருள் அன்று; (ஆயினும்) இவ்வுயிர் எல்லாவுலகங்களையும் ஒரு சேரப் படைத்தவராகிய திருமால் (ஒருவரே) ஏற்றுக்கொள்ளும் வண்ணம் (இவ்வுடலில்) நிலைபெற்று நிற்பதாகும்' என்று கூற,] என்பது அதில் முதற்பாடல். "மூவேமுலகமும் உலகினில் மன்பதும் மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர" என்று சங்ககாலத் தமிழர் கைக்கொண்ட பரமவைதிகமதமான வைணவமே கம்பநாடனுல் பின் பற்றப்பெற்றது என்று இதனாலும் விளங்குகிறது. இதைக்கேட்ட இரணியன் வெகுண்டு 'உலகம் தந்தவன் எவன்!' என்று சீறுகிருன், அதற்குவிடையாய் அமைந்த பாடல்களில்,

"உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும், உள் உற்று
உலைவு இலா உயிர்கள் தோறும் அங்கு அங்கே உறைகின்ருனும்
மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும் மான, எங்கும்
அலகுஇல் பல்பொருளும் பற்றி முற்றிய அரிகாண் அத்தா" [120]

[(அதுகேட்ட பிரகலாதன் இரணியனை நோக்கி) 'என் அப்பனே! உலகங்களைப் படைத்தவனும், பிறவி பேதங்களால் பல வேறு வகைப்பட்ட உயிர்களைப் படைத்தவனும், அழிவில்லாதனவாகிய அவ்வுயிர்களின் உள்ளே உயிர்க்குயிராய்ப் பொருந்தி அங்கங்கே எழுந்தருளியிருப்பவனும் (ஆகிய இறைவன் யாவன் எனின்) மலரின் கண்ணே மணமும் எள்ளில் எண்ணெயும் போன்று எங்குமுள்ள அளவில்லாத பல பொருள்களையும் தன்னகத்தே கொண்டு பிரிவின்றி நிறைந்து நிற்கும் திருமாலே என்று அறிவாயாக.] என்பது முதற்பாடல். இது கொண்டும் சங்ககாலத் தமிழர் கைக்கொண்ட வைதிகமதமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தையே ஏற்றுக்கொண்டவன் கம்பன் என விளங்குகிறது.

"என்கணுல் நோக்கிக் காணுய்,
எங்கணும் உளன்காண், எந்தை!
உன்கண் நான் அன்பிற் சொன்னுல்
உறுதி என்று ஒன்றும் கொள்ளாய்;
நின்கணுல் நோக்கிக் காண்டற்கு
எளியனே? நினக்குப் பின்னேன்
பொன்கணுன் ஆவி உண்ட
புண்டரீகக்கண் அம்மான்" [121]



[என் தந்தையே, (நின் மகனாகிய) யான் நின்பால் வைத்த அன்பினுற் கூறுவதனை உறுதியுடையதென்று சிறிதும் ஏற்றுக் கொள்கின்றிலே. உனக்குத் தம்பியாகிய இரணியாட்சனுடைய உயிரைக் கவர்ந்த செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய திருமாலாகிய இறைவன் எவ்விடத்தும் நீக்கமறக் கலந்துள்ளான், (அவன், தன்பால் அன்பின்றிப் பகைமை பாராட்டும்) உன்னுடைய கண்களால் குறித்துக் காணுதற்கு எளியன் ஆவானோ? (அவன்பால் அன்புடைய அடியவனாகிய) என்னுடைய கண்களால் (அவனைக்) காண்பாயாக;] என்னும் அடுத்த பாடலில் "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" [சூரியனுக்கு நடுவில் இருக்கும் அப்பரம் பொருளுக்கு சூரியனுல் மலர்ந்த தாமரைபோன்ற இருகண்கள் உள] என்று சாந்தோக்கிய உபநிஷத்தில் உரைக்கப்பெற்ற பரம்பொருளான புண்டரீகாக்ஷனே தான் கூறிய ஸர்வாந்தர்யாமி என்று முழங்குவதன்மூலம் இதையே வலியுறுத்துகிருன். இதைக்கேட்ட இரணியன் ஒரு தூணைக்காட்டி "அக்கள்வன் இத்தூணினுள்ளே நிலைபெற்றுள்ளான் என்பது உண்மையாயின் அதை எனக்குப் புலப்படுத்துவாய்" என்று கூறினுன்.

"சாணினும் உளன்; ஓர் தன்மை
அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்; மாமேருக்
குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன
சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவின் என்ருன்;
நன்று எனக் கனகன் சொன்னுன்" [124]

[(அது கேட்ட பிரகலாதன், 'யான் சொன்ன இறைவனாகிய முதல்வன்) சாண் என்னும் அளவினதாகிய பொருளிலும் அடங்கியுள்ளான், (பிரிவுபடாமையால்) ஒன்றொன்றுந்தன்மையினையுடைய நுண்ணிய அணுவினை நூருகப் பகிர்ந்த நுண்ணிய பகுப்பிலும் உள்ளான். மிகப்பெரிய மேருவாகிய மலையிலும் (நீண்டு) பரவியுள்ளான். இதோ நிற்கின்ற இத்தூணிலும் உள்ளான். நீ சொல்லிய சொல்லிலும் கலந்துள்ளான். (இறைவனது இயல்பாகிய) இத்தன்மையினை (யான்காட்ட) நீ விரைவில் காண்பாய்'எனக் கூறினுன். இரணியன் (கேட்டு) 'மிகவும் நன்று' என உடன்பட்டுப் பின்வருமாறு கூறினுன்.] என்னும் பாடலில் எல்லாப்பொருள்களிலும் திருமால் நிறைந்துள்ளமையை நான் காட்ட நீ விரைவில் காண்பாய் என்ருன் பிரகலாதன்,

"உம்பர்க்கும் உனக்கும் ஒத்து
இவ் உலகு எங்கும் பரந்துளானே,
கம்பத்தின் வழியே காண
காட்டுதி; காட்டாய் ஆகில்,
கும்பத்தின் கரியைக் கோளமாக்
கொன்றென, நின்னைக் கொன்று உன்
செப்பு ஒத்த குருதி தேக்கி,
உடலையும் தின்பென் என்றான்" [125]

[வானுலகத்தவராகிய தேவர்க்கும் (அவர் வழியில் ஒழுகும்) உனக்கும் கருத்துக்கு இசைந்தவனும் இவ்வுலக முழுவதும் பரவியுள்ளவன் எனப்படும் திருமாலை இந்தத் தூணின் கண்ணே (யான்) காணுமாறு (எனக்குக்) காட்டுவாயாக; காட்டாதொழிவாயானால் மத்தகத்தையுடைய வலிய யானையை வலிய சிங்கமானது தாக்கிக் கொன்றாற்போன்று (உருக்கிய) செம்பினை யொத்த செந்நிறம் வாய்ந்த (உன் உடம்பின்) இரத்தத்தை நிறையக் குடித்து நின் உடம்பினையும் தின்று தீர்ப்பேன் எனக் கூறினான் (இரணியன்).] என்னும் அடுத்தபாடலில் இரணியன் 'இக்கம்பத்தில் நீ அவனைக் காட்டாவிடில் உன்னைக்கொன்று தின்பேன்" என முழங்கினான். இந்தக் கொடிய சபதத்தைக்கேட்ட பிரகலாதன்,

"என் உயிர் நின்னால் கோறற்கு
எளியது ஒன்று அன்று; யான் முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
இடந்தோறும் தோன்றான் ஆயின்,
என் உயிர் யானே மாய்ப்பன்;
பின்னும் வாழ்வு உகப்பல் என்னின்
அன்னவற்கு அடியேன் அல்லேன்
என்றனன் அறிவின் மிக்கான்" [126]

[(யாவரினும்) அறிவினால் மேம்பட்டவனாகிய பிரகலாதன், (இரணியனை நோக்கி) 'எனது உயிர் உன்னால் கொன்றொழிப்பதற்குரிய எளிமையுடையதொன்றன்று. என்னால் முன்னர்ச் சொல்லப்பட்ட இறைவனாகிய திருமால் (நீ) தொட்டுத் தொட்டு(ச் சுட்டி)க் காட்டிய இடங்கள் தோறும் வெளிப்பட்டுத் தோன்றாது போவானாயின், என்னுடைய உயிரை யானே மாய்த்துக் கொள்வேன். (அங்ஙனமன்றி) மீளவும் இவ்வுலக வாழ்க்கையை விரும்பி உயிர் தாங்கியிருப்பேனாயின், யான் அம்முதல்வனுக்கு அடியேன் அல்லேன்' என்று சபதம் கூறினான்.]



என்கிறபடியே கடுமையான சபதத்தைச்செய்தான். இதைக் கேட்டவுடன் இரணியன் அத்தூணை அறைந்து தாக்க, அதிலிருந்து நரசிங்கம் தோன்றிச் சிரித்ததை,

"நசை திறந்து இலங்கப் பொங்கி,
நன்று நன்று என்ன நக்கு,
விசை திறந்து உருமு வீழ்ந்தது
என்ன ஓர் தூணின், வென்றி
இசை திறந்து உயர்ந்த கையால்
எற்றினான்; எற்றலோடும்,
திசை திறந்து அண்டம் கீறச் சிரித்தது,
அச் செங்கண் சீயம்" [127]

[(அது கேட்ட இரணியன், உலகெலாம் கலந்து விளங்கும் இறைவனொருவன் உளன் எனப் பிரகலாதன் தெளியக் காட்டுவானாயின் அவனைக் காணுதல் வேண்டும் என்பதில் தனக்குள்ள) விருப்பம் வெளிப்பட்டு விளங்கச் சினத்தாற் பொங்கி யெழுந்து (பிரகலாதனை நோக்கி) 'நீ கூறியது நன்று நன்று' என்று கூறிச் சிரித்து, வேகத்துடன் (வானத்தைப்) பிளந்து இடியேறு விழுந்தாற்போன்று (தன்னெதிரேயுள்ள) தூண் ஒன்றில் வெற்றிப் புகழை வெளிப்படுத்திச் சிறந்த தனது கையினால் அறைந்தான். (அவ்வாறு அவன் மோதிய அளவில்) சிவந்த கண்களையுடைய (திருமாலாகிய) அந்தச் சிங்கமானது (அத்தூணினுள்ளேயிருந்து) திசைகள் கிழிந்து அண்டம் பிளக்குமாறு (வெடிபடச்) சிரித்தது.] என்னும் பாடலில் காட்டுகிறான் கம்பன். இதில் 'செங்கட்சீயம்' என்கையாலே, பிரகலாதன் 121-ம் பாடலில் கூறிய செந்தாமரைக் கண்ணனான திருமாலே நரசிங்கமாக அவதரித்தான் என்று காட்டுகிறான்.

"நாடி நான் தருவென் என்ற
நல் அறிவாளன், நானும்
தேடி நான்முகனும் காணாச்
சேயவன் சிரித்தலோடும்,
ஆடினான் அழுதான்; பாடி
அரற்றினான்; சிரத்தில் செங்கை
சூடினான்; தொழுதான் ஓடி
உலகெலாம் அளந்தான். துள்ளி" [128]

[(இறைவனை) நானே தேடிக் (கண்டு உனக்குக் காட்டிக்)கொடுப்பேன் என (இரணியனுக்கு) உறுதி கூறிய மெய்யுணர்வுடையனுகிய பிரகலாதன், (படைத்தற் கடவுளாகிய) பிரமதேவனும் நாள்தோறும் முயன்று தேடியும் காண ஒண்ணுதவாறு நெடுந்தூரத்திலுள்ளவனுக (அப்பாற்பட்டு) விளங்கும் திருமால் (சிங்க வுருவுடன் தூணினுள்ளே நின்று வெடிபடச்) சிரித்த அளவில் (அச் சிரிப்பொலியைக் கேட்டு மகிழ்ந்து) ஆனந்தக் கூத்து ஆடினுன்; (தன் பொருட்டு எளிவந் தருளிய இறைவனது கருணைத்திறத்தை யெண்ணி நெஞ்சம் நெக்குருகி) அழுதான்; (அம் முதல்வனது புகழ்த்திறத்தைப்) பாடி அரற்றினன்; சிவந்த கைகளைத் தலைமேற்கூப்பித் தொழுதான்; (கீழே விழ்ந்து) வணங்கினன்; துள்ளிக் குதித்து ஓடி உலகமெங்கும் (கால்களால்) உழப்பினுன்.] என்னும் அடுத்த பாடலில் நான்முகனும் காணுச் சேயவனுகத் திருமாலைக் காட்டுகை யால் கம்பன் மும்மூர்த்திகளும் ஒருவரே என்றோ சமமானவரே என்றோ கூறும் கொள்கைகளை ஏற்றவனல்லன் என விளங்குகிறது. அடுத்த பாடலில் நரசிங்கனைப் போருக்கு அறைகூவி அழைத்ததைக் கூறுகிறுன்.

"பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது, சியம்; பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை யார் அறிந்து அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககனமுட்டை கிழிந்தது கீழும் மேலும்" [130]

[(அந் நிலையில் அந்தத்) தூணும் பிளந்தது. அதன்கண் நின்றும் சிங்கம் தோன்றி வெளிப்பட்டது; (அது) பின்னர் எட்டுத் திசைகளையும் அளாவி வளர்ந்தது. (இவ் அண்டத்திற்கு) வெளியிலுள்ள அண்டம் முதலியனவாகவுள்ள ஏனையவற்றையும் அளப்பதாய் (தன் வடிவினல் நீண்டு) உயர்ந்தது. அதனுல் உலக உருண்டையாகிய முட்டை கீழும் மேலும் கிழிந்து பிளந்தது. இவ்வண்டத்திற்கு அப்பால் நிகழ்ந்த செய்கையினை யார்தாம் அறிந்து சொல்லவல்லவர்கள் ?]

"மன்றல் அம் துளபமாலை மானிட மடங்கல், வானில்
சென்றது தெரிதல் தேற்றும்; சேவடி படியில் தீண்ட
நின்றது ஓர் பொழுதின், அண்ட நெடுமுகட்டு இருந்த முன்னேன்
அன்று அவன் உந்தி வந்தானும் எனத் தோன்றினுனல்" [131]

[மணம் பொருந்திய அழகிய திருத்துழாய் மாலையை அணிந்த, (திருமாலாகிய) நரசிங்கம் வானத்தை ஊடுருவி (நீண்டு) உயர்ந்து சென்றது. (அது சென்ற எல்லையைத்) தெரிய அறிந்திலோம்.



(நரசிங்கமானது) செம்மை பொருந்திய திருவடிகள் பூமியிற் பொருந்த நின்ற அச் சமயத்தில், இவ் அண்டத்தின் உயர்ந்த முகட்டிலே (யுள்ள சத்தியலோகத்தில்) இருந்த முதியோனுகிய பிரமன், முற்காலத்தில் அத் திருமாலின் உந்தித் தாமரையிற் பிறந்தவனைப் போன்று காணப்பட்டான்.] என்னும் அடுத்த இரண்டு பாடல்களில் சிங்கப்பிரான் தூணைப்பிளந்து வெளிப் பட்டுப் பேருருவம் கொண்டதை விளக்குகிறுன். இதில் சிங்கப் பிரான் துளபமாலை அணிந்திருந்தான் என்றும், அவனுடைய உந்தியில் பிறந்தவனே பிரமனென்றும் கூறியிருப்பதிலிருந்து அவன் திருமாலே என வெளிப்படுத்துகிறுன். "வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோன்" என்றும் "நாறிணர்த்துழாயோன்" என்றும் இப்பெருமைகளை சங்ககாலத் தமிழரும் பரிபாடலில் திருமாலுக்குக் காட்டியிருப்பது காணத்தக்கது.

"'எத்தனை போதும் கை?" என்று இயம்பினல் எண்ணற்கு ஏற்ற
வித்தகர் உளரோ? அந்தத் தானவர் விரிந்த சேனை
பத்து நூறு அமைந்த கோடி வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனைக் கடலும் மாளத் தனித்தனி அள்ளிக்கொண்ட" [132]

[(மானிட மடங்கலாகிய அவ் இறைவனுக்குக்) கைகள் எத்தனையுள்ளன என வினவினல், அவற்றை எண்ணி அளவிட்டுரைத்தற்கு இயைந்த திறமையுடையார் (இவ்வுலகில் யாரேனும்) உளரோ? ஆயிரங்கோடி வெள்ளம் என அளவிட்டுப் பகுத்துரைக்கப்பட்ட அந்த அசுரர்களுடைய விரிந்து பரவிய சேனைகளாகிய கடல் அனைத்தும் அழியும்படி அக் கைகள் அந்தச் சேனை விரர்களைத் தனித்தனியே அள்ளிக்கொண்டன] என்னும் பாடலில் நரசிங்கனின் கைகள் கணக்கற்றவை என்று காட்டப்பட்டது. இப்பாடலின் பொழிப்புரையில்,

"'இரு கை மா அல்
முக்கை முனிவ நாற்கை அண்ணல்
ஐங்கை மைந்த அறுகை நெடுவேள்
எழுகை யாள எண்கை யேந்தல்
ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள
பதிற்றுக்கை மதவலி, நூற்றுக்கை யாற்றல்
ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள
நூருயிரங் கை ஆறறி கடவுள்
அனைத்து மல்ல பல அடுக்கல் ஆம்பல்
இனைத்தென எண்வரம் பறியா யாக்கையை'
[பரிபாடல் 3; வரி 35-45]

என வரும் கடுவன் இளவெயினனார் வாய்மொழி இங்கு நினைத்தற்குரியதாகும்'' என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு காட்டியிருப்பதிலிருந்தும் சங்ககாலத் தமிழரின் சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. சிங்கப்பிரானின் விச்சுவரூபத்தைப் பல பாடல்களில் வர்ணிக்கிறான் கம்பன்.

''குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டை முட்டப்
பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள் அமுது பல்கும்
எயிற்று வன் பகுவாயுள் புக்கு இருக்குற இருக்கை எய்தி
வயிற்றின் வந்து அந்நாள் இந்நாள் வாழும் மன்னுயிர்கள்
மன்னோ'' [135]

[(உலகெலாம் அழியும் ஊழிக்காலமாகிய அந்நாளிலே திருமாலின்) வயிற்றினுள்ளே (புகுந்து) இருந்து (பின் அங்கிருந்து) வெளிப்பட்டு இந்நாளிலே இவ்வுலகில் வாழும் நிலைபேறுடைய உயிர்கள் யாவும், (முன்னாளில் இறைவனால்) படைக்கப்பட்ட இவ் அண்டமானது குஞ்சு பொரிக்காத முட்டையினை யொத்து (அதனைப் பக்குவப் படுமாறு, பொருந்த அணைத்துக்கொண்ட பருவத்தினை யொத்த அக்காலத்திலே, (இந்த நரசிங்க மூர்த்தியினது) அமிழ்தூறும் (இனிய) தந்தங்களையுடைய வலிய திறந்த வாயினுள்ளே புகுந்து (அங்கே தத்தமக்கேற்ற) இடத்தினைப் பெற்று இருப்பனவாம்.] என்பது அவற்றில் ஒரு பாடல். இதில் பிரளயகாலத்தில் எல்லா வுலகமும் திருமாலின் வயிற்றில் புகுந்து பின் படைப்புக்காலத்தில் அங்கிருந்து வெளிப்பட்டது என்று கூறுவதிலிருந்தும் கம்பன் வைணவனே என்பதைத் தெளிவாக அறியலாம். ''நால்வகை ஊழிபெண் நவிற்றும் சிறப்பினை'' ''மாநிலம் இயலா முதன்முறை அமையத்து நாமவெள்ளத்து நடுவண் தோன்றிய வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரைப் பொகுட்டு நின்நேமி'' ''மூதுமைக்கு ஊழியாவரும் உணரா ஆழி முதல்வ!'' என்று சங்ககாலத் தமிழரும் 'ஊழிமுதல்வன் திருமாலே' என முழங்கியிருப்பது அறியத்தக்கது.

''தளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிரொளி இமையவர் தலைவனும் முதலா
யாவகை உலகமும் யாவருமகப்பட..................
ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக்கரந்து''
[திருவாசிரியம் 7]



''நெற்றிமேல் கண்ணனும் நிறைமொழி வாய்நான்முகனும்
நீண்டநால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டின் ஒருவனையும் உள்ளிட்ட அமரரோடும்
வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல் தான்விழுங்கி
உய்யக்கொண்ட
கொற்றப் போராழியான்'' [பெரியதிருமொழி 11.6.3]

''தாயிருக்கும் வண்ணமே உம்மைத்தன்
வயிற்றிருத்தி உய்யக்கொண்டான்'' [ஷை 10.6.6]

''எம்பெருமான் உண்டுமிழ்ந்த எச்சில்தேவர்
அல்லாதார் தாமுளரே'' [ஷை 11.6.2]

என்ற ஆழ்வார்களின் கொள்கையை இதுபோன்ற பல பாடல்களில் பின்பற்றிநிற்பதும், 'நரசிங்கத்தைச் சரபம் அழித்தது' முதலான நாயன்மார்கள் கூறும் பொய்க்கதைகளைக் கையாளாதிருப்பதும் கம்பன் பரமவைணவன் என்பதைக் காட்டித்தருகின்றன. இவனைச் சைவன் என்று ம. பொ. சி. கூறுவதைக்கேட்டுச் சான்றோர்கள் அனைவரும் சிரிக்கின்றனர். நரசிங்கன் அசுரர்களை அழித்ததையும், இரணியன் சிங்கப்பிரானோடு போர்செய்யத் தொடங்கியதையும் அடுத்துவரும் பாடல்களில் காட்டுகிறான் கம்பன். அப்போதும், பிரகலாதன் இரணியனைப்பார்த்து ''ஆழிவேந்தை வணங்குதி; வணங்கவே உன் புன் தொழில் பொறுக்கும்'' என்று அறிவுரை கூறுகின்றான். அதற்கு உடன்படாத இரணியன் ''இந்த நரசிங்கத்தையும் கொன்று உன்னையும் வெட்டி என் வாளைத் தொழுவதல்லாமல் ஊடலை நீக்க என் காதலியையும் நான் தொழமாட்டேன்'' என்று வெடிபோல் சிரிக்கிறான்.

''நகைசெயா, வாயும் கண்ணும்
வாளொடு நடந்த தாளும்
புகைசெயா, நெடுந் தீப் பொங்க
உருத்து எதிர்பொருந்தப் புக்கான்;
தொகை செயற்கு அரிய தோளால்
தாள்களால் சுற்றிச் சூழ்ந்தான்;
மிகை செய்வார் வினைகட்கு எல்லாம்
மேற்செயும் வினையம் வல்லான்'' [147]

[(இரணியன் இங்ஙனம் கூறி) நகைத்து(த்தன்) வாயிலும் கண்களிலும் வாட்படையொடு (விரைந்து) நடந்த (தன்) கால்களிலும் புகையினைத் தோற்றுவித்துத் தீப்பிழம்பு கிளர்ந்து தோன்ற வெகுண்டு (அந்நரசிங்கத்தினை) எதிர்த்துப் பொருதற்கு நெருங்கிச் சென்றான்;

(அந்நிலையில்) மிக்க கொடுந்தொழிலைச் செய்வோராகிய தீயோர் செய்யும் வஞ்சனைகளுக்கெல்லாம் முந்துறமேற்பட்டுச் செய்யும் சூழ் வினைத் திறத்தில் வல்லவனாகிய திருமால், (யாவராலும் இவ்வளவின என எண்ணித்) தொகை சொல்லுவதற்கு அரிய (மிகப்பலவாய) கைகளாலும் கால்களாலும் (இரணியனைச்) சுற்றிப் பிணித்தான்.] என்னும் பாடலும் அடுத்துவரும் பாடல்களும் நரசிங்கனும் இரணியனும் போர்புரிந்ததை வர்ணிக்கின்றன.

"'போன்றன இனைய தன்மை ;
பொருவியது இனையது' என்று
தான் தனி ஒருவன். தன்னை
உரைசெயும் தரத்தி னனோ?
வான்தரு வள்ளல் வெள்ளை
வள் உகிர் வயிர மார்பின்
ஊன்றலும், உதிர வெள்ளம்
பரந்துளது, உலகம் எங்கும்" [152]

[(ஒன்றிலும் தோய்வின்றித்) தான் தனிப்பட்டு விளங்கும் ஏகனாகிய இறைவன், '(இவனுடைய) இவ்வியல்புகள் இன்னருடைய இயல்புகளை ஒத்தன. இன்னதொரு பொருள் (இவ்வியல்பால் இவனை) ஒத்தது' என எவ்வாறு தன்னைப் பிறவற்றுடன் ஒப்பிட்டுரைத்தற்கேற்ற இயல்பினன் ஆவானோ? (தன்னை அன்பினால் வழிபடுவார்க்குப்) பரம பதமாகிய விண்ணுலகினைத் தந்து அருள்புரியும் வள்ளன்மையுடைய அருளாளனாகிய திருமாலின் வெண்மை நிறம் பொருந்திய கூரிய நகங்கள், (இரணியனுடைய) வயிரமணி போலும் திண்ணிய மார்பின் கண்ணே ஊன்றிப் பதித்த அளவிலேயே குருதி வெள்ளம் பீரிட்டெழுந்து உலக முழுதும் பரவிற்று.] என்னும் பாடலில் "பரமபதமாகிய விண்ணுலகினைத் தந்து அருள்புரிபவன் திருமாலே" என்று கூறியிருப்பதிலிருந்தும் "நாறு இணர்த்துழாயோன் நல்கினல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" என்னும் சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.

"ஆயவன் தன்னை, மாயன்
அந்தியின், அவன் பொன் கோயில்
வாயிலில், மணிக் கவான்மேல்,
வயிர வாள் உகிரின், வானின்
மீ எழு குருதி பொங்க,
வெயில் விரி வயிர மார்பு
தீ எழப் பிளந்து நீக்கி,
தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்" [153]



[வியக்கத்தக்க பேராற்றலையுடைய நரசிங்கப்பிரான், அத்தகைய இரணியனை (ஞாயிறு மறையும்) அந்திப் பொழுதிலே அவனது பொன்மயமான அரண்மனையின் வாயிற்படியிலே (தனது) அழகிய தொடையின்மேல் (வைத்து) வெயிலைப்போன்று ஒளிவீசும் அவனது திண்ணிய மார்பினை வயிரவாளினைப்போலும் கூரிய (தன் கைவிரல்களின்) நகங்களால் மேல் எழுகின்ற இரத்த வெள்ளம் (எங்கும்) மிக்குப் பரவவும் தீப்பொறி பறக்கவும் பிளந்து போக்கி (அவனால்) தேவர்களுக்கு நேர்ந்த துன்பம் அனைத்தையும் நீக்கியருளினான்.] என்னும் பாடல் இரணியனின் சங்காரத்தை விளக்குவது. இதில் இரணியன் அழிந்ததால் தேவர்கள் பட்ட துன்பமெல்லாம் தீர்ந்தன என்கிறான் கம்பன். அந்த தேவர்கள் யாரென்பதை—

"முக்கணன் எண்கணனும்,
முளரி ஆயிரக் கணனும்,
திக்கண் ஆம் தேவரோடு
முனிவரும், பிறரும், தேடிப்
புக்க நாடு அறிகுறாமல்
திரிகின்றார், புகுந்து மொய்த்தார் ;
'எக்கணால் காண்டும் எந்தை
உருவம்' என்று இரங்கி நின்றார்" [154]

[மூன்று கண்களையுடையவனாகிய உருத்திர மூர்த்தியும் எட்டுக் கண்களையுடையவனாகிய நான்முகக் கடவுளும் தாமரை மலர்போலும் ஆயிரங் கண்களையுடையவனாகிய இந்திரனும் எட்டுத் திசைகளிற் பொருந்தியுள்ள தேவர்களோடு முனிவர்களும் மற்றையோரும் (தாம் தாம் சென்று) புகுந்த நாடு (இது எனத்)தேடி அறியவொண்ணாதவாறு (இரணியனுக்கு அஞ்சி மறைந்து) திரிகின்றவர்கள், (நரசிங்கப்பிரான் இரணியனைக் கொன்றொழித்தவுடனே) அங்கு வந்து நெருங்கியவர்களாய், 'எம்பெருமான் கொண்ட நரசிங்க வடிவமாகிய இதனை (நாங்கள்) எத்தகைய கண்களைக்கொண்டு காணவல்லேம்' என்று (தமக்கு ஆற்றலின்மையை யெண்ணி) இரங்கிநின்றார்கள்.] என்னும் பாடலில் காட்டுகிறான். உருத்திரன் பிரமன் முதலான தேவர்கள் இரணியனுக்கு அஞ்சி ஓடி ஒளிந்திருந்தவர்களே என்றும், அவர்களாலும் காண்பரிய பேருருவத்தையுடையவன் சிங்கப்பிரான் என்றும் கூறுவதிலிருந்தும் கம்பன் பரம வைணவன் என விளங்குகிறது. அடுத்தபாடல் நரசிங்கத்தைக் கண்டு அஞ்சினார்கள் அந்த தேவர்கள் என்று கூறுகிறது.

"பல்லொடு பல்லுக்கு எல்லே
ஆயிரக் காத பத்தி,
சொல்லிய வதனம் கோடி
கோடிமேல் விளங்கித் தோன்ற,
எல்லே இல் உருவிற்று ஆகி
இருந்ததை எதிர நோக்கி,
அல்லி அம் கமலதது அண்ணல்
அவன் புகழ் விரிப்பதனுன்" [156]

[(வாயினுள்ள பற்களில்) ஒரு பல்லுடன் மற்றைப் பல்லுக்கு அமைந்த இடைவெளி ஆயிரங்காத தூரமாகவும், சொல்லப்பெற்ற முகங்கள் கோடி கோடி என்னும் தொகையினவாகவும் இவ்வாறு திருமேனியின்மேல் விளங்கித் தோன்ற எல்லையில்லாத பெருவடிவினையுடையதாய் இருந்த அந்நரசிங்கமூர்த்தியை அழகிய அகவிதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருப்போனுகிய பிரமதேவன் நேர்படக் கண்டு அம்முதல்வனுடைய புகழ்த்திறங்களை விரித்துரைத்துப் போற்றுவானுயினன்.] என்னும் அடுத்தபாடல் நரசிங்கத்தின் விச்வரூபத்தை வர்ணித்து, அவனுடைய உந்தித்தாமரையில் பிறந்த பிரமன் அவனைத் துதிக்கலுற்றுன் என்கிறது.

"தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும் பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றுல், உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் ஏத்து ஆமோ?" [157]

[(இறைவனுகிய) தன்னைத் தோற்றுவித்துக் கொண்டதும் அப்பரம்பொருள்தானே என்று (அறிவு நூல்கள்) கூறும் உண்மையினைப் பின்பு (நின்னுல்) படைத்துக் கொள்ளப்பெற்ற (நரசிங்கமாகிய) இத் திருவுருவமே நன்கு புலப்படுத்துவதாகும். மிகப் பெரிய பிரபஞ்சத்தினை உன்னிடத்திருந்தே நீ உண்டாக்கினுய் என்றுல், பல்லுயிர்களையும் (உடம்புடன்) படைத்தற்பொருட்டு (ப்பிரமதேவனுகிய) என்னை நீ படைத்தருளினுய் என்று கூறுவது, (நின் பேராற்றலை உள்ளவாறு உணர்ந்து போற்றிய) புகழுரையாகுமோ?] என்னும் துதியின் முதற்பாடலில், 'இவ்வுலகை உன்னிடமிருந்தே நீ உண்டாக்கினுயெனில் என்னைப் படைத்தது உனக்குப் புகழாகுமா?' எனப் பிரமன் வாயிலாகக் கூறுகிருன் கம்பன். இப்பாடலின் குறிப்புரையில் "பிரபஞ்சமுழுவதும் மாயோனுகிய இறைவனிடத்திருந்தே தோன்றிய தென்பதனை,



'தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்து
ஞாயிறுந் திங்களும் அறனும் ஐவரும்
திதியின் சிறுரும் விதியின் மக்களும்
மாசில் எண்மரும் பதினெரு கபிலரும்
தாமா இருவரும் தருமனும் மடங்கலும்
மூவே ழுலகமும் உலகினுள் மன்பதும்
மாயோய நின்வயிற் பரந்தவை யுரைத்தேம்
மாயா வாய்மொழி யுரைதர வலந்து' [பரிபாடல் 3.4...11]

எனவரும் தொடர்களில் கடுவன் இளவெயினனுர் தெளிவாகக் குறித்துள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்" என்று அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் குறித்திருப்பதிலிருந்தும் சங்ககாலத் தமிழரின் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. அடுத்தபாடலில் 'பல்லாயிரங்கோடி அண்டங்களும் திருமாலிடமிருந்தே கடலில் நீர்க்குமிழிபோலே தோன்றுகின்றன' என்கிருன். அதற்கடுத்த பாடலில் 'நீயே உன் சரீரமாயிருக்கின்றவர்களைப் படைத்து அளித்து அழிக்கின்றுய்' என்று காட்டுகிருன்.

"நின்னுளே என்னை
நிருமித்தாய்; நின் அருளால்,
என்னுளே, எப்பொருளும்
யாவரையும் யான் ஈன்றேன்;
பின் இலேன்; முன் இலேன்;
எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியது ஓர்
பொற்கலனே போல்கினறேன்" [160]

[என் தந்தையாகிய இறைவனே! நின்னிடத்திலேயிருந்து என்னைத் தோற்றுவித்தருளினுய். நின்னுடைய அருளின் திறத்தால் யான் என்னிடத்திலேயிருந்து (அஃறிணையாகிய) எல்லாப் பொருள்களையும் (உயர்திணை யுயிர்களாகிய) யாவரையும் படைத்தேன். (நின்னையன்றி எனக்கு ஆதியாக ஒன்றையும்) முன் உடையேனல்லேன். பின்னர்(ச் சென்றடையும் அந்தமாக) ஒன்றையும் பெற்றிலேன். பொன்னிலிருந்து தோன்றியதொரு பொன்னணிகலத்தினையே போன்று (நின்னிற் பிரிவின்றி, உள்ளேன்.] என்னும் பாடலிலும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தையே வெளிப்படுத்துகிருன் கம்பன்,

"என்று ஆங்கு இயம்பி, இமையாத எண் கணனும்,
வன்தாள் மழுவோனும், யாரும் வணங்கினுர்;
நின்றுர், இருமருங்கும்; நேமிப் பெருமானும்,
ஒன்றுத சிற்றத்தை உள்ளே ஒடுக்கினுன்" [161]

[என்று இவ்வாறு கூறித் துதித்து, இமைத்தலில்லாத எட்டுக் கண்களையுடையவனை பிரமதேவனும், வலிய போர்த்திறம் வாய்ந்த மழுப்படையினையுடைய உருத்திர மூர்த்தியும், (தேவர் முனிவர் முதலிய) ஏனைய யாவரும் (நரசிங்கமூர்த்தியை) வணங்கியவர்களாய் அவ்விறைவனது இரண்டு பக்கங்களிலும் நின்றார்கள். (அப்பொழுது சக்கரப் படையினையுடைய திருமாலாகிய நரசிங்கப் பிரானும் அடங்குதற்கு அரிய பெருஞ்சினத்தைத் (தேவர்கள் முதலிய உயிர்கள்மேல் வைத்த பெருங்கருணையால்) தனக்குள்ளே அடக்கியருளினான்.] என்னும் அடுத்த பாடல் பிரமனும் சிவனும் சிங்கப்பிரானை வணங்கியதைக் காட்டுகிறது. இதிலிருந்தும் வைணவர்களில் முன் நிற்பவன் கம்பன் என விளங்குகிறது.

''எஞ்சும், உலகு அனைத்தும் இப்பொழுதே' என்று என்று,
நெஞ்சு நடுங்கும் நெடுந் தேவரை நோக்கி,
'அஞ்சன்மின்' என்னு, அருள் சுரந்த நோக்கினன்,
கஞ்ச மலர் பழிக்கும் கை அபயம் காட்டினன்'' [162]

['(நரசிங்கப்பிரானின் தணித்தற்கரிய வெகுளியினால்) உலகங்கள் யாவும் இப்பொழுதே சிதைந்தொழியும்' என்று இவ்வாறு எண்ணி (அச்சத்தால்) மனம் நடுங்கும் (பிரமன் முதலிய) பெரிய தேவர்களை (நரசிங்கப்பிரான்) நோக்கி, 'அஞ்சாதீர்கள்' என்று சொல்லி, அருள் பொழியும் இனிய பார்வையையுடையனாய்ச் செந்தாமரை மலரையும் (அழகினால்) கீழ்ப்படுத்தும் தன் திருக்கரத்தால் அபயக் குறிப்பாகிய அடையாளத்தினைக் காட்டியருளினான்.] என்னும் பாடலில் பிரமன் சிவன் முதலானோர் சிங்கப்பிரானைக் கண்டு நடுங்கினர் என்றும், சிங்கப்பிரான் அவர்களுக்கு அபயமளித்தான் என்றும் கூறுவதிலிருந்தும் இது வலியுறுத்தப்படுகிறது.

''பூவில் இருவை, அழகின் புனைகலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை, வீடு ஈனும் இன்பத்தை,
ஆவித் துணையை, அமுதின் பிறந்தாளை,
தேவர்க்கும் தம் மோயை, ஏவினர், பாற் செல்ல'' [163]

[அழகு என்பதோர் பண்பு (தனக்கு மேலும் அழகுண்டாகப்) புனைந்து கொள்ளத்தக்க ஆபரணமாகத் திகழ்பவளும், எல்லோர்க்கும் செல்வத்தை வழங்குபவளும், (முடிவில்) வீடு பேறாகிய பேரின்பத்தை வழங்குபவளும், (எம்பெருமானாகிய திருமாலுக்கு) உயிர்த்துணையாக விளங்கும் தேவியும், (சாவாமையைத்தரும்) அமிழ்தத்துடனே (திருப்பாற்கடலிலே) தோன்றியவளும், (மக்கள் முதலிய மன்னுயிர்களுக்கேயன்றித்) தேவர்களுக்கும் தாயாகவுள்ளவளும், செந்தாமரை மலரில்



எழுந்தருளியிருப்பவளும் ஆகிய திருமகளை (நரசிங்கப்பிரானிடம்) செல்லும் வண்ணம் (பிரமன் முதலிய தேவர்கள் பிரார்த்தித்து) அனுப்பினார்கள்.] என்னும் பாடல் 'தேவர்கள் திருமகளைச் சிங்கப்பிரானுடைய கோபத்தைத் தணிப்பதற்காக அனுப்பினர்' என்கிறது. இப்பாடலிலும்,

''செந் தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை, நறுந்தாள் இளங் கொழுந்தை,
முந்தா உலகும் உயிரும் முறை முறையே
தந்தாளை நோக்கினான், தன் ஒப்பு ஒன்று இல்லாதான்'' [164]

[தனக்கு ஒப்பாக ஒரு பொருளும் இல்லாத இறைவனாகிய நரசிங்கப்பிரான் செம்மை நிறம் வாய்ந்த தாமரை மலரின் நடுவில் பெருமகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் தூண்டாவிளக்குப் போல்பவளும், நறுமணம் வாய்ந்த காம்புடன் கூடிய இளங்கொழுந்துபோல்வாளும், ஆதியிலேயே உலகங்களையும் உயிர்களையும் வழிமுறை வழிமுறையாகப் பெற்றருளியவளும் ஆகிய திருமகளை(க் கண்குளிரக்) கண்டருளினான்.] என்னும் அடுத்தபாடலிலும் 'திருமகளே தேவர்க்கெல்லாம் தாய்' என்றும், 'ஒப்பற்ற திருமாலே உலகனைத்தையும் படைக்கும் படியும், விடருளும்படியும் செய்பவள் அவளே' என்றும் கூறுவதன் மூலம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பறைசாற்றுகிறான் கம்பன்.

''தீது இலா ஆக உலகு ஈன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினான்; கண்ட முனிக் கணங்கள்
ஓதினார், சீர்த்தி; உயர்ந்த பரஞ்சுடரும்,
நோதல் ஆங்கு இல்லாத அன்பனையே நோக்கினான்'' [165]

[தீங்குகள் யாவும் இல்லாதனவாய் ஒழிய இவ்வுலகினைப் படைத்தற்கு உதவிய தெய்வமாகிய திருமகளை அன்போடு பார்த்தருளினான். (அவ் அருட்குறிப்பைப்) பார்த்த முனிவர் கூட்டத்தார் (அப்பெருமானுடைய) மிக்க புகழ்த்திறங்களை எடுத்துரைத்துப் போற்றினார்கள். சிறந்த மேலான பேரொளிப் பிழம்பாகிய இறைவனும், (தந்தையையிழந்த) அந்நிலையில் (சிறிதும்) வருந்துதல் இல்லாத பேரன்பினனாகிய பிரகலாதாழ்வானையே பார்த்தருளினான்.] என்னும் அடுத்த பாடலில் புருஷகாரமான (சிபார்சு செய்பவளான) திருமகளோடு சேர்ந்தபின்பு சிங்கப்பிரான் சீற்றம் தீரப்பெற்றான் என்றும், பேரன்பினனான பிரகலாதாழ்வானைப் பார்த்தருளினான் என்றும் கூறுவதும் கம்பன் வைணவ சித்தாந்தத்தில் ஊறியவன் எனக் காட்டுகிறது. அடுத்த இரு பாடல்களில் பிரகலாதனை நோக்கி ''உன் தந்தையை உன் கண்முன்னே கொன்ற பின்பும் என்னிடம் அந்தமிலா அன்பு

வைத்தாயே! இதற்கு என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று சிங்கப்பிரான் கூறுகிறான். அதற்கடுத்த பாடலில் 'இனி உன் குடும்பத்தாரைக் குற்றம் புரிந்தாலும் கொல்லமாட்டேன்; இன்னும் ஏதாவது வரம்வேண்டுமா?' என்று அருளுகிறான் சிங்கப்பிரான்.

''முன்பு பெறப் பெற்ற பேறே முடிவு இல்லை;
பின்பு பெறும் பேறும் உண்டோ? பெறுவேனேல்,
என்பு பெருத இழிபிறவி எய்திடினும்,
அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள்'' என்றான். [169]

['(எம்பெருமானே! நின்திருவருளால்) இதற்கு முன்னர் (யான்) பெற்ற பேறுகளோ எல்லையில்லாதன. பின்னர் (இவற்றின் மேலாகப்) பெறவேண்டிய பேறுகளும் உளவோ? (முடிவாக ஒன்றினை) வேண்டிப் பெறுவேனாயின், எலும்பில்லாத இழிந்த (புழுவின்) பிறப்பினை யான் எய்தப்பெற்றாலும் (நின் திருவடிக்கண்) அன்பு ஒன்றையே வேண்டிப் பெறும் நற்பேற்றினை அடியேனுக்கு அருள் வாயாக' என இரந்து வேண்டினான் (பிரகலாதன்).] என்னும் பாடலில் பேரறிவாளனான பிரகலாதன் ''எப்பிறப்பெடுத்தாலும் உன் திருவடியில் அன்பே வேண்டும்'' என்று கேட்கிறான்.

''அன்னானை நோக்கி, அருள் சுரந்த நெஞ்சினன் ஆய்,
'என் ஆணை வல்லன்' என மகிழ்ந்த பேர் ஈசன்,
'முன் ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும்
உன் நாள் உலவாய் நீ, என்போல் உளை' '' என்றான். [160]

[(இவ்வாறு அன்பு ஒன்றினையே வேண்டிய பிரகலாதனது பத்தித் திறத்தினை வியந்து) 'என் ஆணையாகிய இவன் (மெய்யுணர்வில்) மிகவும் வல்லவன்' என்று (அவனது ஞானத்திறன் கண்டு) மகிழ்ந் தருளின பெருமையுடைய இறைவனாகிய நரசிங்கப்பிரான் (தன்பால் நீங்காத பேரன்புடையவனை) அத்தகைய பிரகலாதனைப் பார்த்துக் கருணைகூர்ந்த திருவுள்ளத்தையுடையவனாய், '(உலகத் தோற்றத்திற் குக் காரணமாய்) முன்னுள்ள ஐம்பெரும் பூதங்கள் யாவும் கெட் டொழியும் ஊழிக்காலம் வந்தாலும் நீ உன்னுடைய வாழ்நாள் சிதை யப்பெறாய்; (இறைவனாகிய) என்னைப்போன்று (எக்காலத்தும் அழி வின்றி) இருப்பாய்' என்று வரந்தந்து வாழ்த்தியருளினான்.] என்னும் அடுத்த பாடலில் 'பிரளயகாலத்திலும் அழியாத என்னைப்போலே நீயும் அழியாமலிருப்பாய்' என்று சிங்கப்பிரான் பிரகலாதனுக்கு வரம்தந்து வாழ்த்தியதைக் கூறுகிறான் கம்பன். இதிலிருந்தும் ''மாநிலம் இயலா முதல்முறை அமயத்து'' [பரிபாடல்] அழியா திருப்பவன் திருமாலே என்னும் சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.



அதற்கடுத்த பாடலில் ''உலகிலுள்ள உயிர்களெல்லாம் என்னைத் தொழுது துதித்து அடையத்தக்க நற்பயன்கள் அனைத்தையும் என் அடியவனாகிய உன்னை வணங்கிப் போற்றுவதாலேயே அடைந்து உய்யும்'' என்று வரங்கொடுக்கிறான் நரசிங்கன். அதற்கடுத்த பாடலில் ''மறைவல்லோய்!'' என்று பிரகலாதனை விளித்து ''நீ அசுரருக்கு மாத்திரமல்லாமல் தேவர்களுக்கும் தலைவனாவாய்'' என்று அருளுகிறான் நரசிங்கன். அதற்கடுத்த பாடலில் ''நல்லறமும், மெய்ம்மையும், நான்மறையும், நல்லருளும், எல்லையிலா ஞானமும் ஈறிலா எப் பொருளும் தொல்லை சால் எண்குணனும் நீ சொன்னபடி ஏவல் புரியும்'' என்று வரம் அளிக்கிறான். இவற்றிலிருந்து எல்லாப் புருஷார்த்தங்களையும் அளிக்கக்கூடியவன் திருமாலே என்பது கம்பன் கருத்து என விளங்குகிறது. அடுத்த பாடலில்,

''என்று வரம் அருளி, எவ்வுலகும் கை கூப்ப,
முன்றில் முரசம் முழங்க, முடி சூட்ட,
'நின்ற அமரர் அனைவிரும் நேர்ந்து இவனுக்கு
ஒன்று பெருமை உரிமை புரிக' என்றான்.'' [174]

[(நரசிங்கப்பிரான் இவ்வாறு) (கூறி)ப் பிரகலாதாழ்வானுக்கு (நிலைத்த) வரத்தினைக் கொடுத்தருளி, எல்லா வுலகத்தவரும் கைகூப்பி வணங்க, அரண்மனை வாயிலிலே (மங்கல வாத்தியமாகிய) முரசு ஒலிக்க, (பிரகலாதனாகிய) இவனுக்கு முடியினைச் சூட்டுதற்கு இங்கு நின்ற தேவர்களாகிய நீவிர் எல்லீரும் மனம் இசைந்து பொருந்திய சிறப் புடன் கூடிய உரிமைப் பணிகளை உவப்புடன் செய்வீராக எனப் பணித்தருளினான்.] என்று நரசிங்கப்பிரான் தேவர்களை நோக்கிப் பிரகலாதனுக்கு முடிசூட்டுவதற்கு ஆவனசெய்யுமாறு பணிக்கின்றான். அதன்படியே தேவர்கள் பிரகலாதனுக்கு முடிசூட்டுவதைக் கூறும் அடுத்தபாடலில்,

''தேமன் உரிமை புரிய, திசை முகத்தோன்
ஓமம் இயற்ற, உடையான் முடி சூட்ட,
கோ மன்னவன் ஆகி, மூ உலகும் கைக் கொண்டான்;
நாம மறை ஓதாது ஓதி, நனி உணர்ந்தான்'' [175]

[(நரசிங்கப்பிரான் பணித்த வண்ணம்) தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் (பிரகலாதனது முடிசூட்டு விழாவுக்குரிய) குற்றேவற் பணிகளை விருப்புடன் செய்யவும், நான்முகக் கடவுள் வேள்விச் சடங்கினை நிகழ்த்தவும், எல்லாவுலகங்களையும் உடைய இறைவனாகிய திருமாலே (தன் திருக்கரத்தினால்) முடியினைச் சூட்டியருள, வேந்தர்

வேந்தன் என்னும் பெருமையினையுடையவனாகி மூன்றுலகங்களையும் தனக்கே உரியனவாகக் கைக்கொண்டு ஆட்சிபுரிந்தான்—புகழமைந்த வேதங்களை (ஆசிரியனிடத்திற்சென்று) ஓதாமலே (அவற்றின் உட்பொருளை) மிகவும் தெளிய உணர்ந்தவனாகிய பிரகலாதன்.] என்று பிரமன் இந்திரன் முதலானவர்கள் துணைபுரிய அனைத்துலகுமுடையவனாகிற தானே பிரகலாதனுக்கு மூடிசூட்டியதைக் காட்டுகிறான் கம்பன். இங்கு நரசிங்கனை "உடையான்" என்று ஸர்வஸ்வாமியாகக் குறிப்பிடுவதிலிருந்தும் கம்பன் வைஷ்ணவன் என விளங்குகிறது. சில பிரதிகளில் 'உடையான்' என்பதற்குப் பதிலாக 'உமையான்' என்று பாடம் காண்கிறது. அப்போது சிங்கப்பிரானின் ஆணையைப் பின்பற்றி சிவனும் முடிசூட்டும் கைங்கர்யத்தில் பங்குகொண்டான் என்று தேறுகிறது. இதனிருந்தும் சிவன் சிங்கப்பிரானுக்கு அடங்கியவன் என்று விளங்குமாகையால் கம்பன் வைஷ்ணவன் என்றே தேறும். விபீடணன் இந்த இரணியன்வதை வரலாற்றை இராவணனுக்குக் கூறி "என் வார்த்தையை இகழ்வாயாகில் இரணியனைப்போலே நீயும் தீமையை அடைவது நிச்சயம்" என்று சொன்னதாக இப்படலத்தை நிறைவுபடுத்துகிறான் கம்பன். இந்த இரணியன் வதைப் படலம் இல்லாத சுவடியே கம்ப ராமாயணத்தில் இல்லை. 176 பாடல்கள் எல்லாப் பிரதிகளிலும் காணப்படுகின்றன. இவை அனைத்திலும் கம்பனுடைய கவிநயம் களிநடம் புரிகின்றது. இரணியன் வதைப்படலத்தை வ.வே.சு. அய்யர், உ.வே. சாமிநாதய்யர் முதலான பற்பல சைவப் பேரறிவாளர்களும் கம்பனுடையது என்றே கொண்டிருக்கின்றனர். கம்பன் இப்படலத்தை இங்கு அமைத்ததின் பொருத்தத்தையும் உ. வே. சாமிநாதய்யர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இப்படியிருக்க, "இங்கு இப்படலம் அமைந்தது பொருத்தமில்லை" என்று வலிந்து வாதாடி ம.பொ.சி. இதை இடைச்செருகலாக்கப் பார்ப்பது நடுநிலையாளர்களால் ஏற்கத்தக்கதல்ல. இனி அடுத்ததான * வீடணன் அடைக்கலப் படலத்தைக் காண்போம். ஸ்ரீராமாயணம் சரணாகதி சாஸ்திரம் என்று அழைக்கப்படுகிறது. பாஞ்சராத்ரம் முதலான வைணவ ஆகமங்களுக்கும், அவற்றை அடிப்படையாகக்கொண்ட வைணவத்துக்கும் சரணாகதியே உயிர்நாடியாகும். இந்த வீடணன் அடைக்கலப்படலத்தில் பாஞ்சராத்ராகமம் முதலானவற்றைக் கசடறக்கற்றுத் தேர்ந்தவனாகக் காட்சி அளிக்கிறான் கல்வியில் பெரியனான கம்பநாடன்.

* இப்படலத்தை விளக்கும் பேருரை—அண்மையில் மதுரை மீனாட்சி கோயில் திருவள்ளுவர் மண்டபத்தில் பல அறிஞர்கள் நிறைந்த அவையில் நம்மால் நிகழ்த்தப்பெற்றது.



"ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் |
ரக்ஷிஷ்யதீதி விஸ்வாஸ: கோ₃ப்த்ருத்வ வரணம் ததா₂ ||
ஆத்ம நிக்ஷேப கார்ப்பண்யே ஷட்₃விதா₄ ஶரணாக₃தி: ||"

['ஶரணம் பற்றப்படுமவனிடம் அநுகூலனாயிருப்பேன்' என்று உறுதி கொள்வது. அவன் விரும்பாதவற்றை விலக்குவது. 'அவன் நம்மைக் காப்பான்' என்று பெருநம்பிக்கைகொள்வது. 'நீயே என்னைக் காக்க வேண்டும்' என்று அவனை வேண்டுவது. தன்னையும் தன்னைச் சேர்ந்தவற்றையும் அவனிடம் அடைக்கலமாக அளிப்பது. 'தன்னைக் காத்துக்கொள்ளத் தன்னிடம் ஒன்றுமில்லை' என்று அனுஸந்திப்பது என்னும் ஆறுப்குதிகளையுடையது சரணாகதி]

"த்வமேவோபாய பூ₄தோ மே ப₄வேதி ப்ரார்த்த₂நாமதி: |
ஶரணாக₃திரித்யுக்தா ஸா தே₃வேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ||"

['நீயே எனக்கு உபாயமாவாயாக' என்று இறைஞ்சும் அறிவே சரணாகதி எனப்படுகிறது. அது இந்தப் பரமாத்மாவிடமே செய்யப்படவேண்டியது] முதலான பாஞ்சராத்ர வாக்யங்களில் சொல்லப்பட்ட சரணாகதி இலக்கணங்களைக் கம்பன் இப்படலத்தில் தெளிவாகக் காட்டியிருக்கிறான். "திருமாலே பரமாத்மா" என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறான். இனிப் படலத்தைக் காண்போம். முதல் ஒன்பது பாடல்களில் இராவணன் வீடணன் சொல்லைக் கேட்டுச் சினந்து கூறி "என் கண்முன் நிற்காதேபோ" என்று விரட்டுகிறான். அதற்குமேல் மூன்று பாடல்களில் வீடணன் விண்ணில் எழுந்து நின்று நீதி பல கூறுகின்றான். அதற்குமேல் மூன்று பாடல்களில் இலங்கையை விடுத்துச் செல்கின்றான். நாலு அமைச்சர்கள் அவனோடு கூடப் போகின்றனர். இப்பாடல்களிலிருந்து ஆநுகூல்ய ஸங்கல்பமும், ப்ராதிகூல்யவர்ஜனமும் கொண்டவன் வீடணன் என்பதைக் காட்டுகிறான் கம்பன். அடுத்துவரும் பாடல்களில் வீடணன் வானர சேனையைக் கண்டு வியந்து தான் செய்யவேண்டியது யாதெனத் தன் அமைச்சர்களை வினவுகின்றான். "அறந்தலை நின்றவர்" என்று இராமனைக் குறிப்பிட்டு அவனுக்கு அன்புபூண்டவனாகத் தன்னைக் குறிப்பிட்டுக் கொள்கிறான். இவையும் ஆநுகூல்ய ஸங்கல்பத்தைக் காட்டுகின்றன. "மறந்தும் நன்புகழலால் வாழ்வு வேண்டலன்" என்றும் கூறுகிறான் வீடணன். இது ப்ராதிகூல்ய வர்ஜனத்தைக் காட்டுகிறது. வீடணன் வார்த்தையைக் கேட்ட அமைச்சர்கள் "தருமமூர்த்தியைக் காண்பதே நமது கடமை" என்று கூறுகின்றனர்.

"நல்லது சொல்லினீர்; நாமும் வேறு இனி
அல்லது செய்துமேல், அரக்கர் ஆதுமால்;
எல்லை இல் பெருங் குணத்து இராமன் தாள் இணை
புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்குதும்" [20]

[நீங்கள் எனக்கு) நல்லதையே சொன்னீர்கள்; நீங்கள் சொன்னது விடுத்து அல்லாததாகிய வேறு ஒன்றை இனிச் செய்வோமாயின், நாமும் அரக்கத்தன்மையுடையராவோம்; ஆதலால், வரம்பு இல்லாத பெருங்குணத்தையுடைய இராமனின் இரு தாள்களையும் சென்று (பிடித்துக்கொள்வோம்; பிடித்துக்கொண்டு இழிந்ததாகிய) இவ்வரக்கப் பிறவியைப் போக்கிக்கொள்வோம்.] என்னும் பாடலில் ராமனை "எல்லையில் பெருங்குணத்திராமன்" என்று குறிப்பிட்டு அவன் தாளிணையை அணைவதால் இப்பிறவியைப் போக்கலாம் என்று கூறுகிறான் விடணன். இதிலிருந்து "மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே"[பரிபாடல் 3] என்னும் சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. ஆத்ம நிக்ஷேபம், கோப்த்ருத்வவரணம், மஹாவிச்வாஸம் முதலான ஸரணாகதி லக்ஷணங்களும் இப்பாடலில் உள்ளன.

"முன்பறக் கண்டிலேன்; கேள்வி முன்பு இலேன்;
அன்பு உறக் காரணம் அறிய கிற்றிலேன்;
என்பு உறக் குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்
புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்" [21]

[முன்பு ஒருபோதும் இராமனை யான் கண்டதில்லை. அவனைப்பற்றி முன்பு அதிகமாகக் கேள்விப்பட்டதும் இல்லை; அங்ஙனமாகவும், அந்த இராமனிடத்தில் எனக்கு அன்பு உண்டாதற்குரிய காரணத்தை அறிந்துகொள்ள ஆற்றல் அற்றவனாக இருக்கின்றேன்; (அவனை நினைக்கும்போதே என்னுடம்பில் உள்ள) எலும்புகள் மகிழ்ச்சியால் மிகவும் குளிர்ச்சியடைகின்றன; என் உள்ளமும் உருகுகின்றது; இங்ஙனம் காரணமின்றி என்பு குளிர்தலும் நெஞ்சுருகுதலும் நிகழ்வதால் அவ்விராமன், புல்லிய உடம்போடு கூடிய உயிர்களின் பிறவி நோய்க்குப் பகைவன் ஆகிய கடவுள் தானோ?] என்னும் அடுத்த பாடலும், மேல்வரும் பாடல்களும் இதை வலியுறுத்துகின்றன.

"ஆதி அம் பரமனுக்கு அன்பும், நல் அற
நீதியின் வழாமையும், உயிர்க்கு நேயமும்,
வேதியர் அருளும், நான் விரும்பிப் பெற்றனென், —
போது உறு கிழவனைத் தவம் முன் பூண்ட நாள்" [22]

[தாமரையிலிருக்கின்ற பிரமனைக் குறித்து யான் தவஞ்செய்த நாளில் எல்லாப் பொருள்கட்கும் முன்னவனாகிய அழகிய பரம்பொருளிடத்தில் பத்தியும், நல்ல அறத்தோடுபட்ட நீதியிலிருந்து வழுவாமையும், உயிர்களிடத்தில் அன்பும், அந்தணரின் அருளும் (எனக்கு வேண்டும் என்று நான் விரும்பி வரமாகப் பெற்றேன்.] என்னும் அடுத்த பாடலில் விடணன் தான் தாமரையிலுண்டான பிரமனிடமிருந்து ஆதியம்பரனுக்கு அன்பை வரமாகப் பெற்றதைக் கூறுகிறான். இதிலிருந்து பிரமனையும் படைத்தவனான நாரணனே ஆதியம்பரமன் என்னும் வைணவ சித்தாந்தத்தை உறுதியாகப் பின்பற்றி நிற்பவன் கம்பன் என்று விளங்குகிறது.

"ஆயது பயப்பது ஓர் அமைதி ஆயது;
தூயது, நினைந்தது; தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி, நம்மனத்து
ஏயது முடித்தும் என்று இனிது மேயினன்" [23]

["அந்தப் பிரமன் வரம் பயனை அளிப்பதற்கு உரிய ஒரு தகுதியான காலம் நமக்கு உளதாயது; நீங்கள் நினைந்தது தூய்மையான கருத்தாகும்; பழையநிலையில் யாவர்க்கும் தலைவனாகிய நாராயணனாக இருந்த இராமனது தாமரை மலர் போன்ற திருவடிகளைப் புகலிடமாக அடைந்து, நம் மனத்தில் பொருந்திய கருத்தை முடிப்போம்" என்று கூறிவிட்டு இனிதாக அமர்ந்திருந்தான்.] என்னும் அடுத்த பாடலிலும் அந்த ஆதியம்பரமனான நாரணனின் அவதாரமே இராமன் என்று காட்டுவதால் "மும்மூர்த்திகளின் அவதாரமே இராமன்" என்னும் அவத்தக்கொள்கையைக் கம்பன் மனத்தாலும் கருதியவனல்லன் என விளங்குகிறது. விடணனும் அவனது அமைச்சர்களும் இராப்பொழுது ஓரிடத்தில் மறைந்திருந்தபின் பொழுது விடிந்தது. இராமன் கடற்கரைக்கு வந்து கடற்கரைக் காட்சியால் விரகதாபம் மிகுந்து மிகக் கவலையுடையவனாகிறான். அப்பொழுது அனுமன் முதலிய அறிஞர்களின் தேறுதல் மொழிகளால் ஒருவாறு வருத்தம் நீங்கப்பெற்றான். விடணனைப் பார்த்த வானரர் அவனை ராவணனாக எண்ணி எதிர்த்தனர். அப்போது மயிந்தனும், துமிந்தனும், அனுமன் ஏவிய கட்டளைப்படி அங்குவந்தனர். விடணனை எதிர்க்கும் வானரர்களை விலக்கி, விடணனும் அவனுடன் வந்தவர்களும் அறநெறியின்படி ஒழுகினவர்களே என அறுதியிட்டனர். அவர்களை யாரென வினவினர். விடணனின் துணைவனான அனலன் "தருமநீதியனான விடணன் பாரின் நாயகனான இராமனின் கழல்களடைந்து உய்யப்போந்தனன்" என்று கூறினன். விடணன் பிரமனிடம் பெற்ற வரங்களையும், அவன் இராவணனுக்கு அறநெறி உரைத்ததையும், இராவணன் அதைக் கேளாது விடணனை விரட்டி

விட்டதையும் சொன்னான். மயிந்தனும் அதைக்கேட்டு "இராமனிடம் கூறுகிறேன்" என்று சொல்லி அவ்விடம் விட்டகன்றான்.

"தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்,
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்,
கருணை அம் கோயிலுள் இருந்த கண்ணனை
அருள் நெறி எய்திச் சென்று அடி வணங்கினான்" [48]

[அறநெறி, தவஒழுக்கம், ஞானத்தெளிவு ஆகிய மூன்றும் மும்மதில்களாகவும், நெருங்குதற்கரிய பெருமையும் பொறுமையும் வாயில்களாகவும் கொண்டுள்ள கருணை ஆகிய கோயிலினுள் இருந்த இராமனை, அவன் அருள் குறிப்பின்படி நெருங்கிச் சென்று திருவடிகளை வணங்கினான் (மயிந்தன்)] என்னும் பாடலில் சரணமடையத் தக்கவன் திறமையிலும் கருணையிலும் மிக்கவனாக (ஸமர்த்தனாகவும், காருணிகனாகவும்) இருக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொன்ன இலக்கணம் நிரம்பப்பெற்றவன் இராமபிரான் என்று காட்டுகிறான் கம்பன். மயிந்தன் இராமனிடம் கூறுவதாக அமைந்த அடுத்தபாடலில்,

"உண்டு உரை உணர்த்துவது, ஊழியாய்!' எனப்
புண்டரீகத் தடம் புரையும் புங்கவன்
மண்டலச் சடைமுடி துளக்க, வாய்மையால்
கண்டதும் கேட்டதும் கழறல் மேயினான்" [49]

['ஊழி இறுதியிலும் அழியாமல் வாழ்தற்குரியவனே! உனக்குத் தெரிவிக்க வேண்டிய வார்த்தை ஒன்று உண்டு' என மயிந்தன் கூற, தாமரைப் பொய்கை போன்ற திருமேனியையுடைய இராமன், தன் வட்டமாகக் கட்டியுள்ள சடை முடியை (உடன்பாடு தோன்ற) அசைக்க, (மயிந்தன்) தான் கண்டதையும் அவலன் வாயிலாகக் கேட்டதையும் உண்மையாகச் சொல்லத் தொடங்கினான்.] என்று இராமனை நடமாடும் தாமரைத் தடாகம்போலிருப்பவன் என்கிறான் கம்பன். இத்தொடர் "கண்ணா! கண் கைகால் தூயசெய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச் சாயல் சாமத்திருமேனித் தண் பாசடையாத் தாமரைநீள் வாசத்தடம்போல் வருவானே" [திருவாய் 8.5.1] என்ற நம்மாழ்வாரின் அருளிச்செயலைப் பின்பற்றியது என்பது வெளிப்படை. பல உரைகள் இதை எடுத்துக்காட்டும். இதுபோன்ற பல பாடல்களில் கம்பன் ஆழ்வார்பால்கொண்டிருந்த பேரன்பைக் காட்டியிருக்கும்போது ம. பொ. சி. அதைப்பொய்யாக்கப் பார்ப்பதும், "சடகோபரந்தாதி கம்பன் செய்ததல்ல" என்று வலிந்து வாதிடுவதும் நடுநிலையாளர்களால் ஏற்கத்தக்கதன்று. மயிந்தன் தான்



கண்டதையும் கேட்டதையும் இராமனுக்குக் கூறினான். அப்பொழுது இராமன் வீடணனுக்கு அடைக்கலம் கொடுப்பதுபற்றி, தன் நண்பர்களின் கருத்தைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறான். சுக்கிரீவன் இவனை ஏற்றுக்கொள்ளலாகாது என்னும் தன் கருத்தை 58 முதல் 69 வரையிலான 11 பாடல்களில் கூறுகிறான். முதற்பாடலில் "விதிக்கும் மேலுளாய்" என்று பிரமனுக்கும் மேற்பட்டவனாக இராமனைக் கூறுகிறான். அதன் பிறகு இராமன் கேட்க, சாம்பவான் ஐந்து பாடல்களில் வீடணனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்னும் தன் கருத்தைக் கூறுகிறான். அதற்குப் பின் இராமன் கேட்க, சேனைத்தலைவனான நீலன் ஆறுபாடல்களில் வீடணனை ஏற்றுக்கொள்ளலாகாது என்னும் முடிவையே வலியுறுத்துகிறான். அடுத்தபாடலில் மற்ற மந்திரிகளும் வீடணனை ஏற்றுக்கொள்ளலாகாது என்றே கூறுவதைக் காட்டுகிறான் கம்பன். அதற்கடுத்த பாடலில் 'அறிவின் மேலுளானை இராமன் நெறிதெரி மாருதி என்னும் நேரிலா அறிவனை' வினவியதைக் கூறுகிறான் கம்பன். அனுமன் பல காரணங்களைக் காட்டி,பத்தொன்பது பாடல்களில் வீடணன் ஏற்றுக்கொள்ளத் தக்கவனே என்று அறுதியிடுகிறான். அதைக்கேட்டு மிக உகந்த இராமன் அடுத்தபாடலில் 'பேரறிவாளா! நன்று நன்று' என்று அனுமனைக்கொண்டாடி, மேலே பதினாறு பாடல்களில் தன் திருவுள்ளத்தைத் தெளிவாக விளக்குகிறான். நாம் வெற்றிபெற்றாலும் தோற்றாலும், வீழ்ந்தாலும் வாழ்ந்தாலும், எத்தகைய கொடியவனும் வந்து அடைக்கலம் புகுந்தால் அவனைக் காப்பதே கடமை என்னும் தன் உறுதியைத் தெரிவிக்கிறான். தன் முன்னோனான சிபிச்சக்ரவர்த்தி அடைக்கலம் புகுந்த புறவுக்காகத் தன்னையே கொடுக்கத் துணிந்ததைக் காட்டுகிறான். ஆலகாலத்தைக்கண்டு அஞ்சி அடைக்கலம் புகுந்த தேவர்களை அவ்வாலகாலத்தை உண்டு காத்த சிவனின் செயலை எடுத்துக்காட்டி "உடைந்தவர்க்கு உதவானெனின், உள்ளதொன்றீயானெனின் அடைந்தவர்க்கருளானெனின் அறனென்னும் ஆண்மையென்னும்" என்று முழங்குகிறான். 'தன் பேடையைப் பிடித்த வேடனுக்காகத் தான் இருந்த மரத்தையடைந்தான் என்னும் ஒரே காரணத்தின் பொருட்டுத் தன் உடலையே கொடுத்த ஆண் புறவின் வரலாறு வேதப்பொருள்போல் சிறந்ததன்றோ' என்று கேட்கிறான்.

"போதகம் ஒன்று கன்றி
இடங்கர்மாப் பொருத போரின்,
'ஆதி அம் பரமே! யான் உன்
அபயம்!' என்று அழைத்த அந்நாள்,

வேதமும் முடிவு காணு
மெய்ப்பொருள் வெளிவந்து எய்தி.
மாதுயர் துடைதத வார்த்தை
மறப்பரோ, மறப்பு இலாதார்?'' [111]

[(தாமரை மடுவில், முதலை கோபித்துத் தன் காலைப் பிடித்து இழுத்துச் செய்த போரில் கசேந்திரன் என்னும் யானை, (ஆற்ருது) 'ஆதிமூலமே! யான் உன் அடைக்கலம்' என்று கூவி அழைத்த அந்த நாளில் வேதங்களும் இத்தகையன் என முடிவுகாண முடியாத உண்மைப் பரம்பொருளான திருமால், உருவு கொண்டு வெளிப்பட்டு வந்து அந்த யானையை அணுகி அதன் பெருந்துயரைப் போக்கி விடளித்த வரலாற்றை மறதயில்லாத அறிஞர்கள் மறப்பாரோ? (மறவாரன்றே)] என்னும் பாடலில் கஜேந்திர விருத்தாந்தத்தைக் கூறும்போது 'ஆதியம்பரமே' என்று பொதுவாக அழைத்துச் சரண்புகுந்ததையும் அப்போது தோன்றிய திருமாலே வேதமும் முடிவுகாணு மெய்ப்பொருள் என்னும் உண்மையையும் இராமன் வாயிலாக அறுதியிட்டுச் சொல்லும் கம்பனின் சமயத்தை ஐயுறவும் முடியுமோ?

''மன்னுயிர் எல்லாம் தானே
வருவித்து வளர்க்கும் மாயன்,
தன் அன உலகம் எல்லாம்
தருமமும் ஏவையும் தானே
என்னினும், அடைந்தோர் தப்மை
ஏமுற இனிதின் ஓம்பி,
பின்னும் வீடு அளிக்கும் என்ருல்,
பிறிது ஒரு சான்றும் உண்டோ ?'' [112]

[(நிலைபெற்ற உயிர்களையெல்லாம் தானே உண்டாக்கிக் காப்பாற்றும் திருமால், உலகம் எல்லாம் தன்னுடையனவே ஆயினும், அவ்வுலகத்து வழங்கும் தருமமும் அத் தருமத்தின் பயன்கள் யாவும் தானே ஆயினும், தன்னைச் சரணடைந்தோரை மட்டும் இன்பமுற இனிதாகப் பாதுகாத்து அவர் எடுத்த உடம்புக்குப் பின்னும் முத்தியை அளிப்பான் ஆனுல், சரணடைந்தோரைக் காத்தல் வேண்டும் என்பதற்கு வேறு சான்றும் காட்டவேண்டுமோ? (வேண்டா)] என்னும் பாடலினும் திருமாலே எல்லா உயிர்களையும் உண்டாக்கிக் காப்பாற்றுகின்றவன் என்றும், உலகமெல்லாம் அவனுடையவையே என்றும், விடளிப்பவனும் அவனே என்றும் இராமன் வார்த்தையாக முழங்குவதிலிருந்து ''மூவேழுலகமும் உலகினுள் மன்பதும் மாஅயோய்! நின் வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர'' என்றும்,



''நாறிணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ விறுபெறு துறக்கம்'' என்றும் முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என்று கையிலங்கு கனியாக விளங்குகிறது. இராமன் வார்த்தையில் ஒருபாடலில் ஆலமுண்டு இந்திராதி தேவர்களை ரக்ஷித்த பெருமையைச் சிவனுக்குக் காட்டுகிருன். இன்னெரு பாடலில் காலனைக் காலால் உதைத்துத் தள்ளி மார்க்கண்டேயனைக் காத்த பெருமையையும் சிவனுக்குக் கூறுகிருன். இந்திராதி தேவர்களையும் யமனையுங் காட்டிலும் சிவன் உயர்ந்தவன் என்பது அனை வரும் இசைந்தது. இவ்விரண்டு செயலினுல் சிவன் வலிமைமிக்க தேவன் என்று தேறுமே தவிர, பரம்பொருள் என்று தேருது. ''ஆதிமூலமே!'' என்றபோது வந்த ''வேதமும் முடிவுகாணு மெய்ப் பொருள்'' என்று கூறும் பாடலும், ''மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன், தன்னன உலகமெல்லாம்...பின்னும் வீடளிக்கும்'' என்று கூறும் பாடலும் திருமாலே பரம்பொருள் என்று தெற்றெனக் காட்டுகின்றனவன்ருே. இத்தகைய திருமாலைப் பற்றிய பாடல்கள் ஒவ்வொரு காண்டத்திலும் மிகுந்திருப்பதிலிருந்தே கம்பன் பரமவைணவன் என்பதை நடுநிலையாளர் எளிதில் உணரலாம். அடுத்தபடியாக 'சரண் எனக்கு யார் கொல்' என்று அழுத சானகிக்காக உயிரையே கொடுத்த தன் பெரியதந்தையான சடாயுவின் செயலையும் எடுத்துக்காட்டுகிருன் இராமன். இராமன் சடாயுவைத் தன் பெரியதந்தையாகக் கருதினுன் என்னும் காரணத்தால் சடாயுவுக்கு ''பெரிய உடையார்'' எனத் திருநாமம் சாத்தினர் ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்கள். ''மரணம் என் தாதை பெற்றது என்வயின் வழக்கன்ருமோ'' என்று இந்த ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களின் வழக்கைத் தழுவியிருப்பதிலிருந்து கம்பன் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றியவன் என்று விளங்குகிறது. ''தாழ்ந்தவராயினும் தன்னைப் புகல்புகுந்தோர்க்கு ஆருயிர் கொடுத்துக் காத்தவர்கள் எண்ணிலா அரசர்கள்'' என்று எடுத்துக் காட்டுகிருன் இராமன். இவ்வளவு காரணங்களையும் காட்டி,

''ஆதலான், அபயம் என்ற
போதத்தே அபய தானம்
ஈதலே கடப்பாடு என்பது;
இயம்பினீர் என்பால் வைத்த
காதலான்; இனி வேறு எண்ணக்
கடவது என்? கதிரோன் மைந்த!
கோது இலாதவனை நீயே
என்வயின் கொணர்தி என்ருன்.'' [118]

[ஆதலால், விடணன் அபயம் என்று சொன்னபோதே அபய தானம் கொடுத்தலே என் கடமையாகும். என்னிடம் வைத்த பேரன்பால் நீங்கள் (அவனை யேற்கலாகாது என்று) முன் சொன்னீர்கள்; இனி வேறு வகையாக எண்ண வேண்டுவது யாதுளது? சூரியன் புதல்வனுகிய சுக்கிரீவ! குற்றம் அற்றவனுகிய விடணனை நீயே என்னிடத்து அழைத்து வருவாயாக' என்று கூறினன்.] என்று தன் தீர்ந்த முடிவைக் கூறுகிறன் இராமன். இதிலிருந்து திறமையும் கருணையும் மிக்கவனே சரணமடையத் தக்கவன் என்னும் சரணுகதி சாஸ்திரத்தின் சாரத்தைக் கற்றுத் தேர்ந்தவன் கம்பன் என்று விளங்குகிறது. இவன் வைணவன் என்பதை விளக்கவும் வேண்டுமோ. சுக்கிரீவன் விடணனை அழைத்துவரச் சொல்லும் அடுத்தபாடலில் "தெய்வநாயகன்" என்று இராமனைக் குறிப்பிடுகிருன் கம்பன். இதனுல் தெய்வங்களெல்லாம் ஒன்று என்னும் கொள்கை கம்பன் உடன்பட்டதன்று என்று விளங்குகிறது. சுக்கிரீவன் வரவையறிந்து விடணன் அவனை எதிர்கொண்டழைக்க, இருவரும் தழுவிக் கொள்கின்றனர். இராமனது திருவுள்ளத்தைச் சுக்கிரீவன் விடணனிடம் கூறுகிருன். அதைக்கேட்டு விடணன் மிகவும் மகிழ்கின்ருன்.

"பஞ்சு எனச் சிவக்கும் மென் கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை,
வருக! என்று அருள் செய்தானே?
தஞ்சு எனக் கருதினுனே?
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சு எனச் சிறந்தேன் அன்றே.
நாயகன் அருளின் நாயேன்? [124]

[(தோழியர்) செம்பஞ்சுக்குழம்பு (ஊட்டவேண்டும்) என்று சொன்னவுடன் (பொருமல்) சிவக்கின்ற மெல்லிய திருவடிகளையுடைய தேவியாகிய சீதையை(க் கவர்ந்து இராமனை விட்டுப்) பிரியச்செய்த பாவியாகிய வஞ்சகத்தன்மையுள்ள இராவணனுக்கு இளையவனுகிய என்னையும் 'வருவாளுக' என்று கூறியருளினனே? அடைக்கலப் பொருளாகத் திருவுளம் பற்றினனே? உலக நாயகனுகிய இராமன் அவ்வாறு அருள் செய்தானுயின், நாய்போன்ற கடைப்பட்டவனுகிய யான், நீண்ட சடையையுடைய சிவபிரான் உட்கொண்ட ஆலகால விடம் போலச் சிறப்புப் பெற்றுவிட்டேன் அன்றோ!] என்னும் பாடலில் பாஞ்சராத்ர சாஸ்திரத்தில் சரணமடைபவனுக்கு முக்கியமான தன்மையாகக் கூறப்பட்ட கார்ப்பண்யத்தை (கைம்முதலில்லாமையை) விடணனிடம் உள்ளதாகக் காட்டுகிருன் கம்பன். இராமனது பெருங்கருணையைக் கூறுகிருன். பிறகு சுக்கிரீவன் விடணனை இராமனிடம் அழைத்துச் செல்கின்ருன். விடணன் 'கார்க்கடல் கமலம் பூத்தது' எனப்பொலியும் இராமனைக் கண்டான்.



"அள்ளி மீது உலகை வீசும்
அரிக் குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் திரையிற்று ஆகிப்
பிறிது ஒரு திறனும் சாரா
வெள்ளி வெண கடலில் மேல் நாள்
விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளி நீந்து இருந்தான் என்னப்
பொலிதரு பண்பினுனை" [131]

[இந்நிலவுலகத்தைக் கையால் அள்ளி விண்மேல் வீசும் ஆற்றலுடைய வானர இனத்தின் சேனைக்கு நடுவில்-தெளிவான குளிர்ந்த அலைகளையுடையதாகி(ப் பாலின் தன்மையன்றி) வேறு ஒரு தன்மையும் சேராத மிக்க வெண்மையுடைய பாற்கடலில், முற்காலத்தில் தேவர்கள் தன்னைத் தொழுது, (அரக்கரை அழித்துத் தமமைக் காக்குமாறு) வேண்டத் தன் நாகணையில் படுத்திருத்தலை விடுத்து வீற்றிருந்த திருமாலைப்போல விளங்குகின்ற தன்மையுடையவனை] என்னும் பாடலில் திருமாலே இராமன் என்று அறுதியிடுகிருன் கம்பன்.

"வீரனை நோக்கி அங்கம்
மென் மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வார நெஞ்சு உருகி, செங்கண்
அஞ்சனமலை! அன்று ஆகின்
கார்முகில் கமலம் பூத்தது ஆம்;
இவன் கண்ணன் கொல்லாம்;
ஆர் அருள் சுரக்கும் நீதி
அறம் நிறம் கரிதோ? என்ருன்" [135]

[வீரத்திற் சிறந்த இராமனை நோக்கி, உடம்பு மெல்லிய மயிர்க்கூச்செறியக் கண்கள் நீர்சொரிய உள்ளம் உருகி, (விடணன்) "இவன் சிவந்த கண்களையுடைய அஞ்சனமலை போல்வன்; அது அன்ருனல், தாமரை மலர்கள் பூக்கப் பெற்றதாகிய கரியமேகம் போல்வனுக உள்ளான்; இத்தன்மையுடைய இவன் திருமால் தானே? நிறைந்த அருளைச் சுரக்கும் தன்மையுடைய அறக்கடவுளின் நிறம்

கரிதுதானே ?'' என்று வியந்து கூறினன்.] என்னும் பாடலில் இராமனைக்கண்ட விடணன் திருமாலே இராமன் என்று அறுதி யிடுகிருன். இத்தகைய நூற்றுக்கணக்கான பாடல்களில் இராமன் திருமாலின் அவதாரமே என அறுதியிட்டிருக்கும்போது 'மூலமும் நடுவும்' என்னும் ஒரு பாடலிலிருந்து அவனை மும்மூர்த்திகளின் அவதாரம் என்று கம்பன் கூறுகிருன் என்பது பொருந்தாது என்றும், மற்ற இருமூர்த்திகளின் இருப்பிடங்களும் ஆயுதங்களும் அவர்களுக்கு அந்தர்யாமியான திருமாலின் இடமும் ஆயுதமுமே என்பதே கம்பனின் கருத்து என்றும் நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும்.

''மின்மினி ஒளியின் மாயும்
பிறவியை வேரின் வாங்கச்,
செம்மணி மகுடம் நீக்கித்,
திருவடி புனைந்த செல்வன்
தன்முனர் கமலத்து அண்ணல்
தாதையார், சரணம் தாழ,
என்முனர் எனக்குச் செய்த
உதவி என்று ஏமபல் உற்ருன்'' [136]

[மின்மினிப் பூச்சிகளின் ஒளிபோல விரைந்து அழியும் இயல்பின தாகிய என்பிறவியை யான் அடியோடு ஒழிக்கும்படி, சிவந்த மாணிக் கங்கள் பதிக்கப்பெற்ற முடி தனக்குக் கிடைத்திருக்கவும் அதனை வேண்டாமென்று நீக்கிவிட்டுத் திருவடி நிலைகளையே முடியாகப் புனைந்துகொண்ட செல்வனுகிய பரதனுடைய தமையனுரும், தாமரை மலரில் இருக்கின்ற பிரமனுடைய தந்தையாருமாகிய இராமனுடைய திருவடிகளில் வணங்குமாறு என் அண்ணனுகிய இராவணன் எனக்குச் செய்த உதவிதான் என்னே! என்று மகிழ்ச்சியடைந்தான்.] என்னும் அடுத்தபாடலில் இராமனைப் பிரமனின் தந்தை என்று கூறுவதும் இதையே வலியுறுத்துகிறது. அடுத்தபாடலில் 'பிறவி நோய்க்கு மருந்தென நின்றவனை திருமாலே அம்பெய்துகொல்ல நிற்கும் அரக்கர் அருந்தவமுடையவரே' என்று விடணன் கருதியதாகக் கூறுவதிலிருந்தும் ''மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடியையுடையவன் மாயோனுகிற திருமாலே'' என்னும் சங்ககாலத் தமிழர் சமயமே கம்ப னின் சமயம் என விளங்குகிறது. இப்படிப் பிறவி நோய்க்கு மருந் தாக வேறு எந்த தெய்வத்தையும் கம்பன் காட்டியதில்லை என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. விடணன் இராமனின் திருவடிகளில்விழ, இராமன் அவனுக்கு இருக்கை அளித்து இலங்கை அரசுரிமையை அளித்ததைக் கூறுகின்றன மேல்வரும் பாடல்கள்; விடணனுக்கு



முடிசூட்டுமாறு இராமன் இலக்குவனை நியமிக்கின்ருன். விடணனே ''பரதனுக்கு அளித்த பாதுகையாகிற மகுடமே தனக்கு வேண்டும்'' என்கிருன்.

''குகனெடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனெடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னெடும் எழுவர் ஆனேம்;
புகலருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை''[144]

[எம்மிடத்து அன்பினுல் வந்து அடைந்த, மனத்தில் நிலைபெற்ற முதிர்ந்த பத்தியையுடைய ஐயனே! முன்பு கங்கைக்கரையில் குகனெடு நட்புக்கொண்டு (நால்வராய நாங்கள்) ஐவராகப் பெருகினேம்; அதன் பின்பு (கிட்கிந்தையில்) மேருமலையைச் சுற்றி வருகின்ற சூரியனுடைய மகனுகிய சுக்கிரீவனேடு சேர்ந்து அறுவராகப் பெருகி னேம்; (இன்று) நின்னெடு நட்புக்கொண்டு எழுவராகப் பெருகி விட்டோம்; புகுதற்கரிய காட்டை இடமாக எனக்குத் தந்தமையால் நும் தந்தையாகிய தயரதன் புதல்வர்களால் நிறைவுடையவன் ஆனன்.] என்னும் பாடலில் இராமன்—குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியவர் களைத் தன் தம்பியராக ஏற்றுக்கொண்டதைக் கூறுகிருன் கம்பன். இது ''ஏழை ஏதலன்'' [பெரியதிரு 5-8-1] எனும் பாசுரத்தில் 'உம்பி எம்பி' என்று திருமங்கையாழ்வார் கூறியதற்கு விளக்கமாயிருப்பது வெளிப்படை. இப்படி நூற்றுக்கணக்கான பாடல்களில் ஆழ்வார்களைத் தழுவியிருப்பதிலிருந்தும் கம்பன் வைணவன் என விளங்குகிறது. இதைக் கேட்டவுடன் மகிழ்ச்சியுடன் விடணன் இராமனின் திருவடி நிலையைச் சூட்டிக்கொள்கின்ருன். இதைக்கண்டு உலகமெல்லாம் மகிழ் கின்றது. விடனன் பாசறையை வலம்வருமாறு செய்கிருன் இராமன்.

'தேடுவார் தேட நின்ற
சேவடி, தானும் தேடி
நாடுவான், அன்று கண்ட
நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவம் அஞ்சும்
நீங்கி, மேல் அமரர் ஆவார்;
சூடுவார் எய்தும் தன்மை
சொல்லுவார் யாவர்? கண்டீர்'' [151]

[கடவுளைத் தேடியறிதலையே தம் குறிக்கோளாகக்கொண்ட ஞானிகள் தம் ஞானத்தால் தேடவும், அவர்க்குப் புலப்படாமல் நின்ற (திருமா லின்) சேவடியை (அத்திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய)

தானும் தேடிக் காண விரும்பினவனும்) (அத்திருமால் திருவிக்கிரமாவதாரம் செய்த) அன்று, (அச்சேவடி தன்னை நெருங்கி வரக்) கண்ட நான்கு முகங்களையுடைய பிரமன், அச்சேவடியைக் கழுவிய நீராகிய கங்கையின் நல்ல நீரில் மூழ்கினவர் தம் பாவங்கள் ஐந்தும் நீங்கப் பெற்று விண்ணுலகில் தேவராய்ச் செல்வார் என்றால், அச்சேவடியையே தலையில் சூடிக்கொள்ளும் பேறு பெற்றவர்கள் அடையும் பெருமைபற்றிச் சொல்லுந் தகுதியுடையவர் யாவர்? (யாரும் இலர்)] என்னும் பாடலில் அனைவராலும் தேடப்படும் சேவடியை உடையவனும் நான்முகனால் கங்கை நீர்கொண்டு திருவடி விளக்கப்பெற்றவனுமான திருமாலே இராமன் என்று அறுதியிடுவதிலிருந்து கம்பன் பரமவைணவன் என விளங்குகிறது. சங்ககாலச் சான்றோர்களால் எங்கும் தொடப்படாத அடிமுடிதேடியகதை முதலானவற்றை எப்பாடலிலும் தொடாத கம்பனை என்ன காரணங்கொண்டு ம. பொ. சி. சைவன் என்று எழுதினர் என்று எவருக்கும் விளங்கவில்லை. வைணவ சித்தாந்தத்தின் உயிர்நாடியான சரணாகதிக் கொள்கையை மிக விரிவாக விளக்கியிருக்கும் இப்படலத்திலிருந்தே கம்பன் பரமவைஷ்ணவன் என்று விளங்குகிறது. இனி உயுத்தகாண்டம் மேல்வரும் படலங்களிலும் இராமன் திருமாலின் அவதாரம் என்று உணர்த்தும் பாடல்கள் நூற்றுக்கணக்கில் இருப்பதால் அவற்றைப் பெரும்பாலும் விடுத்து, திருமாலே முழுமுதல்வன் என்று காட்டும் பாடல்களையே மிகுதியாகக் குறிப்பிட்டு விளக்குவோம். வருணனை வழிவேண்டுபடலத்தில் வருணன் இராமனைத் துதிக்கும் பாடல்கள் திருமாலே பரம்பொருள் என்னும் சங்ககாலத் தமிழர் சமயத்தைப் பின்பற்றி நிற்பவை.

"ஆழிநீ; அனலும் நீயே;
அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே;
அவற்று உறை உயிரும் நீயே;
வாழியாய்! அடியேன் நின்னை
மறப்பெனோ? வயங்கு செந்தீச்
சூழுற உலைந்து போனேன்;
காத்தருள்—சுருதி மூர்த்தி!" [68]

[வேதங்களின் வடிவாக இருப்பவனே! இந்தக் கடலும் நீயே; இந்தக் கடலை எரிக்கின்ற நெருப்பும் நீயே; இவையல்லாத எல்லாப் பொருள்களும் நீயே; உலகத்தை அழிக்கின்ற ஊழியிறுதியும் நீயே; உலகும் நீயே; அவ்வுலகங்களில் வாழ்கின்ற உயிர்களும் நீயே; என்றும் வாழ்கின்ற பெருமானே! இத்தகைய நின்னை அடியேன் மறப்பேனோ? (மறக்க மாட்டேன்) விளங்குகின்ற செந்தீயானது என்னைச் சூழ்ந்து கொண்டமையால் அழிந்து போனேன்; அவ்வழிவில் நின்றும் என்னைக் காப்பாற்றியருள்க.] என்னும் பாடலில் உலகனைத்துக்கும் அந்தர்யாமியாகையால் அனைத்தும் திருமாலே என்று துதிக்கிறான். இதிலிருந்து "அம் கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும் திங்களும் தெறுகதிர்கனலியும் நீ, ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ, நலம்முழுது அளைஇய புகர் அறுகாட்சிப் புலனும் பூவனும் நாற்றமும் நீ, வலன் உயர் எழிலியும் மாகவிசும்பும் நிலனும் நீடிய இமயமும் நீ" என்றும், "அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆகலின்" என்றும் பரிபாடலில் முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமான விசிஷ்டாத்வைத வைணவமே கம்பனின் சமயம் என்று விளங்குகிறது. "சுருதி மூர்த்தி" என்று இராமனை விளிக்கையால் வேதத்தில் பரம்பொருளாகச் சொல்லப்படுபவன் திருமாலே என்னும் பண்டைத்தமிழர் சமயத்தைப் பின்பற்றியவனே கம்பன் என விளங்குகிறது.



"காட்டுவாய் உலகம்; காட்டிக் காத்து,
அவை கடையில் செந்தீ
ஊட்டுவாய்; உண்பாய், நீயே;
உனக்கும் ஒண்ணாதது உண்டோ?
தீட்டு வான் பகழி ஒன்றால்
உலகங்கள் எவையும தீய
வீட்டுவாய் நினையின்; நாயேற்கு
இத்தனை வேண்டுமோ தான்?" [69]

[உலகங்களைப் படைப்பாய்; அவ்வாறு படைத்துப் பின் காத்து அவ்வுலகங்களை ஊழியிறுதியில் செந்தீக்கு ஊட்டுவாய்; இல்லையேல் நீயே அவற்றை உண்பாய்; உனக்கு முடியாத செயலும் உண்டோ? நினைத்தால் உலகங்கள் யாவற்றையும் தீயுமாறு தீட்டிய சிறந்த அம்பு ஒன்றினால் அழிப்பாய்; நாய் போன்ற எளியனாகிய எனக்கு இத்தனை அம்புகளும் வேண்டுமோ? (வேண்டாவன்றே)] என்னும் அடுத்தபாடலில் உலகனைத்தையும் தன்னிடமிருந்தே படைத்து அதைக்காத்து ஊழி இறுதியில் தானே அதை உண்பவன் திருமாலே என்று புகழ்கின்றான். "மூவேழுலகமும் உலகினில் மன்பதும் மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர" என்று உலகனைத்தையும் தன்னிடமிருந்து படைத்தவன்

திருமாலே என்றும், ''மாநிலம் இயலா முதல்முறை அமையத்து நாமவெள்ளத்து நடுவண்தோன்றிய வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரைப் பொகுட்டு நின்நேமி நிழலே'' என்று உலகனைத்தையும் ஊழி இறுதியில் தன்னிடம் ஒடுக்கியிருந்தவன் திருமாலே என்றும் பரிபாடலில் முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என இதிலிருந்தும் விளங்குகிறது.

''சண்டவான் கிரண வாளால தயங்கு இருள் காடு சாய்க்கும்
மண்டலத்து உறையும் சோதி வள்ளலே! மறையின் வாழ்வே!
பண்டை நான்முகனே ஆதி சராசரத்து உள்ளப் பள்ளப்
புண்டரீகத்து வைகும் புராதன! போற்றி, போற்றி!'' [70]

[வெப்பக் கொடுமையுடைய சிறந்த கிரணமாகிய வாளினால், திகைத்தற்குக் காரணமான இருளாகிய காட்டினை அழிக்கின்ற சூரிய மண்டலத்தில் தங்கியிருக்கின்ற ஒளிப்பிழம்பாகிய வள்ளலே! வேதத்தின் வாழ்விற்குக் காரணமாக இருப்பவனே! பழமை வாய்ந்த பிரமன் முதலாக உள்ள இயங்குவனவும் நிற்பனவுமாகிய உயிர்களின் உள்ளமாகிய தாமரையில் தங்கியிருக்கும் பழையோனே! காப்பாயாக; காப்பாயாக!] என்னும் பாடலில் எல்லா உலகும் அவனுக இருப்பதற்குக் காரணம் பிரமன் முதலான அனைவருக்கும் அனைத்துக்கும் அவன் அந்தர்யாமியாயிருப்பதே என்று காட்டுகிறுன். சூர்யமண்டலத்தின் நடுவிலிருக்கும் பரம்பொருளாக வேதத்தில் ஓதப்பட்டவன் நாராயணனே என்றும் காட்டுகிறுன். இன்று பெரும்பாலும் சைவர்களாகி விட்ட அத்வைதிகளும் சூரியநாராயணன் என்றே பெயர்வைத்துக் கொள்வதிலிருந்து அவர்களாலும் இவ்வுண்மை இசையப்பட்டது என்று விளங்குகிறது.

''கள்ளமாய் உலகங் கொள்ளும்
கருணையாய்! மறையில் கூறும்
எள்ளல் ஆகாத மூலத்து
யாதுக்கும் முதலாய் உள்ள
வள்ளலே! காத்தி என்ற
மாகரி வருத்தம் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும்
புராதனு! போற்றி, போற்றி!'' [71]

[''ஒருவரும் உணராவண்ணம் உலகத்தினைத் திருவயிற்றில் கொண்டு காக்கின்ற கருணையுடையவனே! வேதத்தில் கூறப்படுகின்ற இகழ முடியாத மூலப்பகுதியில் தோன்றிய எவ்வுயிர்க்கும் மூலமாக உள்ள வள்ளலே! காப்பாற்றுவாயாக'' என்று அழைத்த கயேந்திரன் என்னும் பெருமை பொருந்திய யானையின் வருத்தம் தீருமாறு கருடப் பறவைமேல் வந்து காட்சியளித்த பழையோனே! காப்பாயாக; காப்பாயாக!] என்னும் பாடலில் 'ஆதிமூலமே' என்று கஜேந்திரன் கூறியபோது கருடன்மேல் வந்து அவனைக்காத்த முழுமுதல்வன் திருமாலே என்று முழங்குகிறுன். இவ்விஷயத்தைக் கம்பன் ஒவ்வொரு காண்டத்திலும் பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.



''அன்னை நீ; அத்தன் நீயே;
அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ; முன்னும் நீயே;
பேறும் நீ; இழவும் நீயே;
என்னை நீ இகழ்ந்தது என்றது
எங்ஙனே? ஈசன் ஆய
உன்னை நீ உணராய்! நாயேன்
எங்ஙனம் உணர்வேன் உன்னை?'' [72]

[(எனக்குத்) தாயும் நீ, தந்தையும் நீயே; இவ்வுறவு அல்லாத பிற உறவுகளாக இருப்பவனும் நீயே; காரியப் பொருளாகிய யானும் நீயே; எனக்குக் காரணனுக உள்ளவனும் நீயே; யான் பெறும் நற்பேருக இருப்பவனும் நீ, இழப்பாக இருப்பவனும் நீயே; இவ்வாறு நின்னையே சார்ந்துள்ள என்னை நோக்கி, 'நீ இகழ்ந்தாய்' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இறைவனுகிய உன்னை நீயே முழுவதும் உணரமாட்டாய்! என்றால், நாய் போன்ற கடையவனுகிய யான் உன் தன்மை முழுவதையும் எவ்வாறு உணரவல்லவனுவேன்?] என்னும் பாடலில் ஜீவர்களுக்கு எல்லாவுறவுமாயிருக்கும் ஸர்வேஸ்வரன் திருமாலே என்று கூறுகிறுன். ''அன்னை எனநினை இ. நின் அடி தொழுதனெம்'' என்று திருமாலையே இயற்கை உறவினனுகப் பாடிய சங்ககாலத் தமிழர் சமயத்தையே பின்பற்றியவன் கம்பன் என்று இதிலிருந்தும் விளங்குகிறது. ''உன்னைப் புரை நினைப்பின் நீயலது உணர்தியோ முன்னைமரபின் முதுமொழி முதல்வ'' என்று பரிபாடலில் பாடியதை ஒருபுடை அடியொற்றி ''ஈசனுய உன்னை நீ உணராய்; நாயேன் எங்ஙனம் உணர்வேன் உன்னை'' என்று பாடியதும் இதையே வலியுறுத்துகிறது.

"பாய் இருள் சீக்கும் தெய்வப் பரிதியைப் பழிக்கும் மாலே
மா இருங் கரத்தால் மண்மேல் அடியுறையாக வைத்து
தீயன சிறியோர் செய்தால் பொறுத்தலே பெரியோர் செய்கை
ஆயிர நாமத்து ஐயா! சரணம் என்று அடியில் வீழ்ந்தான்" [73]

[பரவிய இருளைப் போக்குகின்ற தெய்வத் தன்மை வாய்ந்த சூரியனை யும் தன்னொளியால் கீழ்ப்படுத்துகின்ற ஒரு மணி மாலையை வருணன் தன் பெரிய கைகளால் ஏந்திக்கொண்டு வந்து, தரைமேல் காணிக் கையாக வைத்து, "சிறியவர்கள் தீயனவற்றைச் செய்தால் அவற் றைப் பொறுத்துக் கொள்ளுதலே பெரியவர் தம் செய்கையாகும்; ஆயிரம் பெயர்களையுடைய ஐயனே! அடைக்கலம்" என்று கூறிக் கொண்டு இராமன் திருவடியில் விழ்ந்து வணங்கினன்.] என்னும் பாடலில் "ஆயிர நாமத்து ஐயா!" என்று இராமனை விளிக்கை யாலே இராமனுக்குத் தான் கூறிய இப்பெருமைகளெல்லாம் அவன் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தால் போற்றப்படும் திருமாலின் அவதார மாயிருப்பதாலேயே என்று உணர்த்துகிறன். இந்த வருணன் துதியாலும் கம்பன் திருமாலையே பரம்பொருளாகக்கொண்ட பரம வைஷ்ணவன் என்று விளங்குகிறது. இலங்கை காண்படலத்தில் 10-வது பாடலில் "காலனேயொக்கும் தூதன் காலும் கண்ணுதலும் என்ருர்" என்று அனுமனைச் சிவனின் அம்சம்பெற்றவன் என்று மறு படியும் குறிப்பிடுகிறன் கம்பன். சில பிரதிகளில் "காலனேயொக்கும் தூதன் காற்றெனும் கடவுள் என்ருர்" என்று பாடம் காண்கிறது. ஆயினும் அப்படலத்திலேயே,

"சூலம் ஏய் தடக் கை அண்ணல்
தானும் ஓர் குரங்காய்த் தோன்றி
ஏறு மேல் இடைவது அல்லால்
என்செய வல்லன் என்னே?
வேலே நீர் கடைந்த மேல் நாள்
உலகு எலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க என் கை
அயில் முகப் பகழி? அம்மா!" [20]

[சூலப்படை பொருந்திய பெருமை வாய்ந்த கையினையுடைய சிவ பெருமான் தானும் (இங்கு) ஒரு குரங்காகித் தோன்றி(ப்போரில்) எதிரேற்று நிற்பானுயின், (எனக்கு முன்னே நிற்கும் வலியின்றித்) தோற்று ஓடுவதன்றி என்னை என் செயவல்லான்? என்கையிலுள்ள கூரிய முனையினையுடைய அம்பு (அவன்) விழுங்குதற்கு, கடலின் நீரைக் கடைந்த முற்காலத்தில் உலகவுயிர்களெல்லாம் அஞ்சியோடும்



படி (உருத்தெழுந்து) வந்த ஆலகால நஞ்சென்னும் (அத்துணை எளிமைத்) தன்மையதோ?] என்று மிகத்தெளிவாக அனுமன் சிவனின் அம்சமென்று கம்பன் குறிப்பிட்டிருக்கிறன். திருவவதாரப் படலத்திலேயே "புராரி மற்று யானே வாதசேயெனப் புகன்ருன்" என்று இதைக் குறிப்பிட்டிருப்பதைக் காட்டினேம். மற்றும் பல பாடல்களில் இதை உணர்த்தியிருப்பதைக் காட்டினேம்; பிற்பகுதி யிலும் காட்டுவோம்; இப்பாடல்களிலிருந்து சிவனைக் கம்பன் பரம விஷ்ணு பக்தனுகவே கருதினனேயொழிய விஷ்ணுவைப்போலே பரம் பொருளாகக் கருதவேயில்லை என விளங்குகிறது. சிவனிடமிருந்து வரங்கள் பெற்றபோதிலும் சிவனை அடியோடு மதிக்காமல் இப்பாடலில் பேசியிருப்பதிலிருந்து ராவணன் உண்மையான சிவபக்தனுமல்லன் என்று விளங்குகிறது. அங்கதன் தூதுப்படலத்தில் அங்கதன் தன்னை யாரெனக்கேட்ட இராவணனுக்குப் பதில் கூறும் பாடலில்,

"பூத நாயகன் நீர் சூழ்ந்த
புவிக்கு நாயகன், அப் பூமேல்
சீதை நாயகன் வேறு உள்ள
தெய்வ நாயகன் நீ செப்பும்
வேத நாயகன் மேல் நின்ற
விதிக்கு நாயகன் தான் விட்ட
தூதன் யான்; பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன் என்ருன்" [21]

['ஐம்பெரும் பூதங்களுக்குத் தலைவனும், கடலாற் சூழப்பெற்ற நில மடந்தையின் தலைவனும், அந்தத் தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் (திருமகளையொத்த) சீதையின் கணவனும், பல்வேறுருவினராயுள்ள தெய்வங்களுக்கெல்லாந் தலைவனும், நீ ஓதுகின்ற மறைகளின் பொரு ளாய் விளங்கும் தனி முதல்வனும், (உலக நிகழ்ச்சிகட்கெல்லாம்) மேற்பட்டு (அவற்றை நியமித்து) நிற்கும் ஊழ்வினையாகிய விதிக்குத் தலைவனும் ஆகிய (திருமாலின் அமிசமாகிய) இராமபிரான் அனுப்பிய தூதன் யான். (அம் முதல்வன்) கட்டளையிட்டருளிய வார்த்தையினை (உனக்கு)ச் சொல்லுதற்கு வந்தேன்' என (அங்கதன், தான் வந்த காரியத்தை இராவணனுக்கு)க் கூறினன்.] என்று சீதை திருமகளே என்றும், இராமன் திருமாலே என்றும், அவனே எல்லா தெய்வங்களுக்கும் நாயகன் என்றும், வேதநாயகன் என்றும், விதிக்கு நாயகன் என்றும் திருமாலின் முதன்மையைத் தெளிவாகக் கூறுகின்ருன். அடுத்ததான முதற்போர்ப்படலத்தில் இராமன் வில்லையேந்தியதைக் குறிக்கும்போது,

"ஓங்கிய உலகமும் உயிரும் உட்புறம்
தாங்கிய பொருள்களும் மறையும் தான் எனின்
நீங்கியது யாவது? நினைக்கிலேம்; அவன்
வாங்கிய வரிசிலை மற்றென்றே கொலோ?" [116]

[சிறப்புடைய இவ்வுலகமும், இவ்வுலகத்தில் இயங்குகின்ற உயிர்ப் பன்மையும், இவ்வுலகத்தின் உட்புறத்தே இவ்வுலகத்தால் தாங்கப் பெற்ற மரம் முதலிய நிலைத்திணைப் பொருள்களும், (இவ்வுலகுயிர்களுக்கு வழிகாட்டியாகவுள்ள) வேதமும் இராமனே என்றால், அவனாகாமல் அவனின் வேறுபட்டு நிற்கும் பொருள்தான் யாதுளது? என்பதை இப்போது சிந்தனை செய்கிலேம்; எல்லாப் பொருளுமாகவுள்ள அந்த இராமன் (தன் பகைவனாகிய இராவணனை வெல்லும் பொருட்டுத் தன்னிலும் வலியது எனக்கருதிக்) கைக்கொண்ட கட்டமைந்த வில் அவன் வியாபகத்திற்கு அப்பாற்பட்ட வேறொரு பொருளோ? (என்று எண்ணுமாறு சிறப்புடன் தோன்றிற்று)] என்று எங்கும் நிறைந்த விஷ்ணுவாகிற திருமாலே இராமன் எனக் காட்டுகிறான். இதிலிருந்து "அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீயாகலின்" என்று பரிபாடலில் சங்கத்தமிழர் காட்டிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.

"நாற்கடல் உலகமும் விசும்பும் நாள் மலர்
தூர்க்க வெஞ்சேனையும் தானும் தோன்றினன்—
மால்கடல் வண்ணன் தான் வளரும் மால் இரும்
பாற்கட லோடும் வந்து எதிரும் பான்மை போல்" [117]

[கருங்கடல் போன்ற வண்ணத்தையுடைய இராமன், தான் கண் வளர்கின்ற மிகப் பெரிய பாற்கடலோடும் வந்து எதிர்ப்பட்ட தன்மை போல, நான்கு திசையிலும் உள்ள கடலால் சூழப்பட்ட மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் அன்றலர்ந்த புதிய மலர்களைச் சொரிந்து வாழ்த்தாநிற்க, (வெண்ணிறமுடைய) கொடிய வானரச் சேனையும் தானுமாகப் போர்க்களத்தில் வந்து தோன்றினன்.] என்னும் அடுத்தபாடலில் திருப்பாற்கடலில் கண்வளரும் திருமாலே இராமன் எனத் தெளிவாகக் காட்டுகிறான்.

"ஊழியின் உருத்திரன் உருவு கொண்டு தான்
ஏழ் உயர் உலகமும் எரிக்கின்றான் என
வாழிய வரிசிலைத் தம்பி மாப்படைக்
கூழையின் நெற்றி நின்றானை கூடினன்" [118]



[இராமன் ஊழிக்காலத்தில் உருத்திரன் உருவத்தை மேற்கொண்டு ஏழாக உயர்ந்த உலகங்களையெல்லாம் எரிக்கின்றவனைப்போல(ப் பகைவர் சேனையை அழித்துக்கொண்டு) பெரிய வானரப்படையின் பின்னணியின் தலைப்பில் நின்றவனாகிய கட்டமைந்த வில்லையுடைய இலக்குவனைச் சேர்ந்தான்] என்னும் அடுத்த பாடலில் திருமாலே உருத்திரனுக்கு அந்தர்யாமியாயிருந்து உலகத்தை அழித்தவனெனக் காட்டுகிறான். இதிலிருந்தும், "ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ" என்று முதற்பரிபாடலில் உருத்திரனும் அவன் செய்யும் ஸம்ஹாரத் தொழிலும் திருமாலின் அதீனமே என முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. இராமன் இராவணனோடு போர்க்கு வரும்போது இராமன் தேரிலாது செல்வது கண்டு அனுமன் தன் தோளின்மேல் இராமனை ஏற்றிக்கொள்கிறான். அதற்குக் காரணத்தைக் கூறும் பாடல்,

"பண்டைநாள் தரு பனித்திரைப் புனல்சடை ஏற்றுக்
கொண்ட தூயவன் கொடுந்தொழில் நிருதர்கள் குழுமி
மண்டு வாளமர்க் களத்தில்அம் மலர்க் கழல்சேறல்
கண்டு கூசலன் நிற்குமென்றால்அது கடனே" [216 A]

[முன் திரிவிக்கிரமாவதாரகாலத்தில் (பிரமன் திரிவிக்கிரமனின் திருவடிகளில்) விழவிட்ட குளிர்ந்த அலைகளையுடைய கங்கைநீரைத் தன் சடையிலே ஏற்றுக்கொண்ட மனத்தூய்மையுடைய சிவன் கொடிய செயல்களையுடைய அரக்கர்கள் ஒன்றுகூடிப் போரிடும் போர்க்களத்தில் அந்தத் திருவடித் தாமரை பொருந்தியிருப்பதைக் கண்டு கூசாமலிருந்தான் என்றால் முறையாகுமோ?] என்று பழைய பிரதிகளில் காண்கிறது. "புராரி மற்று யானே வாதசேயெனப் புகன்றான்" என்று திருவவதாரப் படலத்திலேயே அனுமனைச் சிவன் அவதாரமாக வலியுறுத்திய கம்பன், கங்கைநீர் திரிவிக்கிரமனின் திருவடியில் தோன்றி, சங்கரனால் தலையினால் தரிக்கப்பட்டது என்று பல இடங்களில் காட்டும் கம்பன் இங்கு அவ்விரண்டையும் பிணைத்து, "திருமாலின் திருவடி நீர் தரையில் விழப்பொறுக்காமல் தலையில் ஏற்றுக்கொண்டவன் அவனுடைய திருவடியே தரையில் நிற்பதைப் பொறுப்பானோ" என்று கவிநயம் தோற்றக்கூறியிருப்பது மிகப் பொருத்தமாயிருக்கிறது. பின்வந்த பல பதிப்புக்களில் திருமாலுக்குச் சிவனைக்காட்டிலும் முதன்மையைக் கூறும் இப்பாடலை மிகைப் பாடலாகக் குறித்துவிட்டார்கள். எப்படியாயினும் இப்பாடலிலுள்ள கருத்துக்களை ஆங்காங்கு கம்பன் கூறியிருக்கிறானென்பது மறுக்க வொண்ணாதது.

"ஓதம் ஒத்தனன் மாருதி;
அதன் அகத்து உறையும்
நாதன் ஒத்தனன் என்னினே,
துயில்கிலன் ஈம்பன்
வேதம் ஒத்தனன் மாருதி;
வேதத்தின் சிரத்தின்
போதம் ஒத்தனன் இராமன்;
வேறு இதின் இலை பொருவே" [220]

[அனுமன் திருப்பாற்கடலை ஒத்தான்; (இராமன்) அந்தப் பாற்கடலில் தங்கியுள்ள திருமாலை ஒத்தனன் என்று சொல்லலாம் என்றாலோ இராமன் இங்குத் துயிலவில்லை; (ஆதலால் அந்த உவமை பொருந்தாது;) அனுமன் வேதத்தை ஒத்தனன்; இராமன் அந்த வேதத்தின் முடிவில் புலப்படும் ஞானத்தெளிவை ஒத்தனன் (என்னலாம்); இதைக் காட்டிலும் வேறு உவமை இல்லை.] என்னும் பாடலில் அனுமன் தோளில் இராமன் அமர்ந்தமைக்கு உவமை சொல்லும் போது இராமனைத் திருப்பாற்கடலில் துயிலும் திருமாலாகவும், அவனே வேதத்தின் உட்பொருள் என்றும் முழங்குகிறான் கம்பன். இதிலிருந்தும் கம்பன் பரமவைணவன் என்று விளங்குகிறது.

"தகுதியாய் நின்ற வென்றி
மாருதி தனிமை சார்ந்த
மிகுதியை வேறு நோக்கின்
எவ்வணம் விளம்பும் தன்மை?
புகுதி கூர்ந்துள்ளார் வேதம்
பொதுவுறப் புலத்து நோக்கும்
பகுதியை ஒத்தான்; வீரன்
மேலைத் தன் பதமே ஒத்தான்" [221]

[இராமனுக்குத் தகுதியுடைய வாகனமாய் நின்ற வெற்றியுடைய அனுமானது தனித்தன்மை பொருந்திய சிறப்பைச் சொல்லுவது எவ்வாறு? இன்னும் வேறுபட அச்சிறப்பை நோக்குவோமாயின், ஞானமிக்குள்ளார்க்கு உரியதாகிய வேதம் பொதுவாகத் தன் அறிவால் நோக்கிக் கூறுகின்ற மூலப்பகுதியை ஒத்தான் (அனுமான்); வீரனாகிய இராமன் அம்மூலப்பகுதிக்கு மேலே உள்ள தன் பரமபதத்தையே ஒத்து விளங்கினான்.] என்னும் பாடலில் மூலப்பிரகிருதிக்கு மேலே பரமபதம் அமைந்துள்ளது என்னும் வைணவசித்தாந்தத்தைக் காட்டுவதும் இதை வலியுறுத்துகிறது.



"மேருவின் சிகரம் போன்றது
என்னினும் வெளிறு உண்டாமால்—
மூரிநீர் அண்டம் எல்லாம்
வயிற்றிடை முன்னம் கொண்ட
ஆரியற்கு அனேக மார்க்கத்தால்
இடம் வலமது ஆகச்
சாரிகை திரியல் ஆன மாருதி
தாமப் பொன்—தோள்" [222]

[பெரிய கடலால் சூழப்பட்ட அண்டம் எல்லாவற்றையும் முன் (பிரளய காலத்தில்) தன் வயிற்றிடைக் கொண்டிருந்த திருமாலின் அமிசமான இராமனுக்கு (வாகனமாய்ப்) பல வழிகளில் இடம் வலமாகச் சாரிகை திரிதற்குரிய அனுமானது மாலையணிந்த அழகிய தோள், 'மேரு மலையின் சிகரம் போன்றது' என்று கூறினாலும் குற்றமுண்டாகும்.] என்னும் பாடலில் எல்லா அண்டங்களையும் தன் வயிற்றில் கொண்ட திருமாலே இராமன் என்று காட்டும்போது திருமாலின் முதன்மையைப் பறைசாற்றுகிறான் கம்பன்.

"ஆவி சென்றிலர் நின்றிலர்
அரக்கரோடு இயக்கர்
நா உலர்ந்தனர்; கலங்கினர்
விலங்கினர்; நடுங்கி
கோவை நின்ற பேர்
அண்டமும் குலைந்தன; குலையாத்
தேவ தேவனும் விரிஞ்சனும்
சிரதலம் குலைந்தார். [225]

[(இராமனது நாணொலியைக் கேட்ட) அரக்கரும் இயக்கரும் உயிர் பிரிந்திலராயினும், நின்ற இடத்தில் நில்லாதவர்களாய், நா வறண்டு, மனங்கலங்கி, உடல்நடுங்கி வேறிடங்கட்கு விலகி ஓடினர்; வரிசைப் பட நின்ற பெரிய அண்டங்களும் நடுங்கின; எதற்கும் நடுங்காத உருத்திரனும் பிரமனும் தலை நடுங்கினர்.] என்னும் பாடலில் இராமன் நாணொலியைக்கேட்ட உருத்திரனும் பிரமனும் தலைநடுங்கினர் என்று கூறுவதன்மூலம் மும்மூர்த்திகளில் முதல்வன் திருமாலே என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறான் கம்பன். இவனையா சைவன் என்பது? இனி கும்பகருணன் வதைப்படலத்தைக் காண்போம்.

"மூன்று அமை திங்கள் சூடும்
முக்கண்ணன் முதல்வன் ஆக
இன்று அமை புவனம் மூன்றும்
வந்து உடன் கிடைத்த வேனும்

வலை அமை வரிவில் வாளி
மெய் உற வழங்கும் ஆயின்
இளையவன் தனக்கும் ஆற்றுது
என் பெருஞ்சேனை—நம்ப !'' [16]

['பெரியோனே, முளைத்தல் பொருந்திய பிறைச்சந்திரனை (முடியில்) சூடிய மூன்று கண்களையுடைய சிவபெருமானை முதல்வனுகக்கொண்டு, மேன்மேல் வளருந் தன்மையுடைய மூவுலகத்து வீரர் திரளும் ஒரு சேர வந்து (போர்த்துணையாக எனக்கு)க் கிடைத்தன ஆயினும், என்னுடைய பெரியசேனையானது, (இலக்குவன்) வளை தல் பொருந்திய கட்டமைந்த வில்லினின்றும் (வெளிப்படுத்துகின்ற) அம்புகளை உடவில் தாக்கும் வண்ணம் செலுத்துவானுனல் இளையவனுகிய அவனுக்கும் எதிர் நிற்கமாட்டாது.] என்னும் பாடலில் முதற்போரில் தோற்ற இராவணன் ''சிவனைச் சேனைமுதல்வனுகக் கொண்டு மூவுலகத்துப் போர் வீரரும் எனக்குப் போர்த்துணையாக வாய்த்தாலும் என்னுடைய சேனை இளையவனுக்கும் எதிர்நிற்கமாட்டாது'' என்று கூறுவதிலிருந்து சிவனின் தாழ்வும் திருமாலின் முதன்மையும் மிகத் தெளிவாக விளங்குகிறது.

''எறித்த போர் அரக்கர் ஆவி
எண் இலாவெள்ளம் எஞ்சப்
பதித்தபோது என்னை அந்தப்
பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்தபோது அந்நாள் அந்தக்
கூனி கூன்போக உண்டை
தெறித்தபோது ஒத்து அன்றி
சினம் உண்மை தெரிந்தது இல்லை'' [17]

['அந்த இராமன், (படைக்கலங்களை வீசி) எறியப்பெற்ற போரில் எண்ணில்லாத வெள்ளக் கணக்கினரான அரக்கர்களுடைய உயிர் நீங்குமாறு (அவர்களுடைய உயிரைக்) கவர்ந்தபோதும், என்னை அந்த அவமானம் (என்னுடைய) முதுகை இடமாகக்கொண்டு பொருந்துமாறு (தன் அம்புகளைக்கொண்டு) பதியச் செய்தபோதும், (அவ்விராமனுடைய முகக்குறிப்பு),முன்னுளிலே அந்தக் கூனியினுடைய கூனிலே பொருந்தும்படி (சிறு வில்லினின்று) மண் உருண்டையைத் தெறித்த போதிருந்த நிலைமையை ஒத்திருந்ததேயன்றிக் கோபத்தோடு கூடியிருந்ததாகத் தெரியவில்லை.] என்னும் பாடலில் ''கூனேசிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்''[திருவாய்1-5-5] என்று ஆழ்வார் அநுசந்தித்த இராமனின் பாலலீலையைக் கூறுவது கம்பன் ஆழ்வார்களிடம் எவ்வளவு ஈடுபாடுடையவன் என்பதைக் காட்டுகிறது.



''பேய் இருங்கணங்களோடு
சுடுகளத்து உறையும் பெற்றி
ஏயவன் தோள்கள் எட்டும்
இந்திரன் இரண்டு தோளும்
மாஇரு ஞாலம் முற்றும்
வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும் அன்னுன்
விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்ற." [24]

['அந்த இராமனுடைய ஒரு விரலின் வலிமையைப் பெரிய பேய்க் கூட்டங்களோடு சுடுகாட்டில் வாழும் தன்மையினையுடைய சிவபெருமானுடைய எட்டுத் தோள்களும், இந்திரனுடைய இரண்டு தோள்களும், மிகப் பெரிய நிலவுலக முழுவதையும் தன் வயிற்றில் அடக்கிய திருமாலின் ஆயிரம் தோள்களும் தாங்கும் வலிமையுடையன ஆக மாட்டா.] என்னும் பாடலில் திருமாலுக்கு ஆயிரம்தோள்கள் உண்டு என்று கூறுவதன்மூலம் புருஷஸூக்தத்தால் சொல்லப்படும் பரம் பொருள் அவனே எனக்காட்டி, அவனே நிலவுலகம் முழுவதையும் தன் வயிற்றில் அடக்கியவன் என்று கூறுவதன்மூலம் அனைத்தையும் அழிக்கும் பரம்பொருள் அவனே என உறுதிப்படுத்துகிறுன். இவ்விடத்தில் பேய்க்கூட்டங்களோடு சுடுகாட்டில் வாழ்பவன் என்று சிவனைக் குறித்திருப்பதும்,உலகம் முழுவதையும் வயிற்றில் வைத்தவன் எனத் திருமாலைக் குறித்திருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. இராவணன் இராமனைக் காட்டிலும் திருமாலைத் தாழ்த்திக் கூறுவது தேவர்களாலே தனக்குச் சாவில்லை என்று தான்பெற்ற வரத்தின் செருக்கினுலே என்று உணர்க.

''முப்புரம் முருங்கச் சுட்ட மூரி வெஞ்சிலையும் வீரன்
அற்புத வில்லுக்கு ஐயா! அம்பு எனக்கொளலும் ஆகா;
ஒப்பு வேறு உரைக்கல் ஆவது ஒரு பொருள் இல்லை; வேதம்
தப்பினபோதும் அன்னுன் தனு உமிழ் சரங்கள் தப்பா.'' [36]

[ஐயனே, மூன்று புரங்களையும் அழியும்படி எரித்த (மா மேருவாகிய) வலிமை பொருந்திய கொடிய வில்லும் இராமனுடைய அதிசயத் தன்மை வாய்ந்த வில்லுக்கு அம்பாகக் கொள்ளுதற்கும் தகுதியுடையதாகாது. (ஆகவே இராமனுடைய வில்லுக்கு) ஒப்பாக வேறொன்றை எடுத்துச் சொல்லக்கூடியதான ஒரு பொருளில்லை; வேதங்கள் கூறுகின்ற மெய்ப் பொருள்கள் பொய்த்துப் போவதாயினும் அந்த இராமனுடைய வில் வெளிப்படுத்துகின்ற அம்புகள் (அவன் எண்ணிய செயலைச் செய்வதற்குத்) தவறமாட்டா.] என்னும் பாடலில்

சிவனுடைய முப்புரம் எரித்த வில் இராமனுடைய வில்லுக்கு அம்பாகக் கொள்வதற்கும் தகுதியுடையதன்று என்று இராவணன் வாயிலாகக் கம்பன் கூறுவதிலிருந்து சிவன் முப்புரம் எரித்தது அவனுக்கு முதன்மையைக் காட்டாது என்பதே கம்பனின் கருத்து என விளங்குகிறது.

**"தவன் நுணங்கியரும் வேதத்**
**தலைவரும் உணரும் தன்மைச்**
**சிவன் உணர்ந்து அவரின்**
**மேலைத் திசைமுகன் உணரும் தேவன்**
**அவன் உணர்ந்து எழுந்த**
**காலத்து அசுரர்கள் படுவது எல்லாம்**
**இவன் உணர்ந்து எழுந்த**
**காலத்து இமையவர் படுவர் எந்தாய்!"** [115]

[எம் தந்தை போன்றவனே, தவத்தால் உடல் சுருங்கி அறிவு கூர்மையடையப் பெற்றவர்களும், வேதத்தில் தலைமையினையுடையவர்களும் உணரும்படியான தன்மையினையுடைய சிவனால் உணர்ந்து போற்றப்பட்டு, பழையனாகிய தாமரை மலர் மேலுள்ள நான்முகனாலும் உணர்ந்து போற்றப்படுகின்ற தலைவனாகிய அந்தத் திருமால், யோகத் துயில் நீங்கி எழுந்த காலத்தில் அசுரர்கள் படும்பாடுகளையெல்லாம் (கும்பகருணனாகிய) இவன் உறக்கத்தினின்றும் எழுந்த காலத்துத் தேவர்களெல்லோரும் படுவர்.] என்னும் பாடலில் சிவனாலும் நான்முகனாலும் போற்றப்படும் தலைவன் திருமாலே என்று வீடணன் வாயிலாகக் கூறுவதிலிருந்தும் கம்பன் பரம வைணவன் என விளங்குகிறது.

**"சூலம் உண்டு; அது சூர் உளோர்**
**காலம் உண்டது; கைக்கொள்வான்,**
**ஆலம் உண்டவன் ஆழிவாய்,**
**ஞாலம் உண்டவ! நல்கினன்"** [122]

[உலகத்தை உண்டவனே, வீரம் உடையவர்களுடைய வாழ்நாளை அழித்ததாகிய சூலப்படை ஒன்றுள்ளது; அதனை (இவன்) கைக்கொள்ளும்படி கடலில் தோன்றிய நஞ்சையுண்ட சிவபெருமான்கொடுத்தான்;] என்னும் பாடலில் திருமாலின் அவதாரமான இராமனை உலகத்தையுண்டவன் என்றும், சிவனை ஆலமுண்டவன் என்றும், கும்பகர்ணன் போன்ற தீயவர்களுக்குத் தீமைபுரிய ஆயுதங்கொடுத்தவன் என்றும் குறிப்பதிலிருந்து திருமாலே முழுமுதல்வன் என்றும் அவனுடைய அவதாரமே இராமன் என்றுமே கம்பன் கருதினன் என விளங்குகிறது.



**"இருள் உறு சிந்தையேற்கும் இன் அருள் சுரந்த வீரன்**
**அருளும், நீ சேரின்; ஒன்றோ, அவயமும் அளிக்கும்; அன்றி,**
**மருள் உறு பிறவி நோய்க்கு மருந்தும் ஆம்; மாறிச் செல்லும்**
**உருளுறு சகட வாழ்க்கை ஒழித்து, வீடு அளிக்கும் அன்றே."** [139]

[மயக்கம் பொருந்திய மனத்தையுடைய எனக்கும் இனிய கருணையைப் பொழிந்த வீரனாகிய இராமன், நீ (அவனுடன்) சேர்ந்தால் (உனக்கும்) அருள் செய்வான்; அது மட்டுமின்றி உன்னை அடைக்கலமாகவும் ஏற்றுக்கொள்வான்; அல்லாமலும் மயக்கத்தைச் செய்யும் பிறவியாகிய நோய்க்கு (அவனையடைதல்) மருந்தும் ஆகும். மாறி மாறிப் பிறக்கும்படியான, சக்கரம் பூண்ட வண்டி போன்ற பிறவியை நீக்கி முத்தியையும் கொடுப்பான்.] என்னும் பாடலில் அத்திருமாலின் அவதாரமான இராமனே பிறவி நோய்க்கு மருந்து என்றும் வீடளிப்பவன் என்றும் கூறுவதிலிருந்து "மறுபிறப்பறுக்கும் மாசில்சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே!" "நாறிணர்த்துழாயோன் நல்கினல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" என்று பரிபாடலில் முழங்கிய சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.

**"கண்ணுதல், தீமை செய்ய**
**கமலத்து முளைத்த தாதை**
**அண்ணல்தன் தலையின் ஒன்றை**
**அறுக்க என்று அமைந்தான் அன்றே?**
**புண்உறு புலவு வேலோய்!**
**பழியொடும் பொருந்தி, பின்னை,**
**எண்ணுறு நரகின் வீழ்வது**
**அறிஞரும் இயற்றுவாரோ?"** [145]

[(பகைவர் மார்பிலே ஊடுருவிச் சென்று உண்டாக்கிய) புண்ணிலே உள்ள புலால் நாறும்படியான வேலையுடையவனே, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான், (திருமாலின்) உந்தித் தாமரையில் தோன்றிய தந்தையாய், பெருமையிற் சிறந்தவனாகிய பிரமன் தீமை செய்தலினால், அவனுடைய தலைகளுள் ஒன்றை அறுக்க வேண்டுமென்று மனங்கொண்டான் அல்லவா? (அழியாத) பழிச் சொல்லையும் ஏற்றுப் பின்னர் எண்ணி எண்ணிக் கவலைப்படத் தக்கதான நரகத்தில் வீழ்வதற்குக் காரணமான செயலை அறிஞர்களும் செய்வார்களோ? (செய்யார் என்றபடி).] என்னும் பாடலில் பிரமனைச் சிவனுக்கும் தந்தையாகக் கம்பன் குறிப்பிட்டிருப்பதிலிருந்தும் கம்பன் சைவனாயிருக்கவேமுடியாது என விளங்குகிறது. பிரமனுக்கும் தந்தையாகக் கம்பராமாயணத்தில்

பலவிடங்களில் குறிக்கப்பட்ட திருமாலே பரம்பொருள் என்பதே கம்பனின் கருத்து எனவும் விளங்குகிறது. விராதன் வதைப்படலத்தில் "மெய்யைத்தான்" என்று தொடங்கும் பாடலில் "மழுவாளிக்கன்றளித்த ஐயத்தால்" என்னும் பகுதியை இத்துடன் சேர்த்து நோக்கும்போது, பிரமன் தலையை அறுத்து, கபாலம் கையில் ஒட்டிக்கொள்ளப்பெற்று, பிச்சை ஏந்திநின்ற சிவனும், தலையறுப்புண்ட பிரமனும் பரம்பொருளல்லர்; சிவனுக்குப் பிச்சையளித்து இடர் நீக்கிய திருமாலே பரம்பொருள் என்பதே கம்பனின் கருத்து என்றும் விளங்குகிறது. 149-ம் பாடலில் " திருமறுமார்பன் " என்று இராமனைக் குறிப்பதன்மூலம் இராமன் திருமாலின் அவதாரமே என மறுபடியும் அறுதியிடுகிருன் கம்பன்.

"தேவர்க்கும் தேவன் நல்க;
இலங்கையின் செல்வம் பெற்ருல்,
ஏவர்க்கும் சிறியை அல்லை!
யார்,உனை நலியும் ஈட்டார் ?—
மூவர்க்கும் தலைவர் ஆன
மூர்த்தியார், அறத்தை முற்றும்
காவற்குப் புரிந்து நின்ருர்,
காகுத்த வேடம் காட்டி." [150]

[(பிரமன் உருத்திரன் இந்திரன்) என்னும் மூன்று கடவுளர்க்கும் முதல்வராகிய திருமால், தருமத்தை முழுவதும் நிலைநிறுத்துவதற்காகக் காகுத்த மரபிலே இராமனைத் தன்னுடைய உருவத்தைக் காட்டி வந்திருக்கின்ருர்; (அப்படிப்பட்ட) தேவர்களுக்கும் தேவனகிய அந்த இராமன் (இப்போது உனக்கு) அருள் செய்ய, இலங்கைச் செல்வம் பெற்ருயானல் நீ எவர்க்கும் தாழ்ந்தவனகமாட்டாய்; (உயர்வை யடைவாய் என்றபடி.) அதன் பிறகு உன்னை வருத்தும்படியான வலிமையுடையார் யார்? (இல்லை என்றபடி.)]என்னும்பாடலில் திருமாலை எல்லா தேவர்களுக்கும் தலைவனகக் குறிப்பிட்டிருப்பதிலிருந்தும் கம்பன் பரம வைணவன் என்று விளங்குகிறது. இங்கு "மூவர்க்கும்" என்றதற்குச் சிலர் "முத்தொழில்களைச் செய்கின்ற மூன்று கடவுளர்க்கும்" என்று பொருள்கொள்கின்றனர். கம்பன் எந்தப்பாடலிலும் மும்மூர்த்திகளுக்கு மேலே நாலாவது மூர்த்தி ஒன்று உண்டு என்று கூறியதில்லை. இராமனைத் திருமாலின் அவதாரமே என்று நூற்றுக்கணக்கான பாடல்களில் கூறுகிருன். ஆகவே இங்கு " மூவர்க்கும் " என்பதற்கு அப்படிப் பொருள்கொள்வது பொருந்தாது. பிரமன் உருத்திரன் இந்திரன் மூவரையுமே இங்கு "மூவர்" என்று கம்பன் குறித்திருப்பதாகவே கொள்ளவேண்டும். இம்மூவரையும் வேதசாத்திரங்களிலும் கம்பராமாயணப் பாடல்களிலும் பல இடங்களில் சேர்த்தெடுத்திருப்பதைக்



காண்கிரேம். "மூவர்" என்று மும்மூர்த்திகளையே சொல்லவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாலும், "மூவர்க்கும் தலைவன்" என்று விஷ்ணுமூர்த்திக்கும் மூலமூர்த்தியான பரவாசுதேவனகிற நாராயணனையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். இல்லையேல் நூற்றுக்கணக்கான கம்பன் பாடல்களோடு முரண்படும். "மூவர்க்குள் தலைவரான" என்பதே உண்மைப் பாடம் எனக் கொண்டால் மிகப்பொருந்தும். "அர்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்" [முதல்திருவ 15] என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தையும், "முப்பரம்பொருளுக்குள் முதல்வன்" என்றும் திருவவதாரப்படலப் பாடலையும் காணலாம். இப்படலத்தில் 153-வது பாடலிலும், 324-வது பாடலிலும் இராமனை "வேதநாயகன்" என்று குறிப்பிடுகிருன். வேதத்தில் பரம்பொருளாகச் சொல்லப்பட்டவன் திருமாலே என்று சங்ககாலத் தமிழர் பரிபாடலில் பல இடங்களில் முழங்கியதைப் பின்பற்றியே கம்பன் இப்படிக் குறிப்பிடுகிருன் என்பது தெளிவு. 165ம் பாடலில் இராமனை "வேதியர் தேவன்" என்று வேதம்வல்லவர்களுடைய தேவனைக் குறிப்பிடுகிருன். விராதன் வதைப்படலத்தில் "அந்தணர் மாட்டருந்தெய்வம் நின்னலாலில் லாமை நெறிநின்ருர் நினையாரே?" என்று திருமாலைத் தவிர அந்தணர்க்குத் தெய்வம் வேறில்லை என்று கூறியது இங்கு குறிக்கொள்ளத்தக்கது. இதையே "அந்தணர் கற்பினை" [பெரியதிரு 7-10-6] என்று திருமங்கையாழ்வாரும் வலியுறுத்திஞர். இதிலிருந்தும் கம்பன் ஆழ்வார்களைப் பின்பற்றிய பரமவைணவன் என்று விளங்குகிறது. 274-வது பாடலிலும், 304-வது பாடலிலும் திருமாலின் அவதாரமான இராமனை "ஆயிரம் பெயரவன்" என்று குறிப்பிடுகிருன். "பேராயிரம்கொண்டதோர் பீடுடையன்" [திருவாய் 9-3-1] "பேர்களாயிரத்தாய்" [திருவாய் 8-1-10] என்று ஆழ்வார்கள் பாடியதைப் பின்பற்றி இது போன்ற பல பாடல்களில் திருமாலுக்கும் அவனது அவதாரமான இராமனுக்குமே இப்பெருமையைக் கூறுவதிலிருந்தும், மற்ற எந்த தெய்வத்துக்கும் இதைக் கூருததிலிருந்தும் கம்பன் காலம்வரையில் விஷ்ணுஸஹஸ்ரநாமமே சான்ருேர்களால் மதிக்கப்பட்டுவந்தது என விளங்குகிறது. கம்பன் வைஷ்ணவன் என்பதற்கு இதுவும் ஓர் சான்ருகும். 317-ம் பாடலில் கம்பன் இராமனை "ஊழியில் ஒருவன்" என்று கூறியிருப்பதும், " ஊழிமுதல்வன் " என்று சங்கத் தமிழர்களும், ஆண்டாளும் பாடியதைப் பின்பற்றியது. 316-ம் பாடலில் இராமனை "மாயமாக்கூத்தன்" என்று குறித்திருப்பதும் "பிறவிமாமாயக்கூத்தினையே" [திருவாய் 8-4-11] "மாயக்கூத்தா" [திருவாய் 8-5-1] என்று ஆழ்வார் பாடியிருப்பதைப் பின்பற்றி, திருமாலையே உலகைப் படைத்தளித்தழிக்கும் விளையாட்டையுடைய பரம்பொருள் என்று அறுதியிட்டபடியாகும். 329-ம் பாடலில் "முடியாதாய்" என்று அழிவில்லாதவனைக் குறித்திருப்பதும் "மாயா மன்ன" என்று பரிபாடலில் திருமாலையே அழியாத பரம்பொருளாகச்

சங்கத்தமிழர் பாடியதைப் பின்பற்றியபடியாகும். இராமன் வடிவத்தைக் கும்பகருணன் காண்பதைக் கூறும் பாடல்—

"கண்டனன்—வதனம், வாய், கண், கை, கால், எனப்
புண்டரீகத் தடம் பூத்துப்; பொன்சிலே
மண்டலம் தொடர்ந்து, மண் வயங்க வந்தது ஓர்
கொண்டலின் பொலிதரு கோலத்தானேனே." [279]

[(திரும்பிப் பார்த்த கும்பகருணன்) கண்டான்; (யாரை எனின்?) தாமரைத் தடாகம் போன்று முகம், வாய், கண், கை, கால் என்று பெயர் வழங்குமாறு (தாமரை மலர்கள் தன்னிடத்தில்) பூக்கப் பெற்று, அழகிய வில்வட்டம் தொடரப் பெற்று, மண்ணுலகம் விளங்குமாறு வந்ததொரு மேகத்தைப் போலப் பொலிகின்ற அழகிய திருமேனியையுடைய இராமனை.] என்பது. இப்பாடலும் "கடல் கருமுகிலொளிர் கமலமதலரா, வடவரையுடன் வருசெயலென" [பால-திருவவதார 134] "கார்க்கடல் கமலம் பூத்ததெனப் பொலிவானேக் கண்டான்" [யுத்த-விடணனடைக்கல 132] முதலான பல கம்பன் பாடல்களும் "கண் கைகால் தூயசெய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழநா சாயல் சாமத்திருமேனித் தண்பாசடையா, தாமரை நீள்வாசத் தடம்போல் வருவானே" [திருவாய் 8-5-1] என்னும் ஆழ்வார் அருளிச்செயலை அடியொற்றியிருப்பது வெளிப்படை. 357-ம் பாடலில் "ஆதியாய்" என்று இராமனை விளித்திருப்பதும் கம்பன் ஆழ்வார்களைப் பின்பற்றித் திருமாலேயே முழுமுதல்வனாகக்கொண்டவன் என்பதைக் காட்டும். இவையெல்லாம் கம்பன் ஆழ்வார்களைப் பின்பற்றிய பழமவைணவன் என்று வலியுறுத்துகின்றன. இப்படலத்தில் சிவனைக் குறித்திருக்கும் பாடல்கள் இத்தகைய பரம்பொருளுக்குரிய பெருமைகளைக் கம்பன் சிவனுக்குக் கருதவில்லை என்று காட்டுகின்றன. 228-ம் பாடலில் "திரிபுரம் செற்ற தேவனும் இவனுமே ஒருவிலாளர்" என்று கும்பகருணன் இலக்குவனது வில்லாண்மை சிவனுடைய வில்லாண்மையையொத்தது என்று கூறும்போது "திரிபுரம் செற்ற தேவன்" என்று சிவனைக் குறித்தான். 261-ம் பாடலில் "அறிவு முற்றிய பித்தன்" என்று முதிர்ந்த அறிவுடைய பித்தனாகச் சிவனைக் குறித்தான். இதிலிருந்து சிவனை ஞானிகளில் சிறந்தவனாகவே கம்பன் கருதினான் என்று விளங்குகிறது. 333-ம் பாடலில் "யாவர்க்கும் அறிவரும் அரன்" என்று கம்பன் பாடியிருப்பது "ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள்நின்ற நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னுமிவரை" [திருவாய் 1.3.7] என்னும் ஆழ்வார் பாடலைப் பின்பற்றியிருப்பதால் மும்மூர்த்திகளில் ஒருவனாகையாலே இவன் பரம்பொருளோடு ஒன்று? வேறு? என்று தேவர்களாலும் அறுதியிடமுடியாதபடி இருப்பவன் என்றே பொருள் கொள்ளவேண்டும். "யாவர்க்கும்" என்பதில் திருமாலையும்சேர்த்தால் திருமாலைப் பரம்பொருளாகவும் சிவனை அவனுக்குக் கீழ்ப்பட்டவனாகவும் பக்தனாகவும் பாடியிருக்கும் நூற்றுக்கணக்கான பாடல்களோடு முரண்படும். ஆகையால் "யாவர்க்கும்" என்பதற்கு இந்திரன் முதலான தேவர்களையும் அவர்களை விடத் தாழ்ந்த மனிதர் முதலான ஜீவர்களையுமே பொருளாகக் கொள்ளவேண்டும். 334-ம் பாடலில் "கண்ணுதல் பெரும் கடவுள்" என்று சிவனைக் குறிப்பிடுகிறான் கம்பன். அடுத்தபாடலில் சங்கரன் கும்பகருணனுக்கு அளித்த கவசத்தை சங்கரன் படையான பாசுபதாஸ்திரத்தால் அழித்ததைக் குறிப்பிடும்போது "தாமரைத் தடங்கண்ணன்" என்று இராமனைத் திருமாலாகக் காட்டி, சிவனைச் சங்கரன் என்றே குறிப்பிடுகிறான். இவற்றிலிருந்து கம்பன் திருமாலையே பரம்பொருளாகக் கருதினான் என்றும் சிவனை அப்படிக் கருதவில்லை என்றும் தெளிவாக விளங்குகிறது. இனி, அடுத்ததான மாயாசனகப் படலத்தைக் காண்போம்.



"ஈசனே முதலா மற்றை
மானுடர் இறுதி யாரும்
கூச, மூன்று உலகும் காக்கும்
கொற்றத்தேன்; வீரக்கோட்டி
பேசுவார் ஒருவர்க்கு ஆவி
தோற்றிலென்; பெண்பால் வைத்த
ஆசை நோய் கொன்றது என்றால்,
ஆண்மைதான் மாசுணுதோ?" [13]

[சிவபெருமான் முதலாக ஏனைய மக்கள் ஈறாக யாவரும் உள்ளம் அஞ்சி நடுங்குமாறு மூன்றுலகங்களையும் ஆட்சி புரியும் வெற்றியினையுடையேன். வீரர் வரிசையுள் வைத்து உயர்த்துப் புகழப்படுவோராகிய ஆடவர் ஒருவர்க்கும் உயிர் (மெலிந்து) தோல்வியுற்றேனல்லேன். (அத்தகைய பெருவீரனாகிய என்னை) ஒரு பெண்ணிடத்திலே கொண்ட ஆசையாகிய நோய் வருத்திக் கொன்றுவிட்டதென்றால் (எனது) வீரத்தன்மை குற்றப்பட்டொழியுமல்லவா?] என்னும் பாடலிருந்து சிவபக்தனான இராவணன் சிவனுக்கு எவ்வளவு மதிப்புவைத்திருந்தான் என விளங்குகிறது.

"எனக்கு உயிர்பிறிது ஒன்றுஉண்டு
என்று எண்ணலே; இரக்கம் அல்லால்
தனக்கு உயிர்வேறு இன்றாகி,
தாமரைக் கண்ணது ஆகி,

கனக் கருமேகம் ஒன்று
கார்முகம் தாங்கி, யார்க்கும்
மனக்கு இனிது ஆகி, கிற்கும்
அஃது அன்றி — வரம்பு இலாதாய்!" [24]

[(நல்லொழுக்க நெறியாகிய) கட்டுப்பாடு இல்லாதவனே! கருணை என்னும் பண்பினையன்றித் தனக்கு உயிர் வேறொன்று இல்லாத தாய் (ச் செந்) தாமரை மலர்போலும் கண்களையுடையதாகிச் செறிந்த கருமை நிறம் வாய்ந்த மேகம் ஒன்று, விற்படையை(க் கையில்) ஏந்திக் கொண்டு எத்திறத்தார்க்கும் மனத்திற்கு இனிமை விளைப்பதாய் நிலை பெற்றிருக்கும்;(எனது நாயகனாகிய) அப்பொருளையன்றி எனக்கு மற்றும் வேறோர் உயிர் உளது என எண்ணுதொழிக] என்னும் பாடலில் சீதையின் வாயிலாகத் திருமாலே இராமன் எனக் காட்டுகிறான் கம்பன்.

"இனத்துளார் உலகத்து உள்ளார்,
இமையவர் முதலினோர், என்
சினத்துளார் யாவர் தீர்ந்தார்?
தயரதன் சிறுவன், தன்னைப்
புனத்துழாய் மாலையான் என்று
உவக்கின்ற ஒருவன், புக்குஉன்
மனத்துளான் எனினும் கொல்வென்;
வாழுதி, பின்னை மன்னோ!" [26]

[தத்தம் இனத்துடன் கூடி(ப் பெருங் கூட்டத்தினராக) இவ்வுலகில் வாழ்வோராகிய மக்களும் தேவர் முதலியோரும் (ஆகிய இவர்களுள்) என் வெகுளிக்கு இலக்கானவர்களில் (இறவாது) தப்பிப் பிழைத் துள்ளவர்கள் யாவர்? தயரதனுக்கு மகனும் தன்னை முல்லை நிலத் திற்றோன்றிய துளசி மாலையை அணிந்த திருமால் என்று கருதி(ச் சிலர்) மனமகிழ்தற்குக் காரணமாகிய ஒருவனும் ஆகிய இராமன் (என் கண்முன் நிற்கலாற்றாது புறங்கொடுத்தோடி நுண்ணியனாய்) உன் உள்ளத்தே புக்கு ஒளிந்திருந்தானாயினும் (அவனைத் தேடிக் கண்டு) கொன்றே தீர்வேன். பின்னர் (நீ அவனுடன் இன்புற்று) வாழ்வாய்.] என்னும் இராவணன் பதிலிலும் கம்பன் இதையே வலியுறுத்துகிறான்.

"வன்சிறைப் பறவை ஊரும்
வானவன், வரம்புஇல் மாயப்
புன்சிறைப் பிறவி தீர்ப்பான்
உளன் எனப் புலவர் நின்றார்;
என்சிறை நீக்கு வாரைக்
காண்கிலேன்; என்னின் வந்த
உள்சிறை நீக்கற் பாலார்
யார்உளர், உலகத்து உள்ளார்?" [38]



[வலிய சிறகினையுடைய (கருடனாகிய) பறவையை ஏறிச் செலுத்தும் திருமாலாகிய கடவுள் எல்லையற்ற மாயையின் காரியமாகிய துன் பத்தை விளைக்கும் சிறையாகிய பிறவிப் பிணிப்பினைக் களைதற் பொருட்டு உள்ளான் என்னும் நம்பிக்கையுடன் நல்லறிவுடைய பெரியோர்கள் (தம் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு அமைதி யுடன்) உள்ளார்கள். (அவ்வாறே) எனது சிறைத் துன்பத்தை நீக்கி எனக்கு நலஞ்செய்வாராகிய என் தலைவரை (இன்னும்) காணப் பெற்றிலேன். (எனது நிலை இவ்வாறாக) என்றால் (உமக்கு) நேர்ந்த நும்முடைய சிறையினை விடுவிக்க வல்லார் (யான் எதிர்நோக்கியுள்ள எனது நாயகனையன்றி) இவ்வுலகத்து வேறு யாவருள்ளார்கள்?] என்னும் பாடலில் சீதை வாயிலாகப் பிறவி தீர்ப்பவன் திருமாலே எனப் பாடியிருப்பது "மறுப்பிறப்பறுக்கும் மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே" என்னும் சங்கத்தமிழரின் முடிந்த தீர்ப்பையே பின்பற்றியிருக்கிறதென்பது வெளிப்படை.

"இத்திருப் பெறுகிற்பானும்,
இந்திரன்; இலங்கை நுங்கள்
பொய்த் திருப் பெறுகிற்பானும்,
வீடணன்; புலவர் கோமான்
கைத்திருச் சரங்கள் உன்றன்
மார்பிடைக் கலக்கற்பால;
மைத்திரு நிறத்தான் தாள் என்
தலைமிசை வைக்கற்பால". [55]

[(என் தந்தைக்குத் தருவதாக நீ சொல்லிய வானுலக ஆட்சியாகிய) இந்தச் செல்வத்தைப் பெறுதற்குரியவன் இந்திரனே. நும்மவர்க் குரிய இலங்கையினது நிலையற்ற செல்வத்தைப் பெறுதற்குரியவன் (நின் தம்பியாகிய) வீடணனே. உன்னுடைய மார்பிலே சேர்தற் குரியவை தேவர்க்கெல்லாம் தலைவனாகிய இராமபிரானது கையிலுள்ள அழகிய அம்புகளே. என்னுடைய தலைமேல் (நீங்காது) புனைதற் குரியவை அஞ்சனம்போலும் அழகிய நிறத்தினையுடையானாகிய அம் முதல்வனுடைய திருவடிகளேயாகும்.] என்னும் பாடலில் சீதை வாயி லாக இராமன் தேவர் தலைவனும், மைத்திருநிறத்தானுமான திருமாலே எனக் காட்டுகிறான்.

"நீயும், நின்கிளையும், மற்று
இந்நெடுநில வரைப்பும், நேரே
மாயினும், முறைமை குன்ற
வாழ்வெனோ?—வயிரத் திண்தோள்

ஆயிர நாமத்து ஆழி
ஐயனுக்கு அடிமை செய்வேன்—
நாயினே னோக்கு வேனே.
நாண்துறந்து, ஆவி நச்சி?'' [67]

[நீயும் நின் சுற்றத்தாரும் இந்த நீண்ட நிலப்பரப்பாகிய இவ்வுலகில் வாழ்வாரும் (என் கண் காண) எதிரே மாய்ந்தொழியும் நிலை நேர்ந்தாலும் (அவர்களை வாழ்வித்தல் வேண்டி, எனக்குரிய) கற்பியல் முறையாகிய ஒழுக்கஞ் சிதைய உயிர் தாங்கி வாழ்வேனே? வயிரம் போலும் திண்மை வாய்ந்த தோள்களையும் ஆயிரம் திருப்பெயர்களையும் சக்கரப் படையினையும் உடைய திருமாலின் அமிசமாகிய இராமபிரானுக்கு (அடித்தொண்டு செய்யும்) அடியவளாகிய யான், (என்னுயிரினும் சிறந்ததாகிய) நாணைத் துறந்து உயிரையே (இனிதென) விரும்பி (இழிந்த தன்மையினையுடைய) நாய் போன்றவனாகிய இராவணனைக் கண்ணெடுத்துப் பார்ப்பேனோ? (பார்க்க மாட்டேன்).] என்னும் பாடலில் ஆயிரம் திருப்பெயர்களையும், ஸுதர்சனத்தையும் உடைய திருமாலே இராமன் எனச் சீதை வாயிலாகக் காட்டுகிறான். அடுத்ததான அதிகாயன் வதைப் படலத்தில்—

''என்றே உலகு ஏழினொடு ஏழினையும்
தன் தாமரை போல் இருதாள் அளவா-
நின்றான் உரைசெய்ய, நிசாசரனும்
பின்று உரை ஒன்று பிதற்றினனால்.'' [53]

[என்று இவ்வாறு, பதினான்கு உலகங்களையும் தன்னுடைய தாமரை மலர் போலும் இரண்டு திருவடியினால் பொருந்த அளந்து நின்ற நெடியோனாகிய இராமன் எடுத்துரைக்க, (கேட்ட) அரக்கனாகிய தூதனும் பின்னிடாமைக்கு ஏதுவாகியதோர் மறுமொழியைப் பிதற்றினான்.] என்னும் பாடலில் திரிவிக்கிரமனாய் உலகனைத்தையும் அளந்த திருமாலே இராமன் எனக் காட்டுகிறான்.

''எழுவாய் இனி என்னுடன் என்று எரியும்
மழு வாய் நிகர் வெஞ் சொல் வழங்குதலும்
தழுவா உடன் ஏகுதி தாழல் எனத்
தொழுவார் தொழு தாள் அரி சொல்லுதலும்.'' [54]

['இப்பொழுதே (நீ) என்னுடன் புறப்படுவாயாக' என்று கனன்று சுடர் வீசும் மழுப்படையின் வாயினை யொத்த வெவ்விய கடுமொழியினைக் கூறிய அளவில் (யாவராலும்) தொழப்படுவோராகிய தேவர்களால் தொழுது, போற்றப்பெறும் திருவடியினையுடைய திருமாலாகிய



இராமன், (தன் தம்பியாகிய இலக்குவனைத்) தழுவி, 'காலதாமதம் செய்யற்க, உடனே விரைந்து செல்வாயாக' எனச் சொல்லவும்.] என்னும் பாடலில் தேவர்கள் அனைவரும் தொழும் திருமாலே இராமன் எனக் காட்டுகிறான்.

''எல்லாம் உடன் எய்திய பின் இவனே
வில்லாளொடு போர் செய வேண்டும் என
நல்லாறுடை வீடணன் நாரணன் முன்
சொல்லாடினன் அன்னவை சொல்லுதுமால்.'' [55]

[(வீடுபேற்றிக்குரிய) நல்ல நெறியிற் செல்லுதலையுடைய வீடணன், (நாம்) எல்லாம் (துணையாக) உடன் சென்ற பின்னர் (இலக்குவனாகிய) இவனே வில்லாள(னாகிய அதிகாய)னுடன் போர்புரிதல் வேண்டும்' என்று திருமாலாகிய இராமனது திருமுன் (அதிகாயனது பெருவன்மையையும் இலக்குவனைத் துணையின்றித் தனித்து அனுப்புதல் ஒண்ணாதென்பதனையும்) எடுத்துரைத்தான். அவன் கூறியவற்றை (விரித்துச்) சொல்லுவோம்.] என்னும் பாடலில் நாராயணன் என்றும் தனிப்பெயரையுடைய திருமாலே இராமன் எனக் காட்டுகிறான்.

''கடம் ஏய் கயிலைக் கிரி கண்ணுதலோடு
இடம் ஏற எடுத்தனன் என்று இவனைத்
திடம் மேலுலகில் பல தேவரொடும்
வட மேரு எடுக்க வளர்த்தனனால்.'' [58]

['காடுகளைப் பொருந்திய கயிலாய மலையைக் கண்ணுதற்கடவுளாகிய சிவனுடன் இருந்த இடத்தினின்று (பெயர்த்து), மேல் உயரத் தூக்கினேன் (என்னினும் என் மைந்தன் வலியனாதல் வேண்டும்)' என்று எண்ணி, இவ்அதிகாயனை வானுலகில் வாழ்வோராகிய தேவர் பலருடன் வடதிசைக் கணுளதாகிய மேருமலையை(ப் பெயர்த்து) எடுக்கும் வன்மையுடையவனாகுமாறு உறுதியுடன் வளர்த்தான் (இராவணன்).] என்னும் பாடலில் கயிலைமலையைச் சிவனோடு இராவணன் பெயர்த்து எடுத்துவிட்டான் என்று கூறுகையால் கம்பன் சிவனைப் பரம்பொருளாகக் கருதியிருக்கமுடியாது என விளங்குகிறது. நாகபாசப்படலம் ஆறும்பாடலில் ''தார்கொன்றையினான் கிரிசாய்த்தவன்'' என்றதும் இதை வலியுறுத்துகிறது.

''தன் போல்பவர் தானும் இலாத தனிப்
பொன்போல் ஒளிர் மேனியனை 'புகழோய்!
என் போல்பவர் சொல்லுவது எண் உடையார்
உன் போல்பவர் யார் உளர்?' என்று உரையா'' [70]

[தனக்கு ஒப்பாவார் தன்னையன்றி(ப் பிறர் ஒருவரும்) இல்லாத (கலப்பற்ற) தூய பொன்போன்று ஒளிரும் திருமேனியையுடைய திருமாலை நோக்கி (மது கைடபர் அவ்விருவரும்) "புகழிற் சிறந்தோனே! என்னையொத்த வீரர்கள் (உன்னைப்பற்றிச்) சொல்லத் தக்கது. '(வீரர்களால்) மதிக்கத்தக்கார் உன்னைப் போன்றவர் பிறர் யாருளர்? என்னும் பாராட்டுரை' என(த் தனித்தனியே) கூறி,] என்னும் பாடலில் திருமாலைத் தன்னையொத்தவர் தன்னையன்றி வேறு எவரும் இல்லாதவன் என்று கூறியிருப்பது "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா" [திருவாய் 2-3-2] என்று நம்மாழ்வாராலும், "நின்னைப் புரை நினைப்பின் நீயலது உணர்தியோ முன்னைமரபின் முதுமொழி முதல்வ" என்று சங்கத்தமிழராலும் முழங்கப்பட்ட வைணவமே கம்பனின் சமயம் எனக் காட்டுகிறது.

"விட்டான் உலகு யாரையும் மேலொடு கீழ்
எட்டா ஒருவன் தன் இடத் தொடையை
ஒட்டாதவர் ஒன்றினர் ஊழ் வலியால்
பட்டார் இது பட்டது பண்டு ஒரு நாள்." [74]

[எல்லாவுலகங்களும் (தனது) முதலும் முடிவும் (இவையென மனத்தாலும் வாக்காலும்) அணுகி அறியமுடியாத இறைவனாகிய திருமால், தன்னுடைய இடத்துடையினை (மதுகைடவர் ஆகிய அவ்விருவர் மேலும்) வீசித் தாக்கினன். (அந்நிலையில்) பகைவராகிய அவ்விருவரும் (அத்துடையில்) அகப்பட்டாராய் விதிவலியால் இறந்தொழிந்தார்கள். இது முன்னொரு காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும்.] என்னும் பாடலில் உலகில் எவரும் தன்முதலும் முடிவும் காணமாட்டாதவன் திருமால் என்கையால் திருமாலே பரம்பொருள் எனக் கொண்டவன் கம்பன் என விளங்குகிறது. அடிமுடிதேடிய கதை முதலான சிவபரத்துவங்கூறும் கதைகளைக் காவியத்தில் எங்கும் கையாளாததால் அவன் சைவனாயிருக்கவே இயலாது என்றும் விளங்குகிறது.

"தனி நாயகன் வன்கதை தன் கைகொளா,
நனி சாட விழுந்தனர் நாள் உலவா
பனியா மது மேதை படப் படர் மே
தினி ஆனது பூவுலகு எங்கணுமே." [75]

[ஒப்பற்ற முதல்வனாகிய திருமால், வலிய தண்டாயுதத்தைக் கையிற் கொண்டு நன்றாகப் புடைத்தலால் (அவ்விருவரும்) வாழ்நாள் கெட்டு நடுங்கி (இறந்து) விழ்ந்தார்கள். மது என்பானது மேதையாகிய தாது எங்கும் பட்டதனால் அதனைப் பொருந்திய (இந்)நிலவுலகம் மேதினியெனப் பெயர் பெறுவதாயிற்று] என்னும் அடுத்தபாடலில் திருமாலை ஒப்பற்ற முதல்வனாகக் கூறுவதும் இதை வலியுறுத்துகிறது.



"ஆர்த்து அங்கு அனல் விழியா
முடீர் மத யானையை அனையான்
தீர்த்தன் கழல் பரவா முதல்
அரிபோல் வரு திறலான்
வார்த்தங்கிய கழலான்—ஒரு
மரன் நின்றது நமனர்
போர்த்தண்டினும் வலிது ஆயது
கொண்டான்—புகழ் கொண்டான்" [157]

[மதம் முற்றிய யானையை யொத்தவனும் முழுமுதற்பொருளாகிய நரசிங்கமூர்த்தியையொத்த பேராற்றலுடன் வருபவனும் வாராற் பிணித்த வீரக்கழலையணிந்தவனும் வெற்றிப் புகழ்கொண்டவனுமாகிய அனுமன், தூயோனாகிய இராமபிரானுடைய திருவடிகளைப் பரவிப் போற்றி, அங்கு ஆரவாரித்துத் தீப்பொறிபறக்க வெகுண்டு விழித்து, யமனுடைய போர்த்தொழிற்குரிய தண்டாயுதத்தைக் காட்டிலும் வன்மையுடையதாய் அயலே வளர்ந்துநின்ற மரம் ஒன்றைக்(கையிற்) பிடுங்கிக்கொண்டான்.] என்னும் பாடலில் நரசிங்கனை முழுமுதற் பொருள் என்று பாடுவதன்மூலம் நரசிங்கன் வதைப்படலத்தில் தான் நிலைநாட்டிய பொருளை நினைவுபடுத்துகிறான் கம்பன். அடுத்ததான நாகபாசப்படலத்தில்,

"வாழிய வேதம் நான்கும்
மனுமுதல் வந்த நூலும்
வேள்வியும் மெய்யும் தெய்வ
வேதியர் விழையும் ஆகும்
ஆழி அம் கமலக் கையான்
ஆதி அம் பரமன் என்னு
ஏழையர் உள்ளம் என்ன
இருண்டன திசைகள் எல்லாம்." [179]

[வாழ்வு பெற்றுள்ள வேதங்கள் நான்கும், மனுநீதி முதலாக வந்துள்ள தரும சாத்திரங்களும், வேள்வியும், சத்தியமும், தெய்வத் தன்மையுடைய அந்தணர் விரும்பும் பேறுமாக இருக்கின்ற சக்கரமேந்திய அழகிய தாமரைமலர் போன்ற கையையுடைய திருமாலே

பரம்பொருள் என்று ஏற்றுக்கொள்ளாத அறிவு இலாதார் மனம் இருண்டுள்ளது போலத் திசைகள் எல்லாம் இருண்டு போயின.] என்பது கம்பனின் சமயக்கொள்கையைத் தெளிவாக விளக்கும் அருமையான பாடல். இதில் வேதங்களுக்கும் தருமசாத்திரங்களுக்கும் பொருளாகவும், வேள்விகளால் வழிபடப்படுபவனாகவும், சத்தியமே வடிவானவனாகவும், அந்தணர் விரும்பும் பேறாகவும் இருப்பவன் திருமாலே என்றும், அவனைப் பரம்பொருள் என்று ஏற்றுக்கொள்ளாத அறிவிலிகள் மனம் இருண்டுகிடக்கும் என்றும் முழங்குவதிலிருந்து கம்பன் பரம வைணவன் என விளங்குகிறது. கம்பன் சைவனே என்று மனத்தால் நினைக்கவும் இடமில்லாதபடி செய்யும் நூற்றுக்கணக்கான பாடல்களை நாம் எடுத்துக் காட்டிய பின்பும், அவற்றுக்கு எந்த பதிலையும் சொல்லாமல் ம. பொ. சி. மௌனம் சாதிப்பதன் பொருளை நடுநிலையாளர்கள் நன்கு உணர்ந்தேயுள்ளனர். திருமால் பரம்பொருள் என்பதை ஏற்றுக்கொள்ளாதவர் அறிவிலிகள் என்றும், கொடும்பாவிகள் என்றும் இவ்விடத்திலும், "தழைத்த தண்துளவினோன் தலைவன் அல்லன் என்று அழைத்தவன்" என்னும் பரதன் சபதப் பாடற்பகுதியிலும் முழங்கியுள்ள கம்பன் "அரனதிகன்" பாடலில் "உலகளந்த அரியதிகன்" என்றுரைப்பவர்களை அறிவிலிகள் என்று கூறியிருக்கவேமாட்டான் என்றும், அப்பாடலுக்கு நாம் காட்டியதே சரியான பொருள் என்றும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இப்படலத்தின் 219-வது பாடலில் ஸம்ஹார ருத்திரனை வருணிக்கும்போது "உடையுறு தலைக்கை அண்ணல்" என்று பிரமனது உடைந்த தலையைக் கையில் ஏந்தியவனாகக் குறிப்பிடுகையால், தலையை அறுத்தவனும், தலையறுப்புண்டவனும் பரம்பொருளல்லர் என்று மறுபடியும் காட்டுகிறான் கம்பன். 222-ம் பாடலில் இராமனை "மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான்" என்று குறிப்பிடுவதிலிருந்து "பிறவாப் பிறப்பிலே பிறப்பித்தோர் இலையே" என்று சங்கத்தமிழரும், "பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" [திருவாய் 2-9.5] என்று நம்மாழ்வாரும் தழுவிய வைணவமே கம்பனின் சமயம் என்றும், பரம்பொருளுக்குப் பிறப்பை ஒப்புக்கொள்ளாத சைவம் கம்பனின் சமயமாயிருக்க இடமேயில்லை என்றும் விளங்குகிறது. 225-வது பாடலில் "நேரிது பெரிது என்று ஓதும் அளவையின் நிமிர நின்றான்" [ஒப்பது என்றும், உயர்ந்தது என்றும் கூறுகின்ற அளவுகளைக் கடந்தவனாகிய இராமன்] என்று இராமனைக் குறித்தான் கம்பன். இங்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பின் குறிப்புரையில், "தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது உயர்வற வுயர்ந்த திருமாலின் அமிசமானவன் இராமன்



என்றவாறு. 'ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா' [திருவாய்மொழி 23-1] என்றது காண்க." என்று நடுநிலையில் நின்று எழுதப்பட்டிருப்பது காணத்தக்கது. அடுத்த பாடலில் "கேடு இலாதான்" என்று இராமனைக் குறித்தவிடத்திலும், "ஒரு காலத்திலும் கெடுதல் இல்லாதவனாகிய திருமாலின் அமிசமான இராமன்" என்று அப்பதிப்பில் பொழிப்புரை எழுதியிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. விடணன் நாகபாசத்தின் வரலாறு கூறும் 235-ம் பாடலில் "ஆழியஞ் செல்வ" என்று இராமனைச் சக்கரமேந்திய திருமாலாகக் குறிப்பிட்டு, "பண்டு இவ் அகலிடம் அளித்த அண்ணல் வேள்வியில் படைத்தது; ஈசன் வேண்டினன் பெற்று" என்று 'அந்த நாகபாசத்தைப் பிரமன் வேள்வியிலிருந்து உண்டாக்கினான்' என்றும், 'அதைச் சிவன் அப்பிரமனிடமிருந்து வேண்டிப் பெற்றான்' என்றும் கூறுவதிலிருந்து கம்பன் சிவனைப் பிரமனைவிடத் தாழ்ந்தவனாகவே கருதினான் என விளங்குகிறது. 242-வது பாடலில் "வேதத் தோட்டியின் தொடக்கில் நிற்கும் துணைக்கைம்மால் யானை அன்னான்" [வேதமாகிய அங்குசத்தின் கட்டுப்பாட்டில் நிற்கும் இரு கைகளையுடைய பெரிய யானை] என்று இராமனைக்கூறியிருப்பது, வேதமுதல்வனாகச் சங்கத்தமிழர் பலவிடங்களில் முழங்கியிருக்கும் திருமாலே இராமன் என உணர்த்துவதற்காகவே என்பது தெளிவு.

இனி, நாகபாசத்தை விடுவிக்க வந்த கருடன் இராமனைக் கண்டு தொழுவதைக் கூறும் பாடலில்,

> "பல்நாகர் சென்னி மணி கோடி கோடி
> பலகொண்டு செய்த வகையால்
> மின்னால் இயன்றது எனலாய் விளங்கு
> மினிர்பூண் வயங்க வெயில்கால்
> பொன்னால் இயன்ற நகைஓடை பொங்க
> வனமாலை மார்பு புரள
> தொல் நாள் பிரிந்த துயர்தீர அண்ணல்
> திருமேனி கண்டு தொழுவான்" [248]

[பலவாய நாகங்களின் தலையில் உள்ள பலகோடி மாணிக்கங்களைக் கொண்டு செய்த தன்மையால் மின்னினால் இயன்றது என்று சொல்லலாம்படி விளங்கும் விளக்கமுடைய ஆபரணங்கள் ஒளி வீசி விளங்காநிற்கவும், ஒளி வீசுகின்ற பொன்னால் செய்த விளக்கமுடைய நெற்றிப்பட்டம் சிறப்புடன் விளங்கவும், துளசி மாலை மார்பில் புரளவும், (விண்ணில் நின்று) பழைய நாளில் (இராமனாக

அவதரித்தபோது) பிரிந்த துயர் தீர இராமனது திருமேனியை (செய்மையில்) கண்டு தொழுவானுயினன்] என்று கருடனை முன்னு ளில் பிரிந்த திருமாலே இராமன் எனக் காட்டுகிருன் கம்பன். அடுத்த பாடலிலும் இதையே வலியுறுத்துகிருன்.

"வந்தான் மறைந்து பிரிவால் வருந்து
மலர்மேல் அயன்தன் முதலோர்
தம் தாதை தாதை இறைவா!
பிறந்து விளையாடுகின்ற தனியோய்!
சிந்தாகுலங்கள் களைவாய்! தளர்ந்து
துயர்கூரல் என்ன செயலோ?
எந்தாய்! வருந்தல் உடையாய்! வருந்தல்
என இன்ன பன்னி மொழிவான்." [250]

['மனிதவடிவில் மறைந்து வந்தவனுகிய இலக்குவனது பிரிவினுல் வருந்துகின்ற உந்திக் கமல மலர்மேல் இருக்கும் பிரமன் முதலி யோர்க்குக் காரணமாகவுள்ள தலைவனே! மானிட வடிவில் மறைந்து நின்று (அவ்வுடம்பிற்கேற்ப) விளையாடுகின்ற ஒப்பற்றவனே! உயிர் களின் மனத்துன்பங்களை யெல்லாம் போக்குகின்றவனே! அத்தகைய நீ மனம் தளர்ந்து துன்புறுதல் என்ன செய்கையோ? என் தந்தையே வருந்தாதே, என்னை ஆளாக உடையவனே! வருந்தாதே' என்று இத்தன்மையான சொற்களைப் பல முறை சொல்லி மீண்டும் சொல் வானுனுன்.] என்பது கருடன் இராமனைத் துதிக்கத் தொடங்கும் பாடல். இதில் பிரமன் முதலியோர்க்குக் காரணமாகவுள்ள தலைவ னுகவும், ஒப்பற்றவனுகவும், பிறர் துன்பம் களைய அவதரிப்பவனுக வும் உள்ள திருமாலே இராமன் எனப் பாடியிருப்பது, "அமரர்க்கு முதல்வன் நீ" "எவ்வயின் உலகத்தும் தோன்றி அவவயின் மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்" என்று பாடிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் எனக் காட்டுகிறது. இனி, சகல வேதாந்தசாரத்தையும் அடக்கி, "ஆர் இவ் அதிரேக மாயை அறிவார்" என முடியும் [251—261] பனிரண்டு பாடல்கள் அடங்கிய கருடன் துதியைக் கண்டால் கம்பன் ஸ்ரீவைஷ்ணவ சிகாமணி என ஐயந்திரிபற விளங்குகிறது.

"தேவாதி தேவர் பலராலும் முந்து
திருநாமம் ஓத செயலோய்!
மூவாது எநாளும் உலகுஏழொடு ஏழும்
அரசாளும் மேன்மை முதல்வா!
மேவாத இன்பம் அவைமேவி மேவ
நெடுவீடு காட்ட முடியாய்!
ஆவாய்! வருந்தி அழிவாய்கொல்!—ஆர் இவ்
அதிரேக மாயை அறிவார்?" [251]



[தேவர் தலைவர் அனைவராலும் சிறந்த நின் திருநாமம் ஓதப்படுதற்குக் காரணமான செயற்கரிய செயலையுடையவனே! மூப்பு அடையாமல் (என்றும் இளையனுயிருந்தே) பதினுன்கு உலகங்களையும் அரசு ஆளு கின்ற மேன்மையையுடைய முதல்வனே! நின் அடியவர்கள், பிறர்பால் பெற முடியாத இன்பங்களைப் பெற்றுப் பின் உன்னையடையுமாறு பெரிய முத்தியுலகத்தை அவர்க்குக் கொடுத்துதவ முதல் தலைவனு யிருப்பவனே! (இத்தகைய நீ நின் தம்பிக்காக) வருந்தி மனமழியத் தக்கவனே? இந்த உன் மிக்க மாயையை அறிவார் யார்? (ஒரு வருமிலர் என்றபடி.)] என்னும் பாடலில் (1) தேவர் தலைவர் அனைவ ராலும் ஓதப்படும் திருநாமத்தையுடையவன். (2) மூப்பில்லாதவன். (3) ஸர்வலோக சக்ரவர்த்தியான முதல்வன். (4) அடியார்க்கு நெடு வீடு அளிக்கும் தனித்தலைவன் என்னும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளையுடைய திருமாலே இராமன் எனக் காட்டுகிருன் கருடன்.

"எழுவாய் எவர்க்கும் முதலாகி ஈறுரு
இடைஆகி எங்கும் உளையாய்
வழுவாது எவர்க்கும் வரம் ஈயவல்லே;
அவரால் வரங்கள் பெறுவாய்
தொழுவாய் உணர்ச்சி தொடராத தன்மை
உருவாய் மறைந்து துயரால்
அழுவாய் ஒருத்தன் உளைபோலும்!—ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார்." [252]

[அயன் முதலிய எவர்க்கும் ஆதியாகி நடுவாகி அந்தமாகித் தோன்று பவனுய், எவ்விடத்தும் உள்ளவனுய், எல்லாத் தேவர்க்கும் வழுவாமல் வரங்கொடுக்கவல்ல நீ, (அவதார நிலையில்) முற்றுணர்வு உண்டாகப் பெருத தன்மையையுடைய மனித உருவாய் மறைத்து நின்று பிற தேவரைத் தொழுபவனுய் அவர்பால் வரங்களைப் பெறுவாய்; மேலும் துயரால் அழுவாய்; (இவ்வாறு வியக்கத்தக்க நீ) ஒருத்தன் இருக் கின்ருய் போலும், இந்த மா மாயையை ஆர் அறிவார்?] என்னும் பாடலில் "எவர்க்கும் முதலானவனுய் வரமளிப்பவனுயிருந்தும், தன்னிடமிருந்து வரம்பெற்ற தேவர்களை அவதாரநிலையில் தொழுது அவர்களிடமிருந்து வரம்பெறுபவனுய், துயரால் அழுபவனுயிருப்பது என்ன ஆச்சரியம்" என்று வைணவசித்தாந்தத்தின் தனிக்கொள்கை யான அவதார ரகசியத்தைத் தெளிவாகக் காட்டுகிருன் கருடன்.

"உன் ஒக்க வைத்த இருவர்க்கும்ஒத்தி;
ஒருவர்க்கும் உண்மை உரையாய்;
முன் ஒக்க நிற்றி; உலகுஒக்க ஒத்தி;
முடிவு ஒக்கின், என்றும் முடியாய்;
எனஒக்கும் இன்ன செயலோ இது? என்னில்
இருள் ஒக்கும் என்றுவிடியாய்;
அற் றொப்பமேகொல்? பிறிதேகொல்?—ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார்?" [253]

[(காத்தல் தொழிலைச் செய்யும்) உன்னோடு ஒக்க (படைத்தலும் அழித்தலும் செய்யுமாறு வைத்த பிரமனுக்கும் உருத்திரனுக்கும் ஒத்தவன்போல மும்மூர்த்தியுள் ஒருவனாக இருக்கின்றாய்; ஆனால் அவ்விருவரில் ஒருவர்க்கும் நின் உண்மை நிலையை உரைக்காதவனாக இருக்கின்றாய்; அம் மும்மூர்த்திகளுள்ளும் நீயே முதல் மூர்த்தியாக நிற்கின்றாய்; உலகப் பொருள்களில் எல்லாம் உள்ளீடாய்க் கலந்து நிற்கின்றாய்; ஆயினும் அப் பொருள்களுக்கு முடிவு நேரின் அப்பொருள்களின் உள்ளீடாய் நிற்கின்ற நீ எக்காலத்தும் அழிவு எய்தாமலிருக்கின்றாய்; 'இத்தன்மையான பொருந்தாச் செயலாகிய இது எத்தன்மையான செயலோ?' என்று ஆராயப் புகுந்தால் ஆராய்வார் உள்ளம் இருள் ஒக்கும் என்று சொல்லுமாறு அதற்கு விளக்கம் தாராமல் இருக்கின்றாய்; (அவ்வாறு இருத்தற்குக் காரணம், ஆராய்வார்தம்) புத்தியின் சிறுமையோ? அல்லது, வேறோ? யார் இந்த மாமாயையை அறியவல்லார்?] என்னும் பாடலில், மும்மூர்த்திகளில் பிரமனும், உருத்திரனும் இவனை ஒத்தவர்போல் தோன்றினும், அவ்விருவராலும் அறியமுடியாதவன் திருமால் என்றும், அவனே மும்மூர்த்திகளில் முதல்வன் என்றும், வைணவ சித்தாந்தத்தின் மும்மூர்த்திக்கொள்கையைத் தெளிவுறக் காட்டும் கம்பனுடைய ('மூலமும் நடுவும்', 'அரனதிகள்' எனும்) சில பாடல்களைக்கொண்டே இவனைத் திரிமூர்த்தி சாம்யவாதியாக்கப் பார்ப்பது என்ன பேதமை! மேலும், இப்பாடலில் உலகனைத்துக்கும் அந்தர்யாமி என்றும், ஆயினும் அவற்றைப்போல் அழிவு இல்லாதவன் என்றும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் தன் தலைவனான திருமாலாம் இராமனுக்குப் பாடுகிறான் கருடன்.

"வாழுநாள் அளித்தி முடியாமல்; நீதி
வழுவாமல் நிற்றி—மறையாய்;
பேறாய் உனக்கு ஓர்பொருள் வேண்டும்
என்றா; பெறுவான் அருத்திபிழையாய்
ஊனாய் உயிர்க்கும் உயிராகி நிற்கும்
உணர்வு ஆதி; பெண்ணின் உருவாய்
ஆண் ஆதி மற்றை அலியாதி!—ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார்?" [254]



[நீ அழியாமல் இருந்துகொண்டே உயிர்களின் வினைக்கு ஏற்ப அவற்றிற்கு) வாழ்நாளைக் கொடுகின்றாய்; அவ்வுயிர்கள் நீதிவழுவாமல் நடந்துகொள்ளவேண்டி (ஒழுக்க முறைகளைக் கூறும்) வேதங்களின் படி நீ ஒழுகி நிற்கின்றாய்; உனக்கு ஒரு பொருள் வேண்டும் என்று விரும்பமாட்டாய்; பெற விரும்பும் ஆன்மாவின் விருப்பத்தைக் கெடுக்காமல் அது விரும்பிய எதையும் கொடுக்கின்றாய்; உணவின் பிண்டமான உடம்பாகி உயிர்க்கின்ற உயிராகி, அவ்வுயிரில் நிற்கும் உணர்வும் ஆகின்றாய்; பெண்ணின் உருவாகி, அவ்வுருவிற்கு மாறான ஆணும் ஆகின்றாய்; அவ்விரண்டு நிலையும் இல்லாத அலியும் ஆகின்றாய்; இந்த நின் மாமாயையை அறிபவர் யார்?] என்னும் பாடலில், (1) பிறர்க்கு வாழ்நாள் அளிக்கும் திருமால் அழியாதவன் (2) உயிர்களுக்காகத் தான் அவதரித்து வேதநெறிப்படி நடக்கிறான் (3) வேண்டுதல் இல்லாதபடி அனைத்தையும் பெற்றிருப்பவன் (4) அனைவர்க்கும் வேண்டுவதை அளிப்பவன் (5) உயிரும், உணர்வுமாயிருப்பவன் (6) ஆணும் பெண்ணும் அலியுமாயிருப்பவன் என்னும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்குக் காட்டுகிறான் கருடன்.

"தான் அந்தம் இல்லை; பல என்னும்,
ஒன்று; தனி என்னும், ஒன்று; தவிரா
ஞானம் தொடர்ந்த சுடர் என்னும், ஒன்று;
நயனம் தொடர்ந்த ஒளியால்,
வானம் தொடர்ந்த பதம் என்னும் ஒன்று;
மறைநாலும் அந்தம் அறியாத,
ஆனந்தம் என்னும், அயல் என்னும்!
—ஆர்இவ் அதிரேக மாயை அறிவார்?" [255]

[திருமாலாகிய தான் எல்லையில்லாது பலவாக இருக்கும் என்னும் ஒரு வேதம்; மற்றொரு வேதம் பலவன்று 'ஒரு பொருளே' என்னும்; மற்றொரு வேதம், தடையிலாத அகக்கண்ணாகிய ஞானத்தால் தொடரப்படுதற்குரிய ஒளி என்று சொல்லும்; மற்றொரு வேதம், புறக்கண்ணிற்குப் புலனாகின்ற சூரிய ஒளியால் வானத்தைப் பொருந்திய இடமாகக் கொண்டுள்ளது என்று சொல்லும்; இவ்வாறாக நான்கு வேதங்களும் முடிவு இன்னது என்று அறியாமல் ஆனந்தமான பொருள் என்னும் ஒருமுறை; மற்றொருமுறை மனம் மொழி மெய் கட்கு அப்பாற்பட்டது அது என்று சொல்லும்; இந்த நின் பெரிய மாயத்தை அறிபவர் யாருளர்? (யாருமில்லை)] என்னும் பாடலில் வேதங்கள் பல கோணங்களில் ஆராய்ந்து பல விதமாகக் கூறுகின்ற பரம்பொருள் திருமாலே என்று முழங்குகிறான் கருடன்.

"மீளாத வேதம், முடிவின்கண், நின்னை
மெய்யாக மெய்யின் நினையும்
கேளாக நிற்றி; பிற வேறு பேசு
கெடுவார்கள் சொன்ன கடவாய்;
மாளாத நீதி இகழாமை நின்கண்
அபிமானம் உள்ள வறியோர்
ஆளாயும் வாழ்தி; அரசாள்தி!—ஆர் இவ்
அதிரேக மாயை அறிவார்?" [256]

[வேறுபடாத வேதம் தன் முடிவாக விளங்கும் உபநிடத்தில் நின்னை மெய்ப்பொருளாகத் தன் மெய்யுணர்வினால் நினைதற்குக் காரணமாய், உயிர்களுக்கு உறவாக நிற்கின்றாய்; (அத்தகைய நீ) பிறவேறு (பொய்யெனப்) பேசுகின்ற கெடுதற்குரிய கீழோர்கள் சொன்னவற்றையும் கடவாமல் (அவர்க்குப் பொய்யனாய்) நிற்கின்றாய்; அழியாத நெறிமுறைகளை இகழாமல் நின் கண் பற்றுள்ளவர்களாகிய வறியவர்க்கு அடிமையாளாகவும் வாழ்கின்றாய்! எல்லோரையும் கீழ்ப் படுத்திப் பணிகொண்டு அரசும் ஆள்கின்றாய்! இந்த பெரிய மாய விளையாட்டை யாரறிவார்?] என்னும் பாடலில் (1) வேதங்கள் கூறும் உயிர்கட்கு இயற்கையுறவினன் திருமாலே (2) மெய்யர்க்கு மெய்யனாகவும், பொய்யர்க்குப் பொய்யனாகவும், அடியார்க்கு அடியனாகவும், அனைவர்க்கும் அரசனாகவும் இருப்பவன் திருமாலே என்று பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்குக் கூறுகிறான் கருடன்.

"சொல் ஒன்றுஉரைத்தி; பொருள்ஆதி; தூய
மறையும் துறந்து, திரிவாய்;
வில் ஒன்றுஎடுத்தி; சரம் ஒன்று எடுத்தி;
மிளிர்சங்கம் அங்கை உடையாய்!
கொல் என்றுஉரைத்தி கொலைஉண்டு நிற்றி;
கொடியாய் உன் மாயை அறியேன்;
அல்என்று நிற்றி; பகல் ஆதி!—ஆர் இவ்
அதிரேக மாயை அறிவார்?" [257]

[ஒளி விசுகின்ற சங்கினை அங்கையில் கொள்ளுகின்ற திருமாலின் அபிமானவனே! ஒலிவடிவாகிய ஓம் என்ற சொல்லையும் உபதேசிக்கின்றாய்; அச்சொல்லின் பொருளாகவும் நிற்கின்றாய்; (அத்தகைய நீ அச்சொல்லும் பொருளும் விரவியுள்ள) தூய்மையான வேதத்தையும் கடந்து (வேதங்களுக்கு எட்டாதவனாயும்) திரிகின்றாய்; வில் ஒன்றினைக் கையில் கொண்டுள்ளாய்; (அவ்வில்லில் தொடுக்கும்) அம்பு ஒன்றையும் கையில் எடுத்துக்கொள்கின்றாய்; (அறத்திற்கு மாறுபட்டவர்களைக்) 'கொல்' என்று பிறர்க்குச் சொல்கின்றாய்; அப்படிச் சொன்ன நீயே (கொல்லப்படுவனோடு உள்ளிடாய்) கொலையுண்டும் நிற்கின்றாய்; இரவாகவும் நிற்கின்றாய்; அதற்கு மாறான பகலாகவும் நிற்கின்றாய்! கொடியவனே! உன்மாயையை யான் முற்ற அறியேன்; (யான் மட்டுமோ) இந்த பெரிய மாயை விளையாட்டை முழுதும் அறியவல்லார் இவ்வுலகில் வேறு யார்தாம் உளர்?] என்னும் பாடலில் (1) ஓங்காரப் பொருளாயிருப்பவன் (2) வேதங்களைக் கடந்திருப்பவன். (3) மாறுபட்ட பொருள்களுக்கும் அந்தர்யாமியாய் அனைத்துமாயிருப்பவன் என்றும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்குக் கூறுகிறான் கருடன்.

"மறந்தாயும் ஒத்தி; மறவாயும் ஒத்தி;
மயல்ஆரும் யானும் அறியேன்
துறந்தாயும் ஒத்தி; துறவாயும் ஒத்தி;
ஒருதன்மை சொல்ல அரியாய்;
பிறந்தாயும் ஒத்தி, பிறவாயும் ஒத்தி,
பிறவாமல் நல்கு பெரியோய்!
அறம்தான் நிறுத்தல் அரிதுஆக!—ஆர் இவ்
அதிரேக மாயை அறிவார்?" [258]

[(நின் அடியவர்) மீண்டும் பிறவாமல் முத்தி நல்குகின்ற பெரியோனே! நீ பலவகையாகக் கவலையுறுவதால் உன் பரநிலையை மறந்தவனும் போல்கின்றாய்; பாவிகளை அழிக்க உறுதிகொண்டிருப்பதால் நின் அவதார நோக்கத்தை மறவாதவன்போலவும் இருக்கின்றாய்;(இயல்வாகவே எப்பொருளிலும் பற்றற்றிருப்பதால்) துறந்தவன்போலவும் காணப்படுகின்றாய்; (இலக்குவன் முதலியோர் துயர்கண்டு இரங்குகின்றமையால்) துறவாது பற்றுள்ளவன் போலவும் விளங்குகின்றாய்; அறத்தை உலகத்தில் நிலைபெறச் செய்தல் அரிதான நிலை ஏற்பட, (நீ மனிதனாகப் பிறந்துள்ளமையால்) பிறந்தவன்போலவும் காணப்படுகின்றாய்; (பிறர் போல் வினைவயத்தாற் பிறவாது நின்னிச்சையால் பிறந்தமையால்) பிறவாதவன் போலவும் விளங்குகின்றாய்; எனவே ஒருதன்மையில் வைத்துச் சொல்லற்கு அரியவனாக இருக்கின்றாய்; முரண்பட்ட நின் செயல்களின் உண்மையை மயக்கம் பொருந்திய யானும் அறியேன். இந்த பெரிய மாய விளையாட்டை உலகில் வேறு யார்தாம் அறிவார்?] என்னும் பாடலில் (1) அடியார்க்கு வீடளிப்பவன் (2) அவதாரநிலையில் மறந்தும் மறவாதவனாய், துறந்தும் துறவாதவனாய், பிறந்தும் பிறவாதவனாய் முரண்பட்டுநிற்பவன் என்னும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்குக் கூறுகிறான் கருடன்.

"வினைவர்க்கு முற்றும் உடனே படைத்தி;
அவைசெய்தி, ஒன்றும் விழையாய்
நினைவர்க்கு, நெஞ்சின் உறுகாமம் முற்றி
அறியாமை நிற்றி; நிமிரா;
முனைவர்க்கும் முத்தி, அமரர்க்கும் ஒத்தி,
முழுமூடர் என்றும் முதலோர்
அனைவர்க்கும் ஒத்தி, அறியாமை—ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார்?" [259]

[நல்வினை தீவினை என்கின்ற இரு வினைகளையுடையவர்கட்கு (அவ்வவர் வினைகட்கேற்ற தனு கரண புவன போகங்கள் என்கின்ற) முழுவதையும் உடனே உண்டாக்குகின்றாய்; அவ்வாறு உண்டாக்கிய அவற்றை அவ்வுயிர்கள் எய்துமாறு புணர்த்துகின்றாய்; ஒன்றையும் விரும்பாத நீ, நின்னை இடைவிடாது நினைக்கின்ற அடியார்கள் நெஞ்சில் பொருந்திய விருப்பங்களை முற்றுப்பெறச்செய்து, (வேண்ட முழுவதும் தந்தவன் நீ என்பதை அவர்கள்) அறியாதபடி மறைந்து தோன்றாத் துணையாய் நிற்கின்றாய்; அகங்காரமில்லாது அடங்கியிருக்கின்ற முனிவர்களுக்கும், முக்தியுலகத்தில் உள்ள நித்திய சூரிகட்கும், ஒரு தன்மையனாகப் பேரின்பம் அளித்து நிற்கின்றாய்; முழு மூடர்களும், என்றும் முதல்வர்களாக விளங்குகின்ற அயன் முதலிய முதற்றேவர்களும், ஆகிய அனைவர்க்கும், முழுவதும் அறியப்படாமையில் ஒத்திருக்கின்றாய்; இந்த (நின்) பெரிய மாயச் செயலை யார் அறிவார்?] என்னும் பாடலில் (1) கருமபலன்களை யளிப்பவன் (2) தான் வேண்டுதலிலாதவனாய், மறைந்துநின்று அடியார் வேண்டியவற்றை அளிப்பவன் (3) முனிவர்க்கும், நித்யசூரிகளுக்கும் ஒருபடிப்படப் பேரின்பம்அளிப்பவன் (4) தன்னை அறியாதிருக்கும் விஷயத்தில் தேவர்க்கும், முழுமூடர்க்கும் வாசியில்லாதிருக்கப் பெற்றவன் என்னும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்குப் பாடுகிறான் கருடன்.

"எறிந்தாரும் ஏறு படுவாரும், இன்ன
பொருள்கண்டு இரங்குபவரும்,
செறிந்துஆயது உண்மை எனல்ஆய தன்மை
தெரிகின்றது, உன்தன் இடையே;
பிறிந்தார் பிறிந்த பொருளோடு போதி;
பிறியாது நிற்றி பெரியோய்!
அறிந்தார் அறிந்த பொருள்ஆதி—ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார்?" [260]



[நீ நாகபாசத்தை எறிந்தவரும், நாகபாசத்தால் எறியப்பட்டுக் கிடப்பவரும், இவ்விரு செயலையும் நெருங்கிக்கண்டு இறங்கி நிற்கின்றவர்களும் ஆகி விளங்குவது உண்மை என்று சொல்லத் தக்க தன்மை நின்னிடையே தெரிகின்றது; அறிவிலாதோர் பிரிந்த ஞானமாகிய பொருளோடு சேர்ந்து போய்விடுகின்றாய்; ஆயினும் ஞானமில்லாத அவர்களிடத்தும் உயிர்க்கு உயிராய்ப் பிரியாது நிற்கின்றாய்; பெரியோனே! தத்துவஞான முணர்ந்தவர்கள் அறிந்த உண்மைப் பொருளாகவும் ஆகின்றாய்; இந்தப் பெரிய மாயையை அறிவார் யார் உளர்?] என்னும் பாடலில் அனைத்துமாய்நிற்பவன் திருமாலே எனப்பாடுகிறான் கருடன்.

"பேர் ஆயிரங்கள் உடையாய்; பிறந்த
பொருள்தோறும் நிற்றி, பிரியாய்
இராய்; பிறந்து திரிவாய், இறம்தொறு
அவைதேறும் என்று; சிதையாய்,
கூர் ஆழி அம்கை உடையாய்;
திரண்டுஓர் உருஆய கோடல்உரிபோல்,
ஆராயின், ஏதும் இலைஆதி—ஆர்,இவ்
அதிரேக மாயை அறிவார்?" [261]

[ஆயிரம் திருப்பெயர்களை உடையவனாய் ஒருவனாகிய நீ, இவ்வுலகத்தில் தோன்றிய பொருள்தோறும் பிரியாமல் அவற்றின் உள்ளீடாக நிற்கின்றாய்; நின் உண்மையான பரநிலையில் நீங்காதிருந்தே ஆமை, மீனம் முதலிய உயிர்வகைகள் தோறும் பிறந்து, அவ்வுயிர்கள் நின்னியல்பைத் தெளிந்து உய்யும் என்ற நோக்கத்தால் இவ்வுலகில் திரிந்துகொண்டிருப்பாய்; எவ்வுயிரையும் சிதைக்காத அருள் உள்ளமுடைய நீ, கூர்மையான சக்கரப்படையை அழகிய கையில் ஏந்திக் கொண்டிருக்கின்றாய்; பல தோடுகள் திரண்டு ஓர் உருவமாக விளங்கும் வெண்காந்தள் கிழங்கினை உரிப்பதுபோல நின்னை ஆராய்ந்து பார்த்தால் எதுவும் இல்லையாய் (அப்பாற்பட்டு) நிற்பாய்; இந்தப் பெரிய மாயையை யார் அறிவார்?] என்னும் இத்துதியின் கடைசிப்பாடலில், (1) ஆயிரம்பெயருடையவன் (2) அனைத்துக்கும் அந்தர்யாமி (3) மேன்மையிற்குறையாமல் அவதரிப்பவன் (4) அருளுடையவனாயினும், சக்கரமேந்தியிருப்பவன் (5) அனைத்துக்கும் அப்பாற்பட்டிருப்பவன் என்னும் பரம்பொருட்கேயுரிய பெருமைகளைத் திருமாலுக்குக் காட்டுகிறான் கருடன். இப்பாடல்களில் "அதிரேக மாயை" என்று திருமாலிடமுள்ள பேராச்சரியங்களைக் காட்டுகிறான். 'மாயை' என்று எங்கு வந்தாலும் 'பொய்'

என்றே சிலர் பொருள்கொள்வது பெருந்தவறு என்றும் காட்டி, தான் உண்மையான விசிஷ்டாத்வைதியான வைஷ்ணவன் என நிலை நிறுத்திக்கொள்கிறான் கம்பன். இப்பாடல்களில் கம்பன் திருமாலுக்குச் சொன்ன பெருமைகள் சங்கத்தமிழர்களும், ஆழ்வார்களும் திருமாலுக்குக் காட்டியவையே என்று இந்நூலில் பலவிடங்களிலும், சங்ககாலத் தமிழர் சமயத்திலும் விளக்கியுள்ளோம். இதிலிருந்து சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. இராமன் கருடனை யாரென வினவி அவன் உதவியைப் பாராட்டும் 267-ஆம் பாடலில் "தேவர்க்கும் தெரிகிலாதான்" [தேவர்க்கும் தன் தன்மை முழுவதும் தெரிய இயலாதபடி உயர்ந்தோனாகிய திருமாலின் அம்சமானவன்] என்று கம்பன் இராமனைக் குறிப்பதிலிருந்தும் அவன் பரமவைணவன் என விளங்குகிறது.

"பறவையின் குலங்கள் காக்கும்
பாவகன் பழைய நின்னோடு
உறவு உளதன்மை எல்லாம்
உணர்த்துவென்; அரக்கனோடும்
மற வினை முடித்த பின்னர், வருவென்
என்று உணர்த்தி, மாயப்
பிறவியின் பகைஞ! நல்கு, விடை
எனப் பெயர்ந்து போனான்" [270]

[பறவையின் குலங்களைக் காக்கும் தூய்மையான அரசுத் தொழில் பூண்ட கலுழன், (இராமனை நோக்கி) 'மாயப்பிறவிக்குப் பகைவனும் முத்தியளிக்கும் முதல்வனே! அரக்கனாகிய இராவணனோடு தொடுத்துள்ள அப்போர்த் தொழில் முடிந்த பின்பு நின்பால் வருவேன்; நின்னோடு பழைய உறவு உள்ள தன்மையெல்லாவற்றையும் உனக்கு உணர்த்துவேன்' என்று சொல்லிவிட்டு, 'விடை கொடுப்பாயாக' என்று சொல்லிக்கொண்டே அங்கு நின்றும் பெயர்ந்து பறந்து போயினான்.] என்னும் கருடன் விடைபெற்றுச் செல்லும் பாடலில், கருடன் மாயப்பிறவி ஒழித்து முக்தியளிக்கும் முதல்வனான திருமாலாக இராமனை விளித்து, அவனோடு உள்ள பழைய உறவை இராவணனை அழித்தபின்பு வந்து உணர்த்துவதாகக் கூறிச்செல்கின்றான், இதிலிருந்தும் "திருமாலே பரம்பொருள்; அவனே இராமனாக அவதரித்தான்" என்பதே கம்பனின் உறுதியான கொள்கை என விளங்குகிறது.



இராவணன் திருமாலையும் தான் வென்றுவிட்டதாகத் தற்பெருமை பேசிக்கொள்ளும் பாடலிலும் "உண்டு உலகேழும் ஏழும் உமிழ்ந்தவன்" [297] என்று உலகனைத்தையும் உண்ட ஸர்வ ஸம்ஹாரகனான பரம்பொருள் திருமாலே என்பதை ஒப்புக்கொண்டிருப்பதிலிருந்தும் ஊழிமுதல்வனாகத் திருமாலைப் பல பாடல்களில் காட்டிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. இனி அடுத்ததான படைத்தலைவர் வதைப் படலத்தில் 35-வது பாடலில் மாலி என்னும் அரக்கனைப்பற்றிக் குறிப்பிடும்போது "சூலியும் வெருக்கொளத்தேரில் தோன்றுவான் மாலி" [சிவனும் அஞ்சும்படி தேரின்மேல் வருபவன் மாலி என்பவன்] என்று கூறுகையாலே சிவனை ஒரு சீவனாகவே கருதினான் கம்பன் என்று விளங்குகிறது. 77-ம் பாட்டில் "ஞாலமுடையான்" என்று பூமிதேவி நாயகனாகவும், அடுத்தபாடலில் "உலகேழினொடு ஏழு பெயர்ந்தளந்தான்" என்று திரிவிக்கிரமனாகவும் இராமனைக் குறிப்பதன் மூலம் திருமாலே இராமன் எனக் காட்டுகிறான் கம்பன். 82-ம் பாடலில் "மீளாவினை நூறும் விடை" என்று அந்த இராமனைக் குறிக்கையால் "இருமைவினையுமில ஏத்துமவை" என்று பரிபாடலில் வினைகளைத் தீர்ப்பவனாகத் திருமாலைக் குறிப்பிட்ட சங்கத்தமிழர்களைப் பின்பற்றியவனே கம்பன் என விளங்குகிறது. இனி அடுத்ததான மகரக்கண்ணன் வதைப்படலத்தைக் காண்போம். 18,25-ம் பாடல்களில் "அம்புயக்கண்ணான்" என்று இராமனைக் குறிப்பதன்மூலம் தாமரைக்கண்ணனான திருமாலின் அவதாரமே இராமன் என உணர்த்துகிறான் கம்பன். 20-ம் பாடலில் "தேவுண்ட கீர்த்தியண்ணல்" என்று இராமனைக் குறிப்பதன்மூலம் "நெற்றி மேற் கண்ணானும் நிறைமொழிவாய் நான்முகனும் நீண்டநால்வாய் ஒற்றைக்கைவெண்பகட்டின் ஒருவனையும் உள்ளிட்ட அமரரோடும்... தான் விழுங்கியுய்யக்கொண்ட கொற்றப்போராழியான்" [பெரியதிரு 11-6-3] என்று பிரளயகாலத்தில் எல்லாத்தேவர்களையும் உண்டவன் திருமாலே என்னும் ஆழ்வார்களின் வைணவ சமயத்தைப் பின்பற்றியவனே கம்பன் என்று விளங்குகிறது. 26-வது பாடலில் "மேலவன்" என்று இராமனை எல்லாத் தேவர்களுக்கும் மேலானவனாகக் குறிப்பதன்மூலமும் இதையே வலியுறுத்துகிறான் கம்பன். 29-ம் பாடலில் "தேவர்தம்பிரான்" என்று இராமனைக் குறிப்பதும் இதையே வலியுறுத்துகிறது. இத்தகைய பாடல்களிலிருந்து "எல்லாத் தேவர்களும் ஒன்று" "மும்மூர்த்திகளும் ஒன்று" என்ற சமரசவாதத்தை ஏற்காதவன் கம்பன் என விளங்குகிறது.

அடுத்து 30-வது பாடலில் மிகைப்பாடலாகக் கழகப்பதிப்பில் குறிக்கப்பட்ட பாடலொன்றில் ''மறைகளும் தேடிக்காணுக்கொற்றவன்'' என்று இராமனைக் குறிப்பதன்மூலமும் வேதமுதல்வனாகப் பல பாடல்களில் திருமாலைக்கூறும் சங்கத்தமிழரின் மதத்தைப் பின்பற்றியவனே கம்பன் என விளங்குகிறது. மிகைப்பாடலாகக் குறிக்கப்படாத பல பாடல்களிலும் இக்கருத்தைக் கூறியிருக்கிறான் கம்பன். அடுத்ததான பிரமாத்திரப்படலத்தில் 45-ம் பாடலில் செந்தாமரைக்கண்ணனை திருமாலின் அவதாரமே இராமன் எனக் காட்டுகிறான் கம்பன். 88, 171-ம் பாடல்களில் ''தாமரைக்கண்ணன்'' என்று இராமனைக் குறிப்பதும் இதை வலியுறுத்துகிறது. 64-ம் பாடலில் ''விடையவன் விலக்கினும் விலக்குவன்'' என்று சிவனே இடையிற்புகுந்து பொருது விலக்கினாலும் அவனைத் தடுத்து நீக்குவேன் என்று இந்திரசித்தின் வாயிலாகக் கூறுவதன்மூலம் கம்பனுடைய இராவணனைப்போலே இந்திரசித்தும் சிவனைத் தன்னைவிட வலிமைகுறைந்தவனாகவே கருதினான் என விளங்குகிறது. 75-ம் பாடலில் ''படங்கொள் பாம்பணை துறந்தவற்கிளையவன்'' என்று இலக்குவனைக் குறிப்பதன்மூலம் திருமாலின் அவதாரமே இராமன் என்பதை மிகத்தெளிவாகக் காட்டுகிறான் கம்பன்.

''கண்ட கார்முகில் வண்ணனும்,
கமலக்கண் கலுழ,
துண்ட வெண்பிறை நிலவுஎன
முறுவலும் தோன்ற,
அண்டம் உண்ட தன்வாயினால்,
ஆர்மின் என்று அருள,
விண்டது அண்டம் என்று
உலைந்திட, ஆர்த்தனர், வீரர்'' [79]

[(தம்பியின் போர்த்திறமையைக்) கண்ட கருமுகில் வண்ணனாகிய இராமனும், செந்தாமரை மலர்போலும் கண்கள் உவகைக் கண்ணீர் சொரிய, துண்டமாகிய வெள்ளிய பிறைச் சந்திரனது நிலவினையொத்து (த் தன்முகத்திற்) புன்சிரிப்பின் ஒளிதோன்ற, அண்டமாகிய உலகினை உட்கொண்ட தன் வாயினால் ('நம் படை வீரர் எல்லீரும்) ஆரவாரம் செய்வீராக' எனப் பணித்தருள, 'இவ் அண்டம் பிளவுற்றது' என்று உலகத்தார் நடுங்கி வருந்தும்படி (வானர) வீரர்கள் (பேரொலியுண்டாக வாய் விட்டு) ஆரவாரித்தார்கள்.] என்னும் பாடலில் இராமனைக் கார்முகில்வண்ணன் என்றும், அவனுடைய திருக்கண் கமலக்கண் என்றும், அவனுடைய வாய் அண்ட



முண்ட வாய் என்றும் கூறுவதன்மூலம் திருமாலே உலகமுண்ட பெருவாயனும், செந்தாமரைக் கண்ணனுமான பரம்பொருள் என்றும், அவனுடைய அவதாரமானவனே இராமனென்றும் மறுபடியும் தெளிவுபடுத்துகிறான் கம்பன். இப்படி நூற்றுக்கணக்கான இடங்களில் தனது காப்பியத்தில் தெளிவுபடுத்தியபோதிலும், கம்பன் சமரசவாதி என்றும், அவன் மும்மூர்த்திகளின் அவதாரமாக இராமனைக் கூறினான் என்றும் பொய்யை எழுதுவது அறிவாளிகளின் செயலாகுமா? 115-ம் பாடலில் ''எங்கும்முளன் ஒருவன் என இரு நான்மறை தெரிக்கும் செங்கண்ணவன்'' [''எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன் இவன் ஒருவனே'' எனப் பெருமையுடைய வேதங்கள் போற்றும் செந்தாமரைக்கண்ணுடைய திருமால்] என்று திருமாலைக் குறிப்பதன் மூலம் வேதமுதல்வனாகவும் எங்கும் நிறைந்தவனாகவும் பரிபாடலில் பல இடங்களில் திருமாலைப்பாடிய சங்கத்தமிழர்களைப் பின்பற்றியவன் கம்பன் என விளங்குகிறது. 157-ம் பாடலில் ''ஆயிரநாமத் தண்ணல்'' என்று பேராயிரம் கொண்டதோர் பீடுடைய திருமாலாக இராமனைக் குறித்து, 160-ம் பாடலில் அவனை தேவர்க்கும் தேவனாகக் காட்டுவதிலிருந்து ''அமரர்க்கும் முதல்வன் நீ'' என்று பரிபாடலில் திருமாலைப் பாடிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.

''பார் படைத்தவன் படைக்கு
ஒருபூசனை படைத்தீர்;
நீர்படக் கடவீர் அலீர்;—
வரிசிலை நெடியோன்
பேர் படைத்தவர்க்கு அடியவர்க்கு
அடியரும் பெறுவார்,
வேர் படைத்தவெம் பிறவியில்
துவக்குணு வீடு'' [184]

[வரிந்து கட்டப்பட்ட வில்லினையுடைய நெடியோனாகிய இராமபிரானது பெயரைத் தாங்கியவர்களுக்கு அடித்தொண்டுபட்டார்க்கு அடியவராயினும், வேரூன்றி நெடுங்காலம் தொடர்தலையுடைய பிறவிப் பாசத்தாற் பிணிப்புண்ணா நிலையாகிய வீட்டின்பத்தினைப் பெறுதற்குரியவராவர். (இராம நாமத்தைத் தம் பெயராகக் கொண்டார்க்கு அடியவர்க்கு அடியவர் பெறும் பதமே இத்தன்மையதாயின்) இராமபிரானுக்கே நேரில் தொண்டுபட்ட நீங்கள் ஏனைய பாசப் பிணிப்புடையாரைப்போன்று போரிற் படைக்கலத்தால் இறந்துபடக் கடவீரல்லீர். இப்பூமியைப் படைத்த பிரமதேவனது படையாகிய

பிரமாத்திரத்திற்குச் செய்யத்தக்கதொரு வழிபாட்டினைச் செய்தவராய் (நும் உடம்பைத் துறந்து) இங்கு வந்தீர்கள்.] என்னும் பாடலில் "வரிசிலை நெடியோன்" என்னும் சொல்லாலே திருமாலே இராமனாக அவதரித்தவன் என்பதை உணர்த்தி, அவனது பெயரைத் தாங்கிய தொண்டர்க்குத் தொண்டராயிருப்பவரும் வீடு பெறுவர் என்று உரைத்திருப்பது திருமாலே வீடளிக்கவல்லவன் என்று பல இடங்களில் பாடியிருக்கும் சங்கத்தமிழரின் கொள்கையைப் பின்பற்றியவன் கம்பன் என்று காட்டுகிறது.

"வான நாடியர் வயிறுஅலேத்து
அழுது, கண்மழைநீர்
சோனை மாரியின் சொரிந்தனர்;
தேவரும் சோர்ந்தார்;
ஏனை நிற்பவும் திரிபவும்
இரங்கின, எவையும்
ஞான நாயகன் உருவமே
ஆதலின் நடுங்கி" [203]

[(இராமனது துயர்நிலையைக் கண்ணுற்ற) வானவர் நாட்டு மகளிர் தம் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுது, கரிய கண்ணின் நீரை விடாமழையினுடைய மேகம்போலச் சொரிந்தனர். (உடன் நின்ற) தேவர்களும் மனம் சோர்வுற்று வருந்தினர். (உலகிலுள்ள) யாவையும் ஞானப் பொருளாம் இறைவனாகிய திருமாலின் வடிவமேயாதலால் ஏனைய நிற்பனவும் நடப்பனவும் ஆகிய எல்லாவுயிர்களும் நடுங்கி வருந்தின.] என்னும் பாடலில் உலகனைத்தும் திருமாலின் வடிவமே என்று கம்பன் பாடியிருப்பது "இனைத்து என எண்வரம்பறியா யாக்கையை" என்று பரிபாடலில் திருமாலுக்குச் சங்கத்தமிழர் பாடியிருப்பதைப் பின்பற்றியதே என்பது வெளிப்படை. இனி, இராமன் துயரடைந்ததைக்கண்டு துணுக்குற்ற தேவர்கள் அவனது மேன்மையையும் அவதாரத்தின் உண்மையையும் எடுத்துக்கூறி, தம்மைக் காத்தருளுமாறு வேண்டும் பாடல்கள் கம்பன் வைணவனே என்பதைக் கையிலங்கு நெல்லிக்கனியெனக் காட்டுகின்றன. அப்பாடல்களைக் காண்போம்.

"கண்டார் விண்ணோர்; கண்கள்
புடைத்தார், கலுழ்கின்றார்;
கொண்டார் துன்பம், என்முடிவு?
என்னு, குலேகின்றார்;



அண்டா! ஐயா! எங்கள்
பொருட்டால் அயர்கின்றாய்;
உண்டோ உன்பால் துன்பு?
என, அன்பால் உரைசெய்தார்." [222]

[(இராமனுற்ற இப் பெருந்துயரத்தை) வானுலகத்தலராகிய தேவர்கள், கண்டார்கள்; (அதனைக் காணநேர்ந்த தமது அவல நிலைக்கு இரங்கித்)தம்முடைய கண்களில் மோதி அறைந்து கொண்டவர்களாய் அழுவாராயினர்; (எல்லையற்ற) துன்பத்தினை மேற்கொண்டார்கள்; 'முடிவில் நிகழப்போவது யாதோ?' என அஞ்சி நடுங்குகின்றார்கள்; 'அண்டம் முழுவதும் ஆனவனே! (எம்முடைய) தலைவனே! (இறைவனாகிய) உன்னிடத்துத் துன்பம் என்பது உளதோ? (நின் அன்பர்களாகிய) எங்கள் பொருட்டாகவே (இத்தகைய துன்பங்களை மேற்கொண்டு) தளர்ந்து வருந்துகின்றாய்' என்று சொல்லி (அம் முதல்வன்பால் தாம் கொண்டுள்ள) பேரன்பினால் பின்வருமாறு கூறினார்கள்.] என்னும் பாடலில் தேவர்கள்-அண்டமுழுவதும் ஆனவனும், தங்களுக்குத் தலைவனும், துன்பமற்றவனுமான திருமாலே இராமன் என உணர்த்துகிறார்கள்.

"உன்னை உள்ளபடி அறியேம்;
உலகை உள்ளதிறம் உள்ளேம்;
பின்னை அறியேம்; முன்அறியேம்,
இடையும் அறியேம், பிறழாமல்;
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியின் நிற்கும் அதுஅல்லால்,
என்னே, அடியேம் செயற்பால?—
இன்ப துன்பம் இல்லோனே!" [223]

[இன்பமும் துன்பமும் இல்லாதவனே! (நின் அடியேமாகிய நாங்கள்) உன் இறைமைத் தன்மையை உள்ளவாறு அறியப்பெற்றிலேம். உலகினை (உள்ளும் புறமும்) நிறைந்துள்ள நின் வியாபகத் தன்மையைச் சிந்தித்துணரும் திறமுடையேமல்லேம். முடிவு இதுவென்றறியேம்; முதல் இதுவென்றறியேம்; நடுவும் இதுவென்றறியேம். (ஆதி நடு இறுதியில்லாத முழுமுதற் பொருளாகிய) நின்னை வழிபட்டு நீ வகுத்தருளிய அறநெறியில் மாறுபடாமல் நின்று ஒழுகுதலையின்றி நின் அடியேங்களாகிய எங்களாற் செய்யத்தக்கன யாவையுள்ளன?] என்னும் பாடலில் இன்பமும் துன்பமும் அற்றவனும், எவராலும் உள்ளபடி அறியமுடியாதவனும், உலகெங்கும் நிறைந்தவனும், முதல் நடுவு முடிவு இல்லாதவனுமான திருமாலே இராமன் என்று உணர்த்துகிறார்கள்.

''அரக்கர் குலத்தை வேர் அறுத்து,
எம் அல்லல் நீக்கியருளாய் என்று
இரக்க எம்மேல் கருணையினுல்
இயையா உருவம் இஃதுஎய்தி,
புரக்கும் மன்னர் குடிப்பிறந்து
போந்தாய்! அறத்தைப் பொறைதீர்ப்பான்,
கரக்க நின்றே, நெடுமாயம்
எமக்கும் காட்டக் கடவாயோ?'' [224]

['(இரக்கமற்ற கொடியோர்களாகிய) அரக்கரினத்தை வேருடன் அறுத்துக் களைந்து எம்முடைய துன்பங்களை நீக்கியருள்வாயாக;' என்று யாம் (நின்னைக்) குறையிரந்து வேண்ட, எம்மேல் (நீ வைத்த) பேரருளால் (நினக்கு) ஒவ்வாத மானிட வடிவமாகிய இதனையடைந்து (உலகவுயிர்களைக்)காக்கும் மன்னர் குடும்பத்தில் அவதரித்து, அறத்தின் (பொறுக்கவொண்ணுத) பாரமாகிய தீமைகளை அறிந்து போக்குதல் வேண்டி இங்கு வந்தாய். (இவ்வாறு எமது துயர்தீர்க்க வந்தருளிய நீ நின் இறைமைத்தன்மை) மறையநின்று நினது நெடிய மாயத் தன்மையினை (நின்பால் அன்புடைய) எங்கள் திறத்திலும் காட்டும் முறைமையினையுடையாயோ ?] என்னும் பாடலில் அறத்தை நிலைநிறுத்தவும், தீமைகளைக் களையவும் திருமாலே இராமனுக அவதரித்தான் என முழங்குகிருர்கள்.

''ஈன்ற எம்இடுக்கண் துடைத்து
அளிப்பான்இரங்கி; அரசர் இல்பிறந்தாய்!
'மூன்றுஆம் உலகம் துயர்தீர்த்தி'
என்னும் ஆசை முயல்கின்றேம்
ஏன்றும் மறந்தேம், 'அவன் அல்லன்;
மனிதன்' என்றே; இதுமாயம்
போன்றது இல்லை. ஆளுடையாய்!
பொய்யும் புகலப் புக்காயோ ?'' [225]

[(நின்னுல்) படைக்கப்பட்டவராகிய எம்முடைய துன்பங்களை அறவே நீக்கி (எம்மை)க் காத்தற் பொருட்டுக் கருணை கூர்ந்து மன்னர் குடும்பத்தில் அவதரித்தவனே! (அவ்வாறு அவதரித்தருளிய நீ) மூன்ருகிய உலகங்களின் துயர்களைத் தீர்த்தருள்வாய் என்னும் ஆசையினுலேயே முயன்று (உயிருடன்) வாழ்கின்றேம். (நீ எம்மை உறுதியாகப் பாதுகாப்பாய் என்பதனை மனம் பொருந்த) ஏற்றுக்கொண்டிருந்தும், (நின் அரற்றுதல் கேட்டு, 'இராமனுகிய இவன்,) திருமாலாகிய அவனல்லன்; மனிதருள் ஒருவனே' என்று (அவ்வுண்மையை) மறந்தேமாயினேம்; (எம்மிடத்து நீ காட்டிய) இதனையொப்பதொரு வஞ்சனைச் செயல் (வேறெங்கும் நிகழ்ந்தது) இல்லை. எம்மை அடிமையாகவுடைய இறைவனே! (மெய்ம்மையேயுருவாக விளங்கும் நீ) இத்தகைய (துன்பம் விளைக்கும்) பொய்யுரைகளையும் புகலுதற்கு முற்பட்டு விட்டாயோ ?] என்னும் பாடலில் தேவர்கள் அனைவரையும் படைத்தவனும், அவர்களுடைய துன்பம் களைந்து காப்பதற்கே அவதரித்தவனும் திருமாலே என்றும், மனிதனுகப் பிறந்தபோது அவன் அரற்றி அழுவது பொய்யேயாகும் என்றும் கூறுகிருர்கள்.



''அண்டம் பலவும்; அனைத்து உயிரும்,
அகத்தும் புறத்தும் உளஆக்கி,
உண்டும் உமிழ்ந்தும், அளந்து இடந்தும்,
உள்ளும் புறத்தும் உளை ஆகிக்
கொண்டு, சிலம்பிதன் வாயில்நூலால்
இயையக் கூடு இயற்றி,
பண்டும் இன்றும் அமைக்கின்ற
படியை ஒருவாய்—பரமேட்டி!'' [226]

[மேலான பரம்பொருளே! அண்டங்கள் பலவற்றையும் எல்லாவுயிர்களையும் (இறைவனுகிய நினக்கு) உள்ளேயும் புறத்தேயும் உள்ளனவாகச் செய்து (உலகங்களை ஒருசேர) உண்டு (வயிற்றில்) அடக்கியும், உமிழ்ந்து வெளிப்படுத்தியும் (நின் அடியினுல்) அளந்தும், பிளந்தும், அவற்றின் உள்ளேயும் புறம்பேயும் நீக்கமற நிறைந்துள்ளாயாகி இருந்துகொண்டே, சிலந்தியானது தனது வாயின் நூலினுல் கூடியற்றி அதன்கண் நிலைபெற்றிருத்தல் போன்று (உலகுயிர்களை நிலைநிறுத்திக்) காக்கின்ற நின் தன்மையினைத் தொன்மைக் காலத்தும் இக்காலத்தும் நீங்காது உள்ளாய்.] என்னும் பாடலில் எல்லாவுலகிலும் உள்ளும்புறமும் நிறைந்து, அவ்வுலகை உண்டும் உமிழ்ந்தும் அளந்தும் இடந்தும் இவ்வுலகனைத்தையும் சிலந்தி தன் வாயால் கூடுகட்டுவதுபோல் தன்னிடமிருந்தே உண்டாக்கியும் தன்னை முழுமுதல் என ஐயமறக் காட்டி நிற்கும் திருமாலே இராமனென முழங்குகிருர்கள். இவ்வொரு பாடலே கம்பன் சங்ககாலத்தமிழரும் ஆழ்வார்களும் பின்பற்றிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சமயத்தையே பின்பற்றிய பரமவைணவனெனத் தெளிவாகக் காட்டுகிறது. இப்பாடலின் கழகப்பதிப்பின் குறிப்புரையில் ஆழ்வார்கள் பாசுரங்கள் பலவற்றையும், மூன்ரும் பரிபாடலிலிருந்து பல அடிகளையும் மேற்கோளாகக் காட்டியிருப்பது இதை வலியுறுத்துகிறது.

"துன்ப விளையாட்டு இதுவேயும்,
உன்னைத் துன்பம் தொடர்புஇன்மை,
இன்ப விளையாட்டு ஆம்;எனினும்,
அறியா தோமுக்கு இடர்உற்ருல்
அன்பு விளையும், அருள் விளையும்,
அறிவு விளையும் அவைஎல்லாம்,
முன்பு பின்பு நடு இல்லாய்!—
முடித்தால் அன்றி முடியாவே" [227]

[தோற்றம் நிலை இறுதி இல்லாதவனே! (நீ மேற்கொண்ட) இச் செயல் துன்பத்தைத் தரும் விளையாட்டாம் ஆயினும் (இறைவனுகிய நின்னை) அத்துன்பம் தொடர்தல் இல்லாமையால் இன்பத்தைத் தரும் விளையாடலேயாகும். ஆயினும் (நின் இயல்பினை) அறியாதே மாகிய எங்களுக்குத் துன்பத்தையே விளைப்பதாயிற்று. (நீ செய்த இச்செயலால் எங்கள் உள்ளத்தில்) அன்பு உண்டாகும்; அருள் உண்டாகும்; ஞானம் உண்டாகும். அத்தகைய பயன்களெல்லாம் (முதல்வனுகிய நீ முன்னின்று) முடித்து வைத்தாலன்றி (எம்மிடத்து) நிறைவேறுவன அல்ல.] என்னும் பாடலில் முதல் நடுவு முடிவில் லாதவனும் துன்பத்தால் தொடப்படாதவனும் அடியார்க்கு நன்மை யெல்லாம் அளிப்பவனுமான திருமாலே இராமனெனக் காட்டுகிருர்கள்.

"வருவாய் போல வாராதாய்!
வந்தாய்என்று மனம் களிப்ப,
வெருவா இருந்தோம்; நீஇடையே
துன்பம் விளைக்க, மெலிகின்றேம்;
கருஆய் அளிக்கும் களைகண்ணே!
நீயே இதனைக் களையாயேல்
திருவாழ் மார்ப! நின்மாயை
எம்மால் தீர்க்கத் தீருமோ?" [228]

[(வெளிப்பட) வருவாய் போன்று தோன்றி, (யாவரும் கிட்டி நெருங்கும் நிலையில்) வாராமல் இருப்பவனே! (காணுதற்கு அரிய நீ இன்று இராமனாக அவதரித்து) வந்தாய் என்று எம் உள்ளம் மகிழ்ச்சி யுறுதலால் (பகைவர் செய்யும் இடர்களுக்குச் சிறிதும்) அஞ்சாதி ருந்தோம். (அச்சந்தீர்த்தருளவல்ல) நீயே (எம் மகிழ்ச்சியின்) இடையே துன்பத்தையுண்டாக்கினமையால் மெலிவுற்று வருந்துவேம் ஆயினேம். (தாய் வயிற்றில்) கருவுற்றுப் பிறந்து எம்மைப் பாது காத்தருளும் பற்றுகிய பெருமானே! திருமகள் வாழும் மார்பினை யுடையவனே! (அருளாளனுகிய) நீயே இத்துன்பத்தைக் களையா தொழிவாயாயின், நினது மாயச்செயல் (உணர்வற்ற) எங்களால் தீர்க்கத் தீர்ந்தொழியும் எளிமையுடையதோ?] என்னும் பாடலில் திருவாழ்மார்பனுன திருமாலே இராமனென்று முழங்கி அவனைத் தவிர உய்வுபாயம் வேறில்லை என்று காட்டுகிருர்கள்.



"'அம்பரீடற்கு அருளியதும், அயனுர்
மகனுர்க்கு அளித்ததுவும்,
எம்பிரானே! எமக்கு இன்று
பயந்தது' என்றே ஏமுறுவோம்;
வெம்பு துயரம் நீ உழக்க,
வெளி காணுது மெலிகின்றேம்;
தம்பி துணைவா! நீ இதனைத்தவிர்ந்து,
எம் உணர்வைத் தாராயோ?" [229]

[எம்முடைய இறைவனே! அம்பரீடன் என்பானுக்கு அருள்புரிந்ததும், பிரமதேவருடைய புதல்வராகிய உருத்திர மூர்த்திக்கு அருள்வழங்கி யதும் ஆகிய நினது அருட்பண்பு எங்களுக்கு இப்பொழுது பயன் விளைப்பதென்றெண்ணி (நினது) பாதுகாப்பினை நாடி அடைதற்கு உள்ள யாங்கள், மனம் வெதும்புதற்குக் காரணமான துன்பத்தை நீ அடைந்தமையால் (துன்ப இருளைவிட்டுச் செல்லும்) வழிகாணுது தளர்ந்து வருந்துகின்ருேம். தம்பிக்குத் துணைவனே! நீ (மேற் கொண்டுள்ள) இத்துயரத்தை நீக்கி (உணர்விழந்த) எங்களுக்கு நல்லுணர்வினைத் தந்தருளமாட்டாயா?] என்னும் பாடலில் அம்ப ரீடனெனும் அரசனுக்கு அருள்புரிந்தவனும், பிரமனின் மகனை சிவனை பஸ்மாஸுரன் முதலான அரக்கரால் அழியாமல் காத்தவனும், அவன் கையிலிருந்த மண்டையோட்டை நீக்கியருளியவனுமான திருமாலே இராமனெனக் காட்டுகிருர்கள். இப்படிப் பல பாடல்களில் சிவனைப் பிரமனின் பிள்ளை என்றும் திருமாலால் அவ்வப்போது காக்கப்பெற்றவனென்றும் குறிப்பிடும் கம்பனைச் சைவன் என்றும் சமரசவாதி என்றும் கூறுகின்றவர்களுக்கு மனச்சான்று சிறிதேனும் உள்ளதா என்பதை நடுநிலையாளர்களே ஆராய்ந்து தீர்ப்பளிக்க வேண்டும். இனி, அடுத்ததான சீதை களங்காண் படலத்தைக் காண் போம். 13-ம் பாடலில் "இமையோர் வளியே" என்றும், 14-ம் பாடலில் "அலர்வாழ் தேவிக்கமிழ்தே மறையின் தெளிவே" என்றும், சீதை மயங்கிக் கிடக்கும் இராமனை நோக்கி அரற்றியதிலிருந்து, 'ஸ்ரீதேவி நாயகனும் ஸகலதேவ ரக்ஷகனுன திருமாலே மறைகளின் தெளி பொருளாயிருப்பவன்' என்பதே கம்பனின் கருத்து என விளங்குகிறது.

"கண்டன கனவும் பெற்ற
நிமித்தமும், நினது கற்பும்,
தண்டவாள் அரக்கப் பாவச்
செய்கையும், தருமம் தாங்கும்
அண்டர் நாயகன்தன் வீரத்
தன்மையும் அயர்க்க லாமோ ?
புண்டரீ கற்கும் உண்டோ,
இறுதிஇப் புலையர்க்கு அல்லால்" [24]

[நீ முன் கண்டுள்ள கனவும், பெற்றுள்ள நன்னிமித்தங்களும், நின்னுடைய கற்பின் திண்மையும், தண்டாயுதத்தையும் வாளையு முடைய அரக்கர்தம் பாவச்செய்கையும், தருமத்தைத் தாங்குகின்ற இராமனுடைய வீரத்தன்மையும் மறக்கலாமோ?(மறக்கலாகாது காண்!) இப்புலையர்களாகிய அரக்கர்க்கு அழிவு உண்டாவதல்லது, உந்திக் கமலத்தையுடைய திருமாலின் அம்சமான இராமனுக்கும் அழிவுண் டாகுமோ ?] என்று திரிசடை சீதையைத் தேற்றும் பாடலில் தேவர் தலைவனும், உந்திக்கமலத்தையுடைய திருமாலின் அவதாரமே இராமன் என்று கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. 30-ம் பாடலில் சீதையை "முளரிநீத்தாள்" [தாமரைமலரில் தங்குவதை விடுத்துச் சனகன் மகளாகப் பிறந்த திருமகளாகிய சீதை] என்று கவிக்கூற்றுகக் குறிப்பதிலிருந்தும் திருமாலும் திருமகளுமே சீதாராமர்களாக அவதரித் தனர் என்பதைக் கம்பன் உறுதியாகப் பற்றிநிற்பவன் என விளங்கு கிறது. இனி, அடுத்ததான மருத்துமலைப் படலத்தைக் காண்போம். இராமன் நிலையைச் சாம்பவான் வினவியறியும் பாடலில் "வேதத்தின் வேதமன்ன அரிந்தமன்"[21] [வேதத்துக்கும் மேலான வேதம்போன்ற வலிய பகைவரை அழிக்கவல்ல இராமன்] என்று இராமனைக்குறித்து, அவனைப் பிரமாத்திரமும் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறுவதி லிருந்து பிரமனுக்கும் மேற்பட்ட திருமாலே இராமன் என்றும், அவனே வேதத்துக்கும் மேற்பட்டவன் என்றும் கம்பன் காட்டுகிறான்.

"இன்னமருந்து ஒருநான்கும், பயோததியைக்
கலக்கியஞான்று; எழுந்த; தேவர்
உன்னிஅமைத்தனர்; மறைக்கும் எட்டாத
பரஞ்சுடர் இவ்வுலகம் மூன்றும்
தன்இருதாள் உள்அடக்கிப் பொலிபோழ்தின்
யான்முரசம் சாற்றும் வேலை,
அன்னவைகண்டு, உயாவுதலும், தொல்முனிவர்
அவற்றுஇயல் எற்கு அறிவித்தாரால்" [28]



[இத்தன்மையுடைய மருந்து ஒருநான்கும், பாற்கடலைக் கடைந்த போது அப்பாற்கடலிலிருந்து எழுந்தன ; தேவர்கள் அவற்றின் பயனை நினைந்து அவற்றை அம்மலையில் அமையுமாறு செய்தனர் ; வேதங்கட்கும் எட்டாத திருமால் இவ்வுலகம் மூன்றையும் தன் இரண்டு அடிக்குள் அடக்கிக்கொண்டு நின்றபோது (மூவுலகும் திருமாலுக்குரிமையான செய்தியைச் சொல்லித் திரிந்து) முரசம் சாற்றியபோது, அம் மருந்தினைக்கண்டு அவற்றைப்பற்றிக் கேட்ட போது பழைய முனிவர்கள் அம்மருந்தின் இயல்புகளை எனக்கு அறிவித்தார்கள்.] என்னும் சாம்பவான் கூற்றுன பாடலிலும் மறைக்கும் எட்டாத பரஞ்சுடரான திருமாலே இம்மூவுலகையு மளந்தவன் என்று கூறுவதிலிருந்து—"நான்மறைகள்தேடி என்றும் காணமாட்டாச் செல்வன்" [பெரியதிரு 4-8-7] "நான்மறைகள் தேடியோடும் செல்வன்" [பெரியதிரு 4-8-3] எனும் ஆழ்வார்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பரமவைணவன் கம்பன் என விளங்கு கிறது. 38-ம் பாடலில் "மெய்வேதம் நான்கும் தீண்டுருவன் அல்லாத திருமால்" எனக் கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது.

"தருவனம் ஒன்றில் வானோர்
தலைத்தலை மயங்கித் தாழ,
பொருஅரு முனிவர் வேதம்
புகழ்ந்துஉரை ஓதை பொங்க,
மருவிரி துளப மோலி
மாநிலக் கிழத்தி யோடும்
திருவொடும் இருந்த, மூலத்
தேவையும் வணக்கம் செய்தான்" [50]

[(அந்தப் பிரமன் உலகத்திற்கு மேலைத் திசையில் உள்ள) மரங்கள் அடர்ந்துள்ள காடு ஒன்றில் தேவர்கள் இடங்கள் இடங்கள்தோறும் கலந்து வணங்காநிற்க, ஒப்பற்ற முனிவர்கள் வேத மந்திரங்களோடு புகழ்ந்துசொல்லும் ஒலிமிக்குத் தோன்ற, மணம் வீசும் துளவ மாலையணிந்த முடியினையுடையனைப் பூதேவியோடும் சீதேவியோடும் வீற்றிருந்த, எல்லாவற்றிற்கும் மூலமாக உள்ள நாராயணனையும் வணக்கம் செய்தான்.] என்னும் பாடலில் பிரமன் உலகத்துக்கும் மேலே திருமாலின் உலகம் இருக்கிறது என்றும், அங்கு ஸ்ரீதேவி பூதேவி களோடு வீற்றிருக்கும் திருமால் அனைத்துக்கும் மூலமாயிருப்பவன் என்றும் கூறியிருப்பதிலிருந்தும் கம்பன் பரமவைணவன் என விளங்குகிறது. அடுத்த பாடலில் அனுமன் சிவனைக்கண்டு வணங்குவதைக் கூறும்போது பரம்பொருளுக்கு உரிய பெருமை

எதையும் கூருமல் "சேயிழை பாகத்து எண்தோள் ஒருவன்" [பார்வதியை பாகத்திலுடைய எட்டுத்தோளையுடைய சிவன்] என்றே கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

"அன்னவன் படைக்கலம், அமரர் தானவர்
தன்னையும், விடின்உயிர் குடிக்கும்; தற்பர!
உன்னைஒன்று இழைக்கிலது, ஒழிந்து நீங்கியது;
இன்னமும் அளவைஒன்றுஎண்ண வேண்டுமோ?" [84]

[அந்தப் பிரமனுடைய கணையை விட்டால் தேவர்கள் தானவர்கள் என்பவர்களையும் உயிர்குடிக்கும் தன்மையது; (அத்தகைய பிரமாத்திரம்) எல்லாப் பொருள்களுக்கும் மேலானவனே! உன்னை ஒன்றும் செய்ய இயலாததாய்விட்டு நீங்கியது. (நீ திருமாலே என்பதற்கு இதுவே சான்ருகும் ஆதலின்.) இன்னமும் வேறு அளவை ஒன்று கொண்டு நிறுவவேண்டுமோ? (வேண்டா.)] என்னும் பாடலில் பிரமனுடைய கணையும் ஒன்றும் செய்ய இயலாமையால் இராமன் திருமாலேயாவான் என்று சாம்பவான் வாயிலாகக் கூறுவதும் குறிக்கொள்ளத்தக்கது. 91-ம் பாடலில் "இருமையும் துடைப்பவன்" என்று இராமனைக் குறிப்பிட்டது "இருமை வினையுமில ஏத்துமவை" என்று பரிபாடலில் திருமாலைக் குறித்த சங்கத்தமிழரைப் பின்பற்றியது என்பது வெளிப்படை. இப்படலத்தில் 99-ம் பாடலையடுத்து S.ராஜம் மலிவுப் பதிப்பில்"அயன் சிவனறிவுரு ஆதிநாயகன் வியன்கா நேமியாம்படை" என்று தொடங்கும் பாடல் ஒன்றுள்ளது. இது திருமாலை 'அயன் சிவன் அறிவுரு ஆதிநாயகன்' எனக் குறிப்பிடுகையால் கழகப்பதிப்பில் மிகைப்பாடலாகக் குறிப்பிடப்பட்டதுபோலும்! 107-ம் பாடலில் பிரமாத்திர தேவதை இராமன் முன்நின்று "நீ கொடுத்த சக்தியினுலேயே நான் இங்கு கொலைத் தொழிலைச் செய்தேன்" என்று கூறி இராமனை வணங்கிச் சென்றதாகக் கூறியதிலிருந்தும் பிரமனுக்கும் மேற்பட்ட திருமாலே இராமன் என்பதே கம்பனின் கருத்து என விளங்குகிறது. இனி, அடுத்ததான களியாட்டுப் படலத்திலும், மாயாசீதைப் படலத்திலும் குறிப்பிடத்தக்க பாடல் எதுவுமில்லாமையால் அடுத்ததான நிகும்பலை யாகப் படலத்தைக் காண்போம். இப்படலத்தின் நாலாம் பாடல் "முக்கணன் படையும் ஆழிமுதலவன் படையும்" என்று தொடங்குகிறது. ஆழி முதலவன் என்று திருமாலை உலகுக்குக் காரணமாகக் குறித்து, முக்கணனுக்கு அடைமொழி எதையும் இடாததனுல் திருமாலே உலககாரணமான பரம்பொருள் என்பது கம்பனின் கொள்கை என விளங்குகிறது. "மூவேழுலகமும் உலகினில் மன்பதும் மாயோய்!



நின் வயின் பரந்தவையுரைத்தேம்' என்று பரிபாடலில் பாடிய சங்கத் தமிழரின் சமயமான வைணவத்தையே இவ்விஷயத்திலும் கம்பன் பின்பற்றியிருக்கிருன் என்பதைப் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறேம்.

"என்பன முதல் உபாயம்
யாவையும் இயம்பி, ஏற்ற
முன்பனை நோக்கி, 'ஐய!
மூவகை உலகும் தான் ஆய்,
தன் பெருந் தன்மை தானும்
அறிகிலா ஒருவன் தாங்கும்
வன்பெருஞ் சிலை ஈது ஆகும்;
வாங்குதி; வலமும் கொள்வாய்." [8]

[என்று மேற்கூறியன முதலாகவுள்ள (போர்த்தொழில்) உபாயங்கள் எல்லாவற்றையும் எடுத்துரைத்து(தான் கூறியவற்றை விரும்பி) ஏற்றுக்கொண்ட வலிமிக்கோனுகிய இலக்குவனை (மீண்டும் நோக்கி) ஐயனே! மூவகை உலகங்களும் தானேயாகித் தனது பெருமையினைத் தானும் அறிய முடியாத ஒப்பற்ற இறைவனுகிய திருமால் (தன் கையில்) ஏந்திய பெரிய வில் இதுவாகும். இதனை நின் கையில் வாங்குவாயாக; (இதனுல்) வெற்றியும் கொள்வாயாக.] என்னும் பாடலில் "மூவகையுலகங்களும் தானேயாகித் தன் பெருமையைத் தானும் அறியமுடியாத இறைவன் திருமால்" என்று பாடியிருப்பதிலிருந்து கம்பன் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவர்களில் தலைசிறந்தவன் என்று விளங்குகிறது. இக்கருத்துக்களைச் சங்கத் தமிழர் பல இடங்களில் கூறியிருப்பதைப் பலமுறை காட்டியிருக்கிறேம். அடுத்த பாடலில் "ஆயிரம் மௌலி அண்ணல்"[2] என்று திருமாலை ஆயிரம் திருமுடிகளையுடையவனுகக் கூறியிருப்பதிலிருந்து "ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ:" என்று புருஷஸூக்தத்தில் ஓதப்பட்ட பரம்பொருள் திருமாலே என்பதே கம்பனின் கருத்து என விளங்குகிறது. அதற்கடுத்த பாடலில் "ஆணி இவ்வுலகுக்கான ஆழியான்" [90] என்று திருமாலே இவ்வுலகமாகிய பெருந்தேருக்கு அச்சாணிபோல் ஆதாரமாயிருப்பவன் என்று கூறியிருப்பதிலிருந்தும் கம்பன் பரமவைணவன் என விளங்குகிறது. இப்பாடலிலேயே "தாணு" என்று சிவனைக் குறிக்கும்போது இத்தகைய அடைமொழி எதையும் இடவில்லை என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. அதற்கடுத்த பாடலில் "பாகத்திங்களின் மௌலியண்ணல் திரிபுரம் தீய்க்கச் சீறிப் பொங்கினன் என்ன" [11] என்று சிவனைக் குறிப்பிடும்போதும்

பரம்பொருளுக்குரிய பெருமை எதையும் அவனுக்குக் காட்டவில்லே. இந்த நியமத்தைக் கம்பன் கொண்டிருப்பதைக் காவியம் முழுவதிலும் பலமுறை காட்டியிருக்கிறோம். 16-ம் பாடலில் "உண்டாயதோர் ஆல் உலகுள் ஒருவன் கொண்டான் உறைகின்றதுபோல்" என்னும் பகுதியில் "உலகினைத் தன் வயிற்றில் கொண்ட திருமாலாகிய ஒருவன் பள்ளிகொண்டுறைதற்கு இடமாகிய ஆலிலை" என்று குறிப்பிடுகையாலே உலகனைத்தையும் விழுங்கித் தன் வயிற்றில் கொண்டு ஆலிலையில் பள்ளிகொள்ளும் செயற்கரிய செயலைச் செய்த திருமாலையே பரம்பொருளாகக் காட்டுகிருன் கம்பன். 134-ம் பாடலில் "ஆழித் தனிமுதல் நாயகன்" என்று சக்கரப்படையை யுடைய ஒப்பற்ற இறைவனுகிய திருமாலே இராமனெனக் காட்டினன் கம்பன். 138-ம் பாடலில் இராமனைத் திருமால் என்றே குறித்திருப்பதும் கம்பனுக்குத் திருமாலே இராமனுக அவதரித்தவன் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது எனக் காட்டுகிறது. 140-வது பாடல் தொடங்கி 144-வது பாடல் முடிய சிவன் ஸ்ரீராமலக்ஷ்மணர்களின் அவதார ரஹஸ்யத்தை விளக்குகிருன். அவற்றைக் காண்போம்.

"நாராயண நரர் என்று இவர்
உளராய், நமக்கு எல்லாம்
வேராய், முழு முதல் காரணப்
பொருளாய், வினை கடந்தார்;
ஆராயினும் தெரியாததுஓர்
நெடு மாயையின் அகத்தார்;
பாராயண மறை நான்கையும்
கடந்தார்; இவர் பழையோர்." [141]

[(இராம இலக்குவர் என்னும்) இவர்கள், நாராயணன் நரன் என்று உள்ளவர்கள்; நமக்கெல்லாம் மூலகாரணமாயுள்ள முழுமுதற் பொருளாய் வினைத் தொடர்பைக் கடந்தவர்கள்; எத்திறத்தோராயினும் தெரிந்து உணரவொண்ணுததொரு பெரிய மாயையினுள்ளே மறைந்திருப்பவர்கள்; (அறிஞர்களால்) இடைவிடாது ஓதப்பெறும் வேதங்கள் நான்கினையும் கடந்து அப்பாற்பட்டுள்ளவர்கள். இவர்கள் மிகவும் தொன்மையுடையோர்.] என்னும் பாடலில், "நாராயணர்களாகிய இராமலக்ஷ்மணர்கள் நமக்கெல்லாம் மூலகாரணமாகவுள்ள முழுமுதற்பொருளாய் வினைத்தொடர்பைக் கடந்தவர்களாய் எவராலும் உணரவொண்ணுதவர்களாய் வேதங்களையும் கடந்திருப்பவர்கள்" என்று கூறுவதிலிருந்து நாராயணனைப் பரம்பொருளாகவும் சிவனை ஒரு சீவனுகவுமே கருதினுன் கம்பன் என விளங்குகிறது.



"அறத்தாறு அழிவு உளதுஆம் என,
அறிவும் தொடர்ந்து அணுகாப்
புறத்தார், புகுந்து அகத்தார் எனப்
பிறந்தார், அது புரப்பார்;
மறத்தார் குலம் முதல் வேர் அற
மாய்ப்பான், இவண் வந்தார்;
திறத்தால் அதுதெரிந்து, யாவரும்
தெரியாவகை திரிவார்." [142]

[அறிவும் தொடர்ந்து நெருங்க முடியாத (சிந்தைக்கு) அப்புறத்தேயுள்ளாராகிய அவர்கள், '(உலகத்து) அறநெறி அழிவுட்படுவதாயிற்று' என்று அவ் அறத்தினை (நிலை நிறுத்திக்) காப்பவராய், உலகின் அகத்திலும் நீங்காது உள்ளார் என்னும்படி புகுந்து (இராம இலக்குவர் எனப்) பிறந்தருளினர். (தமது அருளின்) திறத்தால் (அறத்தினைக் காத்தலாகிய) அம்முறையினை ஆராய்ந்து (பிறர் யார்க்கும் தமது இயல்பு) புலனுகாதவாறு சஞ்சரிப்பவர்களாகிய இவர்கள், தீவினையாளராகிய அரக்கர் குலத்தை அதன் மூலமாகிய வேருடன் அற்றுச் சிதைய அழித்தற் பொருட்டு (இலங்கையாகிய) இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.] என்னும் பாடலில் "சிந்தைக்கப்புறத்தேயுள்ளவர்கள் அவர்கள்; அறத்தை நிலைநிறுத்தவும் அரக்கர் குலத்தை வேரொடும் களையவும் பிறந்தவர்கள்" என்று சிவன் வாயிலாகக் கூறுவதும் இதையே விளக்குகிறது.

"உயிர்தோறும் உற்றுளன், தோத்திரத்து
ஒருவன் என உரைக்கும்
அயிராநிலை உடையான் இவன்;
அவன், இவ் உலகு அனைத்தும்
தயிர்தோய் பிரை எனல் ஆம் வகை
கலந்து, ஏறிய தலைவன்;
பயிராதது ஓர் பொருள் இன்னது என்று
உணர்வீர்; இது பரமால்." [143]

[உயிர்கள் தோறும் பொருந்தியுள்ளவனுகிப் போற்றுதற் பொருளாயுள்ள ஒப்பற்ற முதல்வன் என்று உயர்த்துக் கூறப்படும் ஐயுறப்படாத இறை நிலையை யுடையவன் (இலக்குவன் என்னும்) இவன் ஆவன். (இராமனுகிய) அவன், இவ்வுலகங்கள் எல்லாவற்றிலும் (பால்) தயிராதற்குரிய பிரைமோர் என்று சொல்லும்படி (நீக்கமறக்) கலந்து பரவி நின்ற தலைவன் ஆவன். (இன்ன தன்மைய தென்று) சொல்லவொண்ணுத முழுமுதற்பொருள் இத்தன்மையதென்று உணர்

வீராக். (நும் கண்ணுக்குப் புலனாகிய) இதுவே பரம்பொருளாகும்.] என்னும் பாடலில் திருமாலே பரம்பொருள் என்பதைச் சிவன் வாயிலாக உறுதியாக விளக்குகிறான் கம்பன்.

"நெடும் பாற்கடல் கிடந்தாரும், பண்டு,
இவர்; நீர் குறை நேர,
விடும்பாக்கியம் உடையார்களைக்
குலத்தோடு அற வீட்டி,
இடும்பாக்கியத்து அறம் காப்பதற்கு
இசைந்தார் என இது எலாம்,
அடும்பு ஆக்கிய தொடைச் செஞ்சடை
முதலோன் பணித்து அமைந்தான்." [144]

['நீண்ட பாற்கடலின் கண்ணே அறிதுயில் கொண்டவர்களும் இவர்களே. முன்னாளில் நீங்கள் நேரிற் குறையிரத்து வேண்டு தலால், இழக்கும் நற்பேற்றினையுடையவர்களாகிய அரக்கர்களைக் குலத்தொடும் அற்றொழியக் கொன்று அளிக்கும் நற்பேற்றினால் அறத்தினை (நிலைநிறுத்திக்) காப்பதற்கு உளம் பொருந்தி வந் துள்ளார்கள்' என்று இச் செய்தியினையெல்லாம் அடப்ப மலர்க ளால் தொடுக்கப்பெற்ற மாலையினையணிந்த செஞ்சடைக் கடவுளாகிய சிவபெருமான் (தேவர்கட்கு) அறிவுறுத்தி அமைந்தனன்.] என்னும் பாடலில் "இவர்களே பாற்கடலில் ஆதிசேஷனாகவும் அவன் மேல் பள்ளிகொண்ட திருமாலாகவும் இருந்தவர்கள்; முன்னாளில் தேவர்க ளாகிய உங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இராம லக்ஷ்மணர்களாக அவதரித்து அரக்கர் குலத்தை வேரறுத்து உங்கள் காரியம் செய்கிற வர்கள்" என்று சிவன் வாயிலாகக் கூறுவதிலிருந்து "இராமன் மும்மூர்த்திகளின் அவதாரம்" என்னும் கூற்று தகர்க்கப்பட்டு, திருவவதாரப்படலத்தில் காட்டப்பெற்ற அவதார ரஹஸ்யம் காப்பி யத்தின் இறுதிப் பகுதியான இங்கும் வலியுறுத்தப்படுகிறது என விளங்குகிறது.

"அறிந்தே, இருந்து அறியேம், அவன்
கெடு மாயையின் அயர்ப்பேம்;
பிறிந்தேம் இனி முழுது ஐயமும்;
பெருமான் உரை பிடித்தேம்;
எறிந்தேம் பகைமுழுதும்; இனித்
தீர்ந்தேம், இடர் கடந்தேம்;
செறிந்தோர் வினைப் பகைவா!
எனத்தொழுதார், நெடுந்தேவர்" [145]



[தன்னை அடைந்தவர்களது தீவினைகளைச் சினந்தழிப்பவனே! (இச் செய்தியினை நாங்கள்) முன்னர் அறிந்திருந்தோமாயினும் (மாயோனாகிய) அவனது நெடிய சூழ்ச்சியுள் அகப்பட்டு அவனை அறியாதேமாகி மறந்தோம். எங்கள் பெருமானாகிய நினது அருளுரையினை (உறுதியாகப்) பற்றிக்கொண்டோமாகி இப்பொழுது அம்மாயத்தினின்றும் (எம் மனத்திற் கொண்ட) சந்தேகங்கள் முழுவதும் நீங்கித் தெளிந்தோம். எமது பகை முழுவதனையும் அழித்துப் போக்கினோம்; இடர்களின் நீங்கி வென்றோம்' என்று சொல்லிப் பெருமைமிக்க தேவர்கள் (சிவபெருமானை) வணங்கினார்கள்.] என்னும் பாடலில் சிவன் கூறியது அனைத்தையும் தாங்கள் மறந் திருந்து தெளியப் பெற்றோம் என்று கூறி அதை உணர்த்திய சிவபிரானைத் தொழுகின்றனர். அடுத்தபடி இந்திரசித்து நாராயணாஸ்திரத்தைவிட, இலக்குவன் 'நேமித்தனி அரி தானென நினைத்தான் எதிர்நடந்தான்' [147] என்கிறான் கம்பன். அதற்கடுத்த பாடலில் இலக்குவனை வலம் செய்து நீங்கியது அந்த அஸ்திரம் எனக் கூறுகிறான். அதற்கடுத்த பாடலில் எல்லா தேவர்களும் உந்தித்தாமரையில் பிறந்த பிரமனும் மழுவேந்திய சிவனும் 'உலகனைத்தையும் காத்தாய்' எனப் புகழ்ந்தார்கள் இலக்குவனை எனக் கூறுகிறான் கம்பன்.

அவன் அன்னது கண்டான்,
'இவன் ஆரோ?' என அயிர்த்தான்;
'இவன் அன்னது முதலே உடை
இறையோன் என வியவா,
'எவன் என்னினும் நின்று ஆகுவது
இனி எண்ணலன்' என்னா,
சிவன்நன்படை தொடுத்து
ஆருயிர் முடிப்பேன்' எனத் தெரிந்தான். [150]

[(இந்திரசித்து என்னும்) அவன், (இலக்குவனை வலங்கொண்டு சென்ற) படையினைக் கண்டான்; 'இலக்குவனாகிய இவன் அப்படை யினைத் தொன்மையே கொண்டுள்ள (திருமாலாகிய) இறைவனே' என்று வியந்து, 'இவன் யாவன் ஆயினும் (எனது போர்ச்செயல்) நன்றாக நிறைவுறுக. இனி (வேறு எதனையும்) எண்ணுவேனல்லன்' என்று 'சிவபெருமானது நல்ல (பாசுபதப்) படையினைத் தொடுத்து இவனது அரிய உயிரைப் போக்குவேன்' என்று தேர்ந்து துணிந் தான்.] என்னும் பாடலில் இந்திரசித்தும் "இவன் திருமாலே" என்று வியந்து சிவனது பாசுபதப் படையினைத் தொடுக்க முற்படுகிறான்.

"மூவகை உலகும் ஏத்தும்
முதலவன், எவர்க்கும் மூத்த
தேவர்தம் தேவன் தேவி
கற்பினின் சிறந்தளாளை
நோவன செய்தல் தீது"
என்று உரைப்ப, நுன் தாதை சீறி
'போ' எனப் போந்தேன்; இன்று
நரகதில் பொருந்துவேனோ? [175]

['மூன்று வகை உலகங்களும் துதித்துப் போற்றும் முதல்வனும் எல்லார்க்கும் முன்னே தோன்றி மூத்த தேவாதி தேவனும் ஆகிய திருமாலின் மனைவி கற்பினிற் சிறந்துள்ளவளாகிய பிராட்டியை மனம் நொந்து வருந்தத் தக்கன செய்தல் பாவம்' என்று (யான்) சொல்ல, உன் தந்தை (என்னை) வெகுண்டு, 'ஓடிப் போ' என்று கூற,(அவனை விட்டு) வந்தேன். இப்பொழுது நரகத்தில் புகுவேனோ?] என்னும் பாடலில் திருமாலை மூவகையுலகும் ஏத்தும் முதல்வனாகவும், எவர்க்கும் மூத்த தேவர் தம் தேவனாகவும் விபீஷணன் வாயிலாகப் பாடியிருப்பதிலிருந்து "அமரர்க்கு முதல்வன் நீ" என்று பரிபாடலில் திருமாலைப் பாடிய சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.

அடுத்ததான இந்திரசித்து வதைப்படலத்தைக் காண்போம்.

"மறைகளே தேறத்தக்க,
வேதியர் வணங்கற் பால
இறையவன் இராமன் என்னும்
நல் அறமூர்த்தி என்னின்,
பிறை எயிற்று இவனைக் கோறி
என்று, ஒரு பிறைவாய் வாளி
நிறைஉற வாங்கி விட்டான்—
உலகுஎலாம் நிறுத்தி நின்றான்" [51]

['வேதங்களே தெளியத்தக்க கடவுள் — அந்தணர் வணங்கத்தக்க கடவுள்—இராமன் என்கின்ற நல்ல தருமமூர்த்தியே என்பது உண்மையாயின், பிறைச்சந்திரனைப் போன்ற கோரப் பல்லினை யுடைய இந்த இந்திரசித்தினைக் கொல்வாயாக' என்று ஒரு பிறை வாய் அம்பினைத் தன் வலிமை முழுவதும் பொருந்த வில்லில் தொடுத்து விட்டான்; அதனால் இலக்குவன் உலக முழுவதையும் அரக்கரால் அழிவு எய்தாதவாறு நிறுத்தித் தானும் புகழுடன் அவ் வுலகம் உள்ளளவும் நின்றவனாயினன்.] என்னும் பாடலில் மறைகளால் முதல்வனாக முழங்கப்பெற்றவனாகவும், வேதியர்களால் வணங்கத்தக்க வனாகவும், நல்லறமூர்த்தியாகவும் இருக்கும் திருமாலே இராமன் என்று இலக்குவன் வாயிலாகக் கூறியிருப்பதிலிருந்து இத்தகைய பெருமை களைத் திருமாலுக்கே கூறியிருக்கும் சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது.



"வரந்தரு முதல்வன், மற்றை
மான்மறிக் கரத்து வள்ளல்,
புரந்தரன் முதல்வர் ஆய,
நான்மறைப் புலவர், பாரில்
நிரந்தரம் தோன்றி நின்றார்;
அருளினால் நிறைந்த நெஞ்சர்
கரந்திலர் அவரை யாக்கை;
கண்டன குரங்கும் கண்ணால்." [57]

[முதற்கடவுளாகிய—வரங்களைத் தருகின்ற திருமாலும், மான் குட்டியைத் தாங்கிய கையினையுடைய வள்ளலாகிய சிவனும், நான்மறைப் புலமையுடைய பிரமனும், இந்திரனும் பூமியில் வந்து நிரந்தரமாகத் தோற்றம் அளித்து நின்றார்கள்; அருளினால் நிறைந்த நெஞ்சர் ஆதலினால் அவர்தம் உடம்பை மறைக்காமல் நின்றனர்; குரங்குகளும் தம் கண்களால் அவர்தம் உடம்பைக் கண்டன.] என்னும் பாடலில் திருமாலை முதற்கடவுளாகக் கூறி, அவனுக்குப் பிறகு சிவன் முதலான மற்றைக் கடவுளரைப் பரம்பொருளுக்குரிய அடைமொழி எதுவும் கூறாமல் எடுத்திருப்பதிலிருந்து கம்பன் பரம வைணவன் என்று தெளிவாக விளங்குகிறது. அடுத்ததான இராவணன் சோகப்படலத்திலும், அதற்கடுத்த படைக்காட்சிப் படலத்திலும் குறிப்பிடத்தக்க பாடல் எதுவும் இல்லாமையால், அதற்கடுத்ததான மூலபலவதைப் படலத்தைப் பார்ப்போம்.

"மலையும், வேலையும், மற்று உள பொருள்களும், வானோர்
நிலையும், அப்புறத்து உலகங்கள் யாவையும், நிரம்ப
உலைவு உருவகை உண்டு, பண்டு உமிழ்ந்த பேர் ஒருமைத்
தலைவன் வாய் ஒத்த—இலங்கையின் வாயில்கள் தருவ." [16]

[(இத்தகைய பெருஞ் சேனையை) வெளிப்படுத்துவனவாகிய இலங்கை நகரத்தின் வாயில்கள், மலைகளும் கடல்களும் மற்றுமுள்ள பொருள்களும் தேவர்களின் இருப்பிடமாகிய வானுலகும் அப்புறத்துள்ள உலகங்கள் யாவும் நிலைகுலைந்தழியாதபடி (தன் வயிற்றினுள்ளே) நிரம்புமாறு (அவற்றையெல்லாம்) முன்னொரு காலத்து உண்டு

உமிழ்ந்து வெளிப்படுத்திய பெருமை வாய்ந்த ஒப்பற்ற முதல்வனுகிய திருமாலின் வாயினை ஒத்துத் தோன்றின.] என்னும் பாடலில் அனைத் துலகையும் உண்டு உமிழ்ந்த ஒப்பற்ற முதல்வன் திருமாலே என முழங்குவதன்மூலம் தான் பரமவைணவன் என்பதைக் காட்டிக்கொள் கிருன் கம்பன். 18ம் பாடலில் "மால்" என்று இராமனைக் குறிப்பதன் மூலம் இராமன் திருமாலின் அவதாரமே என உணர்த்துகிருன். 45-ம் பாடலில் "பாம்பணையமலனே மற்று இராமன்" என்று சாம்பவான் கூறியதாக அங்கதன் சொல்லுவதாலும் இது வலியுறுத் தப்படுகிறது.

"நாணத்தால் சிறிதுபோது
நவில்கிலன் இருந்து. பின்னர்,
'தூண் ஒத்த திரள்தோள் வீர!
தோன்றிய அரக்கர் தோற்றம்
காணத்தான், நிற்கத்தான், அக்
கறை மிடற்றவற்கும் ஆமே?
கோணற்பூ உண்ணும் வாழ்க்கைக்
குரங்கின்மேல் குற்றம் உண்டோ?" [50]

[(சாம்பவான், தனது செயல்பற்றித் தோன்றிய) நாணங்காரணமாகச் சிறிது நேரம் ஒன்றும் கூறமாட்டாதவனுக இருந்து, பின்பு, (அங்க தனை நோக்கிக் கூறுவான்:) 'தூணையொத்த திரண்ட தோள்களை யுடைய வீரனே! இங்குத் தோன்றிய அரக்கர்களின் தோற்றப் பெருமையை (நேர் நின்று) காணுதற்காவது (எதிரில்) நிற்றற்காவது நஞ்சக்கறை பொருந்திய கண்டத்தினையுடைய அந்த உருத்திர மூர்த்திக்கும் இயல்வதோ? (அவ்வாருகவும், அவ்வரக்கர் முன்னே நிற்றலாற்ருது ஓடிய) உடம்பிற் கூனினையும் பூக்களையுண்டு உயிர் தாங்கும் (எளிய) வாழ்க்கையினையும் உடைய குரங்கின்மேற் குற்றம் உண்டோ?] என்னும் பாடலில் "மூலபலப்படையைக் காண்பதற்கோ எதிர்ப்பதற்கோ சிவனும் இயலாது" என்று கூறுவதன்மூலம் சிவ னும் ஒரு சீவனே எனக் காட்டுகிருன் கம்பன். 57ம் பாடலில் "நேமி யான்" என்று இராமனைக் குறிப்பதன்மூலம் திருமாலின் அவதாரமே இராமன் என்று காட்டி, 78ம் பாடலிலும், 81ம் பாடலிலும் 'வேத நாதன்' என்று அவனை வேதமுதல்வனுகக் குறிப்பதன்மூலம் திருமாலைப் பலவிடங்களில் வேதமுதல்வனுகக் குறிப்பிட்ட சங்க காலத்தமிழரின் சமயமான வைணவமே தன் சமயம் எனக் காட்டு கிருன் கம்பன். 90ம் பாடலில் "வாவிகொண்ட புண்டரீகமன்ன கண்ணன்" [தடாகத்திலுள்ள செந்தாமரை மலர்போன்ற கண்களை யுடைய இராமன்] என்று இராமனைக் குறிப்பதன்மூலம் வேத சாத்திரங்களிலும் சங்கநூல்களிலும் செந்தாமரைக் கண்ணனென்று முழங்கப்படும் திருமாலின் அவதாரமே இராமன் என்று உணர்த்து கிருன் கம்பன்.



"நானுவிதப் பெருஞ் சாரிகை
திரிகின்றது நவிலார்,
போனுன், இடை புகுந்தான்,
எனப் புலன் கொள்கிலர், மறந்தார்
'தானுவதும் உணர்ந்தான், உணர்ந்து
உலகு எங்கணும் தானே
ஆனுன்; வினை துறந்தான்' என,
இமையோர்களும் அயிர்த்தார். [118]

[(இராமன்) பல வேறு வகையான பெரிய சாரிகையினை மேற் கொண்டு திரியுஞ்செய்கையினை அறிந்துசொல்லாதவராய், (போர் மேற்கொண்டு) சென்றவன் (அரக்கர் சேனையின்) இடையே புகுந் தனன் என்பதனை உணர்விற்கொள்ள மாட்டாதவராய், மறப்பினை யடைந்தவராய்த் தேவர்களும், 'முற்றும் உணர்ந்து உலகம் எங்க ணும் தானேயான பரம்பொருள் (தன்னை எதிர்த்துள்ள பகைவ ராகிய அரக்கர் முதலிய எல்லாவுயிர்களும்) தானே ஆதலையும் உணர்ந்தவனுய், (அரக்கரைச் சங்கரித்தலாகிய தனது) தொழிலை விட்டு நீங்கினுன் போலும்?' என ஐயுற்றனர்.] என்னும் பாடலில் உலகனைத்திலும் தானேயாய் நிறைந்திருக்கும் விஷ்ணுவே இராமன் எனக் கூறுவதன்மூலம் திருமாலின் முதன்மையையும் உறுதிப்படுத்து கிருன் கம்பன். "செருக்கடுத்தன்று திகைத்த அரக்கரை உருக்கெட வாளிபொழிந்த ஒருவனே" "ஒருவிருவரோர் மூவரெனநின்று உருவுகரந்து" [திருவாய் 8-6-2,3] என்று ஆழ்வார் மூலபல வதத் தைக் குறிப்பிட்டதை இங்கு கம்பன் அடியொற்றியிருப்பது காணத் தக்கது. அடுத்தபாடலில் "அண்டத்தினை அளந்தானெனக் கிளர்ந்தான்" என்றும், அதற்கடுத்த பாடலில் "கடல் கிடந்தான்" என்றும் இராமனைக் குறிப்பதன்மூலம் திருமாலே இராமனெனக் காட்டுகிருன். 106-ம் பாடலில் "சிவனும் அயனும்" என்று மும்மூர்த்தி களில் இருவரையும் அடைமொழியில்லாது எடுத்து, "எழுதிகிரி அமரர்பதி அவனும்" என்று திருமாலுக்கு 'அமரர்பதி' என்று அடை மொழி இட்டிருப்பதிலிருந்து சிவன், அயன் முதலான தேவர்கள் அனைவருக்கும் திருமாலே தலைவன் எனக் கம்பன் கருதினுன் என்று விளங்குகிறது.

''பண்டு உலகு அளித்தவனேடும், பண் அமை
குண்டையின் பாகனும், பிறரும் கூடினர்,
அண்டர்கள் விசும்பின் நின்று ஆர்க்கின்ருர் உழைக்
கண்டிலம்; இவன் நெடு மாயக் கள்வனல்''. [176]

[(முன்பு உலகத்தைப் படைத்தவனுகிய பிரமதேவனேடு தவிசமைந்த விடையினை யூர்ந்தருள்வோனுகிய சிவபெருமானும் (இந்திரன் முதலிய தேவர்கள்) பிறரும் ஒருங்கு கூடியுள்ளார்கள்; வானத்தில் நின்று (நமது அழிவு கண்டு மகிழ்ச்சி மிகுதியால்) ஆரவாரிக்கின்றவர்களாகிய தேவர்களிடையிலே (திருமாலைக்) காணப்பெற்றிலோம்; (ஆகவே, நம்மொடு பொருது நிற்கும்) இவ்விராமன் நெடிய மாயத்தையும் கள்ளத்தையும் உடைய திருமாலேயாவன்.] என்னும் அரக்கர் கூற்றுன பாடலில் தேவர் கூட்டத்தில் திருமால் காணப் படாமையால் இராமன் அத்திருமாலே என்று அரக்கர் வாயிலாகக் கம்பன் நிர்ணயிக்கிருன். 212-ம் பாடலில் மூலபல வதையின்போது ''இராமர் கணக்கிலரால் பரவை மணலின் பலர்'' என்று பாடியதும் அதன் கழகப் பதிப்புக் குறிப்புரையில் ''ஒருவரிருவர்'' [திருவாய்8.6.2] எனும் பாசுரம் மேற்கோளாக எடுக்கப்பட்டிருப்பதும் கம்பன் ஆழ்வார்களை அடியொற்றியவன் என்று வலியுறுத்துகிறது. 218-ம் பாடலில் ''ஆயிரங்கையும்கூடி இரண்டு கையாயதன்றே'' என்று கூறுவதன் மூலம் புருஷஸூக்தத்தில் ஆயிரம் கையுடையவனுகக் கூறப்பட்ட திருமாலே இராமனுகப் பிறந்தான் என்பதைக் காட்டுகிருன் கம்பன்.

''அண்டம் மாக்களமும், வீந்த
அரக்கரே உயிரும் ஆக,
கொண்டது ஓர் உருவம் தன்னுல்,
இறுதிநாள் வந்துகூட,
மண்டு நாள், மறித்தும் காட்ட,
மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே ஆன
தன் ஒருமூர்த்தி ஒத்தான்.'' [232]

[பெரிய போர்க்களமே அண்டமாக, (அக்களத்தில்) அழிவுற்ற அரக்கர்களே (அண்டத்தின்) உயிர்களாக, (அங்கு இராமன் அரக்கரை யழித்தற் பொருட்டுக்) கொண்டுள்ளதாகிய ஒப்பற்ற உருவத்தினுல், ஊழி முடிவாகிய இறுதிநாள் வந்துகூட, (எல்லாப் பொருள்களும் படைக்கப்பட்டு) நிறையும் படைப்புக் காலத்தில் மீளவும் (அவற்றைப் படைத்துக்) காட்டுதற் பொருட்டு நிலைபெற்ற உயிர்கள் எல்லாவற்றையும் ஒருங்கே வாரியுண்டு (வயிற்றினுள்) அடக்கியவன் தானேயாகிய தனது ஒப்பற்ற திருமால் உருவினை ஒத்துத் தோன்றினன்.] என்னும் பாடலில் ''திருமாலே உலகனைத்தையும் ஊழி முதலில் தன்னுள்ளடக்கி, படைப்புக் காலத்தில் மறுபடி படைக்கும் பரம்பொருள்; அவனே இராமன்'' என்று காட்டுகிருன் கம்பன். இதிலிருந்து கம்பன் சைவன் என்றும், அவன் மும்மூர்த்திகளின் அவதாரம் இராமன் என்று கூறினன் என்றும் எழுதுவது பெரிய மோசடி என விளங்குகிறது. இனி அடுத்ததான வேலேற்ற படலத்திலும் அதற்கடுத்த வானரர்களங்காண்படலத்திலும் குறிப்பிடத்தக்க பாடல்கள் இல்லாததால் அதற்கடுத்த இராவணன் களங்காண்படலத்தைக் காண்போம்.



''அளப்பரும் உலகம் யாவும்
அமைத்துக் காத்து அழிக்கின்ருன்தன்
உளப்பெருந்தகைமை தன்னுல்
ஒருவன் என்று உண்மை வேதம்
கிளப்பது கேட்டும் அன்றே?
அரவின்மேல் கிடந்து, மேல்நாள்,
முளைத்த போர் இராமன் என்ற
வீடணன் மொழி பொய்த்து ஆமோ?'' [15]

[''தன் உள்ளத்தின் பெருமையால் (சங்கற்பத்தால்) பரம்பொருள் ஒருவனே அளந்து சொல்லுதற்கியலாத உலகங்கள் பலவற்றையும் படைத்து, காத்து, அழிக்கின்ருன்'' என்று உண்மையையே சொல்லும் வேதம் சொல்லுவதைக் கேட்டிருக்கின்றேம் அன்ருே? ''(அவ்வொரு பரம்பொருளே) முன்பு பாற்கடலில் ஆதிசேடன் என்னும் பாம்பணையில் கிடந்து, பின்பு அயோத்தியில் தோன்றிய, பேராற்றல்மிக்க இராமனுவன்'' என்று கூறிய விடணனது சொல் பொய்ம்மையுடையது ஆகுமோ? (ஆகாதன்றே?)] என்னும் பாடலில் 'திருமாலே வேதத்தில் பரம்பொருளாகக் குறிக்கப்படுகிருன்' என்றும், 'அவனே உலகனைத்தையும் படைத்தளித்தழித்துக் காப்பவன்' என்றும் மாலியவான் கூற்ருகக் கூறுவதிலிருந்து சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என விளங்குகிறது. அடுத்ததான இராவணன் தேரேறு படலத்தில் குறிப்பிடத்தக்க பாடல் ஏதுமில்லாமையால் அடுத்ததான இராமன் தேரேறு படலத்தைக் காண்போம்.

''தொழும் கையொடு, வாய் குழறி,
மெய்ம் முறை துளங்கி,
விழுந்து கவி சேனை இடு
பூசல் மிக, விண்ணேர்

அழுந்து படு பால் அமளி
'அஞ்சல்' என அந்நாள்,
எழுந்தபடியே கடிது
எழுந்தனன், இராமன்''. [1]

[(கூப்பித்) தொழும் கையுடனே வாய் உரைதடுமாறி உடம்பு செயன் முறை தளர்ந்து கீழேவிழுந்து வானர சேனைகள் இடுகின்ற கூக்குரலோசை மிக்குத் தோன்றுதலால், இராமன், தேவர்கள் துன்பத்தில் அழுந்தி வருந்திய அந்நாளில் 'அஞ்சாதீர்கள்' என்றுசொல்லி அபயமளித்துப் பாற்கடலில் (ஆதிசேடனாகிய) படுக்கையினின்றும் (திருமாலாகிய தான் அறிதுயில் நீத்து) எழுந்ததுபோலவே விரைந்து எழுந்தான்.] என்னும் பாடலில் பாற்கடலில் நாகணைத்துயின்ற திருமாலே இராமனென மறுபடியும் தெளிவு படுத்துகிறான். மூன்றாம் பாடலில், "தன் கவசத்து உலகுதங்க" என்னும் தொடரால் திருமாலாகிய இராமனுக்குள்ளே உலகனைத்தும் தங்கி நிற்கிறது என்று கூறுவதன்மூலம் தான் ஒரு விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவனெனத் தெளிவாகக் காட்டிக்கொள்கிறான் கம்பன்.

"பண்டு அரிதன் உந்தி
அயன்வந்த பழ முந்தைப்
புண்டரிக மொட்டு அனைய
மொட்டினது ; பூதம்
உண்டவை வயிற்றிடை
ஒடுக்கி உமிழ்கிற்போன்
அண்டச மணிச்சயனம்
ஒப்பது அகலத்தின்'' [12]

[(அத்தேர்) பண்டைநாளில் திருமாலினுடைய கொப்பூழில், பிரமன் தோன்றுதற்கு நிலைக்களமான தொன்மை வாய்ந்த முந்தைய தாமரை மொட்டினை ஒத்த மொட்டென்னும் உறுப்பினையுடையது; (ஐம்பெரும்) பூதங்களின் திரட்சியாகிய உலகம் முழுவதையும் உண்டு (வயிற்றில் அடக்கி) அவற்றை (மீளவும்) உமிழ்ந்து வெளிப்படுத்த வல்லவனாகிய திருமாலின் மணிகளையுடைய (ஆதிசேடனாகிய) பாம்புப் படுக்கையினை அகலத்தால் ஒத்திருப்பது] என்னும் பாடலில் 'திருமாலே படைக்கும் கடவுளான பிரமதேவனைத் தன் உந்தித்தாமரையில் படைத்தவன்' என்றும், 'ஊழிக்காலத்தில் உலகம் முழுவதையும் உண்டு மீளவும் உமிழ்ந்தவன்' என்றும் கூறுவதன் மூலம் திருமாலின் முதன்மையைக் கையிலங்கு கனியாகக் காட்டுகிறான். சங்ககாலத் தமிழர்களும் இவ்விஷயத்தைக் கூறியிருப்பதைப் பலகாலும் உணர்த்தியிருக்கிறோம்.



20ம் பாடலில் "அவைகோளுற்று உண்டவன் வயிற்றினையுமொக்கும்" [அவ்வண்டங்களை உண்டு தம்முள் கொண்டவனாகிய திருமாலின் வயிற்றினையுமொக்கும்] என்னும் தொடரால் மறுபடியும் இதை வலியுறுத்துகிறான் கம்பன். 22ம் பாடலில் "உலகுசெய்தோய்" என்று இராமனை விளிப்பதன்மூலம், "மூவேழுலகமும் உலகினில் மன்பதும் மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயாவாய்மொழி உரைதர" என்று சங்ககாலத்தமிழர் திருமாலைப் பாடியிருப்பதைத் தான் அடியொற்றியவன் என்றும், திருமாலே இராமன் என்றும் காட்டுகிறான் கம்பன்.

"'தேவரும், முனித்தலைவரும்,
சிவனும், மேல்நாள்,
மூவுலகு அளித்த அவனும்
முதல்வ! முன் நின்று
ஏவினர்:சுரர்க்கு இறைவன்
ஈந்தளது இது'என்னா,
மாவின் மனம் ஒப்ப உணர்
மாதலி, வலித்தான்.'' [23]

['உலக முதல்வனே! தேவர்களும் முனிவர்களிற் சிறந்த பெருமக்களும் சிவபெருமானும் முற்காலத்தில் மூவுலகங்களையும் படைத்தளித்த அப்பிரமனும் முன்னின்று ஏவினார்கள்; (அவர்கள் ஏவிய வண்ணம்) தேவர்க்குத் தலைவனாகிய இந்திரன் அனுப்பித் தந்தது இந்தத் தேர்' என்று குதிரைகளின் மனக்கருத்தினை ஒருங்கே கூர்ந்துணரவல்ல மாதலி என்பான் திட்பமுறக் கூறினான்.] என்னும் பாடலில் "சிவனும் பிரமனும் இந்தத் தேரை அனுப்பி வைத்தார்கள்" என்று திருமாலை எடுக்காமல் கூறுவதன்மூலம் திருமாலே இராமன் என்றும், "முதல்வ" என்று விளிப்பதன்மூலம் அவ்விருவருக்கும் முதல்வன் அவனே என்றும் காட்டுகிறான் கம்பன். அடுத்ததாக இராவணன் வதைப்படலத்தைக் காண்போம்.

"துவன வில்லின் பொருட்டு ஒரு தொல்லைநாள்
எவன வில் வலி? என்று இமையோர் தொழ,
புவன மூன்றும் பொலங்கழலால் தொடும்
அவனும் அச்சிவனும் எனல் ஆயினர்.'' [27]

[பழங்காலத்தில் ஒருநாள் தேவர்கள், 'யாருடைய வில் மிக்க வலிமையுடையது?' என்று தொழுது வினவ, ஒலியுடைய வில்லின் வலிமை

காட்டும் பொருட்டு(ப்போர் செய்த), உலகம் மூன்றினையும் தன் அழகிய திருவடியால் தொட்டு அளந்த திருமாலும் அந்தச் சிவனும் என்று சொல்லலாம் தன்மையர் ஆயினர்.] என்னும் பாடலில் சிவனைவென்ற சிலையேந்தித் திருமால் போர் புரிந்த செய்தியைப் பரசுராமப்படலத்தில் தான் கூறியதை மறுபடியும் நினைவுபடுத்துகிறான் கம்பன். "புவனம் மூன்றும் பொலங்கழலால் தொடும் அவனும்" என்று உலகளந்த பெருமையைத் திருமாலுக்குக்கூறி, 'அச் சிவனும்' என்று சிவனுக்குப் பெருமை ஏதும் கூறாமையால் சிவனைக் காட்டிலும் உயர்ந்த பரம்பொருள் திருமாலே எனக் காட்டுகிறான் கம்பன். "ஒன்றினை உமையாள் கேள்வன் உவந்தனன் மற்றையொன்றை நின்றுலகளந்தநேமி நெடியவன் அங்கைக்கொண்டான்" என்று பரசுராமப்படலத்திலும் இப்பெருமையையே திருமாலுக்குக் கூறியிருப்பது காணத்தக்கது. "அரனதிகன் உலகளந்த அரியதிகன்" என்னும் பாடலிலும் அரனுக்குப் பெருமை கூறாமல் உலகளந்த பெருமையை அரிக்குக் கூறியிருப்பதிலிருந்து அப்பாடலும் திருமாலின் முதன்மையைக் கூறவந்ததே என எளிதில் உணரலாம். அடுத்துவரும் பாடல்களும் இராவணன் தன் சங்கினை ஊதினவுடன் இராமனது சங்கமான பாஞ்சஜன்யம் தானே முழங்கிற்று என்றும், இராமன் அறியாதபடி அவனுடைய பஞ்சாயுதங்களும் அவனருகிலேயே நின்றன என்றும் கூறுவதிலிருந்து இராமன் திருமாலின் அவதாரமே என மிகத் தெளிவாகக் காட்டுகிறான் கம்பன். இது போல் சூலம், கரகம் முதலான சிவனுக்கும் பிரமனுக்கும் உரிய ஆயுதங்கள் அருகிலிருந்ததாகக் கூறப்படாததும் காணத்தக்கது. இதிலிருந்து "சூலமும் கரகமும் துறந்து" என்று "மூலமும் நடுவும்" என்னும் பாடலில் கூறியது திருமால் மற்ற இரு மூர்த்திகளுக்கு அந்தர்யாமியாயிருப்பதாலேயே என உணரலாம். ஆகவே அப்பாடலிலிருந்து இராமன் மும்மூர்த்திகளின் அவதாரம் எனத் தேறுகிறது என்பது சிறிதும் பொருந்தாது என விளங்குகிறது.

"அய்யன் ஐம்படைதாமும் அடித் தொழில்
செய்ய வந்து அயல் நின்றன; தேவரில்
மெய்யன் அன்னவை கண்டிலன், வேதங்கள்
பொய்யில் தன்னைப் புலன் தெரியாமைபோல்." [30]

[ஐயனுக்குரியவான ஐம்படைகளும் அவனுக்கு அடித்தொண்டு செய்தற்காக வந்து அவன் அருகில் நின்றன; தேவர்களின் உண்மைக் கடவுளாகிய இராமன், பொய்யில்லாத தன்னை வேதங்கள் தம்மறிவு கொண்டு அறியாதிருத்தல் போல அவ் ஐம்படைகளையும் கண்டிலன்



ஆனான்.] என்னும் இப்பாடலில் தேவர்களின் உண்மைக் கடவுளாகத் திருமாலைக் குறித்திருப்பதும், வேதங்கள் அவனைத் தம் அறிவைக்கொண்டு அறியமாட்டா எனக் கூறியிருப்பதும் கம்பன் பரமவைணவன் எனக் காட்டுகின்றன. 84-ம் பாடலில் "ஊனுடை உயிர்தொறும் உறையுறும் ஒருவன்" [உணர்ச்சியுடைய உயிர்கள் தோறும் தங்கியுள்ள ஸர்வவ்யாபகனான விஷ்ணு] என்று இராமனைக் குறிக்கையால் விஷ்ணுபரத்வமும், விஷ்ணுவே இராமனாக அவதரித்தான் என்பதுவும் கம்பனின் கொள்கை எனத் தெளிவாகிறது. அடுத்த பாடலில், "அறிவின் துயில் புரியுழி உணர்சுடர் ஒளி ஒருவன்" [அறிதுயில் செய்யும்போதே எல்லாவற்றையும் உணர்கின்ற பேரொளிப் பிழம்பாக உள்ள ஒப்பற்ற திருமாலின் அவதாரமான இராமன்] என்று குறிப்பதன்மூலமும் இவ்விஷயம் வலியுறுத்தப்படுகிறது. 87-ம் பாடலில் கருடன் இராமன் தேரின்மேலுள்ள கொடியின்மேல் வந்து சேர்ந்தான் என்று கூறுவதனாலும் கருடக் கொடியோனான திருமாலே இராமன் என மறுபடியும் வலியுறுத்துகிறான் கம்பன். 89 ம் பாடலில் இராமனை 'அறிவினுள் அறிவன்' என்று குறிப்பதன்மூலம் உயிர்களின் அறிவில் அறிவாயமைந்திருக்கும் திருமாலே இராமன் எனக் காட்டுகிறான். 160-ம் பாடலில் 'அறிவின் தனிநாயகன்' என்று இராமனைக் குறித்ததும் இதையே வலியுறுத்துகிறது. 100 ம் பாடலில் "மறைமுதல் தனிநாயகன்" என்று இராமனைக் குறித்திருப்பதும் சங்கத்தமிழர் வேதமுதல்வனாகப் பல இடங்களில் திருமாலைக் குறித்திருப்பதைப் பின்பற்றியது என்பது தெளிவு. 102-ம் பாடலில் 'சிட்டர்தம் தனித்தேவன்' [சிறந்தவர்கள் வணங்கும் ஒப்பற்ற திருமாலின் அவதாரமான இராமன்] என்று கூறியிருப்பதும் "அந்தணர்மாட்டு அருந்தெய்வம் நின்னலாலில்லாமை நெறிநின்றார் நினையாரே" என்று விராதன் வதைப்படலத்தில் கூறியவிடத்திற்போலே திருமாலின் முதன்மையைக் காட்டுகிறது. 107-ம் பாடலில் 'தாமரைக் கண்ணன்" என்றும், 119-ம் பாடலில் "இந்திரை கொழுநன்" [திருமகள் கேள்வன்] என்றும் இராமனைக் கூறுவதன்மூலமும் திருமாலின் அவதாரமே இராமன் என உணர்த்துகிறான் கம்பன். 121-ம் பாடலில் "நினைப்பவர் பிறப்பு என நீங்கும்" என்று பாடியிருப்பது, "மறுபிறப்பறுக்கும் மாசில்சேவடி" என்று சங்ககாலத் தமிழர் திருமாலைப் பாடியதை அடியொற்றியது என்பது தெளிவு. அடுத்த பாடலில் "சிரத்தின் நான்மறை இறைஞ்சவும் தொடரவும் சேயோன்" என்று இராமனைப் பாடியிருப்பதும் அவர்கள் வேத முதல்வனாகத் திருமாலைப் பாடியதைப் பின்பற்றியது என்பது தெளிவு. 129-ம் பாடலில் "புவிதந்தான்" என்று இராமனைக் குறித்திருப்பதும்

உலகனைத்தையும் படைத்தவனுகத் திருமாலைச் சங்கத்தமிழர் பல இடங்களில் முழங்கியிருப்பதை அடியொற்றியது என்பது வெளிப்படை. அடுத்த பாடலில் "தான் அறியாதே பிறந்தான்" [பிறர் தன்னை அறிந்துகொள்ள இயலாமல் மனிதனுகப் பிறந்தவன்] என்று இராமனைக் குறித்திருப்பது "தெருள நின் வரவு அறிதல் மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே" என்று சங்ககாலத்தமிழர் திருமாலைப் பாடியதை அடியொற்றியது என்பது மிகத்தெளிவு.

"சிவனோ? அல்லன்; நான்முகன்
அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம்
எல்லாம் அடுகின்ருன்;
தவனோ என்னின், செய்து
முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேதமுதல்
காரணன்?' என்ருன்." [134]

['நம் உண்மையான வரத்தை எல்லாம் பயன்படாமல் செய்கின்ற இவன், சிவனோ? எனின், அல்லன்; பிரமனோ? எனின், அல்லன்; திருமாலோ? எனின், அல்லன்; பெருந்தவனோ? எனின், தவன் இத்தகைய அருஞ்செயலைச் செய்து முடிக்கும் தரமுடையவனல்லன்; (எனவே), அந்த வேதங்கள் கூறும் உலக முதற்காரணனுகிய பரம்பொருள் இவன் தானோ?' என்று இராவணன் நினைந்தான்] என்னும் பாடலில் இராவணன் "மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட வேதமுதற்காரணனே இராமன்" என்று கூறியிருப்பதிலிருந்து பரம்பொருள் மும்மூர்த்திகளிலும் மேற்பட்டது என்பதே கம்பனின் கொள்கை எனச் சிலர் கூறுவது—திருமாலே பரம்பொருள் எனக் கூறும் நூற்றுக்கணக்கான கம்பராமாயணப் பாடல்களுக்கு முரணுகும். ஆகையால், "தன்முன் வலியொடுங்கிக் கிடந்த மும்மூர்த்திகளுக்கும் மேலாகப் பரமபதத்திலுள்ள பரம்பொருள் இந்த இராமனே" என்று கழகப்பதிப்பில் குறிப்புரையில் கூறியிருப்பதே பொருந்திய பொருளாகும். அடுத்த பாடலில் "ஆரேனும் தானுக" என்று இராவணன் ஐயப்பாட்டோடே முடிக்கையாலே இப்பாடலைக்கொண்டு கம்பனுடைய கடவுட் கொள்கையை நிர்ணயிக்க இயலாது. 147ம் பாடலில் "வேதியர் வேதத்து மெய்யன்" என்று இராமனைக் குறித்திருப்பதும் வேத முதல்வனுகச் சங்கத்தமிழர் திருமாலைக் குறித்திருப்பதைப் பின்பற்றியது என்பது தெளிவு. 153-ம் பாடலில் "உயிர்களின் முதலில் வைத்ததோரெழுத்தினன்" [உயிரெழுத்துக்களில் முதலாக வைக்கப்பட்ட அகரத்தின் பொருளாயிருப்பவன் இராமன்] என்று குறிப்பதனுலும் அகரத்தின் பொருளான ஆதிபகவனுன திருமாலே இராமனெனக் காட்டுகிருன் கம்பன். 172-ம் பாடலில் "ஏறுசேவகன்" [மேலோங்கிய வீரமுடையவன்] என்ற இராமனைக் குறிப்பது "மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறுசேவகனுர்க்கு" [திருவாய் 6-1-10] என்ற ஆழ்வார் பாசுரத்தை அடியொற்றியது என்பது வெளிப்படை. 190-வது பாடலில் "நாரணன் திருவுந்தியில் நான்முகன்" என்னும் தொடரால் படைக்கும் கடவுளான நான்முகனையும் தன் உந்தியில் படைத்தவன் நாரணனே என்று கூறுவதன்மூலம் இப்படியே கூறியிருக்கும் சங்ககாலத் தமிழர்போலே கம்பனும் நாராயண பரத்துவத்தை நிலைநாட்டுகிருன்.



"அக்கணத்தின் அயன்படை ஆண்தகை
சக்கரப் படையோடும் தழீஇச் சென்று
புக்கது, அக்கொடியோன் உரம்; பூமியும்
திக்கு அனைத்தும், விசும்பும் திரியவே." [195]

[அந்தக் கணத்தில் அயன் கணை, இராமனுக்குரிய சக்கரப்படையோடும் சேர்ந்து சென்று, பூமியும் திசைகள் யாவும் விண்ணும் சுழல, அந்தக் கொடியவனுகிய இராவணனது மார்பில் புக்கது.] என்னும் பாடலில் பிரம்மாஸ்திரத்தோடு திருமாலின் பிரதான ஆயுதமான சக்கரமும் இராவணன் உயிரைக் குடித்தது என்கிருன் கம்பன். இப்படிச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் வான்மீகிராமாயணத்தில் இல்லாத பல விஷயங்களைப் புகுத்தி, திருமாலே இராமனென்று உணர்த்தி, திருமாலின் முதன்மையையும் நிலைநாட்டும் கம்பனைச் சைவன் என்றும், சமரசவாதி என்றும், மும்மூர்த்திகளும் இராமனுக அவதரித்ததாகக் கூறுகிறவனென்றும் சிலர் கட்டுப்பாடாகக் கூறிவருவது இலக்கியத்திலும் மதத்துறையிலும் பொய்ம்மை புகுந்துவிட்டதையே காட்டுகிறது. 213ம் பாடலில் "வேலைசூழ் ஞாலமெல்லாம் பன்றியாய் எயிற்றில் கொண்ட பரம்பரன்" [கடல்சூழ்ந்த உலகம் முழுவதையும் வராகமூர்த்தியாய், தன் கோரப் பற்களால் தாங்கிக் காப்பாற்றிய தேவர் தலைவனுன திருமால்] என்று திருமாலின் முதன்மையைக் குறித்தான் கம்பன். "கேழல் திகழ்வரக்கோலமொடு பெரிய ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு ஊழி யாவரும் உணரா ஆழிமுதல்வ" என்று பரிபாடலில் பாடிய சங்ககாலத் தமிழரின் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என்று இதிலிருந்தும் விளங்குகிறது.

"மன்றல் மாமலரானும், வடிமழுவாள்
படையானும், வரங்கள் ஈந்த
ஒன்று அலாதன உடைய முடியோடும்
பொடி ஆகி உதிர்ந்து போன;
அன்றுதான் உணர்ந்திலேயே ஆனாலும்
வான்நாட்டை அணுகா நின்ற
இன்றுதான் உணர்ந்தனையே, இராமன் தான்
யாவருக்கும் இறைவன் ஆதல்" [221]

[மணம் பொருந்திய சிறந்த தாமரை மலரின் வீற்றிருக்கும் பிரமனும், கூரிய மழுப்படையையுடைய உருத்திரனும் ஈந்த ஒன்றல்லாதனவாக நீ பெற்றுள்ள பல வரங்களும் நின் முடியோடும் பொடியாகி உதிர்ந்து போயின; இராமனுர் யாவருக்கும் கடவுள் ஆதலை (யான் கூறிய) அன்றுதான் உணர்ந்திலை ஆயினும் விண்ணுலகத்தை அணுகு கின்ற இன்றேனும் உணர்ந்தனையோ?] என்னும் பாடலில் வீடணன் வாயிலாகப் பிரமன், சிவன் முதலான தேவர்க்கெல்லாம் இறைவன் திருமாலே என உறுதிப்படுத்துகிருன் கம்பன். இவனைச் சைவன் என்பவர்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால், இத்தகைய பாடல்களைப் பார்த்தபின்பாவது அது கிளர்ந்தெழட்டும்.

"ஆரா அமுதாய்
அலைகடலில் கண்வளரும்
நாராயணன் என்று
இருப்பேன் இராமனை நான்;
ஓராதே கொண்டு அகன்ருய்,
உத்தமனுர் தேவிதனை;
பாராயோ, நின்னுடைய
மார்புஅகலம் பட்ட எலாம்?" [243]

[நான், இராமனை ஆராத அமுதம் போன்று இனியவனாய் அலைகளை யுடைய திருப்பாற்கடலிலே அறிதுயில் புரிகின்ற நாராயணன் அம்சம் என்று தெளிந்திருக்கும் தன்மையேன்; என் கருத்தை ஆராயாமல் அந்த உத்தமனுர் தேவியாகிய சீதையைக் கவர்ந்துகொண்டு அங்கு நின்று அகன்றுவிட்டாய்; (அதன்பயனாக இப்போது) நின்னுடைய மார்பின் பரப்பு அடைந்த கதியை எல்லாம் பார்க்கமாட்டாயோ?] என்னும் பாடலில் மண்டோதரியின் வாயிலாகத் திருப்பாற்கடலில் கண் வளரும் ஆராவமுதான நாராயணனே இராமன் என்று கம்பன் அறுதி யிடுகிருன். இப்படி நாராயண நாமத்தைப் பேரன்புடன் பல இடங்களில் அவன் வழங்கியிருப்பதைக் கண்டபின்பாவது "இராமநாமத்துக்குப்



போட்டியாக நாராயண நாமத்தைக் கொண்டுவருதற்காகவே வைஷ்ணவர்கள் இரணியன் வதைப்படலத்தைப் புகுத்தினர்" என் னும் தமது வாதம் செல்லாக்காசாகி விட்டதை ம. பொ. சி. உணரு வாரா? 'ஆராவமுதே' என்னும் ஆழ்வாருகந்த திருநாமத்தை அடிக்கடி வழங்குவதன் மூலம் நம்மாழ்வாரிடம் தனக்குள்ள பக்தியைக் காட்டு கிருன் கம்பன் என்பதும் இங்கு குறிக்கொள்ளத்தக்கது. இனி மீட்சிப் படலத்தில் முக்கியமான பாடல்களைக் காண்போம். 11-ம் பாடலில் "திருக்கொள் மார்பன்" என்று இராமனைக் குறிப்பதன்மூலம் ஸ்ரீதேவி யைத் திருமார்பில் கொண்ட திருமாலே இராமன் எனக் காட்டுகிருன் கம்பன். அடுத்த பாடலில் "மறைதந்துளான்" என்று இராமனைக் குறிப்பதன்மூலம் பிரமனுக்கு முதலில் வேதங்களை உபதேசித்த திரு மாலே இராமனெனக் காட்டுகிருன் கம்பன். 43-ம் பாடலில் "அமிழ்தின் வந்த அமிழ்தினை" என்று பிராட்டியைக் குறிப்பிடு வதன்மூலம் "அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமான்" [பெரியதிரு 6-1-2] என்ற திருமங்கையாழ்வார் அருளிச்செயலைக் கம்பன் அடியொற்றுகிருன். நம்மாழ்வாரைப்போலே திருமங்கையாழ்வாரையும் கம்பன் அடியொற்றியிருக்கும் பாடல்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. 54-ம்பாடலில் "செங்கண் வேதநாயகன்" என்று மறை முதல்வனாய், செந்தாமரைக் கண்ணனை திருமாலே இராமனெனக் காட்டி, சங்கத் தமிழ்நூல்களைத் தழுவுகிருன். 76-ம் பாடலில் "பங்கயத்தொருவனும் விடையின் பாகனும்" என்று பிரமன் சிவன் இருவரையும் குறித்துவிட்டு, "சங்கு கைத்தாங்கிய தருமமூர்த்தியும்" என்று திருமாலை அறத்தின் மூர்த்தியாகக் கூறுகையால் கம்பன் தான் திருமாலையே பரம்பொருளாகக் கொண்டவன் என்பதைக் காட்டுகிருன். "அறந்தானாய்த் திரிவாய்" [பெரியதிரு 6-3-2] "அறஞ்சுவராகி நின்ற அரங்கனுர்" [திருமாலை 6] என்று ஆழ்வார்கள் அருளியதை அடியொற்றியது "தருமமூர்த்தி" என்பது. 79-ம் பாடலில் "பதுமப்போதினுள்" என்று பிராட்டியை ஸ்ரீதேவியாகக் கூறுவதன்மூலம் திருமாலே இராமன் எனக் காட்டினுன் கம்பன். 84ம் பாடலில் "புனத்துழாய்க் கணவற்கும்" என்று இராமனைத் திருமாலே என நிலைநாட்டினுன் கம்பன். 91வது பாடலில் இராமனைப் பிறந்த திருமாலே அனைவர்க்கும் அந்தர்யாமி என்பதை "எவருக்கும் சான்றுளாய்" என்று அக்னிதேவன் வாயிலாகக் காட்டுகிருன் கம்பன். பிரமன் இராமனுக்கு அவனது உண்மைநிலையை உணர்த்தத் தொடங்கும் 98-ம் பாடலில் "இணர்த்துழாய்த் தொங்கலிராமற்கு" என்று இராமனைக் குறிப்பதன்மூலம் திருமாலே இராமனெனக் காட்டி, "புணர்த்தும் மாயையில் பொதுவுறநின்று அவை புணரா" என்று மாயையால் தொடப்படாத பரம்பொருள் திருமாலே என உணர்த்து

கிருன் கம்பன். 14 பாடல்களில் பிரமன் இராமனைத் துதிக்கிருன். இதிலும் கம்பன் தன் சமயக்கொள்கையைத் தெளிவுறக் காட்டுகிருன்.

''மன்னர் தொல்குலத்து அவதரித்தனை;
ஒரு மனிதன்
என்ன உன்னலை உன்னை, நீ;
இராம! கேள், இதனை;
சொன்ன நான்மறைத் துணிவினில்
துணிந்த மெய்த்துணிவு
நின்அலாது இல்லை; நின்னில் வேறு
உளது இலை - நெடியோய்!'' [99]

[இராமபிரானே! (யான் கூறும்) இம்மொழியினைக் கேட்டருள்வாயாக. (திருமாலாகிய) நீ தொன்மைவாய்ந்த அரசர் குலத்தில் அவதரித்துள்ளாய். (அதுபற்றி) நின்னை ஒரு (சாதாரண) மனிதன் என்று (தாழ்வாக) எண்ணுதே. நெடியோனே! (உயர்த்துச்) சொல்லப்பட்ட நான்மறைகளின் தெளிந்த முடிபாகிய உபநிடதங்களில் ஆராய்ந்து துணியப்பெற்ற மெய்ப்பொருள் நீயன்றிப் பிறிதில்லை. நின்னின் வேருக நிலைத்துள்ளது பிறிதொன்றுமில்லை.] என்னும் பாடலில் உபநிடதங்களில் ஆராய்ந்து துணியப்பெற்ற மெய்ப்பொருள் திருமாலன்றி வேறென்றுமில்லை என்று கூறுவதன்மூலம் பல பாடல்களில் இப்படி முழங்கும் சங்கத் தமிழர் சமயமான வைணவமே தன் சமயம் எனக் காட்டுகிருன்.

''பகுதி என்று உளது, யாதினும்
பழையது, பயந்த
விகுதியால் வந்த விளைவு, மற்று
அதற்குமேல் நின்ற
புகுதி, யாவர்க்கும் அரிய அப்
புருடனும், நீ; இம்
மிகுதி உன்பெரு மாயையினல்
வந்த வீக்கம்''. [100]

[மூலப்பகுதி என்றுள்ளதாகிய எப்பொருளினும் பழையதாகிய தத்துவமும், (அது) தந்த திரிபினல் விளைந்த காரியங்களாகிய ஏனைத் தத்துவங்களும், அவ்விளைவுக்கு மேலாய் நின்ற ஞானப் பொருளும், யாவர்க்கும் (பகுத்துணர்தற்கு) அரிய அந்தப் புருடதத்துவமும் (ஆகக் கலந்து உள்ளவன் இறைவனுகிய) நீயே. இவ்வாறு மிக்கு விரிந்து காணப்படும் பிரபஞ்சமனைத்தும் உனது பெரிய மாயையாகிய பேராற்றலால் உண்டான பெருக்கமாகும்.]



என்னும் பாடலில் பிரக்ருதி புருஷர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து அவர்களைத் தனது ஸூக்ஷ்மசரீரத்திலிருந்து தன் ஸங்கல்பத்தால் ஸ்தூலமாக வெளிப்படுத்தியவன் திருமாலே என்ற விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை முரசறைகிருன் கம்பன். இவ்விடத்தில் ''இவ்விருபத்தைந்து தத்துவங்களாக விரிந்து பரவியுள்ள பிரபஞ்சமனைத்தும் நாராயணனுகிற பரம்பொருளின் வியக்கத்தக்க மாயையால் (ஸங்கல்பத்தால்) விளைந்தன என்று வைணவநூல்கள் கூறும்'' என்று கழகப்பதிப்பின் குறிப்புரை கூறுவது குறிக்கொள்ளத்தக்கது. இப்பாடலிலுள்ள பகுதி (பிரகிருதி), விகுதி (விக்ருதி), புகுதி, மிகுதி என்னும் பதங்களையே பெய்து இரணியன் வதைப் படலத்தில் 60ம் பாடலில் இதே பொருளைப் பிரகலாதன் வாயிலாகக் கம்பன் அமைத்திருப்பதிலிருந்து அப்படலமும் கம்பன் இயற்றியதே எனத் தெளிவாக விளங்குகிறது.

''முன்பு பின்பு இருபுடை எனும்
குணிப்பு அரு முறைமைத்
தன்பெருந் தன்மை தான் தெரி
மறைகளின் தலைகள்,
'மன்பெரும் பரமார்த்தம்' என்று
உரைக்கின்ற மாற்றம்,
அன்ப! நின்னை அல்லால் மற்று இங்கு
யாரையும் அறையா.'' [101]

[அன்புருவாகியவனே! (உலகப்பொருள்களுக்குரியவாக) முன்பு, பின்பு, இரு பக்கங்கள் எனக் குறித்துணர்தற்கு இயலாத தனது பெருந்தன்மையாகிய இறைமைத் தன்மையினைத் தாமே ஆராய்ந்து தெளிந்த வேதசிகைகளாகிய உபநிடதங்கள் 'அழிவின்றி நிலைபெற்ற மேலான பெரும்பொருள்' என்று சொல்கின்ற சொற்கள், (திருமாலாகிய) உன்னையல்லால் இங்குள்ள ஏனைத்தேவர்கள் எவரையும் சொல்லமாட்டா.] என்னும் பாடலில் 'அழிவின்றி நிலைபெற்ற மேலான பரம்பொருள் என்று திருமாலையே பரம்பொருளாக அறுதியிடுகின்றன உபநிடதங்கள்' என்று காட்டி மற்ற தேவர்கள் எவரையும் அவை இப்படிச் சொல்லமாட்டா என முழங்குகிருன் கம்பன். பரமவைணவனை இவனையா சைவன் என்பது?

''எனக்கும், எண்வகை ஒருவற்கும்,
இமையவர்க்கு இறைவன்–
தனக்கும், பல்பெரு முனிவர்க்கும்,
உயிருடன் தழீஇய

அனைத்தினுக்கும், நீயே பரம்
என்பதை அறிந்தார்,
வினைத் துவக்குடை வீட்ட அரும்
தனைநின்று மீள்வார். [102]

[(பிரமனாகிய) எனக்கும் எண்வகை வடிவமுடைய ஒப்பற்றவனாகிய சிவபெருமானுக்கும் தேவர்தலைவனாகிய இந்திரனுக்கும் பலராகிய பெருமுனிவர்களுக்கும் உயிருடன் பொருந்திய எல்லாப் பொருள்களுக்கும் நீயே முழுமுதற்பொருள் என்னும் மெய்ம்மையினை உணர்ந்தவர்கள், இரு வினைகளாற்பிணித்தலையுடைய (யாவராலும்) விடுவித்தற்கு அரிய பாசப்பிணிப்பினின்றும் மீண்டு முத்தியடைவார்கள்.] என்னும் பாடலில் 'பிரமன்தனக்கும் சிவப்பிரானுக்கும் இந்திரனுக்கும் மற்ற எல்லா உயிர்களுக்கும் திருமாலே முழுமுதற்பொருள் என்ற உண்மையை அறிந்தவர்களே விடுபேறு பெறுவார்கள்' என்று கூறுவதிலிருந்து மும்மூர்த்திகள் சமரென்றோ, ஒன்று என்றோ கருதுகிறவர்களுக்கு விடுபேறு கிடையாது என்பதே கம்பனின் கொள்கை என்று விளங்குகிறது. இவன் "அரியதிகன் என்பவர்களுக்குப் பரகதி சென்றடைவரிது" என்று கூறியிருப்பாறு என்று நடுநிலையாளர் சிந்திக்கவேண்டும். சிந்தித்தால் "அரனதிகன்" என்ற கிட்கிந்தாகாண்டப் பாடலுக்கு நாம் காட்டிய பொருளே பொருந்தும் எனத் தெளிவாக விளங்கும்.

"என்னைத்தான் முதலாகிய
உருவங்கள் எவையும்
முன்னைத் தாய் தந்தை எனும் பெரு
மாயையின் மூழ்கி,
தன்னைத் தான் அறியாமையின்
சலிப்ப; அச் சலம் தீர்ந்து,
உன்னைத் தாதை என்று உணர்குவ,
முத்தி வித்து, ஒழிந்த." [103]

[(பிரமனாகிய) என்னை முதலாகவுடைய உருவங்களைக்கொண்ட உயிர்த்தொகுதிகள்யாவும் (பிறப்பிற்கு) மூலமாகிய தாய் தந்தையென்னும் பெரிய மாயையில் அழுந்தித்தனது (உயிரின்) உண்மைநிலையினைத் தான் உணராமையால் (பயன்பெறுது பிறவிச் சுழலிற்பட்டு) வருந்தி அலைவனவாம். அத்தகைய பொய்ம்மையினை விட்டு நீங்கினவாய் (இறைவனாகிய) நின்னையே (எவ்வுயிர்க்குந்) தந்தை என்று உணர்வனவாகிய உயிர்கள் வீட்டுலகிற்கு வித்தாவனவாம்.] என்னும் பாடலில் பிரமன் முதலான எல்லா உயிர்களும் பிறவிப் பிணியாகிய மாயையில் அழுந்திநிற்பவரே என்றும், 'திருமாலே தந்தை' என்று உணரும் உயிர்களே விடுபெறும் என்றும் மிகத் தெளிவாக ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை நிலைநாட்டுகிருன் கம்பன்.



"'ஐ-அஞ்சு ஆகிய தத்துவம்
தெரிந்து அறிந்து, அவற்றின்
மெய் எஞ்சாவகை மேல் நின்ற
நினக்குமேல் யாதும்
பொய் எஞ்சா இலது' என்னும் ஈது
அருமறை புகலும்;
வையம் சான்று; இனி, சான்றுக்குச்
சான்று இலை, வழக்கால்." [104]

[இருபத்தைந்தாகிய தத்துவங்களை ஆராய்ந்தறிந்ததனுல், அத்தத்துவங்களின் உண்மைத் தன்மை (தன்னின்) மிக்கு மேவிடாதவாறு (அவையெல்லாவற்றுக்கும்) மேலாய்நின்ற (மெய்ப்பொருளாகிய) உனக்கு மேலே பொய்ம்மையுடையதேதுவும் விஞ்சி நிற்பதில்லை என்னும் இவ்வுண்மையினை அருமையுடைய வேதங்கள் எடுத்துரைக்கின்றன. இதற்கு உலகமும் சாட்சியாகவுள்ளது. இனி (இதனை வலியுறுத்தற்குச்) சாட்சிக்குச் சாட்சி வேண்டுவதில்லை. (இதுவே) வழக்கியல் நெறியாகும்.] என்னும் பாடலில் "'இருபத்தைந்து தத்துவங்களுக்கு மேற்பட்ட இருபத்தாருவது தத்துவமான பரம்பொருள் திருமாலே' என்று வேதங்கள் கூறும்" என்று முழங்குவதன்மூலம் இதே பொருளைப் பரிபாடலில் முழங்கியிருக்கும் சங்கத்தமிழர் சமயமே தன் சமயம் என நிலைநாட்டுகிருன் கம்பன். இங்கு கழகப் பதிப்பின் குறிப்புரையில் "பாழெனை" எனத் தொடங்கும் பரிபாடலும் (3ம் பரிபாடல் பகுதி) அதன் உரை விளக்கமும், "பொங்கைம்புலனும்" [திருவாய் 10.7.10] என்னும் திருவாய்மொழிப் பாசுரமும் மேற்கோளாகக் காட்டியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. இவ்வொரு பாடலிலிருந்தே—தத்துவங்களை முப்பத்தாருகக்கொண்டு சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவமதத்தை ஏற்காதவன் கம்பன் என்றும், தத்துவங்களை இருபத்தாருகக்கொண்டு திருமாலைப் பரம்பொருளாகக்கொண்ட விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தையே பின்பற்றியவன் கம்பன் என்றும் விளங்குகிறது. இத்தகைய பாடல்களைப் பார்க்காமலோ, பார்த்தும் அவற்றின் பொருளை அறியாமலோ கம்பராமாயணத்தை மேம்போக்காகப் பார்த்து ம. பொ. சி. தமது நூலை எழுதியிருக்கிருர் என்பது நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும்.

"அளவையால் அளந்து, 'ஆம்', 'அன்று' என்று
அறிவுறும் அமைதி
உ(ள்)ளவை யாவையும் உனக்கு இல்லை;
உபநிடத்து உறும் நின்
களவை ஆய்ந்து உறத் தெளிந்திலது
ஆயினும், கண்ணால்,
துளவை ஆய் முடியாய்! 'உளை
நீ' எனத் துணியும்." [105]

[திருத்துழாயணிந்த திருமுடியையுடையவனே! பிரமாணங்களால் ஆராய்ந்து ஆம் என்றும் அன்று என்றும் அறியும் அமைப்பு உள்ளனவாகிய அடையாளங்கள் எவையும் (இறைவனாகிய) உனக்கு இல்லை. (உலகவுயிர்த்தொகுதி) உபநிடதங்களிற்பொருந்திய நினது களவினை (உள்ளவாறு) ஆராய்ந்து பொருந்தத் தெளியும் ஆற்றலில்லாததாயினும் (நினது அருட்) கண்ணின் துணைகொண்டு நீ உள்ளாய் என்று துணிந்து கூறும்.] என்னும் பாடலில் உயர்ந்தோரும் திருத்துழாயணிந்த திருமுடியையுடைய திருமாலை அளவிட்டறியாராயினும் அவனே பரம்பொருள் என்று துணிந்து கூறுவர் என்று முழங்குவதன்மூலம் இப்படியே முழங்கியிருக்கும் சங்கத்தமிழர் சமயமே தன் சமயமெனக் காட்டுகிறான் கம்பன்.

"சரணம் என்று உள உன்னை வந்து
அறிவு காணுமே,
அரணம் அல்லவர்க்கு இவை கடந்து
அறிவு அரிது ஆக,
மரணம் தோற்றம் என்று இவற்றிடை
மயங்குப; அவர்க்கு உன்
சரணம் அல்லது ஓர் சரண் இல்லை,
அன்னவை தவிர்ப்பான்." [106]

[(இறைவனாகிய நின்னைக்) காவலாகக் கொள்ளுதலையுடையரல்லாதார்க்கு நின்னை அணுகி அறிவினாற் கண்டுணரவொண்ணாதவாறு (மனம் பொறி முதலிய) கருவிகள் என்பன (தடையாக) உள்ளன. (அன்னோர்) இக்கருவிகளை வென்று (நின்னை) அறிய இயலாதவாறு இறத்தலும் பிறத்தலும் ஆகிய இவற்றில் அகப்பட்டு மயங்கி உழல்வர். (அத்தகையோர்க்கு) அத்துன்பங்களை நீக்குதற்கு உனது திருவடியையன்றி வேறொரு புகலிடமில்லை.] என்னும் பாடலில் பிறவிப் பிணியிலிருந்து நீங்குவதற்குத் திருமாலின் திருவடியல்லது ஓர் உபாயமில்லை என்றும், அவனை அரணாகக்கொள்ளாதவர்கள் பிறவிப்பிணியில் அகப்பட்டு மயங்கி உழல்வர் என்றும் கூறுகிறான் கம்பன். "மறுபிறப்பறுக்கும் மாசில்சேவடி மணிதிகழ் உருபின் மா அயோயே!" "நாறிணர்த் துழாயோன் நல்கினல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" என்று பரிபாடலில் திருமாலைக் குறித்துப் பாடிய சங்கத்தமிழரின் வைணவ மதத்தைப் பின்பற்றியவன் கம்பன் என்று இதிலிருந்தும் விளங்குகிறது.



"தோற்றம் என்பது ஒன்று உனக்கு இல்லை;
நின்கணே தோற்றும்,
ஆற்றல்சால் முதற்பகுதி; மற்று
அதனுள் ஆம், பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்கள்;
அவை சென்று, கடைக்கால்,
வீற்று வீற்று உற்று வீவுறும்;
நீ என்றும் விளியாய்." [107]

[(இறைவனாகிய) உனக்கு (ஒன்றிலிருந்து) தோன்றுதல் என்பதாகிய (பிறப்பு) நிலை இல்லை. ஆற்றல் மிக்க மூலப்பகுதியானது நின் கண்ணே தோன்றும்; (ஊறு முதலிய) பண்புகளுடன் வளிமுதலிய ஐம்பெரும் பூதங்கள் அம்மூலப் பகுதியுளிருந்து தோன்றுவனவாகும். அவை யாவும் ஊழி முடிவில் வேறு வேறாகப் பிரிந்து அழிவன; (முதல்வனாகிய) நீ எக்காலத்தும் அழியமாட்டாய்.] என்னும் பாடலில் திருமாலுக்குத் தோற்றமும் அழிவுமில்லை என்றும், அவனால் படைக்கப்படும் பொருள்களுக்கே அவையுண்டு என்றும் கூறுவதிலிருந்து கம்பன் பரமவைணவன் என்றும், திருமாலை பிறந்து அழிபவனாகக் கூறும் சைவ மதத்தைக் கனவிலும் கருதாதவன் என்றும் தெளிவாக விளங்குகிறது.

"மின்னைக் காட்டுதல்போல் வந்து
விளியும் இவ் உலகம்—
தன்னைக் காட்டவும், தருமத்தை
நாட்டவும், தனியே
என்னைக் காட்டுதி; இறுதியும்
காட்டுதி; எனக்கும்,
உன்னைக் காட்டலை; ஒளிக்கின்றும்
இலை, மறை உரையால்." [108]

[(விரைந்து தோன்றிமறையுந்தன்மையினையுடைய) மின்னலை (மேகம்) தோற்றுவித்தாற்போன்று அழியும் தன்மையதாகிய இவ்வுலகினைப் படைத்தற்கும் அறத்தை நிலை நிறுத்தற்கும் தனியே (முதற்கண்) என்னைப் படைத்தாய். (படைக்கப்பட்ட உலகத்திற்கு) அழிவையும்

உண்டாக்குகின்ருய். (நின்னிற்பிரியா நிலேயேனுகிய) எனக்கும் நினது உண்மைநிலே முழுவதனேயும் காட்டுகின்ருயல்லே. (நின்வாய் மொழியாகிய) வேத வாக்கியங்களால் (நின்னியல்பினே யான் ஒரு சிறிது உணரப்பெறுதலால், நின்னே முற்றிலும்) மறைக்கின்ருயுமல்லே.] என்னும் பாடலில் பிரமன்—உலகைப் படைக்கத் தன்னேப் படைத்தவன் திருமாலே என்றும், உலகை அழிப்பவனும் திருமாலே என்றும், திருமாலின் உண்மை நிலேமையைத் தானும் முழுவதும் உணர வில்லே என்றும், வேதங்களேக்கொண்டு ஒரு சிறிதே உணரப் பெற்றிருப்பதாகவும் கூறுவதாகக் காட்டியிருப்பதிலிருந்து "திருமா லொருவனே பரம்பொருள். பிரமன் முதலான அனேவரும் சீவர்களே" என்னும் பரமவைதிக சித்தாந்தமான வைணவத்தையே பின்பற்றியவன் கம்பன் என விளங்குகிறது.

"என் உருக் கொடு இவ் உலகினே
ஈனுதி; இடையே
உன் உருக் கொடு புகுந்துநின்று
ஓம்புதி; உமைகோன்
தன் உருக்கொடு துடைத்தி; மற்று
இது, தனி அருக்கன்
முன் உருக் கொடு பகல் செயும்
தரத்தது—முதலோய்!" [109]

[முழுமுதற் பொருளாக விளங்குபவனே! (பிரமனுகிய) எனது உருவத்தை மேற்கொண்டு இவ்வுலகத்தைப் படைக்கின்ருய்; (திருமாலாகிய) நினது உருவத்தைக்கொண்டு இடையே புகுந்துநின்று (உலகத்தைக்) காத்தருள்கின்ருய்; பார்வதி நாயகனுகிய சிவனது உருவத்தை மேற்கொண்டு (உலகினே) அழிக்கின்ருய்; (நின்செயல் வகையாகிய) இது, கதிரவன் (யாவராலும்) கருதத்தகும் தனது ஒளியுருவினேக்கொண்டு பகற்பொழுதினேச் செய்கின்ற தன்மையினே ஒத்தது.] என்னும் பாடலில் படைப்புத் தொழிலேச் செய்யும் பிரமனுகிய தானும், அழித்தல் தொழிலேச்செய்யும் உருத்திரனும் திருமாலின் உருவங்களே என்றும், இராமனின் மூலமூர்த்தியான திருமால் அனேத்துக்கும் அந்தர்யாமியாயிருந்து காத்தல் தொழிலேச் செய்கிருன் என்றும் பிரமன் வாயிலாகக் கூறுவதன்மூலம் திருமாலே மற்ற இரு மூர்த்திகளுக்கும் அந்தர்யாமி என்றும், முத்தொழிலேயும் செய்யும் முதல்வன் அவனே என்றும் முழங்கி விஷ்ணு பரத்வ நிர்ணயம் செய்து, அத்திருமாலே இராமன் என்றும் காட்டுகிருன் கம்பன். "இந்தலே உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை



ஒருவனும் மடங்கலும் நீ - புலமும் பூவனும் நாற்றமும் நீ" என்று திருமாலே பிரமனுக்கு அந்தர்யாமியாயிருந்து படைப்புத்தொழிலேயும், உருத்திரனுக்கு அந்தர்யாமியாயிருந்து அழிப்புத்தொழிலேயும் செய்பவன் என்றும், "ஒருமைமினே மேவுமுள்ளத்தினே" என்று காத்தற்றொழிலேத் தானே செய்கிருன் என்றும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை வெளிப்படுத்திய சங்கத்தமிழரைக் கம்பன் இப்பாடலில் அடியொற்றியிருக்கிருன் என்பது வெளிப்படை. "அரனயனென உலகழித்தமைத்துளனே" [திருவாய் 1.1.8] "தானும் சிவனும் பிரமனுமாகிப் பணேத்த தனிமுதலே" [திருவாய் 8.8.4] என்று நம்மாழ்வார் காட்டிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே சங்ககாலந்தொட்டுத் தமிழ்நாட்டில் பரமவைதிகமதமாக ஆதரிக்கப் பெற்று, கம்பனுல் கைக்கொள்ளப்பட்டது என்று இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

"திருக் குவால்மலி செல்வத்துச்
செருக்குவேம் திறத்துத்
தருக்கு மாய்வுற, தானவர்
அரக்கர் வெஞ் சமரில்
இரிக்க, மாழ்கி நொந்து, உனேப் புகல்
யாம்புக, இயையாக்
கருக்குளாய் வந்து தோற்றுதி;
ஈங்கு இது கடனே?" [110]

[திருத்தகவினதாகிய பொருட்குவியலாக நிறைந்த பெருஞ்செல்வ வாழ்விலே செருக்குறும் தேவர்களாகிய எங்களிடமுள்ள அகங்காரம் கெட்டொழியும்படி, அசுரர்களும் அரக்கர்களும் வெல்விய போரிலே (எம்மை எதிர்த்துத்தாக்கித்) துரத்துதலால் யாங்கள் (மனம்) வருந்தி (உடல்) நொந்து (திருமாலாகிய) உன்னேச் சரணடைய(க் கொடியோராகிய அவர்களே அழித்து எம்மைப் பாதுகாத்தற்பொருட்டு, உனக்கு)த் தகுதியில்லாத பிறவிகளிலே வந்து இங்கு அவதரிக்கின்ருய். இது (இறைவனுகிய உனக்கு நீங்காத) கடமையாய் விட்டதோ?] என்னும் பாடலில் தேவர்களாகிற தாங்கள் அரக்கர்களிடம் பட்ட துன்பமெல்லாம் தீரும்படி தனக்குத் தகுதியில்லாத பிறவிகளிலே வந்து அவதரிக்கிருன் எம்பெருமான் என்று பிரமன் வாயிலாகக் காட்டுகிருன் கம்பன். மும்மூர்த்திகளும் சமமானவர், ஒன்ருனவர், மும்மூர்த்திகளிலும் மேலானதொன்றே பரம்பொருள் முதலான விதண்டாவாதங்களேக் கனவிலும் கருதாதவன் கம்பன் என்பதைக் காட்டும் பாடல்கள் கம்பராமாயணத்தில் எத்தனே யுள்ளன! அவற்றைக் கண்டுவைத்தும் கம்பனேத் திரிமூர்த்தி

ஸாம்யவாதி என்றும், ஐக்யவாதி என்றும், உத்தீர்ணவாதி என்றும் கதைப்பவர் பலர் இந்நாட்டில் உண்டாவதே!

''ஓங்காரப் பொருள் தேருவோர்தாம்
உன்னை உணர்வோர்;
ஓங்காரப் பொருள் என்று உணர்ந்து
இருவினை உகுப்போர்;
'ஓங்காரப் பொருள் ஆம்', 'அன்று' என்று,
ஊழி கண்டாலும்
ஓங்காரப் பொருளே பொருள்
என்கிலா உரவோர்.'' [111]

[ஓங்காரமாகிய பிரணவத்தின் பொருளை ஆராய்பவர்களே பரம் பொருளாகிய உன்னை உணர்ந்தோராவார். (அவர்கள்) பிரணவத்தின் உட்பொருள் நீயே எனத்தெளிந்து இருவினைகளை ஒழிப்பார்கள். பிரணவத்தின் உட்பொருளே பரம்பொருள் என்று உணரமாட்டாத (உலகியல்) அறிஞர்கள் ஊழிக்காலத்தைக் கண்டு (நெடுங்காலம்) வாழ்ந்திருந்தாலும் பிரணவப் பொருளாகிய உன்னை உண்மைப் பொருளாம் என்றும் அன்றென்றும் ஐயமறத் தெளிந்து (இருவினைகளை நீக்கமாட்டாதவராவர்).] என்னும் பாடலில் ஓங்காரப் பொருளான திருமாலை உணராதவர்கள் தம் இருவினைகளில் நின்றும் ஒருநாளும் நீங்கமாட்டார் என்று அடித்துக்கூறும் இக்கம்பனையா சைவன் என்பது?

'' 'இனையது ஆதலின், என்னையும்
யாரையும்ஈன்று, இம்
மனையின் மாட்சியை வளர்த்த எம்
மோயினை வாளா
முனியல்' என்றுஉரை முடித்தனன்—
முந்துநீர் முளைத்த
வினையின் பந்தமும் பகுதிகள்
அனைத்தையும் செய்தோன்.'' [112]

[('இறைவனாகிய நினது இயல்பு யாவராலும் அறியவொண்ணாதது) இத்தன்மையதாதலின், (படைத்தற்கடவுளான) என்னையும் (ஏனை யுலகங்களிலுள்ளார்) யாவரையும் பெற்று இத்தகைய மனை வாழ்க்கையின் மாண்பினை வளர்த்த எம்முடைய தாயாகிய சீதையை வினை வெகுளாதே' என்று (தான் கூறவேண்டியதனைக்) கூறி முடித்தான்; (அவன் யாவனெனின்) முற்பட்ட (கடல்) நீராகிய பெரு வெள்ளத்திலே தோன்றிய அண்டப்பரப்பினையும் (அதனுள்ளே உடம்பு முதலிய) பகுதிகள் அனைத்தையும் உண்டாக்கியவனான பிரமதேவன்.]



என்னும் பாடலில் உலகைப்படைத்த பிரமன் 'என்னையும் இவ்வுலகிலுள்ளார் அனைவரையும் ஈன்ற தாயாகிற சீதையைக் கோபிக்காதே' என்று தந்தையாகிய இராமனை வேண்டுகிறான். இப்பிரமனும் சிவனும் சேர்ந்து இராமனாக அவதரித்ததாகக் கம்பன் கருதியிருக்கச் சிறிதேனும் இடமுண்டோ? இதுவரை பிரமனின் ஒப்புதல் வாக்கு மூலத்தைக் கண்டோம். இனி அடுத்த இரண்டு பாடல்களில் சிவனுடைய ஒப்புதல் வாக்குமூலத்தைக் காண்போம்.

''என்னும் மாத்திரத்து, ஏறுஅமர்
கடவுளும் இசைத்தான்;
'உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை
போலுமால், உரவோய்!
முன்னை ஆதி ஆம் மூர்த்தி!நீ;
மூவகை உலகின்
அன்னை சீதை ஆம் மாது, நின்
மார்பின் வந்து அமைந்தாள்' '' [113]

[என்று (பிரமன்) கூறி முடித்த அளவில் இடபவாகனத்தில் அமர்ந்தருளிய இறைவனாகிய சிவபெருமானும் (பின்வருமாறு) கூறினான்: 'அறிவு வலிமையுடையவனே! நீ நின் இயல்பினைச் சிறிதும் அறிந்திலை போலும். நீ பழமைக்கும் பழையோனாகவுள்ள முழுமுதற் கடவுளாவாய்; (எவ்வுயிர்க்கும்) தாயாகிய சீதை (திருமாலாகிய) நினது திருமார்பில் வந்து பொருந்தியுள்ள திருமகளே'] என்னும் பாடலில் சிவன் 'திருமாலாகிய இராமனே பழமைக்கும் பழையோனாகவுள்ள பரம்பொருள்' என்றும், 'அவன் திருமார்பில் இருக்கும் திருமகளாகிய சீதையே தங்களுக்கெல்லாம் தாய்' என்றும் அறுதியிட்டுக் கூறுகிறான். இப்படிச் சிவனைக் கூறவைத்திருக்கும் கம்பனை எந்த அளவுகோல்கொண்டு திரு. ம. பொ. சி. சைவன் என்று கூறினர் என்பது எவ்வளவு சிந்தித்தாலும் நமக்கு விளங்கவில்லை.

'' 'துறக்கும் தன்மையள் அல்லளால்,
தொல்லை எவ்உலகும்
பிறக்கும் பொன்வயிற்று அன்னை; இப்
பெய்வளை பிழைக்கின்,
இறக்கும் பல்உயிர்; இராமன்நீ
இவள்இறத்து இகழ்ச்சி
மறக்கும் தன்மையது' என்றனன்,
வரதர்க்கும் வரதன்.' [114]

[('எல்லோர்க்கும்) இறைவனே! தொன்மை வாய்ந்த எல்லாவுலகங்களும் தோன்றும் இடமாகிய அழகிய வயிற்றினையுடைய தாயாகிய

சீதை (நின்னுல் வெறுத்து) விலக்குதற்குரிய தீயொழுக்கமுடைய ளல்லள். செறித்த வளையல்களையுடையாளாகிய இவள் துயருற்று வருந்தினுல் எல்லாவுயிர்களும் இறந்தொழியும். (ஆதலால்) நீ இவளிடத்துக்கொண்ட அவமதிப்பு மறந்து கைவிடத்தக்கது' என்று கூறினுன், வரந்தருங்கடவுளர்க்கெல்லாம் வரந்தந்தருள்வோனுகிய சிவபெருமான்.] என்னும் பாடலில் வரந்தரும் இந்திரன் முதலான மற்ற கடவுளர்க்கும் வரந்தரும் சிவன் சீதாப்பிராட்டியே தங்களுக்கெல்லாம் தாய் என்று மறுபடியும் வலியுறுத்துகிருன். இதுவரை கம்பராமாய ணத்தில் வந்த துதிகளுக்கெல்லாம் சிகரமாய், கம்பன் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவன் என்பதை மிகத் தெளிவாகக் காட்டும் இந்த பிரம சிவத் துதிகளைக் கண்டபின்பு கம்பன் சைவன் என்றும், சமரச வாதி என்றும் வாய்திறக்க வழியுண்டோ? 116ம் பாடலில் "வேத வேத்தன்" [வேத₃வேத்₃யன்—மறைகளால் அறியப்படுமவன்] என்று இராமனைக் குறிப்பிடுவதன் மூலம் திருமாலைப் பலவிடங்களில் அவ் வண்ணம் முழங்கியிருக்கும் சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே தன் சயமயமெனக் காட்டுகிருன் கம்பன்.

"வரம் தரும் முதல் மழுவலான்,
முனிவரர், வானேர்,
புரந்தராதி, மற்று ஏனையோர்,
தனித்தனி புகழ்ந்து ஆங்கு
'அரந்தை வெம்பிறப்பு அறுக்கும்
நாயக! நினது அருளால்
குரங்கு இனம் பெறுக!' என்றனர்,
உள்ளமும் குளிர்ப்பார்." [136]

[வரத்தினையருளும் முதல்வனுகிய பிரமதேவனும் மழுப்படையினை யுடைய உருத்திர மூர்த்தியும் சிறந்த முனிவர்களும் தேவர்களும் இந்திரன் முதலிய ஏனையோரும் அவ்விடத்தே (இராமபிரானைத்) தனித்தனியே (பாராட்டிப்) புகழ்ந்து உள்ளங்குளிரப் பெற்றவர்க ளாய், 'துன்பத்திற்கு நிலைக்களமாகிய கொடிய பிறவிநோயை வேரறுக்கும் முதல்வனே! நினது திருவருளால் குரங்கினங்கள் (உயிரும் உணவும் பெறுதலாகிய அவ்விரு வரங்களையும்) பெறுவன வாகுக' எனக் கூறினர்கள்.] என்னும் பாடலில் பிரமன் சிவன் முதலான அனைவரும் பிறப்பறுக்கும் நாயகனுக இராமனைப் புகழ்கை யால், மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடியையுடையவனுக சங்ககாலத் தமிழர் முழங்கிய வைணவமே கம்பனின் சமயமென விளங்கு கிறது. 148ம் பாடலில் "அண்டமுண்டவன்" என்று ஊழிகாலத்து அண்டங்களையெல்லாம் உட்கொண்ட திருமாலாக இராமனைக்



குறிக்கையாலே திருமாலே முழுமுதல்வன் என்றும், அவனே இராமனென்றும் காட்டுகிருன் கம்பன்.

"அண்டமே போன்றது ஐயன்
புட்பகம்; அண்டத்து உம்பர்
எண்தகும் குணங்கள் இன்றி,
முதல் இடை ஈறு இன்று ஆகி,
பண்டை நான்மறைக்கும் எட்டாப்
பரஞ்சுடர் பொலிவதே போல்,
புண்டரீகக் கண்வென்றிப்
புரவலன் பொலிந்தான் மன்னே." [161]

[இராமபிரான் ஏறியமர்ந்த புட்பகவிமானம் அண்டப் பரப்பினை ஒத்துத் தோன்றியது. அவ்வண்டப் பரப்பின் மேலதாகிய பரம பதத்தில் எண்ணியளவிட்டுரைத்தற்குரிய குணங்கள் இன்றி (கடல் போன்று எல்லையற்று நற்குணங்களையுடையதாய்)த் தோற்றம் நிலை இறுதி என்பனவின்றித் தொன்மை வாய்ந்த நான்கு வேதங்களாலும் அணுகுதற்கு எட்டாத பேரொளிப் பிழம்பாகிய பரம்பொருள் விளங்கு தல்போன்று, செந்தாமரைபோலும் கண்களையுடைய வெற்றிவேந்த னுகிய இராமபிரான் (அவ்விமானத்தின் மேல்) பொலிந்துதோன்றி னுன்.] என்னும் பாடலில் நான்மறைக்குமெட்டாத பரவாசுதேவன் அண்டத்துக்குமேற்பட்ட பரமபதத்தில் எழுந்தருளியிருக்கிருன் என்று கூறுவதன் மூலம் தன்னைப் பரமவைணவனுகக் காட்டுகிருன் கம்பன்.

"நான்முகன், விடையை யூரும்
நாரிஓர் பாகத்து அண்ணல்
மான்முகன் முதலாய் உள்ள
வானவர் தொழுது போற்ற
ஊன்முகம் கெழுவு வேலாய்!
உம்பர் நாயகியைச் சீறி
தேன்முகம் மலரும் தாரான்
அரிசொலச் சீற்றம் தீர்ந்தான்." [297]

[பகைவர்தம் உடம்பின் தசை பொருந்திய வேற்படையையுடைய பரதனே! தேனைத் தன்னிடத்தே கொண்டு மலரும் மாலையையணிந்த இராமன், நான்கு முகங்களையுடைய பிரமனும், எருதினை யூர்ந்து செல்லும் தன்மையையுடைய பெண்ணெரு பாகத்தண்ணலாகிய சிவபிரானும், மானின் முகமுடைய மயனும் முதலாகவுள்ள தேவர்கள் தன்னைத் தொழுது போற்றுநிற்க, தேவர்கட்கெல்லாம் நாயகியாகிய சீதையை (அரக்கர்தம் இல்லில் இருந்தமைக்காகக்) கோபித்து,

அங்கியங்கடவுள் நேர் வந்து அந்தச் சீதைதன் கற்பின் உறுதியைச் சொல்ல, அந்தக் கோபம் தணிந்தான்.] என்னும் பாடலில் அனுமன் பரதனுக்கு நடந்த கதையைச் சொல்லும்போதும் நான்முகனும் உருத்திரனும் இராமனைத் தொழுது போற்றியதைக் கூறுவதும், 226-ம் பாடலில் இராமனை 'அரி' என்றே குறிப்பிடுவதும், 298-ம் பாடலில் 'திருவின் நாயகன்' என்று குறிப்பிடுவதும், 328-ம் பாடலில் "சக்கரத்தண்ணல்" என்று குறிப்பிடுவதும் 'திருமாலே இராமன்; அவனே பிரமன், உருத்திரன் முதலான தேவர்க்கெல்லாம் தலைவன்' என்னும் தனது கொள்கையிலிருந்து கம்பன் தனது காவிய இறுதி வரை பிறழவில்லை எனக் காட்டுகின்றன. 335-ம் பாடலில் "உலகமுண்டான்" என்று திருமாலைக் கூறுவதன்மூலம் பிரம உருத்திரர்களுக்கும் காரணன் திருமால் எனக் காட்டுகிறான் கம்பன். இனி அடுத்ததான திருமுடிசூட்டு படலத்தைக் காண்போம்.

**"அம்கண் வான் உலகம் தாய**
**அடி. மலர்த்தவிசோன் ஆட்டும்**
**கங்கை வார் சடையின் ஏற்றான்.**
**கண்ணுதல் ஒருவன்; இந்நாள்**
**சிங்க ஏறு அனையான் செய்ய**
**திருமுடி ஆட்டும் நலநீர்**
**எங்கன் ஏற்று அன்னேன் வாழும்?'**
**என்றனர், புலவர் எல்லாம்."** [35]

[அழகிய இடத்தையுடைய விண்ணுலகத்தை அளக்கத் தாவிய (திரிவிக்கிரமனாகிய திருமாலின்) திருவடியில் தாமரை மலரின் வீற்றிருக்கும் பிரமன் அபிடேகித்த கங்கை நீரைக் கண்ணுதற் கடவுளாகிய சிவன் தன் நீண்ட சடையில் ஏற்றுக்கொண்டான்; இந்நாளில் ஆண் சிங்கம் போன்றவனாகிய இராமனது செவ்விய திருமுடியில் ஆட்டும் நல்ல நீரை அச்சிவன் எவ்வாறு ஏற்று வாழ்வான்? என்று தேவர்கள் எல்லாம் கூறினர்.] என்னும் பாடலில் திருமால் திரிவிக்கிரமனாய் உலகளந்தபோது தன் உலகத்துக்கு வந்த திருவடியை ஆகாச கங்கை நீரால் பிரமன் விளக்க, அதைச் சிவன் தன் தலையிலே ஏற்றுக்கொண்டான் என்று தான் பலமுறை காட்டிய செய்தியைக் காவியத்தின் இறுதியிலும் கூறி, திருமாலே பிரமனுக்கும் சிவனுக்கும் தலைவன் என்பதை நிலைநிறுத்துகிறான் கம்பன். 36-ம் பாடலில் "மரகதச்சயிலம் செந்தாமரை மலர்க்காடுபூத்து" என்று பாடுவதன்மூலம் "கருமுகில் தாமரைக் காடுபூத்து" என்று தான் திருவவதாரப்படலத்தில் பாடிய திருமாலே



இராமனென இறுதியிலும் உறுதிப்படுத்துகிறான் கம்பன். "தாமரைக்காடு மலர்க்கண்ணொடு கனிவாய் உடையதுமாய்" [திருவாசிரியம்5] "திகழ்பசுஞ்சோதிமரதகக்குன்றம்" [திருவாசிரியம்1] என்ற நம்மாழ்வார் அருளிச்செயலை இப்பாடலில் அடியொற்றுகிறான் கம்பன் என்பது வெளிப்படை. இனி இறுதியான விடைகொடுத்த படலத்தைக் காண்போம். முதற் பாடலில் "தாமரைக்கிழத்தியோடு தயரதராமன் சேர்ந்தான்" என்று கூறுவதன்மூலம் சீதாராமர்கள் லக்ஷ்மீநாராயணர்களே என்று அறுதியிடுகிறான் கம்பன். இரண்டாம் பாடலில் "கருமுகிற்கரசு செந்தாமரை மலர்க்காடுபூத்து" என்று கூறுவதன்மூலம் சென்ற படலத்திற்போலே ஆழ்வாரை அடியொற்றி, திருமாலே இராமனென மறுபடியும் காட்டுகிறான் கம்பன். 13-ம் பாடலில் "அயோத்தி சேர்ந்த பாம்பணை அமலன்" என்றும், 17-ம் பாடலில் "அம்பரம் தன்னை நீத்தான்" என்றும், 14-ம் பாடலில் "திருக்கிளர் மார்பினன்" என்றும், 30-ம் பாடலில் "நாகணைத் துயிலில் தீர்ந்தான்" என்றும் இராமனைக் குறிப்பதன்மூலம் இதை வலியுறுத்துகிறான் கம்பன். 22-ம் பாடலில் "பூமலர்த்தவிசை நீத்துப் பொன்மதிள் மிதிலை பூத்த தேமொழித்திருவை" என்று சீதையைக் குறிப்பதன்மூலமும் இதை உறுதிப்படுத்துகிறான். 25-ம் பாடலில் "சதுமுகத்தவனைத் தந்தான்" என்றும், 37-ம் பாடலில் "அம்பரத்தனந்தல் நீங்கி அயோத்தியில் வந்த வள்ளல்" என்றும் இராமனைக் குறிப்பதன்மூலம் திருமாலே இராமன் என்பதையும், திருமாலின் முதன்மையையும் நிலைநாட்டுகிறான் கம்பன்.

**"இராவணன் தன்னை வீட்டி,**
**இராமனாய் வந்து தோன்றி,**
**தராதலம் முழுதும் காத்து,**
**தம்பியும் தானும் ஆகப்**
**பராபரம் ஆகி நின்ற**
**பண்பினைப் பகருவார்கள்**
**நராபதி ஆகி, பின்னும்**
**நமனையும் வெல்லுவாரே."** [38]

[பராபரப் பொருள் — இராமனாய் வந்து அயோத்தியில் தோன்றி, இராவணனை அழித்து, தம்பியும் தானுமாகப் பூமி முழுவதையும் காப்பாற்றி மனிதத் தன்மையனாகி நின்ற பண்பினைச் சொல்லுபவர்கள் மன்னவனாகிப் பின்பு எமனையும் வெல்லுவார்கள்.] என்னும் பாடலில் இப்படி இராமனாகத் தோன்றிய திருமாலே பராபரப்பொருள் என்று விஷ்ணு பரத்வத்தை நிலைநாட்டித் தன் காவியத்தை நிறைவு படுத்துகிறான் கம்பன்.

## முடிவுரை

35. நமது நூல் வெளிவரும் ஸுதர்சனம் இதழ்களை அவ்வப்போது திரு. ம. பொ. சி.க்கு அனுப்பி வந்தோம். அவற்றைப் பார்த்து விட்டு திரு ம. பொ. சி.யும் தமது 'செங்கோ'லில் சில பதிலுரைகளை எழுதிவந்தார். அவற்றையும் அவற்றுக்கு நாம் உடனுக்குடன் எழுதி வந்த பதில்களையும் சுருக்கமாகக்குறிக்கிறோம் இங்கு. 31—7—83 செங்கோலில் நாம் சைவ வைணவ சமரசத்தையே மறுப்பதாகவும், சங்ககாலத்தமிழருக்கு சிவ வழிபாடே இருந்ததில்லை என்றும், அவர்களுக்கு விஷ்ணுதான் ஒரே தெய்வம் என்றும் முடிவு கட்டிக்கொண்டு வாதிக்க முற்பட்டிருப்பதாகவும், ஆகவே சைவ வைணவ ஒருமைப்பாட்டை விரும்பும் தமக்கு நம்முடன் விவாதிக்க அடிப்படை எதுவும் இல்லை என்றும் எழுதினர். இதற்கு நாம் எழுதிய பதிலின் சுருக்கமாவது:—

நாம் சைவ வைணவ சமரசத்தையே மறுப்பதாக ம. பொ. சி. எழுதுகிறர். சைவ வைணவ சமரசத்தை மாத்திரமல்லாமல், இந்து, முஸ்லீம், கிறிஸ்து முதலான அனைத்துச் சமயசமரசத்தையும், ஆத்திக நாத்திகர்களிடையே கூடச் சமரசத்தையும் நாம் ஏற்கிறோமேயொழிய மறுக்கவில்லை. ஆனல் சமரசம் என்பது உண்மைச் சமரசமாயிருக்க வேண்டுமேயொழிய சமரசம் என்னும் போர்வையில் வைணவத்தையோ வேறு எந்த மதத்தையோ அழிக்கக்கூடிய போலிச் சமரசமாயிருக்கக் கூடாது. ம. பொ. சி. ஆதரிப்பது இந்தப் போலிச் சமரசமேயாகும். அனைத்துச் சமயங்களும் பரஸ்பர சகிப்புத் தன்மையுடன் கூடி வாழ்தலாகிற உண்மைச் சமரசத்தை நாம் நெடுநாளாக வலியுறுத்தி வருகிறோம். 'சர்வ சமய சமரசம்' (*TOLERATION or EQUALISATION*) என்னும் நமது நூலில் உண்மைச் சமரசம் எது? போலிச்சமரசம் எது? என இனம் காட்டியிருக்கிறோம். இன்றுவரை இதை எவராலும் மறுக்க இயலவில்லை. ம. பொ. சி. விரும்பினல் இந்நூலை அவருக்கு அனுப்பச்சித்தமாயிருக்கிறோம். நிற்க. ''சிவ வழிபாடே சங்ககாலத் தமிழருக்கு இருந்தது இல்லை. சங்ககாலத் தமிழருக்கு விஷ்ணுதான் ஒரே தெய்வம்'' என்று முடிவுகட்டிக் கொண்டு நாம் வாதிப்பதாகக் கூறுகிறர் ம. பொ. சி. இது நேர்மையான வாதமல்ல. சிவ வழிபாடே சங்ககாலத் தமிழருக்கு இருந்ததில்லை என்று நாம் எங்கும் எழுதவில்லை. சங்ககாலத் தமிழர்கள் திருமால், சிவன், முருகன் முதலான பல தெய்வங்களை வழிபட்டு வந்திருக்கிறர்கள் என்றே நாம் எழுதியிருக்கிறோம். சங்க நூல்களிலிருந்து ஏராளமான மேற்கோள்களைக் காட்டி நமது 'சங்ககாலத் தமிழர் சமயம்' என்னும் நூலிலும், ம. பொ. சி.க்கு மறுப்பான பிரகிருத நூலிலும் ''சங்ககாலத்தமிழர் திருமால் ஒருவனையே பரம்பொருளாகக் கொண்டிருந்தனர். சிவன், முருகன் முதலான மற்ற தெய்வங்களை அவனுடைய ஏவலுக்கு உட்பட்டு பல அரிய பெரிய செயல்களைச் செய்யும் சக்தி படைத்த தேவர்களாகவே கொண்டிருந்தனர்'' என்றே தெளிவாக நிரூபித்திருக்கிறோம். நமது சங்ககாலத் தமிழர் சமயத்தையும் ம. பொ. சி.க்கு அனுப்பியிருக்கிறோம். அப்படியிருக்கும்போது சங்ககாலத் தமிழருக்குச் சிவவழிபாடே இருந்ததில்லை என்றும் அவர்களுக்கு விஷ்ணுதான் ஒரே தெய்வம் என்றும் முடிவுகட்டிக்கொண்டு நாம் வாதம் செய்வதாக ம. பொ. சி. எழுதுவது முறையாகாது.



36. இதற்கிடையில் 5—1—84 குமுதத்தில் ம. பொ. சி. யின் 'கம்பனின் சமயம்' பற்றிய கொள்கையை விமர்சித்த கம்பராமாயண அறிஞர் எழுவர் கருத்து வெளியிடப்பட்டிருந்தது. அவர்களில் வைணவர் ஒருவருமில்லை. இவர்களில் இஸ்லாமியர் இருவரும், கிருஸ்துவர் ஒருவரும், சைவர் ஒருவரும் கம்பன் வைணவனே என அழுத்தமாகக் கூறினர்கள். சைவப்பெண்மணி ஒருத்தியே திரு ம. பொ. சி.யை ஆதரித்தாள். இந்தப் பெரும்பான்மைத் தீர்ப்பை மதிக்கும் நேர்மையும் திரு ம. பொ. சி.க்கு இல்லை. 17—10—83 தினமணியில் ம. பொ. சி.யின் நூலுக்கு ஒரு விமர்சனம் வந்தது. அதில் ம. பொ. சி.யின் புத்தகம் அழகான அமைப்பில் வந்துள்ளதேயொழிய அதிலுள்ள விஷயங்கள் ஏற்கத்தக்கதாயில்லை என்று விமர்சிக்கப்பட்டிருந்தது. 15—1—84 செங்கோலில் குமுதம் விமர்சனத்தை ம. பொ. சி. விமர்சிக்கும்போதும் கம்பர் சிவனைப் பரம்பொருளாகக் கொண்டவர் என்பதற்கு ஒரு கம்பராமாயணப் பாடலைக் கூடக் காட்டவில்லை. 22—1—84 செங்கோலில் மறுபடியும் நம்மைப் பற்றி எழுதிய ம. பொ. சி. நாம் மதக்கண்ணேட்டத்துடன் தமது நூலை ஆராய்ந்திருப்பதால் அதற்குப் பதிலளிக்கத் தாமும் வைதிகச் சைவனுக மாறியாக வேண்டியிருக்கிறது என்றும், அது தம்மால் சாத்தியமில்லாமையால் நமக்குப் பதில் எழுதுவதைக் கைவிடவேண்டி வந்தது என்றும் எழுதினர். மதக்கண்ணேட்டத்துடன் நாம் எழுதுவதாக ம. பொ. சி. கூறும் குற்றச்சாட்டை மறுப்பதற்காக நாம் கீழ்க்கண்ட 3 கேள்விகளை திரு ம. பொ. சி.யைக் குறித்து வெளியிட்டு, வைதிகச் சைவனுக மாருமலே அந்த 3 கேள்விகளையும் செங்கோலில் அச்சிட்டு இலக்கிய நோக்கில் பதிலளிக்குமாறு நாவல் (சவால்) இட்டுக் கூறினேம். அக்கேள்விகள் பின்வருமாறு:—

1. நமது 'சங்க காலத் தமிழர் சமயம்' எனும் நூலில் பரம்பொருளுக்கேயுரிய பத்துப் பெருமைகளைக் கொடுத்து, ''அவையனைத்தையும்

திருமாலுக்கே சங்கத் தமிழர் காட்டியுள்ளனர். சிவன், சக்தி, முருகன் முதலிய தெய்வங்களுக்கு இப்பெருமைகளில் ஒன்றைக்கூடக் கூருமல் தாழ்வுகளேயே விளக்கியுள்ளனர்'' என நிரூபித்திருக்கிறோம். சங்க நூல் மேற்கோள்காட்டி இதை மறுக்க முடியுமா?

2. ''நூற்றுக்கணக்கான பாடல்களில் பரம்பொருளுக்கேயுள்ள இப்பெருமைகளைக் கம்பனும் திருமாலுக்கே காட்டியுள்ளான்; இவற்றில் ஒன்றைக்கூடச் சிவனுக்குக் கூருமல் தாழ்வுகளேயே பேசியுள்ளான்'' என்று நமது 'கம்பனின் சமயம்' எனும் (இந்) நூலில் நிலைநாட்டிவருகிறோம். கம்பன் பாடல்களைக் காட்டி இதை மறுக்கமுடியுமா?

3. ஒரு சமயத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதிய ஒரு காப்பியத்தை, அக்காப்பியத்தின் நயம் கருதிச் சாவசமயத்தாரும் போற்றினல் அக் கவிஞர் எப்படிச் சர்வசமய சமரசவாதியாக முடியும்?

37. இக்கேள்விகளை இன்றுவரை ம.பொ.சி. தமது செங்கோலில் அச்சிடவோ பதில் எழுதவோ இல்லை. கேள்விகளைக் கண்டபின்பு 12—2—84 செங்கோலில் எழுதிய ம. பொ. சி. கம்பனின் சமயத்தோடு சம்பந்தமில்லாத பல விஷயங்களை இட்டுப் பக்கங்களை நிரப்பி மனம் போனபடி எழுதினரே தவிர, நமது கேள்விகளை அச்சிடவில்லை. நமது கேள்விகளை அச்சிட்டால் தம் கொள்கையின் பொருந்தாமை தமது வாசகர்களுக்குப் புரிந்துவிடும் என உணர்ந்தே அக்கேள்விகளை அச்சிடாமல் கம்பராமாயணப் பாடல்களையோ பரிபாடலிலிருந்து நாம் காட்டியிருக்கும் மேற்கோள்களையோ தொடாமல் சம்பந்தமில்லாத விஷயங்களை மனம்போனபடி எழுதுகிருர் என விளங்குகிறது. இவர் எழுதிய ஒருசில விதண்டாவாதங்களுக்கு நாம் விரிவாக எழுதியுள்ள பதில்களை நமது ஸுதர்சனர் பதில் எட்டாவது சதகத்தில் காணலாம்.

38. இவற்றிலிருந்தும், ம.பொ.சி.யின் எழுத்துக்களிலிருந்தும் ம. பொ. சி. தமது நண்பரும் தீவிர சைவருமான திரு. ராய. சொக்கலிங்கம், சைவசாக்தராக மாறிவிட்ட காமகோடிப் பெரியவர், அவரது சிஷ்யரான அக்நிஹோத்ரம் தாத்தாசாரியார் ஆகியவர்களின் தூண்டுதல்களினல் கம்பன் சைவனே என்று நூல் எழுதிவிட்டு அந்நூலை நிலைநிறுத்தமுடியாமல் திகைக்கிருர் என்று தெளிவாகிறது. கம்பன் பரமவைணவனே என்று ஒப்புக்கொள்ளும் நேர்மை இல்லாவிட்டாலும், இனியாவது ம. பொ. சி. 'கம்பன் சைவன்' என்று வாய் திறக்கமாட்டார் என்று நம்புகிறேம்.

கம்பனின்சமயம் இரண்டாம் பாகம் நிறைவுற்றது.

# கம்பனின் சமயம்—இரண்டாம் பாகம்

## (அநுபந்தம்)

## * வாலிவதமும் இராமனும்

*[ஸுதர்சனர். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஆசிரியர், 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017.]*

30—8—84 'குமுத'த்தில் ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயீல் அவர்கள் எழுதிய 'கம்பன் கண்ட இராமன்' என்னும் புத்தகத்திலிருந்து சில பக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் வாலியை மறைந்து நின்று கொன்றது குறித்து இராமனே வெட்கப் பட்டான் என்றும், மன்னிப்புக்கேட்டான் என்றும் எழுதப் பட்டுள்ளது சரியல்ல என்பது வாலி வதைப்படலத்தை ஆராய்ந்தாலே தெளிவாக விளங்கும். வாலியை அம்பால் வீழ்த்தியவுடன் தன்னை அடித்தவன் இராமனே என்றறிந்து பதினைந்து பாடல்களில் வாலி இராமனை ஏசுகிருன். அதற்குப்பின் பதினெரு பாடல்களில் இராமபிரான் தான் வாலியைக் கொன்றதற்கு நியாயம் கூறுகிருன். நியாயமான செயலுக்கு மன்னிப்புக்கேட்க வேண்டிய அவசியமில்லை என்பது வெளிப்படை.

அதற்குப்பிறகு வாலி இராமன் சொன்னதற்கு மூன்று பாடல்களிலே பதில் கூறுகிருன்.

அதற்குப்பின் இராமன் ஒன்பது பாடல்களில் வாலியின் கூற்றை மறுத்துப் பேசுகிருன்.

அதற்கு அடுத்த பாடலில் ''அப்படியானல் நீ மறைந்து நின்று கொன்றது — ஏன்?'' என்று கேட்கிருன் வாலி.

அதற்கு இலக்குவன் ''உன் தம்பி சரண் புகுந்தவுடன், முறையற்ற காரியம் செய்த உன்னைக் கொல்லுவதாக ஸ்ரீராமபிரான் வாக்களித்திருக்கிருன்; அந்த வாக்கை நிறைவேற்றுவதற்காக—'நேரில் வந்தால் நீ உயிரின் மேல் ஆசையால் இராமனைச் சரண் புகுந்து விடுவாய்' என்னும் நினைவினலேயே ஸ்ரீராமபிரான் மறைந்து நின்று உன்னைக் கொன்ருன்'' என்று பதில் கூறினன்.

* இக்கட்டுரை குமுதத்திற்கும் அனுப்பப்பட்டது. கீதாசார்யன் ஸுதர்சனர் பதிலிலும் வெளிவந்தது.

இராமபிரான் மறைந்து நின்று கொன்றதற்கு மன்னிப்புக் கேட்பதாயிருந்தால் இவ்விடத்தில் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். அப்படிக் கேட்டதாகக் கம்பன் கூறவில்லை.

அடுத்த பாடலில் வாலி சமாதானம் அடைந்து இராமனை வணங்கினுன் என்றே கூறுகிறுன். அதற்கடுத்த பாடலில் வாலியே இராமனைத் தனது குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறுன்.

அதற்குப்பின் ஏழு பாடல்களில் வாலி இராமனிடம் ஒரு வரம் வேண்டுகிறுன். அதற்கு அடுத்த பாடலில் வாலி இராமனை மற்றுமொரு வரம் வேண்டுகிறுன். அதற்குப்பின் சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறுதல், அங்கதனை அழைத்தல், அங்கதன் புலம்பல், வாலி அங்கதனை இராம பிரானிடம் ஒப்பித்தல் முதலான பல செய்திகள் இருபத்து மூன்று பாடல்களில் கூறப்படுகின்றன.

அடுத்தபடி "தன்னடி தாழ்தலோடும் தாமரைத்தடங் கணுனும், பொன்னுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி என்ருன், என்னலும் உலகமேழும் ஏத்தின இறந்து வாலி, அந்நிலை துறந்து வானுக்கப்புறத்துலகனுனன்" என்னும் பாடலில் செந்தாமரைக் கண்ணனுன இராமன் அங்கதனைத் தான் அடைக்கலமாக ஏற்றுக்கொண்டதற்கடையாளமாகத் தன் உடைவாளைக் கையில் எடுத்து நீட்டி 'இதனை ஏற்றுக் கொள்வாய்' என்றதாகவும், இதைக்கண்டு உலகமேழும் ஏத்தின என்றும் வாலி பரமபதமடைந்தான் என்றும் கூறுகிறுன் கம்பன். இப்பாடலில் "நீ இது பொறுத்தி" என்னும் தொடருக்கு "நான் உன் தகப்பனைக் கொன்றதை மன்னிப்பாய்" என்று பொருள் கொள்கிறுர் திரு. மு. மு. இஸ்மாயீல்.

இது சிறிதும் பொருந்தாது. "பொன்னுடைவாளை நீட்டி நீ இது பொறுத்தி" என்பது இங்கு வாக்கிய அமைப்பு. 'இது' என்னும் சொல் அருகிலுள்ளதைக் குறிக்குமேயொழிய, பல பாடல்களுக்கு முன் வந்ததொரு செயலைக்குறிக்காது. இந்த நியமத்தைப் பற்பல காப்பியங்



களில் பல்லாயிரக்கணக்கான இடங்களில் பார்க்கலாம். ஆகையால் "பொன்னுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி" என்ற தொடரில் 'இது' என்னும் சொல் அருகிலுள்ள உடைவாளையே குறிக்கும். ஆகையால் "நீ இது பொறுத்தி" என்னும் தொடருக்கு "நீ இவ்வுடைவாளைத் தாங்குவாய்" என்னும் பொருளே பொருத்தமாகும். "கம்பன் தன் காப்பியம் முழுவதிலும் 'பொறுத்தி' என்னும் சொல்லை 'மன்னித்துக்கொள்' என்ற பொருளிலேயே ஆண்டிருக்கிறுன்" என்று திரு. மு. மு. இஸ்மாயீல் கூறுவது காப்பியத்தைச் சரியாக ஆராயாமையால் விளைந்தது.

கம்பன் தன் காப்பியம் முழுவதிலும் 'பொறுத்தல்' என்னும் சொல்லை "தாங்கிக்கொள்ளல்" என்னும் பொருளிலும் பற்பல இடங்களில் வழங்கியிருக்கிறுன். உயுத்த காண்டத்தில் மட்டும் சில இடங்களைக் காட்டுவோம்.

இரணியன் வதைப்படலத்தில் முதற்பாட்லில் "இரணியன் பஞ்சபூதங்களிலுமுள்ள வலிமைகளையெல்லாம் தான் ஒருவனே தாங்கி நின்ருன்" என்று கூறும்போது "பூதம் கண்ணிய வலியெலாம் ஒரு தனி பொறுத்தான்" என்னும் பகுதியில் 'பொறுத்தான்' என்னும் சொல்லை 'தாங்கினுன்' என்னும் பொருளிலேயே வழங்கியிருக்கிறுன் கம்பன்.

நாகபாசப்படலத்தில் 146-ம் பாடலில் "போசட உற்ற பொறுத்தன" என்னும் பகுதியில் 'பொறுத்தன' என்னும் சொல்லை 'தாங்கின' என்னும் பொருளிலேயே வழங்கி யிருக்கிறுன் கம்பன்.

நிகும்பிலை யாகப்படலத்திலும் இந்திரசித்துக்கும் இலக்குவனுக்கும் போரைக் கூறும்போது "புனலின் படை தொடுத்தான், அவனதுவே கொடு பொறுத்தான்" [இந்திரசித்து வாருணஸ்திரத்தைத் தொடுத்தான். இலக்குவனும் அதனையே தொடுத்துத் தாங்கினுன்] என்னு மிடத்திலும் 'பொறுத்தான்' என்னும் சொல்லை 'தாங்கினுன்' என்ற பொருளிலேயே கூறியிருக்கிறுன் கம்பன். இராவணன் சோகப்படலத்திலும் இந்திரசித்தின் கிரீட

மணிந்த தலை நீங்கிய உடலைச் சுமந்தவனுய் இராவணன் வருவதைக் கூறும்போது "மைந்தன் தன் மகுடச் சென்னி போதலைப் புரிந்த யாக்கை பொறுத்தனன்" என்று "பொறுத்தனன்" என்னும் சொல்லை "தாங்கினுன்" என்னும் பொருளிலேயே வழங்கினுன் கம்பன். கம்பன் இப்பொருளில் இச்சொல்லை வழங்கவேயில்லை என திரு. மு. மு. இஸ்மாயீல் கூறியது சரியல்ல என்பது இவற்றிலிருந்து விளங்குகிறது.

இனி "அங்கதனிடம் தன் உடைவாளை நீட்டி, நீ இதை ஏற்றுக்கொள் என்றவுடன் 'உலகம் ஏழும் எத்தின' என்பது அந்த உலகம் ஏழுக்கும் பெருமை அளிப்பதாகாது" என்னும் வாதத்தை ஆராய்வோம்.

இங்கு உலகம் ஏழும் ஏத்தியது இராமன் பகைவன் மகனிடத்துப் பகைமை பாராட்டாது அன்பு வைத்தருளியதையும், பகைவனுக்கே பரமபதம் அருளவிருப்பதையும் கருதியேயாம். தந்தைபோலன்றி மைந்தன் எம்பெருமானுடைய கருணைக்கு இலக்கானமை குறித்து அதிசயித்து உலகமேழும் அவ்வங்கதனைப் புகழ்ந்தன என்றும் கொள்ளலாம்.

மேலும், இராமன் மன்னிப்புக் கேட்பதாக திரு. மு. மு. இஸ்மாயீல் கூறும் "தன் அடிதாழ்தலோடும்" என்னும் பாடலில் இராமனை "தாமரைத்தடங்கணுன்" எனக் குறிக்கிருன் கம்பன். "மலர்ந்த தாமரை போல் விரிந்த கண்ணை உடையவன்" என்று இதற்குப் பொருள். மன்னிப்புக்கேட்கும் பாடலாயிருந்தால் இச்சொல் பொருந்தாது. ஆகையால் அங்கதனுக்கு அருள்புரியும் பாடல் இது என்றே கொள்ளவேண்டும்.

ஆகையால் இராமன் வாலிவதம் செய்தது குறித்து வெட்கப்பட்டானென்ருே அதற்காக மன்னிப்புக்கேட்டானென்ருே கொள்வதற்குக் கம்பராமாயணத்தில் சிறிதும் இடமில்லை என்று தேறிற்று.

—O—

## ஸுதர்சனம் காரியாலயத்தில் கிடைக்கும் புத்தகங்கள் :-

**I ஆழ்வார் அருளிச்செயல்களுக்குப் பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்கள்**
(பதவுரை அரும்பதவுரை ப்ரமாணத்திரட்டுகளோடு கூடியவை)

| க்ரந்தங்கள் | விலை | தபால் |
|---|---|---|
| 1. முதல் திருவந்தாதி வ்யாக்யானம் | 2.50 | .50 |
| 2. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் | 1.50 | .40 |
| 3. பகவத்விஷயம் I (முதலிரண்டு திருவாய்மொழிகள்) | 37.00 | 5.00 |
| ஷை II பாகம் (முதற்பத்து 3.10 ,, ) | 42.00 | 6.00 |
| ஷை III பாகம் (இரண்டாம்பத்து முழுவதும்) | 52.00 | 7.00 |

**II ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு எளியநடை விவரணத்துடன் கூடிய பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்கள்**

| | | |
|---|---|---|
| 1. சிறியதிருமடல் வ்யாக்யானம் | 4.50 | .75 |
| 2. பெரியதிருமடல் வ்யாக்யானம் | 7.50 | 1.50 |
| 3. இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம் | 6.00 | 1.00 |
| 4. மூன்ருந்திருவந்தாதி வ்யாக்யானம் | 6.00 | 1.00 |
| 5. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் | 7.50 | 1.00 |
| 6. திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானம் | 1.50 | .40 |
| 7. திருமாலை வ்யாக்யானம் | 16-00 | 2.00 |

**III அருளிச்செயல்களுக்கு எளியநடை விவரணம் மாத்திரம்**

| | | |
|---|---|---|
| 1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம் | 3.00 | .60 |
| 2. சங்கத் தமிழ்மாலை முப்பது—திருப்பாவை விளக்கவுரை | 1.50 | .40 |

**IV நமது மற்ற வெளியீடுகள்**

| | | |
|---|---|---|
| 1. ஸ்தோத்ரரத்நசதுஃஸ்லோகீஜிதந்தேவ்யாக்யானங்கள் | 12.00 | 1.00 |
| 2. சதுஃஸ்லோகீ வ்யாக்யானம் [நாயனுராச்சான்பிள்ளை] | 3.75 | .75 |
| 3. கத்ய வ்யாக்யானங்கள் | 6.75 | 1.25 |
| 4. ஸ்ரீராமாயண தனிச்லோகம் [விவரணத்துடன்] I Part | 5.25 | 1.00 |
| ஷை இரண்டாம்பாகம் [விவரணத்துடன்] | 10.50 | 2.00 |
| 5. பாசுரப்படி ராமாயணம் | 0.25 | — |
| 6. முமுக்ஷுப்படி வ்யாக்யானம் | 4.50 | .75 |
| 7. ஆருயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலியவை | 18.00 | 2.50 |
| 8. ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானம் 4-அரும்பதவுரைகளுடன் முதல்பாகம் | 9.00 | 1.50 |
| 9. சாரீரககாரிகாவளி [இரண்டாம் பாகம்] | 7.50 | 1.50 |
| 10. கைசிகபுராணம் | 1.50 | .40 |
| 11. உபயவேதாந்த ஐககண்ட்யம் | 3.00 | .60 |
| 12. வடுகநம்பி அருளிய யதிராஜவைபவம் [விவரணத்துடன்] | 1.50 | .40 |
| 13. திருக்குறள் ஸம்ஸ்க்ருதஸ்லோக மொழிபெயர்ப்புடன் | 10.00 | 2.00 |
| 14. [போதாயந] ஸந்த்யாவந்தநம் பதவுரையுடன் | 1.00 | .30 |
| 15. [போதாயந] உபாகர்மவிதி | 0.75 | .30 |
| 16. அருளிச்செயல் ரஹஸ்யம் [வரதாசார்யஸ்வாமி தொகுத்த பூஷணத்துடன்] | 3.75 | .75 |

P. T. O.

| | | | |
|---|---|---|---|
| 17. | புருஷஸூக்த வ்யாக்யானம் | 2.25 | .40 |
| 18. | நாராயணஸூக்த வ்யாக்யானம் | 1.50 | .40 |
| 19. | ஸ்ரீஸூக்த வ்யாக்யானம் | 3.00 | .75 |
| 20. | பூநீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள் | 2.50 | .50 |
| 21. | தேஹளீச ஸுப்ரபாதம் | 0.50 | .25 |
| 22. | சாதிமத ஆராய்ச்சி [முதல்பாகம்] | 6.00 | 1.00 |
| 23. | ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம் | 0.75 | 0.25 |
| 24. | விஷ்ணுசித்தவிஜயம் [முதல் பாகம்] | 7.50 | 1.25 |
| | ஷை [இரண்டாம் பாகம்] | 10.00 | 1.50 |
| | ஷை [மூன்றாம் பாகம்] | 16.00 | 2.00 |
| 25. | ஸாத்விகவிஜய ஸர்வஸ்வம் | 1.25 | .40 |
| 26. | ஸந்த்யாவந்தநபாஷ்யம் | 4.50 | .75 |
| 27. | மகரநெடுங்குழைக்காதர் பாமாலையந்தாதி | 2.25 | .50 |
| 28. | ஸ்ரீகேசவமணிமாலை | 1.25 | .40 |
| 29. | சங்கரரும் வைணவமும் | 1.25 | .40 |
| 30. | ஸித்தோபாயவிஜயம் & [ஸ்ரீரங்கராஜவிஜயம்] | 4.50 | .75 |
| 31. | திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி மூலம்மட்டும் | 0.75 | .25 |
| 32. | திருவாய்மொழி நூற்றந்தாதி—மூலம்மட்டும் | 0.50 | .20 |
| 33. | கீதா வ்யாக்யானம் முதல்பாகம் (ஆறு அத்தியாயம்) | 15.00 | 2.00 |
| | ஷை இரண்டாவது பாகம் (7,8அத்தியாயம்) | 12.00 | 1.50 |
| 34. | அக்நிஹோத்ரியும் வைணவமும் | 3.75 | .75 |
| 35. | சோலைமலைக்குறவஞ்சி | 5.25 | 1.00 |
| 36. | ஸ்ரீவைஷ்ணவ மகாநாடுமலர் | 1.50 | .40 |
| 37. | ஸுதர்சனர்பதில் (ஏழு சதகங்கள்) | 25.50 | 3.00 |
| 38. | What is Visishtadvaita System of Philosophy? (English) | 1.50 | .45 |
| 39. | பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்திரம் | 4.50 | .75 |
| 40. | இராமலிங்க ப்ரதிஷ்டை | 0.75 | |
| 41. | ஆண்டாள் சந்திரகலாமாலை | 3.00 | .60 |
| 42. | யதீந்த்ரமததீபிகை—ஸந்மதகாரிகாவளி விவரணம் | 10.00 | 1.50 |
| 43. | சங்ககாலத் தமிழர் சமயம் | 1.50 | .40 |
| 44. | ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம் | 1.50 | .40 |
| 45. | சரமகுருநிர்ணயம் [ப்ரமாணத்திரட்டுடன்கூடியது] | 1.50 | .40 |
| 46. | மோக்ஷோபாய ப்ரதீபிகை— வைகாநஸ ஸித்தாந்த ஸாரம் | 10.00 | 1.50 |
| 47. | நித்யாநுசந்தானம்—சாதா ரூ. 6-00 பைண்டு | 7.00 | .75 |
| 48. | வார்த்தாமாலை (விவரணத்துடன்) | 20.00 | 2.50 |
| 49. | ப்ரபந்நாம்ருத தர்ப்பணம் | 25.00 | 3.00 |
| 50. | கோதையும் சங்கத்தமிழும் | 0.75 | .25 |
| 51. | பரப்பிரம விவேகம் | 5.00 | .75 |
| 52. | ஸ்ரீவைகுண்டஸ்தவவுரை [ஸ்ரீ P.B.A. ஸ்வாமி இயற்றியது] | 8.00 | 1.50 |
| 53. | சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் | 8.00 | 1.00 |
| 54. | ஸ்ரீவைஷ்ணவமத விஜயம் | 1.50 | .30 |

கிடைக்குமிடம்: — ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை